உ.

# திருக்கருவைத் தலபுராணம்.

இஃது

நெற்குன்றநகர்த் தொண்டைமண்டல வேளாளமரபு

**சோ. வீரப்ப முதலியாரவர்களாலும்**

கரிவலம் வந்தநல்லூரென்னுங் கருவையம்பதியில் வசிக்கும் ஸ்ரீமான்

**ம. ஆறுமுகஞ் செட்டியாரவர்களும்**

அவ்வூர்த் தேவஸ்தானத் தர்மகர்த்தர் ஸ்ரீமான்

**சொ. ராமசாமி செட்டியாரவர்களும்**

ஆகிய இருவரின் வேண்டுகோட் கிசைந்து

சிவகிரிச் சமஸ்தான வித்துவான வட்டிசேரி

**ச. திருமலைவேற் கவிராயரவர்களாலும்**

இயற்றியது.

---

வீரப்ப முதலியாரவர்களாற் சொல்லப்பட்ட சருக்கங்கட் குள்
சில பாக்கட்கும அவற்றின் முதலில் வீ. எனவும்
திருமலைவேற் கவிராயரவர்களாற் சொல்லப்பட்ட சருக்கங்கட்
குள் சில பாக்கட்கும அவற்றின் முதலில் தி. எனவும்
குறிப்பிடப்பட்டுள்ளது — இதனுடன்

வரதுங்க பாண்டியன் சரித்திரமும் சேர்த்து
கரிவலம் வந்தநல்லூரென்னும் கருவையம்பதி
**வ. மருதப்பச் செட்டியாரவர்கள்**
**ஆ. மருதப்பச் செட்டியாரவர்கள்**
இவ்விருவர்களின் பொருளுதவியால்

---

மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர் பிரஸில்
தஞ்சை ஜி. எஸ். மணியா அண்டு கம்பெனியாரால்
பதிப்பிக்கப்பெற்றது.

1919.

போடிநாயக்கனூரிலிருக்கும்

## கு. அண்ணாமலைப் பிள்ளையவர்க

ளியற்றியவை.

---

அகவல் விருத்தம்.

அண்டமெலாம் படைத்தளித்துத் துடைத்தருளும்
பெருவிளையாட் டாற்றும் பெம்மாற்
குண்டுகொலோ வேறுதிரு விளையாட
லெனினுமன்ப ருள்ளங் காதல்
கொண்டுபுரி பத்திநெறிக் குலைந்தியமா
யாங்காங்குக் குழைந்தி லீலை
விண்டலமும் புகழ்ந்திடமா புரிந்தவது
மவற்குரிமை விளையாட் டாமால. (1)

கலிப்பா.

அத்தகைய திருவிளையாட் டன்பர்க்காய பலதலத்தும்
வித்தகமாய் புரிந்ததுபோல வியனகருவைத திருத்தலத்திற்
சித்தமுவந் தியற்றியாற திருவிளையா டற்சரித
துத்தியஞ்சேர் வடமொழியிற் றலங்குறக்கண் டருந்தமிழில்

கலித்துறை.

மொழிபெயர்த்துப்பல சருக்கமா வியற்றினன் முன்னு
ழிழியில் வீரப்ப னெனுமொரு பாவலோ னிங்கி
தொழிய மற்றுள கதைகளைப் பத்தியா யோர்ந்து
பொழியுங் காரினெம் போல்பவர் வாட்டத்தைப் போக்க.(3)

அகவல் விருத்தம்.

சொற்பொரு ளென்னு மிலக்கிய லடைமிகவுஞ்
சுவையுறத் தொடவிர் மேன்மைக்
கற்பென நிலைத்துத் திசையெலாம் பரவக்
கவிகளாக் கழறினன் முக்கட்

டற்பர னடித்தா மரைமலர் சூடுந
தலையினன் பிறர்பொரு ளாசை
யற்பமு மில்லா னடியவர்க் கினியா
னெந்திலக் கணமுகன் சுரிக்கோன (4)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

எனக்கு மினியான் சிவகிரிராசேந்திர கோட்டி மேரி பிறந்துலகு [ளிற்
தனக்குத் திலகம மோனமொன்னொரிப்பூ சாரிக சுவண்டன் பட்டித
கனக்கு முடிமன்னவாபகழு மைந்தொன சிறிதங்களங்கமுறா
மனக்கும பனுகமொரு மயமொந மலமோற கவிதா வலன்மா
— — கோ. (5)

பராக்கயணிக்கோட்டையர
பழனிச்சாமியாசாரியாரவர்க
ளியற்றியவை

ஆசிரியவிருத்தம்

பெருணிசீர் நிறைந்தாமே புவியாதி புடைபுடை சு
மூலக வாவுய
பேரறிவா னறிருவெண ருஞ்செய்பத்தியசெய்வார்
பெரிய மொனறு
நேருரைக்கோர் சான்றுதன் னிறைமதியுரற் பலகலைக
ணிலவத தக்க
சீரருள்வாய் மைப்புனிதன நிருமலவேற் கவிராச
சிங்கே றுமால (1)

சங்கமுறுங் குழையனைத்தெனு காதலைபோப பால்வணத்
தாணு வைபபூங்
கங்கையணி சடையனையெம கண்ணுதலைப பாமென்பு
மணிந்தே முன்னைக்

துங்கவரி கோபுரந் துலங்குமணி வாசகனார்
துணைச்சீர் பாடு
மங்கலவிங் கிதமதுர வாக்கிசைந்த பெருங்கருணைத்
வள்ளன் மன்னே (2)

கற்றறிந்த மேதையாதவ கடனெனப வுயிர்க்குயிராய்க்
கலந்து மேவப
பெற்றசிவன் றனைபம்பா றனும பெற்றியெனு மறைமுறையிற
பிறங்கு நீதி
யுற்றறிந்த மெய்யறிவா லொடபனைநா யகன்சரித
மும்வந்தே யோது
நற்றவஞ்செய் திருமலைவேற் கவிராச நம்பியின்சீர்
நவிலற் பாற்றோ. (3)

மேற்கூறிய அந்நகரில் வசிக்கும்

சுந்தரவாசாரியரவர்க

ளியற்றியவை.

---

கலிப்பா.

கரிவலநன் னகர்மேவுங் கடவுடிரு விளையாடற்
சரிதமதைப் புராணமதாத் தமிழ்க்கவியா லினிதுரைத்தான்
விரிதருமிப் புவியிலுளோர் வியந்துரைகக விஃதுரைத்த
வரியபெருங் கவிஞர்பிரா னெவன்கொலெனி னறைகுதுமால்

ஆசிரிய விருத்தம்.

வன்னர் தருமஞ் சளைப்பூசி மணஞ்சேர்
நறும்பூம் புனலினிடை
மகிழ்ந்து குடைந்து விளையாடு மடவா
ரெனச்செவ் வனசமலர்ப்

பொன்னக தாதை யொணபவளச் செங்கா
லூழுத பொலஞ்சிறையிற்
புரண்டு சேவன் மதிமருணடோர் புறத்தே
யொதுங்கச ஞடடுவெண்பேட்
டனைய பொலியும் வாவிகளசூ ழெட்டி
சேரி யலகரித்தோ
னருமைப் புலவர் குலதிலக மான
சங்குக் கவிராசன
முன்னந் தந்த சுகுமாரன் முதுசீ
ரழகு மிகுமாரன்
முளரித் திருவாழ் புயபாரன் முகில்போ
லெவர்க்கு முபகாரன் (2)

முன்பா லங்கொண் மணிபிடாறு முதலாம்
பழமைப் பரம்பொ ருளின்
மூவாச சைவ சமயநெறி முறையிற
• றிறப்பா னலமுடையா
னென்பா லூழவ லன்புறாட் டினைந்த
சங்குக கவிராச
னென்னுங கலவி யறிவுசிறந திலங்குஞ்
சுதுண மாமணியைத
தன்பா லகவுப பண்டை யருந தவததாற
பயநத திருததாதை
தகமேகா சிநதை யனைததினுஞசந ததமவீற
றிருககுந தகையாளன்
மணபார் மீது மிக்கபுகழ் வளாத
திகழு முததமனபா
மலைபோற் றீப மனையதிரு மலைமேவற
கவிநா வலனமாதோ. (3)

சிவகிரிச் சமஸ்தான வித்துவான் எட்டிசேரியிலிருக்கும்

**அருணசலக் கவிராயரவர்க**

**ளியற்றியது.**

---

**அ-விருத்தம்.**

முன்னகரந் தங்குமுத நிகர்தருசெந் தமிழ்ப்பா
மொழிந்துதவம பெற்றவள்கோ விற்பணிக்கு முனனாட்
கன்னகரப புரிந்தசங்குக் கவிஞர்பிரான் பேரன்
கருணைமிகு மென துபெருந் தந்தையெனச் சொலுங்கா
ரனனகர தலசசங்குக் கவிஞனருந் தவத்தா
லவதரித்த திருமலைவேற் பாவேந்தன கருவை
நன்னகரத் தலபுரா ணமபகர்ந்தா னதனை
நன்குமிகப் புகழ்ந்துரையா நாவலரிங் கெவரோ. (1)

---

இத்தலபுராணமியற்றிய

ச. திருமலைவேற கவிராயரவர்கள் குமாரர்

**சங்குக் கவிராயரவர்க**

ளியற்றியவை.

அ-விருத்தம்.

திருவையம் பதியுன னர்புகழ்ந் துரைக்கச
சிறந்தபல வளமலிந் திலங்குங
கருவையம பதிவாழ் பயமனமான மியதனைக்
கடல்கடைந் தமரருக் கருநாண்
மருவையம பதியன் றுதைநல் கமுதின்
மதுரமே யிதனமது ரமென
வொருவையம் பதியா வுளக்கவிப் புலவோர்
மிகவியந் துரைத்திட மாதோ. (1)

பொருவறும புனிதச் செழுந்தமிழ்க் கவியாற்
பொருட்சுவை சொறசுவை பொருந்த
வொருபுரா ணமதா கபபகர்ந் தென்று
முயர்திரைக் கருங்கட லுடுத்த

விருமலைத் தழியாப் பெரும்புகழ்ச் சமையொன்
றெமக்கும்வைத் தனைனைமை யீன்றோன்
திருமலை வேற்பா வலர்பிரா னவன்பொற்
றிருவடி சிந்தைவைத் திடுவாம்.

———

செவ்வற்குளத்திலிருக்கும்

கந்தசாமிப் புலவரவர்க

ளியற்றியது.

——

பத்திக்கு மினியபெருந் திருவருட்கும பலகலையும
பயிலு றடபப
புத்திக்கு மிருப்பிடமாந் திருமலைவேற் கவிஞனெனப்
புகலுந் தூயோ
னெத்திகரும் புகழ்கருவைத் தலபுரா ணத்தையினி
தியற்ற லாலே
சித்திக்கு நினைத்தவெலாம் படிப்பவர்க்குங் கேட்பவர்க்குந்
தினமு மாதோ. (1)

———

தென்மலை

ராமசாமிச் செட்டியாரவர்க

ளியற்றியது.

——

அ-விருத்தம்

வருமலைவா ரிதியமுதந் தருமதுரா நாவிலுகக்கே
மணங்கூர் சந்தப்
பெருமலைபத் தவமுனிவ னனையசங்குக் கவிராசன்
பெற்ற செல்வத்

திருமலைவேற் கவிஞனுரை புராணமெனு மிவ்வமுதந்
    தித்திப் பென்றுந்
தருமலையா வியற்புலவர் நாவினுக்குஞ் செவிக்குஞ்சிக்
    கைக்குந் தானே. (1)

---

சிவகிரிச்சமஸ்தான வித்துவான்
இராயகிரிமா அணைக்கரை முத்துப் புலவரவர்கள் குமாரரும
மதுரைத் தமிழ்ச்சங்கத்திற் கல்வி பயில்பவருமாகிய

சாமிநாதப்புலவரவர்க

ளியற்றியன.

---

ஆசிரியவிருத்தம்.

சீர்பரவித் துலங்குசிவ கிரிச்சமஸ்தா னக்கவிஞர்
    திலகன் வாசத்
தார்புனையும் பாரபுய சயிலனெட்டி சேரியவ
    தரித்தோன் முந்நீர்ப்
பார்புகழ்சங் குக்கவிஞ னீன்றசுதன் பரங்கிரியாம்
    பதியில் வாழு
மேர்பெறுமற் புதமிகுசண் முகனடிப்போ தெப்போது
    மேத்து நாவான். (1)

பொருமலைவே லாவலயப் புவியின்மிசை யதிகபுகழ்
    பொருந்துங் கற்ப
தருமலைவே யுறத்தரினுந் தாமுணரா ரிடத்தணுகாத்
    தகைமை யாளன்
றிருமலைவே லெனுங்கவிஞன் பவத்தாலன் பொடுதனைச்சிந்
    திப்போ ராமே
வருமலைவே தனையடையா தருள்கருணை யரன்சரிதம்
    வழுத்தி னனால். (2)

---

திருக்களாவுடையான் துணை.

# திருக்கருவைத் தலபுராணம்.

காப்பு.

நீ.—அகவல் விருத்தம்.

திருவுலவு மார்பனுமச் செழுங்கமலப் பொகுட்டுறையுந்
தேவும் போற்றுங்
கருவைநகர்க் களவினிழற் கடவுடிருச் சரிதமதைக்
கனிவா யின்ப
மருவுசெழுந் தமிழ்க்கவியா லுரைக்கவெமக்கொருதுணையாம்
வளர்பொற் குன்றத்
தருவியெனப் பொழியுமத வைங்கரகுஞ் சரத்தினிணை
யடிகண் மாதோ. (1)

பாயிரம்.

நீ.—நூற்பயன்—வேறு.

மருப்பொலி களவினீழல் வைகுபால வண்ணநாதன்
றிருப்பெருஞ் சரிதந்தன்னைச் செவியினா லினிதுகேட்போ
ரிருப்புறு பொருள்கள்யாவும்பெறுவர்முன் வினையைவெல்வ
ரிருப்பரெஞ் ஞான்றுமீச னிணையடிநிழ லின்மாதோ (2)

கடவுள் வணக்கம்.

நீ.—சிவபெருமான் கலிப்பா

பொங்குதிருக் கருணையுடன் புவனமனைத் தையுமீன்ற
பைங்கொடியி னொடுமருவும் பவளநெடுங் கிரியைநலங்
தங்குமலர் வாசமுநீர்த் தண்மையுஞ்சொற் பொருளுமென
வெங்குநிறைந் திலகுதனிப் பரம்பொருளை யிறைஞ்சுதுமால்

### தி.—பால்வண்ணநாதர் எண்சீர் விருத்தம்.

திருவினாதனும் பதுமவேதனுந் தேடநின்றவன் றேவர்
யாவரும், வெருவவந்த வெவ்விடமருந்தி யவ்விபுதர்தம் மை
யுய்வித்தளித்தக,னி நவிசும்பினோடு லகம்பாலவையுமீன்றவன்
புடையிறைவி யொப்பனை, மருவுநாயகன் கருவைமேவுபால்
வண்ணனென்று நமமனத்துளானரோ. (4)

### தி.—ஒப்பனையம்மாள் கலிப்பா.

அடியர்பவப் பிணியகற்று மருமருந்தைப் பசியதிரு
வடிவமுறு மனத்தையொரு மருப்புடை நற் களிறீன்ற
பிடியைநறு ங்களவினிழற் பெருமானைப் புணர்மானைப்
படிமுழுது மீன்றருளொப்பனை யுமையை நினைகுதுமால்.(5)

### தி.—சபாலிங்கநாதர் அறுசீர்விருத்தம்.

வன்பவமகற்று ந்தூயவாரநதி மடந்தை கண்ணுற்
றின்பவாரிதியின் மூழ்கியிரு விழிகளிக்க முன்னு
ளன்பொடுநட னஞ்செய்தவ ருட்சபா லிங்கநாதன்
றன்பதமலரை யென்றுந்தலைமிசைப் புனைந்து வாழ்வாம்.(6)

### தி.—முகலிங்கநாதர் கலிப்பா.

தினமுமிமையவர் பரவுந்திருக கருவைப்பதி யினிடை
முனைமாதுல சவுந்தரியின் முதியதவத் தினுக்கிரங்கி
மனமகிழ்வி னுடனினிது வருதுமுக லிங்கதெரி
சனமதனால் கியபெருமான்றனை நிதம்வந்தனை புரிவாம். (7)

### தி.—திருக்களாவுடையான்.

சடையானை வரமுதவச் சடை யானைத் தனிச்சூலப்
படையானை யெம்மையினிப் படை யானைப் பவமரண

---

4-விபுதர்-தேவர். 5-அன்னம் அனமென நின்றது செய்யுள் விகாரம். 6-வாரநதி மடந்தை-கங்கை.

விடையானைத் திருநெடுமால் விடையானை மதகயத்தோ
லுடையானைத் திருக்களா வுடையானைப் பரவுதுமால். (8)

### தி.—லக்ஷ்மணலிங்கர்.

கலகருது பாதகமகலக் கருத்தினிடை நினைந்துநெஞ்
சிலைக்கையி லக்குவன்பூசித் திடக்கருணை புரிந்தபிரா
னலக்கணகற்றிடு கோமளாம்பிகையி னொடுமேவு
மிலக்குமனே சுரன்பதம் போதெப்போது மிறைஞ்சுதுமால்

### தி.—தக்ஷிணாமூர்த்தி.

தழலிடையுற்றிடு மெழுகொத்துளமுரு கிச்சுகசமலர்க்
கழலிணைவீழ்ந் திறைஞ்சிய நால்வருக்குமுனி கருணையுடன்
செழுமறையின்பொருளசொலத்தென்றிசைநோக்கிக்கல்லாலி
னிழலிருந்தபரம் பொருளெந் நெஞ்சிலிருந் தருள்செயுமால்.

### தி.—பராசத்தி கலிவிருத்தம்.

க்ஷுத்திரப பேய்களாற் கோள்களால் வரு
மெத்திறப் பீடையு மிரிய மாற்றுதன்
பத்தருக் கருள்செயும் பாங்குடைப் பரா
சத்தியை நிதமுய வந்தனஞ் செய்வாமரோ. (11)

### தி.—சித்திவிநாயகர் அகவல் விருத்தம்

பொருவில் வெண்மதிபுனை சென்னி
பொறுத்த செயபவளக் குன்றின்
மருவு பைங்கொடி முன்னின்ற
மாசில் கற்பகத்தைத் தொண்டர்
பருவரலிருளை நீக்கும் பரிதியைச்
சுருதி யேத்துங்

---

8-பவமரணவிடையா னென்றதற்குச் செனன மரணமென்னு மிரண்டனையும் விடுத்தவனென்பது பொருள். 10-அலக்கண் துன்பம். 11-குத்திரம் குரூரம் கோள்-கிரகம்.

கருவையம் பதிவாழ் சித்திக்
களிற்றினை வணங்குகிற்பாம். (12)

### ரீ.—வீரசண்முகர்.

சீரமர் பசியதோகைச் சிகாவளத்தினை நடாத்திப்
பாரனைத்தையு முன்னாளிற் பகர்சிவநிசிப் போதேகி
யோரிர விநுக்குட் சுற்றியுலவியே வநதநந்தம்
வீரசண்முகன் பொற்பாதம் வேண்டியஞ்சலி செய்கிற்பாம்.

### ரீ —சேமநதிச்சித்திவிநாயகர் கலிப்பா.

பூமலிகற்பக நாட்டுப்பொன் னகர்நங்கர்க் கிணையோ
நாமதனைக் காண்டுமெனச் செல்வதுபோ னிலரிய
மாமணிமானி கையோங்கி வயங்குதிருக் கருவைநகர்ச்
சேமநதிக கரையமருவு சித்திவிநாயகன் றுணையே. (14)

### ரீ.—நாமகள் அகவல் விருத்தம்.

உலகுயி ரனைத்துமீன்ற சதுமுகத்தொரு வன்பேயுந
தலைவியை மதுபசாலஞ் சாலமொய்த்திசைகள்பாடு
மிலகுவெண் கமலப்பூவிலினி தீற்றிருக்குஞ் செஞ்சொற்
கலைமடந்தையை யெம்முள்ளக கமலமாமலரில் வைப்பாம். ()

### ரீ. சித்திரத்தேர் ஐயனார் கலிவிருத்தம்.

விரத மாமுனி வோரொடு விண்ணவர்
காதலங் குவிதேத்த தககளித தன
வரதநற் கருவைப்பதி வாழ்சிதா
விரதவை யணிணை யடிபோற் றுவாம். (16)

### வீ.—திருநந்திதேவர் அகவல் விருத்தம்.

விரிசடையு நுதல்விழியு மழுககரமு மிலகவரை
வில்லொன் றேந்தித்

---

13-சிகாவளம்-மயில். 14-காண்டும்-காண்போம், கற்பகநாடு-தேவலோகம்.

தரியலர்கள் புரமெரித்த வெள்ளைபிரான் கணத்தவர்க்
குத்தலை வணங்கி
யரிபிரமர் வந்திண்டுங் கயிலைமுதற் கடைகாக்கு
மையன் செய்ய
கரமிசைவேத் திரமேந்து நந்திதிருவடி ககமலங்
கருத்துள் வைப்பாம. (17)

தீ.—சூரியன் முதலிய நவக்கிரக துதி—வேறு.

அரவமணிப் பூணணிசடி லத்தண்ணலெம மானதிகமணம்
விரவுமலர்த் தண்களவி னிழற்பெருமான் கருணைமிகவேண்
டிப், பரவுமொளி கூர்விமானமதாய் போந்துபன்னாட்
பணிந்தேத்து, மிரவிமுதற்கோள் பதம்பரவியெக் கோள்
களையு மிணிககளைவாம். (18)

தீ.—அகத்தியர்.

அதிகபுகழாரி யனலாலயமுன் னட்புரிவித் தருணிட்
சேப, நதியினிடைச் சிலையுருவாயிருந்த வதுலாம்பிகையுமை
நயந்துமிக்க, துதிகொள்பிரதிட்டை புரிவித்தருளும் புகழு
மிகத் துலங்கப்பெற்ற, பொதியமலைத் தவமுனிவர்பெரு
மான்பொற்பத மிதமும்போற்று வேமால். (19)

வீ.—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்—வேறு.

முடிவிலா வேதத்துறு பொருள் கயிலை
முன்ன வன்றன்னை விட்ட கலாக்
கொடிதிரு முலைப்பா லமுதுசெய் துலகிற்
சைவமே குலவிடச் செய்த
கடிகமழ் பொழில்சூழ் காழியுண் ஞான
சம்பந் தன்கவு ணியர் பெருமா
னடியிணைக் கமல மலரிணை யகத்தி
லன்புற வணங்குதல் செய்வாம். (20)

வி.—திருநாவுக்கரசு நாயனார்—வேறு.

வஞ்சனை யமணர்கள் மேல்விக்கினா ரிதயிற்றுழுக்கு
துஞ்சிட விடும்போதக்கன் மிதவையிற்றுலங் கத்தோன்றிச்
செஞ்சொலான மச்சிவாயப் பதிகமேசெப் புமப்பன்
கஞ்சநாண்மல ரப்பொற்பாதங் கருத்திடை யிருத்துவாமே.(21)

வி.—சுந்தரமூர்த்தி நாயனார் கலிவிருத்தம்.

கந்தநா றுங்கயிலை யிற்சேர லன்
வந்தசெய் கைநம்பர்க குரைவாய் மையா
னந்துவா வுதடந்திகழ் நாவ லூர்ச்
சுந்தரன் பதஞ்சென் னியிற் சூடுவாம். (22)

வி. -மாணிக்கவாசகர் அகவல் விருத்தம்.

கடலினை நிகர்க்கும வாவிக்கரையின் கனுயர் ந்கபூக
மடலவிழ்ந்த விளையொடுவாளை கண்முகிலிற் றாவுங்
குடவளைமுத் தஞ்செய்யிற் கொழித்திடும் வாதவூர
னடியிணைக் கமலம்போற்றி யன்புறவழு த்துவாமே. (23)

வி.—அறுபத்துமூன்று நாயன்மார்—வேறு.

சேயரிநதன் றமுதூட்டுஞ் சிறத்தொண்டர் பதம்போற்றி
திருநீலகண்ட ரிருசெழுங கமலப்பதம் போற்றி
நேயமுள கண்ணப்ப நாயனார் பதம்போற்றி
நிறைகருணை பெருகுமமர் நீதியார்பதம போற்றி
மேய்மறைத் தண்டீச நாயனார்பதம் போற்றி
யிளையான்றன்குடிமாறநாயனார்பதம்போற்றி
தூயசிவ பணிவிடைசெய் திருக் கதிபெற்றிடு நேயத்
தொண்டரனை வோர்கடிருத்துணை மலர்த்தாள்களும்போற்றி

வி.—வரதுங்கர்—வேறு.

வரிவலைமா நகர்க்கிறைவன் களவிலமர் பாலவண்ணக்
கடவுள் செம்பொற்

திருவடிசூடிய முடியான்பா ராசர்முடி தோய்ந்து
சிவந்த தாளா
னரியதமிழ்க் குழையாணி யதிவீரராமன் முன்னே
னவனி காக்கு
மருவலர் கோளரிஞான வரதுங்க னடியைநிதம்
வணங் குவாமே. (25)

சீ.—வித்தியாதரு கலிவிருத்தம்.

இந்தநெடும் புவிமிசையோ ரணுத்துணையு மெவருமதிக்
குக்கரமில்லா வெமக்குந் திருக்கருணை கூர்ந்துபல
செந்தமிழ்நூற் பொருளுணர்த்திச் சிர்த்தியருளிய முகவூர்க்
கந்தசுவாமிக் குருவைக் கருத்தினிடை யிருத்துதுமால். (26)

சீ.—நூல்வழி அகவல்விருத்தம்.

இத்தலபுராணத்திற் சொலுங்கதை முப்பத்தைந்தா
மிவற்றுளேழு
சுத்தபவுடிகத்தி லெட்டுப்பிரமகை வர்த்தத்திலொன்
பான் சொற்காந்தத்திற்
சித்தமகிழ்தரும் பதினொன்றுயர் பிரமாண்டத்தி
னெடுந்திரையுலாவுங்
கத்துகடற்புவி புகழச்சூதமுனி யுரைத்ததிருக்
கதைகளாமால். (27)

சீ—நூல்செய்தற்குக் காரணம்—கலிப்பா

தலைமைபெறுங் கற்பகமா தருமிகவாசஞ் செயலால்
விலகருஞ்சீர்க் கனவான்கண் மேவுதலா லமுதார்சொற்

---

21-மிதவை-மரக்கலம். 22-சேரலன்-சேரன். 24-சேய்-குழந்தை
25-உழையாணி-மாற்றறியுமாணி, பாரசர்-வேற்றரசர், வாரி-சமுத்
திரம், தாழ்ந்து-அமிழ்ந்து, துஞ்சல்-இறத்தல்.

புலவர்குழாம் பயிலுதலாற் பொருந்தவளக் கயமுறலா [ன்.
லிலகியபொன்னகர்க்கிணையாமெழிற்கருவைப்பதிவாழ்வோ

விள்ளுதிருக் குறளிலிரு வேறுலகத் தியற்கையென
வள்ளுவர் கூறியமொழியை மறுத்தனனிங் கிவனெனவே
யுள்ளமிக வியந்தெவரு முரைத்திடச் செல்வமுமுயர்ந்த
தெள்ளியகல்வியு முடையான சிவநேயந்தனிற் சிறந்தோன்.

இன்னமுதக விப்புலவோ ரிதயமகிழ் வுறத்தினமுங்
கன்னனென வழங்குசெழுங் கமலமலர்க் காதலத்தான்
றென்னவனே ராறுமுக வீரனருளிய புதல்வன்
மன்னவர்மெச்சிடுஞ் சைவவசியர் திருக்குலத் துதித்தோன்.

என்னுமரு தப்பநேந் திரனுமுய ரீகையருண்
மன்னுசிவ பத்திபொறை வாய்மையறி வொழுக்கமுதற்
பன்னுகுண மனைத்துமொரு படிவமெடுத் துதித்ததெனத்
துன்னுதிரைக் கடலுலகந் துதித்திடவந் தவதரித்தோன்.

தாயினுமென் றனதருமைத் தந்தையினும் பதின்மடங்கு
நேயமதென் னிடைச்செலுத்திநிதமுமெனைப்புரந்தருள்வோ
னாயபுகழ் வனமூர்த்தித் தோன்றலருள் சுதன்பலனு [ன்
லாயுமரு தப்பனெனு மறிஞர்சிகா மணியுமரோ. (32)

பனிமலர்ப் பூங்களவுறையும் பரமன் மலர்ப்பதமகலா
வினியதிருச் சிந்தையினு னெனும்புகழ்ப் பால்வண்ணமுனி
வனிபுரி மாதவபலத்தான் ஞாலமிசை யவதரித்த
புனிதவரு ணாசலவற் புதகுணசிந் தாமணியும். (33)

மிகத்தயைகூர்ந் ததிகமனவிருப்ப முடனெனை
யழைத்துச்
சகத்திடைநா மெடுத்தவிர்தச் சனனமுறு நிலையைப்
பெறுவான்

---

31. படலம்—வடிவம்

சகத்தின்மிகு வளம்படைத்த தொல்கருவைத்
திருத்தலத்தின்
மகத்துவம் பாலையுமெடுத்து வயங்குதிராவிட
மொழியில். (34)

அலையுநெடுந் திரைசுருட்டு மகன்கடறபூ தலத்தினிடை
புலையுமன்னவரு மிகவுமுள மகிழ்வுற் றெளிதுணர
விறைமதா முறுங்கவியா னிகழ்த்துதி யென்றுரைத்தனராற்
குறையறுதீங் கரும்பருநதக கூலிகொடுபபவர் தமைப்போல்

எறிதிரைப பாற்கடலமு தொத்தினிக்கு
மியற்றமிழருமை
யறிதருதண் மதியுடையோ ராகயவன்
னவருரையை
யுறுதியெனக் கடைப்பிடிக்கிங் குரைத்தனனை
யானுயர்ந்தபுகழ்
செறிதருமத தென்கருவைத் திருத்தலமான்
மியத்தையரோ. (36)

அரியபெரும புகழ்படைத்த புசண்டன் முன்னு
ளதிகதவம புரிநதுகதி யடைநத வாறும
விரியுநெடும் புவியனைத்து மீனறதேவி
யின்சகள நிட்களங்கண் ணுறறவாறுந்
திரிபதகை நடங்கண்டவாறு நன்னிட்
சேபநதி யெனுநஇருபபேர் பெறறவாறும
பரிவினுமை தேசுபெறத தவம்புரிந்தொப
பனையெனனுந் திருநாமம் படைத்தவாறும். (37)

மாலயன் முன்னடி முடிதேடிய வந்நாளே
மாசிவராத் திரியெனும் பேர்வாய்ந்த வாறுஞ்
சிலமிகு மைங்கரன்வேற் காரனைபோடு
சிவசிசியிற் பூசனைசெய் திருந்தவாறு

37. சகளம்—உருவம். நிட்களம்—உருவின்மை.

மேலவர் போற்றிய சிவராத்திரி யாகாளில்
விரதமனுட் டிக்குமியல் புரைத்தவாறு
நீலநிறத் திருமாலு மயனும் பஞ்ச
லிங்கதெரிசனம் பெற்று நின்றவாறும். (38)

வாரமுடன் சுக்கிரன் வேண்டுதற்கா கப்பால்
வண்ணனெனுந் திருநாமம் வந்தவாறு
நாரதன்கா ளாயனெனு மிருவர் தம்பா
னண்ணியவெம் பாவமகல் வித்தவாறுஞ்
சீரமர்நாற் றிசையினுநாற் றேவர்காவல்
செயும்புரிந் தியமவாதை தீர்த்தவாறுங்
கோரமிகு தக்கனமகங் காண்பான சென்று
குறுகிய வானவர் சாப மடைந்தவாறும். (39)

சுரதருவோர் திருக்களவா யுதித்தவாறுந்
துலங்குநாறுஞ் செழுங்கமலத் தவிசின்மேவும்
பிரமனெடு மான்முதலோர் சாபமுன்னாட்
பேர்த்தவாறுஞ் சுரர்கோ னாதியோர்க்கு
விரவியசாபந் தவிர்ந்து கருவையூர்க்கு
விளங்குசரி வலநகர்ப்பேர் வந்தவாறு
பிரவியின்பாவந் தவிர்ந்தவாறுங் கும்ப
னெனுந்தமிழ் மா முனிபூசித் திருந்தவாறும். (40)

வானவருந் திறைவனை மகம்புரிந்தவாறும்
வயங்குமுதா சலத்திடைச் செய்தவத்தாற் காம
தேனுவுயர் மகப்பேறு பெற்றவாறுந்
திருக்களா வுடையார்க்குச் செம்பொற்கோவின்

---

38. ஐங்கரன்—கணபதி. 38. திரிபதகை—கங்கை.

39. குறுகிய—அணுகிய. 40. பேர்த்த—நீக்கிய. 40. சுரர் தரு—கற்பகதரு. கனற்கடவுள்—அக்கினி.

மாநகர மாரியன்முன் னமைத்தவாறு
மயல்வாதை யம்பிகையா லொழித்தவாறு
மூனமற விளங்குபரா சத்திபீட
மூலகமெலாந் துதித்திட வுண்டாயவாறும். (41)

மேதகு மிந்திரசித்தை வதைத்தபாவம்
விலக்க விலக்குவனக் கருதி மேனாள்வந்து
கோதறுபூசனை புரிந்தவாறுந் தாயைக்
கொலைபுரி வேதியன் பாவந் தவிர்ந்தவாறு
மோதுபுகழ் மேவுசுரு பாண்டியற்கே
யுயர்தருமித குலமகிமை யுரைத்தவாறு
நீதவுதாவசு வெனுமனைவ னுக்காங்கு
நெஞ்சமகிழ்ந் தொருமகப்பே றளித்தவாறும். (42)

பொருளிழந்து துயருழந்த வசியனந்நாட்
பொருட்பேறு பெறக்கருணை புரிந்தவாறுங்
கருதருங் காண்டவதகனம் புரிந்தவாற்றாற்
கனற்கடவுட் குறுபாவந் தவிர்த்தவாறு
மொருகோமய சூத்திரனை விரும்பிச்சேர்ந்த
வுணர்வறுபார்ப் பணிபாவ மொழித்தவாறும்
பருமறலி யொடுசமரம் புரிந்துநீதி
பயில்குலபூடணன் வாகை படைத்தவாறும். (43)

புவிமிசையாரிய னெனத் தோன்றிய குபேரன்
புகழ்ப்பீடப் பிரதிட்டை புரிந்தவாறுங்
கவினுறு தக்கன்றேனுத தனதன் முன்னுக
கருதுபலர் பெறுசாபங் களைந்தவாறு
நவிலுறும் வைசியன்றனை வஞ்சித்துமன்ற
னடத்திய வேதியன்பாவ மொழித்தவாறு
மவிர்மகுடச் சேரன்வர துங்கனென்னு
மரசருக்குத் திருக்காட்சி யளித்தவாறும் (44)

---

41. மயல்—பசாசு. 43. வாகை—வெற்றி. 44. மன்றல்—விவாகம்.

ஆதியமும்பத் தைந்து சரிதந்தம்மு
ளொருவிருபத் தொருசரித நகர்ச்சிறப்பு
வாருபெறுந் தலமேன்மை தீர்த்தமேன்மை
மாமூர்த்தி மேன்மையிவை சருக்கமாக
வோகையுற வகுத்துரைத்தே னிந்நாண்மற்றை
யுயர்சரிதமொரு பதினன்கொடு நாட்டின்சீர்
சோகமறு கதைவரலாறிவை முன்னுளிற்
சொற்றனன் மற்றொருவ னவன்யாவ னென்னில் (45)

எற்குன்ற னருள்புரி யென்றினிது வேண்டி
யிதயமிகக் கசிந்துருகி யெந்த ஞான்றும்
பொற்குன்ற வில்லிதனைத் துதிக்குந் தூயோன்
புகழ்ச்சொக்க நாதகுண பூமான்மைந்தன்
மற்குன்றலின்றி மிகச்சிறந்த தொண்டை
மண்டலவேளாளர் திருமரபில் வந்தோ
னெற்குன்ற நகர்வாழ்வீ ரபபனென்ன
நிகழ்த்துபெயர் படைத்தவொரு நேயன்மாதோ. (46)

அவையடக்கம்

தாயனுன் கருவைப்பிரான் சரிதநற் றமிழாற்
றூயநாவலர் தமக்கெதிர் யான்சொலத் தொடங்க
லேயுமோர் விலாவூமன் வண்டமிழ் வலோரெதிருற்
றுயுறுற பொருளை பகர்ந்திடப்புகுந்த தொப்பாமால். ()

மாசிலா வொருநூலும் யான்கற்றி லேன்மனததிற்
பேசுறுண் ணுணர்வுற்றி லேன் பெரும்புகழ்க் கருவை
யீசன்மெய்த் திருச்சரிதம் யானியம்புவ லென்னு
மாசையா லிஃதுரைத்திடத் துணிந்தன னம்மா. (48)

---

46. மல்—வளம்.

### அரங்கேற்றிடம்.

உன்னுகலியுக வாண்டையாயிரத் தோரிருபத் தொன்றுயர்
சித்தார்த்தி
யென்னும்வருடந்தனிற் கற்றவர்செவிக்கு மனதினுக்கு
மின்பந்தோன்ற
மன்னுகருவைத் தலமான்மியத்தை யரங்கேற்றினன்பால்
வண்ணநாதன்
சன்னிதியிலிருந்துமிகப் பொருந்துபுகழ்த் திருமலைவேற்
றமிழ்வல்லோனே.

பாயிரம் முற்றிற்று.

---

உ

சிவமயம்.

## திருநாட்டுச்சருக்கம்.

---

வி—கலித்துறை.

பூசுவெண்பொடிமேனியெல்லாம்பொலிந்திலகு
மீசனாடியாரெனமாமுகிலெழுந்தவ்
வோசைமாகடல்படிந்துநீருண்டுலகளந்த
கேசவன்றிருமேனியதாமெனக்கிளர்ந்து. (1)

அறத்தையன்பொடுவளர்த்தபூங்கொடியிடத்தமல
னெறித்தசெஞ்சடையென்னவேமின்னியாங்கவன்கை
பொறுத்தபொற்றமருகமெனவிடித்துநற்புகழே
சிறக்குநன்மழைபொழிந்ததாலவன்றிருவருள்போல் ()

பின்னர்வெண்பிறைதாங்குகுன்றெழினுதற்பிறங்கே
பன்னமாவனோடிருமருங்கிருட்பவாறுருவாய்ப்
பன்னுகான்மிசையேறியேகுளம்புகுபண்யான்
மின்னுவேற்கரக்குகனெனவெழுந்ததுவெள்ளம். (3)

---

1-முகில்-மேகம்.

வாரிசூழ்தருபுவிமிசைமணமிகக்கசிவுற்
றார்வமோடனுதினந்துதித்திடுமடியவர்பாற்
கார்மிடற்றிறைவைக்குநற்கருணைபோலெய்தி
யேரியெங்கணுநிரம்பினவீர்ம்புனன்மாதோ. (4)

பரந்தகானெறியேகிநீர்செய்யிலைடப்பாய்ந்து
நிரந்தபின்புபொன்னுஞ்சிலேர்பூட்டிமாநிலத்திற்
சுரந்தமங்கலக்குரவைகள்கடைசியர்துளக்க
நரந்தநாறுசேறெழமள்ளருழுவர்சீர்நாளோர். (5)

சூலுளைந்துவாயலறியேபயப்பயத்துவன்றி
வால்வளைகுலந்தாமரைமலரிடைவயங்குஞ்
சீலமிக்கவவ்வளைதருமுத்தினைச்சிறந்த
கோலமேவுதங்கருவெனவணைகும்வெண்குருகு. (6)

பழுதுநீங்கநல்லோவியரவயவம்பார்த்தே
யெழுதொணாதெனவனப்புறுங்கடைசியரிருகண்
முழுதுமேனிபாய்தல்போனமொய்ந்நெடுஞ்சேல்க
ளுழுதமள்ளர்தம்முரத்தினும்புயத்தினுமுலவும். (7)

ஏடவிழ்ந்தபூங்கழனியிற்சேற்றிடையிறங்கி
யாடன்மள்ளர்கண்மள்ளியர்தம்புறவடியைப்
பீடுதங்கியகமடமென்றுவப்புடன்பிடிப்ப
வூடறீர்ந்துளங்களிப்பராலுயர்கடைசியரே. (8)

கலிவிருத்தம்.

முத்தினதொளியெனமுளைகள்காலவே
வித்திச்செய்தொறும்விரிந்ததோகைவிட்
டத்தன்கைப்படையெனக்கிளைத்தகன்புறு
முத்தமர்போற்குழைந்தோங்குஞ்சாலியே. (9)

---

5-நாஞ்சில்-கலப்பை, நரந்தம்-கத்தூரி. 1-வெண்பொடி-விபூதி

### கலித்துறை.

ஊறுதண்புனற்கழனியின்மள்ளர்களுழுது
சேறுசெய்யகாற்றினைநடுங்கடைசியர்முகத்தை
நாறுபங்கயமலரெனநயந்துவீழ்கின்ற
வாறுகாலளிகாசிசண்பகமெனவகலும். (10)

நட்டசாலிகள்செழித்திடமலரின்வார்கறவுந்
தட்டிலாதமந்திகள்பலாக்கனியையுந்தனமாய்க்
கொட்டவீழ்தருகறவமும்பொருந்தியேகுழுமி
மட்டிலாதபூங்கழனியிற்பாய்ந்திடுமாதோ. (11)

### கலிவிருத்தம்.

புட்படிநீலமுங்கமலப்போதுந்தங்
கட்பகைமுகப்பகையென்றுகாய்தல்போற்
றட்பநீர்வயற்களைகளையுநந்தயலார்
பெட்புறுகையினாற்பிடுங்கிவீசுவார். (12)

துன்னுநற்கதிர்குலையின்றுதட்டர்போன்
மன்னியேமிகத்தலைநிமிர்ந்துமாண்புறும்
பன்னருங்கற்பினிற்சிறந்தபாவைய
ரென்னவேதலைகவிழ்ந்திருந்தசெந்நெலே. (13)

### அறுசீர்விருத்தம்.

அரனடியவர்கடம்மைக்கண்டுவக்கின்றவன்பர்
விரைமலரருச்சித்தன்னார்மென்பதம்வணங்கல்போலக்
கருநிறவளிகண்மொய்க்குங்கமலமாமலரின்மீது
மருவுநெற்கதிர்கள்சாய்ந்துவயக்குறும்வயலின்மாதோ (14)

---

7-நனி-மிகுதி, சேல்-கெண்டைமீன், உரம்-மார்பு. 8-கழனி-நன்செய். 12-புள்-வண்டு. நீலமும் கமலப்போதும்-கட்பகைமுகப் பகையென்றது முறைநிரனிறை.

### கலிவிருத்தம்.

செவ்விபார்த்தவலையோடரிந்துசிர்பெறு
மவ்வயன்மருங்குபோராக்கியார்ததெழு
மைமவணப்பகடுவிட்டுழக்கவைகளைந்
தெவ்வமில்பொற்கிரியெனக்குவிப்பரே. (15)

ஆறிலொன்றரசனுக்கன்பினோடளித்
தீறிலாப்பண்டியிற்றொகுத்திட்டின்பமாய்
மாறிலாச்சுற்றமும்விருந்துமாவாய்ந்துளந்
தேறநற்றேவுந்தென்புலத்துத்தேவரும். (16)

தாழுமேயருந்திறற்றருமமேபுரிந்
தேமுறுகுடிகளவாழந்திருப்பேர்ங்களும்
பூமலர்த்திருவுநாமகளுமம்புநதியின்
மாமகிழ்வுற்றவண்வாழ்குவாரரோ. (17)

### வேறு

நீனிறக்குழற்கடையியர்பார்வையினிழலை
மீனமாமெனக்கொத்தியேகுருகுவெள்குறுமாற்
றேனுலாமலர்த்தொட்டிலிறசெய்யகாலன்னங்
காணவண்டுதாலாட்டிடக்கண்வளர்ந்திடுமால். (18)

கரும்புநேருமின்மொழியுடைக்கன்னியோர்பாகன்
சுரும்புசூழ்மலர்த்திருககளாவுடையவன்றோன்றி
விரும்பிவாழமிவ்வாரியநாட்டின்மேன்மையைப்
பெரும்புவித்தலத்தேவரேபேசிடவல்லார். (19)

நாட்டுச்சருக்கம் முற்றிற்று.

தெய்வவணக்கமுதலியவுடன் சருக்கம் 1-க்கு
திருவிருத்தம் 67.

---

17-ஏமம்-ஏமெனவும். 18-நீலம்-நீலெனவும் நின்றன. செய்யுள்விகாரம் ஏமம்-இன்பம். 19-கரும்புநேருமின்மொழியென்னுந் தொடரில் உவமானம் உவமேயம் பொதுத்தன்மை உவமையுருபு ஆகிய நான்கும் விரிந்திருத்தலால் விரியுவமை.

# திருநகர்ச்சருக்கம்.

## கி.—கலித்துறை.

பன்னகப்பெரும்பாயலான்பதுமமேலுறைவோன்
முன்னநாடிமெய்வருந்தியுமறிவொணாமுதல்வன்
கன்னிமொப்பனையொடுமகிழ்ந்துறைதருகருவை
நன்னகர்ச்சிறப்பினைச்சிறிதறிந்தவாநவில்வாம். (1)

சுருங்குநுண்ணிடையரம்பையர்விரும்பிநாடோறு
நெருங்குமாமலர்கரமலர்நீட்டியேபறித்துக்
கருங்குழற்கணிந்துளாமிகக்களிக்கநல்லகழின்
மருங்குசூழ்ந்துயர்ந்திலங்குறுநந்தனவனமே. (2)

அங்கண்வானிடைக்கதிரவன்றூண்டுமோராழித
துங்கமாமணித்தேர்ப்பசும்புரவிகடுணர்ப்பூங்
கொங்குலாவுமச்சோலையின்குளிர்நறுநிழலிற்
றங்கியேவிடாய்தணிந்துபின்விரைந்துசென்றிடுமால் ()

வண்டெனுஞ்சிறார்வந்தாற்றிடநெடும்பனைக்கை
கொண்டணைத்தெழில்குலவுநல்லருமபெறுங்கொங்கை
கண்டிறந்தெழுகுறுகநறுங்கட்பயமூட்டித் [க்
தண்டலைப்பெருந்தாய்மிகவளர்க்குநித்தமுமே. (4)

தாதுலாமலர்க்கொம்பினின்றமபாவான்றருவின
மீதுகூனிளம்பிறைதிகழ்விசையொடுபாயும்
போதுசிந்துதேன்பெருகிப்போர்பெருந்திப்போற்செங்
ஞேதநீருவரகறதினைகலைநனியுதவும். (5)

கருதுமாழுமணிரிவுநிரதுணைதத்தனைகசாணட
கருமையாயுயரிஞ்சிகூப்கிடந்தம்பாகழ்

---

1-பன்னகம்-பாம்பு. பதுமம-தாமரை. 2-அரமபை-தெய்வ பெண். கரம்-கை. 4-கள்:தேன். பயம-பால் துடியடி-உவமைத் தொகை நிலைத்தொடர் துடி-உடுக்கை. அடி-கால்.

மருவுசக்கரவாளமால்வரை தனைவளைந்த
பொருதிரைப்பெரும்புறக்கடல்போன்மெனப்பொலியும். (6)

நெடியதெண்டிரையகழியோர்கடலெனநினைத்துப்
படியும்வான்பெரும்பயோதரந்தனையிளம்பருவப்
பிடியெனுநினைத்தவனுலாம்பிறைநெடுங்கோட்டுத்
துடியடிப்புகர்முகக்கயந்துளைக்கரநீட்டும். (7)

கலங்கலின்றியேதெளிந்தமெய்யறிவினைகடிய
புலங்கண்மூடுதல்போலவேசாலவெப்போது
மலங்குநீடிரையகழியின்புனலினைமூடி
யிலங்குநற்செழும்பங்கயப்பாசடையெங்கும். (8)

அறுசீர்க்கழிநெடிலடியகவல்விருத்தம்.

மருப்பொலியுங்கடுக்கையணிசடைப்பெருமானறைக்கிடமா
வதியும்பண்பாற்
பருப்பதம்யாவினுங்கயிலைசிறந்ததலனுறைந்திடுமப்
பதியின்பாங்கர்
விருப்பொடுசென்றேத்தியவறகிடமாகுமியாமுமென
மேருவென்னும்
பொருப்பவண்வந்துற்றுநின்றபெற்றியினின்றிலங்குமணிப்
புரிசைமாதோ. (9)

பொன்னணிறமுற்றிடுகளிறுறைபயவாயிலாரவங்காப்
புக்கொள்பண்பான
மின்னிசையுங்கனமணிக்கோபுரத்தலைமேவியகுணதான்
றிகழுநீண்ட
கன்னிலைபெற்றமைதலினுற்பட்டிசைநின்றுதலா
னவைதீரிஞ்சி
பின்னிசைவண்டிமிர்துளவத்தொடைபுனையுமுடித்திரு
மாறகிணையதாமால். (10)

---

9-ஆதும்-ஆவோம்.

தெள்ளியவெண்சுதையிரொளிதிகழ்தருபாளிகையினைக்கட்
செவிப்பூஞ்சேக்கைப்
பள்ளிகொள்பங்கயமலர்க்கட்பரமனும்வேதனுமறியாப்
பகலவன்வாழும்
வெள்ளிநெடுங்கிரியெனவோரெழுபரித்தேரூர்ந்துபெரு
விசும்பிற்செல்லு
மொள்ளியசெங்கதிரவனைநன்னுளமவெருவிமீண்டுபுறந்
தொதுங்குவாலுல. (11)

வீங்குதிரைசுருட்டுநெடும்பாற்கடலின்மீதுமணை
மேவுஞ்செய்ய
பூங்கமலமனையதிருக்கண்டுயிலுங்கணாடுளவப்
புனிதனேயப்ப
நீங்கரியவொளியதிகம்பெறுதவளப்பெருமாட
நிரையினுமப்
ரோங்குமகல்விசும்பினிடைப்பலவுநமனெருக்குற்றுயலைவர்
துறங்குமாலோ (12)

வேறு

தூயமாமரகதமணிமேடையின்சோதி
பாயவீழ்வாய்போவுறுங்கவனவாம்பரிகள்
சேயவானுயர்ந் முடையவைக்கணிநெடுந்தேர்மேன்
மேயபல்கதிர்ப்பரிக்கனப்புரவியினவிளங்கும். (13)

புலவியாலொளித்துறைதருமயப்பூவையர்சாயை
குலவுநீள்பளிக்குச்சுவர்நடுவேதோன்றிடவே
நிலவுசாயையையாங்கவரெனவேநினைத்தகு
கலவிவேட்குமாடவர்நகரங்களகூப்புவரால. (14)

வேறு.

வன்னமணிமேடையின்மேல்வைகிமலர்முடித்தலுள
மகிழ்ந்துவாசந்
தன்னுநறுஞ்செழுங்கலவைபூசுதல்பொற்பணிபுனைதல்
சூழ்ந்துமேவு

11-கட்செவி-பாம்பு, சேக்கை-பாயல். 14-வேட்கும்-விரும்பும்.

மின்னுயிர்ப்பாங்கியர்களுடனினிதுவிளையாடலெனு
மிவையேயாங்கு
மின்னிகர்சிற்றிடைமடவார்விருப்பொடுநாடொறும்புரியும்
வேலையாமால். (15)

சுணங்குபடர்ந்திலங்குமணிக்குடநிகருந்தடமுலையார்
துணிதீர்வுற்றுக்
குணங்குலவுமணங்களிகூர்ந்திடவவரைத்தமதுநெடுங்
குஞ்சிசேப்ப
வணங்குவதுமிரதியொடுமருவுமதனொளிர்கவு
மகிழ்ந்துகொஞ்சி
யிணங்குவதுமபலகலைகளினிதுபயிலவதும்புருட
ரெவர்க்குமவேலை. (16)

அணிதிகழ்பால்வண்ணர்திருச்சந்நிதியினடம்புரியு
மரம்பைமானுங
கணிகையர்காற்சிலம்பொலியுமுழவொலியுமறையொலியுங்
கருதுமூவர்
தணிவறுபாடலினொலியுநெடுந்தொண்டர்கரவொலியுந்
தகுபொன்றூடு
மணிமுடியுப்பருக்குவிழ்புறக்கமுமதியற்றுமனை
வரகமாத்தா (17)

வேறு.

சொனைமாமணிமேடைபெருகுந்தாணிகருமின்னார்காற்சில
பனைவர்மாமுலைக்கிணையாயருங்காற்சிலம்பே [ம்பே
யின்னிதழ்கண்ணல்குலுககொப்பினைநாணிவாடுவரே
பன்னுமவர்க்காணிலரம்பையர்நாணிவாடுவரே (18)
பாவையர்குந்தளத்திருந்துபாடுமதுகரமிசையே
காவலவர்கொள்வர்படைக்கலந்தமதுகரமிசையே

---

16-குஞ்சி-குடுமி, குஞ்சி சிவத்தற்குக்காரணம் செம்பஞ்சுக்குட்டியபாதங்களிற்சேருதலென்க. 18-இறை-சிவன்,

காவலவரனவாதநவிலுவரைந்திலக்கணமே
மேவுறும்வீதிகடொறுமோவியங்களவரைந்திலக்கணமே.

இமகிரணமதிதனையாங்கிடுமகததுவசந்தொடுமே
குமரர்புயத்திடைக்களபங்குளிர்மகத்துவசந்தொடுமே
கமழுநெடுந்தெருவகலாகடும்பாய்மாவாரணமே
விமரிசையந்தணர்பயில்வார்ந்நடப்பாய்மாவாரணமே. (20)

மேடைமினனூரகப்பயிலவிளையாடுகைகந்துகமே
வாடலில்காளையருநாவாக்கிழ்ந்தாடுங்கந்துகமே
நீடுமறுகெங்கணுமேநிறைபவனசத்திரமே
பீடுறுமணவர்முடிமேறபிறங்குவனசத்திரமே (21)

கதிரிலகுஞ்செழுந்துவாநங்கனவினிமையுளமுருகக்கு
மெதிரிதழார்பாடுமிசையெவரையுமேயுளமுருக்குந
ததையுமலர்த்தொடைகதுமாதமமாநச்சந்தனமே
சிதையவுழக்கிடுமடவார்திகழ்மாகசந்தனமே (22)

முனிவரர்தங்கணமும்பிணையவாகணமுமுதுநயத
தனியடியார்பொருங்கணமுமொருகணமுறந்தணவாமே
நனிகுழுமித்துதிபுரியநகர்யொப்பனையெனும்பைங
கனியொடுவீற்றிருந்தருளுங்களிமலாநவெண்கனியே.(23)

வேறு

காவளமலிதருகருவைமாநகர்
மேவுநற்சிறப்பெலாம்விரித்துக்கூறவே
யேவர்வல்லமையுளாரிரழிலகொளாயிர
நாவுடைசசேடனுநவிலொணாதரோ. (24)

நகரசசருக்கம முற்றிற்று.

ஆக சருக்கம 2-க்கு விருத்தம 91.

20-அகத்துவசம-மாடகொடிகள். 23-பைஙகனி-வெணகனி. யென்பன உமையையும் உமாபதியையும் உணர்த்திநின்றன.

## தலவிசேடச் சருக்கம்.

### தீ—கலிவிருத்தம்:

அலமரு பவக்கடல் கடத்து மற்புதக்
கலமெனும் பானிறக கடவுள் வைகிய
நலமலி கரிவல நகரமாந் திருத்
தல மகத்துவஞ் சிறிதெடுத்துச் சாற்றுவாம். (1)

தீதில் பல்லுயி ரெலாமீன்ற தேவிமுப்
போதுவந் தருந்தவம் புரிந்து வைகிய
மாதல மாதலால் வயங்கு மித்தல
மோதுமெத் தலத்தினு முயர்ந்த தாகுமால் (2)

கொலை முதலாகிய கொடிய பாதகம்
பலபுரிந் தவர்களே யெனினும் பாபுகழ்
நலமிகு புனிதபால் வண்ண நாதனவாழ்
தலமடைந் தவர்கதி சார்வர் திண்ணமே. (3)

செகத்திடை யுயர்ந்தவித தெய்வ மாதல
மகத்துவங் கருதிலர் மற்றை யொனறினை
யகத்திடைக் கருதிவந் துற்றினு மாசில்கற
பகத்தரு விந்திர பதத்தை மேவுவார். (4)

வீசுதெண் டிரைப் புவிமீது வாரணை
வாசிமுன் னும்பல மாதலந் தொறு
மேசற வடைந்தவ ரெய்துறும் பேறெலாம்
பேசுமித் தலத்துறிற் பெறுவர் யாருமே. (5)

கருதுமைம் புலனடக் கிப்பல் காலமும்
புரிதரு தவத்தினாற் பொருந்து பேற்றினை
யிருதயத் தானடி யெண்ணி யித்தலத்
தொருதின முறைபவர் பெறுவ ருண்மையே. (6)

---

1. அலமருபவம் - வினைத்தொகை நிலைத்தொடர் - அலமரக் கழற்சி. 5. ஏசு-குற்றம் வாரணவாசி-காசி.

மறுவிலித் தலத்தொரு வைகல் வைகுவோர்
பெறுவர் சாலோகமாம் பதத்தைப் பேணியே
சிறுமை தீரோரிருதினம் வசிப்பவ
ருறுவர் சாமீப மாமுயர் பதத்தையே. (7)
முத்தினம் வசிப்பவர் முதிய வின்புறுஞ்
சுத்தசா ரூபமே பெறுவர் தோய்குவார்
சித்தமே மகிழ்ந்து நாற்றினம் வசிப்பவ
ருத்தம மான சாயுச் சியத்தையே (8)
இப்பெருந் தலத்தினை யகத்தி லெண்ணினுஞ்
செப்பினுஞ் செப்பிடச் செவியிற் கேட்பினு
மொப்பில் வீடடைவர் தலத்துறைந் தோர்பெறு
தப்பறு பேற்றினைச் சாற்றல் வேண்டுமோ. (9)

கலித்துறை

வித்தகப் பெருந்தனிச் சிவலிங்கமாய் விந்தோ
ரத்தியாவை யுந்துலங்கு மித்தலத்தி லாதலினு
மித்தலத் திடைப்பிறந் தவரெவரோ யெனினு
முத்தமச் சுரரென்பதற் கையமு முளதோ. (10)
நிதிகளிற் சிறந்துளது சாம்பூனத நிகரில்
கதிகளிற் சிறந்துளது சாயுச்சி யங்கவு
ணதிகளிற் சிறந்துளது நிட்சேப நன்னதிமா
பதிகளிற் சிறந்துளது தென்கருவை யம்பதியே. (11)

விந்தைமிக்க பொன்னுலகில் வானவர் தொழமேவு
மிந்திரன் பெருவாழ்வு மோர்வாழ்வெனவெண்ணார்
கந்தமா மலர்க்களா வனத்தலத்தி லோரென்பில்
செந்துவாய்ப் பிறந்திடினு நற்கதி கிடைத்திடலால். (12)

---

7. சாலோகம்-சிவலோகத்திருத்தல். சாமீபம்-கடவுள் சமீபத்திருத்தல்.

11. நிதிகளாவன-ஆடகம், கிளிச்சிறை-சாதரூபம், சாம்பூநதம் என்பனவாம்.

அகவல் விருத்தம்.

வரியளிக்குலமொய்த்தார்க்கு மலர்த்துழா யணியுஞ்செங்கட்
கரியமா லயன்முன் னாய கடவுளர் யாருங்கூறற்
கரியவாமெனிற் பாலவண்ண னார்தல மகிமையாவும்
விரியுமிப் புவியின்மீது விளம்பிட வல்லார்யாரே. (13)

பத்திசெய்மாநகர மகத்தியநகர மநாதிபுரம் பாவநாசஞ்
சித்தருவ ஞானபாகர மமுதாசலஞ் சிவசத் திபுரஞ்சிவன்
முத்திபுரிபுயபுரி கரிபுரமம் பாபுரமிம் முந்நீர்ஞால
நத்துகரிவலநகரந் திருக்களாவன மிந்நகர்ப் பேராமால். ()

தலவிசேடசருக்கம் முற்றிற்று.

---

## தீர்த்தவிசேடச்சருக்கம்

தீ—கலிவிருத்தம்.

கார்த்தடங்கிரிநேர்கைக்கயவுரி
போர்த்தமுக்கட் புராதனன்வாழ்தலார்
கீர்த்திசாலக்கிளர்கருவைப்பதித
தீர்த்தமேன்மைசிறிதெடுத்தோதுவாம். (1)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாமதுபக்குலமுழக்கமதுவழங்குமினியநறு
மலர்க்காவின்
காமருசீழலிலுதித்தபால்வண்ணநாதனெனுங்
கருணைப்பெம்மான்
றூமநறுங்குழலுமையொப்பனையொடுவாழ்தலத்திலுக்கு
த்தரபுறத்திற்
சேமநதியெனவுளதோர்தீர்த்தமிதன்மகிமையெவர்
செப்பவல்லார். (2

---

2-மதுபக்குலம்-வண்டின்கூட்டம், உத்தரம்-வடக்கு, புற
பக்கம், 3-தகள்-குற்றம், 4-சேமம்-காவல், ஏ-மன்-ஓ-அசைநிலை

பாதியினமதியணிந்தபவளநிறச்செழுஞ்சடிலப்
பகவன்மேனிச்
சோதியெனத்துலங்குபெருந்தேசுபெறத்தான்விரும்பித்
துகடீரண்டக்
கோதில்பலபுவனசராசரங்களெலாமீன்றதனிக்
குமரியெம்மா
ளோதியவாறிக்கருவைத்தலத்திடைச்சென்றரியதவ
முஞற்றவெண்ணி. (3)

ஓங்கியதென்கயிலைவரைதனைவிடுத்துமுன்னாள்
புடையோர்தம்மைத்
தாங்குபரதேவியவள்வருமிபோதன்பொடுசேமந்
தனைச்செய்கின்ற
பாங்கியெனவேகடவுட்கங்கையவளொடுவரலாறு
பார்மீதென்றுந்
தேங்குபுகழ்ச்சேமதியெனுந்திருப்பேர்பெற்றுதிந்தத்
தீர்த்தமனனே. (4)

பத்தியொடுதிருக்கருவைக்களவுறைபால்வண்ணன்மலர்ப்
பாதத்தையுன்னிச்
சுத்திதருமிச்சேமதித்தீர்த்தந்தனிற்படிந்தோர்
தொலையாவெய்ய
வெத்திறவெவ்வினைபுரிந்தோரெனினுமழியாவுயர்வீ
டெய்திநாளு
நித்தியபேரின்பமடைந்திருப்பரவரினிப்பிறவா
நிலத்தின்பாதோ (5)

அறமதனைநெஞ்சிடைச்சிறிதெண்ணாதவருப்பாதகந
மகிலமபோறறு
நிறந்தருநற்புகழ்படைத்தவித்தீர்த்தமகிமைதனை
நினைத்தலின்றி

மறந்துகரத்தாற்றொடி னும்வானவர்தமபதம்பெறுவார்
மனத்தானுன்னிச
சிறந்திடுமிப்பெருந்தீர்த்தந்தனிற்படிந்தோர்பெறும்பேறு
செப்பற்பாற்றோ. (6)

மாலயனுக்கரியதனிப்பொருளெனும்பால்வண்ணனுள
மகிழ்ந்துமேவு
மாலயமுன்னேயுளதோர் தீர்த்தஞ்சுக்கிரதீர்த்த
மதன்பேராகுஞ்
சீலமிகுதேவிதீர்த்தஞ் சூலதீர்த்தமெனத்
திகழிரண்டுங்
கோலவதுலாம்பிகைபால்வண்ணன் மணிச்சினகரத்துட்
குலவுமாதோ (7)

ஞாங்கிலத்துமுள்ளமகாபுண்ணியதீர்த்தங்களெவற்
றினுக்குமேலாம
பன்னரியபெரும்புகழ்சேரிச்சேமத்தியினிடைப்
பழுதில்லாமெய்த்
தன்னிகர்கிட்சேபதீர்த்தங்கிருபாதீர்த்தமுமயர்
சங்கதீர்த்த
மன்னுதிரிவேணிமணிகாணியெனப்பாலதீர்த்தம்
வயங்குமாலோ (8)

வேறு

வானுலாவுமருதகிரிமேல்பால்வயங்குமிருதீர்த்தம
பானுதீர்த்தநிதிப்பிரசிரவணமென்னப்பகருவர்மே
லானசீர்த்திமலிதருமவ்வமுதாசலததின்மிசையுளவாற்
றேனுதீர்த்தமோடிடபதீர்த்தமெனுந்தீர்த்தங்களரோ ()

6-தீர்த்தத்தி னுயர்வைச் சிறப்பித்து நிற்றலால், உம்மை- உயர்வு சிறப்பும்மை 7தேவிதீர்த்தம் அதுலாம்பிகை சினகரத்துள் சூலதீர்த்தம் பால்வண்ணன் சினகாத்துள் எனமுறை நிரனிறை யாகக்கொள்க, மாதுஓ அசைநிலைகள்.

இன்னபலதீர்த்தங்களின்மான்மியங்களனைத்து
மிமையோர்க்கு
முன்னலரிதாமென்னில்விரித்தெம்மனோர்தம்
மொருநாவாற்
பன்னலெளிதோவித்தீர்த்தப்படிந்தோரெவரும்
பவமாண
மென்னுமிரண்டற்றெம்பிறையோனிருதாணிழலுற
றிடுவரரோ. (10)

தீர்த்தவிசேடச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் 4-க்கு விருத்தம் 115.

---

## மூர்த்திவிசேடச்சருக்கம்.

க—கலிவிருத்தம்.

கானமிருத்தகளாகநறுநீழலிற
றூன்முளைத்ததனிச்சிவலிங்கமா
மேன்மையுற்றுவிளங்குமமூர்த்தியின்
மான்மியத்தைவழுத்தல்செய்வாமரோ. (1)

அகவல் விருத்தம்.

செப்புமிம்மூர்த்திதனைத்தெரிசனமபுரிந்துநாவா
லப்பனேகளவினீழலமர்ந்தவெண்கனியேயெந்தா
யொப்பிலாபாகாநீகாவுனைநமபினமென்றேத்தி
லெப்பெருமபாயஞ்செய்தோரெனினுமவீடடைவர்மாதோ.

10-பலதீர்த்தங்களாவன-முற்கூறிய தேவிதீர்த்தம், சூலதீர்த்தம், சேமதீர்த்தம், ஙட்சேபதீர்த்தம், இருபாதீர்த்தம், சங்கதீர்த்தம், திரிவேணிதீர்த்தம், மணிகரணிதீர்த்தம், சூரியதீர்த்தம், விதிப்பிரசிரவணதீர்த்தம, தேனுதீர்த்தம், இடபதீர்த்தம் ஆகிய இவை யனைத்துமெனக.

1-கான்-வாசம், 2-கா-முன்னிலையேவலொருமை வினைமுற்றுப்பகுபதம். ஆய விகுதி புணர்ந்து குன்றிற்று.

விரிமலர்ப்பசுங்களாவின் மேவுபால்வண்ணலிங்க
தெரிசனம்புரிகுவான்சிற்சிலநிமித்தத்தானிங்கு
வருகிலராங்குலைவுமனத்திடைநினைவுற்றாலுஞ்
சுரரெதிர்கொள்ளச்சென்றுசுவர்க்கமுற்றிடுவர்மாதோ. (3)

### கலிவிருத்தம்.

தேவர்மாமுனிவரர்சித்தராதியா
மேவரும்பூசனையியற்றிப்போற்றிடத்
தாவறுவரந்தருசைவலிங்கமாம்
யாவினுஞ்சிறந்ததிவ்விலிங்கமாகுமால். (4)

### அகவல்விருத்தம்

காதன்மிகக்கொண்டுபண்டுதங்குறைதீர்ந்திடக்கருதிக்
கமலக்கண்ணன்
சீதமலர்த்தவிசுறையுந்திசைமுகனிந்திரன்முதலாந
தேவர்தாமுங்
கோதறுதென்பொதியவரைகுறும்முனிவரன்முதலாக
கூறுந்தூய
மாதவரும்பூசித்தவிசேடலிங்கமிச்சிவபால்
வண்ணலிங்கம். (5)

ஆன்றபுகழ்பெறுங்காசிபாதிமுதலாந்தலத்திலிங்க
மனைத்துமாங்கே
தோன்றுமுனர்த்தோன்றியதிங்கென்றுந்தருநிழற்கீழ்ச்
சொல்லுமிந்த
வேன்றபெருங்காரணத்தாலிக்கருவைத்தலத்துறையு
மிவ்விலிங்க
மூன்றுலகத்துங்கருவைச்சுயம்பிலிங்கம்யாவினுக்கு
மூலமாமால். (6)

ஆர்த்துவருதிரைக்கடலிற்சிறந்தகடல்பாற்கடலா
மவனிமீது
சீர்த்திபெறும்வெற்பின்மிகச்சிறந்தவெற்புமேருவெனச்
செப்பும்வெற்பாந்

தார்த்தருவிற்சிறந்தபெருந்தருத்தேவதருவாமெத்
தலத்துமுள்ள
மூர்த்திகளிற்சிறந்தமகாமூர்த்தியிந்தப்பால்வண்ண
மூர்த்தியாமால் (7)

உயர்வுறுபால்வண்ணலிங்க முகலிங்கதிருக்களா
வுடையானென்னும
பெயர்பெறுமிமமூர்த்திதனைச்செகரிசித்தோருயர்ந்தபதம்
பெறுவாரக
வயமருவுவெனச்சமனுமனுக்கு வணங்கன்னவர்பால்
வருந்தறிந்த
காமிருமேதெனறிருக்க நவைதத்தலத்துறைமூர்த்தியினைமகிமை
கவிலடாற்றோ. (8)

மூர்த்திவிசேடச்சருக்கமுற்றிற்று
ஆகச்சருக்கம் 5-க்கு விருத்தம் 123

---

## புராணகதை வரலாறு.

வி.—கலித்துறை

சோலைகண்முகின்மண்டலமெனத்துலங்குதலாற்
காலையாதவன்கதிரொளிகாணபதுமரிதா
லாலைவின்மதறுடைலுமிலதுபல்யாக
சாலைகண்மிகவடர்ந்ததுனைமிசாரணியம. (1)

கோதிறண்கொடிகயிறெனக்குலவுறக்கழையின்
மீதுவானரமேவுதல்வேழம்பர்ப்பொருவுஞ்
சோதிவான்முகடுறவளர்ந்தோங்கியேசுரும்பார்
சாதியேமுதற்றருத்திரண்மிகத்திகழ்தருமால். (2)

---

7-தார்-மலர், 8-வயம்-வெற்றி.

1. ஆலை-ஆகுபெயராய்க் கரும்பினை யுணர்த்திநின்றது, கழை-மூங்கில், சுகம்-கிளிகள்.

காணவேட்டுவமங்கையர் தங்கள்செங்கரத்தின்
மாநலம்பெறுகழங்கெடுத்தெறிந்திடவயங்கி
மேனிவந்தெழுநீர்மைவண்டினம்விளைக்காந்தட்
டேனுலாமலர்படிந்தெழுதகைமையொத்திடுமால். (3)

பலகலைகளையுணர்ந்திடுபண்பினாற்பாந்த
ணிலைபெறும்புகழ்மேவுமச்சேடனை நிகர்க்கு
மலகிலாதனவிரலைகளவ்வனததம்மா
வுலகினர்க்கலைக்கோட்டுமாமுனியெனவுலவும். (4)

பல்லவங்கனிகாய்மலர்தின்றுநீர்பருகிப்
புல்லுமாகம்புராணங்கள்புகன்றிடுமதனாற்
செல்லதீர்திரிகாலமுமுணர்தருசிந்தைச
சொல்லருந்தவச்சுகனெனசசுகங்கள்வீற்றிருக்கும். (5)

வேறு.

வாவிதோறுமலர்வனதாமரை
வைகலும்விளையாடுவதாமரை
தூவியன்னங்கமலத்திருக்குமே
சொல்லுமஞ்சுகபபுட்களிருக்குமே.
காவெலாநறுமாமலர்வாசிகுங்
காமர்பூவைகள்பல்கவிவாசிகு
மேவுநற்றுடைக்கொப்பென்றரம்பையே
வியந்துபோற்றவிளங்குமரம்பையே. (6)

சோலைமேவியிருப்பனமஞ்சரி
சூழ்ந்தசாகையிற்றூங்குவமஞ்சரி
சீலமேவுதவத்துமுனிவரோ
தீயவல்வினையாவுமுனிவரோ
மேலைவானவர்வந்துண்பதவியே
வேண்டுவாரனைவோரும்பதவியே
யாலைவென்கனைதுண்டவுள்ளஞ்சமே
பன்பரோதுவனவெழுத்தஞ்சமே. (7)

---

7-மஞ்சு-மேகம், அரி-வண்டு, மஞ்சரி-பூங்கொத்து, அவி-தேவருணவு, பதவி-மோட்சம்.

வாவும்வானரசின்கிளைத்தண்டலை
வானளாவிவயங்குறுந்தண்டலை
தாவிவீசொடிப்பனசோலையே
தூயமாதவர்தம்பனச்சோலையே
மேவியேசெபம்பண்ணுமந்தியே
மிக்கமால்வரையொப்பனதந்தியே
பூவினுடியிருந்துபாணங்களே
போதமேறுகொண்டிருக்குபாணங்களே. (8)

கலித்துறை

அருத்தவத்தினையளப்பதற்கரியகாலங்களி
புரிந்துமெய்ப்பிணைத்தகருத்துலப்படாதியபெரியோது
பிருந்துளோரபலர்மாதமொனமூறாதிபெயன்றெடுத்து
வந்தமாதவபுரிபவரசேர்காவ்வனத்தில. (9)

செயபுமூலவாதாரகதைக்கரன்பினைத்தெரிசித்த
தப்பிரமமனைச்சூவாதிடானத்திறகண்டப்பா
லொப்பிலாமணிபூரகததரிசனையுணர்ந்தே
யப்புவேணிருத்திரனையனாகதத்தறிந்து (10)

மேலுறுமயேசுரனைவிசுத்தியிலுணர்ந்து
சீலமார்சதாசிவத்தினையாஞ்ஞையிறதெரிந்து
கோலவார்குழறபரையின்பெய்த்திருவநள்கூர்ந்தப
பாலும்பேரொளிதெரிசித்தங்கநபபவர்பலரே. (11)

முந்தரேசகபூரகருமபக முயன்று
பிந்தவேயிடகலையொடுபிங்கலையடைத்து
நந்தவில்சுழிமுனைதிறந்தானந்தநடனஞ்
சிந்தையாற்றெரிசித்திடுந்தவத்தினர்சிலரே. (12)

---

8-அந்தி - மாலை, தந்தி-யானை. 10-பிரமன் - பிரம்மனென னின்றதுவிரித்தல் விகாரம்.

குலவுமூலவா தாரத்திற்குண்டலி தன்னையே
சிலர் தியானித்தங்கிருப்பர்கள் சைவமந்திரத்தை
யிலகவேதியானித்தினி திருப்பரெண்ணில்லோ
ரலகின்மா தவராங்கியையோசித்தங்கபர்வார். (13)

உருவையேநினைத்துவப்புடன் யோகுசெய்பவரு
மருவையேநினைத்தன்புடன்யோகுசெய்பவரும்
பொருவிலாவருவுருவையேகருதியெப்போது
மிருமையோகுசெய்பவருமெண்ணிலரவணிருப்பார் (14)

திருந்துதத்துவரூபநற்றெரிசனம்பெற்றுப்
பொருந்துசுத்தியாயந்தவான்மாவுருப்புலப்பட்
டிருந்தபின்னதுதெரிசித்துச்சுத்தியாயிதன்பின்
பரிந்துநற்சிவரூபமேதெரிசித்தப்பாலும். (15)

உருகுநேயமுற்றுறுசிவயோகமேயுணர்ந்து
பெருகுமானந்தமாஞ்சிவபோகமேபெருக்கிப்
பாவுபாலருண்மத்தர்பைசாசரைநிகர்க்கு
மிருமைமாதவரெண்ணிலரமர்ந்தினிதிருப்பார். (16)

பூதமைந்துடன்பொறிபுலன் முதலனைத்தினையு
மேதமென்றவைமாற்றியானெனதெனமகிழும்
போதமும்புறம்பாக்கியேயானந்தம்பொலிய
மாதவம்புரிந்திருப்பவர்பலருளர்மன்னோ. (17)

வலமுறும்மணிமாமகிமாக்கிரிமாநல்
லிலகுமாப்பிராகாமியம்பிராத்திபேரின்ப
நிலவுமீசத்துவம்வசித்துவமெனநிகழ்த்தும்
குலவுசித்திபெற்றவரளவிலர்திரிகுவரால். (18)

சீலமேவியசரிதைமுன்னுகவேசெப்பு
நாலுபாகமுமுடையமாதவர்நணுகினதால்

14-இருமை-பெருமை, யோகம்-யோகு, என நின்றது.

வேலைசூழ்நிலமகட்கொருமுடியெனவிளங்குங்
கோலவவ்வனப்பெருமையார்கூறிடவல்லார். (19)

எழுசீர் விருத்தம்.

ஓதியவந்தநைமிசாரணியத்திருந்துநற்பெருந்தவமுஞற்று
மூதறிவுடையமுனிவரர்சுருதிமுறையிஞற்சத்திரவேள்வி
யாதரத்தோடுபுரிகுவதுணர்ந்தேயருமறையளவுகண்டறிந்த
சூதனவ்விடத்துவருதலுமுனிவரெதிர்கொடுவலஞ்செய்து
[தொழுது. (20)

ஒளிமணித்தவிசொன்றுதவியாண்டிருத்தியுணர்
விஞனிகரிலாபெரியோய்
வெளிவருவதற்கெத்தவம்புரிந்தனம்யாமென்றுமெய்புளக
முற்றிருகண்
களிதருபுனலினடிமலர்விளக்கிக்கண்மலரருச்சனை
புரிந்து
நளிர்மலர்க்கரங்கள்சென்னிமேற்குவித்துநயந்தொருமொழி
பகர்குவரால். (21)

முனிவர்தம்பெருமானென்னுநீபண்டுமொழிந்தனைதிருவருள்
சுரந்து, நனிதிகழீரொன்பதுபுராணங்களினில்சிவனுலகு
தென்கயிலைப், பனிவரையாடகேசுரந்தில்லைகாசியாரூர்முதற
பரம, னினிதுறைகின்றபதங்களின்வீறுமியம்பினைகேட்டுள
மகிழ்ந்தோம. (22)

எண்சீர் விருத்தம்.

அரனுலகங்கயிலாயமெவாக்குங்கிட்டா
தாடகேசுரந்தான்பாதலத்ததாங்கே
நாரணுகார்தில்லைமுதற்றலங்கடம்மி
னூதனுருக்காண்பரிதுநனைஞானமுன்று

---

21-நளிர்-பெருமை, நயந்து-விரும்பி.

புரமெரியநகைத்தசிவனுருவமிந்தப
புலியினிலிங்கத்துண்மலர்க்கண்ணுற்காணக்
கரதலவாமலகமெனக்காட்டுமோநாற்
றலத்தினையின்றெமக்கறியக்கழறல்வேண்டும். (23)

அறுசீர் விருத்தம்.

என்னமாமுனிவர்கூறவியைந்துநன்றெனமெய்யன்பாற்
றன்னகமகிழ்ச்சிகூர்ந்துசடைமுடிதுளக்கிநும்மை
முன்னருந்தவத்தாற்பெற்றேமென்றுபுன்முறுவல்செய்து
தொன்னெறியுணர்ந்தசூதன்சொல்லுவான்றொடங்கினானே.

ஈங்குநீரெமைக்கேட்டபொருளினையிசைப்பேமீது
வீங்கிருண்மனத்தினார்கள்செவிபுகவிளம்பலாகா
தோங்கியதவத்தின்மிக்கீருண்மையாம்பொருளைமுன்னாட்
பூங்குழலுமையாண்முக்கட்புனிதனைவினவலுற்றாள். (25)

ஆரணுமைக்கருளக்கந்தனம்மைபாற்குழவியாகப்
பிரிவிலாதிருந்துகேள்விபெற்றனர்பிரசமேவுஞ்
சரவணமென்னும்வாவிதனில்விளையாடுநாளெங்
குரவனுமவியாதனம்பனகுரைகழல்பணியப்போந்தான். (26)

கந்தவேளவியாசன்றன்னைக்கருணையானோக்கியீங்கு
வந்தவாறென்கொலென்றான்வடியயிற்செங்கையெந்தா
யந்தமிறலங்கடோறுமருளுடனமர்ந்துவாழு
மிந்துவார்வேணியீசனிருபதம்பணியவென்றான். (27)

என்றவனுரைத்தலோடுமிளநிலாமுறுவல்செய்து
நன்றுநன்றவனிதன்னிலுத்தமவாழ்பதிகளின்வீ [வே
றொன்றலபலவுமுண்டேனிவ்வுண்மையாம்பொருளைச்செவ்
ளனுபதேசஞ்செய்யப்பெற்றனனறிவின்மிக்கான். (28)

23-ஆடகேசுரம-பாதலத்திலுள்ள சிவஸ்தலம். 24-சொல்லுவானறொடங்கினனென்னுந் தொடரில் - சொல்லுவானென்பது சொல்லுவதற்கெனவினையெச்சப் பொருளபட நின்றது. 26 - நம்பன் சிவன்-குரவன்-குரு-இந்து-சந்திரன, வேணி-சடை. 28-செவ்வேள் முருகன்.

அப்பொருள்கேட்டவேதவியாதனுமாதரினோடு
மொப்பரும்பொருளெமக்கேயுணர்ந்திடவுபதேசித்தான்
முப்பொழுதுணர்சஞானமுனிவர்காளுமக்குச்சொல்வே
மிப்பொழுதெனச்சூதன்விரித்தவையியம்பலுற்றான். (29)

கதைவரலாறு முற்றிற்று.

ஆகச் சருக்கம். 6-க்கு விருத்தம். 152.

---

முதலாவது கதை

## காகபுசுண்டர் கதியடைந்த சருக்கம்.

வி.—கலி விருத்தம்.

நாறுமலர்த்துளவறியநறுங்களினைமேவு
நீறுலவுமணியுடைநின்மலனைநோக்கி
யேறுபுகழ்மாதவமியற்றியபுசுண்டனை
பேறுபெறுகாதையதுபேசுதுமகிழ்ந்தே (1)

அறுசீர் விருத்தம்

பாண்டிநாடதனிற்சதங்கபருப்பதமலயமென்னு
நீண்டவோரிரண்டுவெற்பினிடையிலெந்நிலமும்போற்றுங்
காண்டகுசிறப்பினவையகக்கரையினோர்தென்பால்வைகு
மீண்டுநற்புகழ்பெற்றோங்கியிலகுதென்மதுரைமூதூர். (2)

அப்பதியினுக்குத்தென்பாலரியவாரியென்றே
வொப்பின்மாநதியொன்றுண்டதனுடைத்தென்பான்முந்நீர்
வைப்பிடையெவரும்போற்றுமாதலமொன்றுண்டாங்கே
செப்புமப்பதிக்குநாமந்திருச்சுழியெனச்சொல்வாரால். (3)

அத்தலத்தினுக்குத்தென்பாலளவிலபல்வளங்கண்மல்கு
சித்திராநதியவ்வாற்றின்றென்கரையதனிற்சிறந்த
மொய்த்தடர்வனமொன்றதிமூலமாயுமையாளோடுங்
கத்தன்வாழ்தலமாநாமங்கங்கைகொண்டானென்பாரால். (4)

---

4-சிந்தம்-புளி.

என்னுமப்பதிக்குத்தென்பாலீறிலாப்பெருமைபூத்த
நன்னதியுளதுதாம்பிரவன்னியாமதற்குநாம
மந்நதிக்கரைவடாதுகமழ்வனமுளதாங்கீசன்
மன்னுமப்பதிநெல்வேலிமகிமையார்புகலவல்லார். (5)

புகலுமத்தலத்தின்மேல்பாற்புகழருச்சுனக்காவென்று
பகர்தருதலமொன்றுண்டாற்பங்கயன்முதலாந்தேவ
ரகலிருவிசும்புநீங்கியரனடிபணிந்துவாழு
மகிமைசேரத்தலப்பேர்திருப்புடைமருதூராமால். (6)

கூறுமத்தலத்தின்மேல்பாற்கொழுங்கனிநறவுபாய்ந்து
சேறெழுஞ்சிறப்புவாய்ந்தசெண்பகவனமுண்டாங்கே
வீறுசேர்சடையின்மீதுவெண்பிறையோடுகங்கை
யாறணிகடவுள்வாழ்குற்றாலமாமதற்குநாமம். (7)

கோதில்குற்றாலமென்னுங்குன்றவனுளதக்குன்றை
மாதிரிகூடமென்றுவழுத்துவரெவருமென்று
சூதமாமுனிவன்கூறமுனிவரர்துலங்குமப்பேர்
யாதனால்வந்ததந்தவரைக்கெனவவன்சொல்வானால். (8)

மிக்கநற்புகழ்பெற்றோங்கிவிளங்குறுமலயமென்றுஞ்
சக்கியமென்றுங்கூறுஞ்சயிலமோரிரண்டோடொன்றி
யக்கிரியுளதமனூனறுகிரியுஞ்சேர்ந்திருககுபாற்று
லிக்குவலயத்திலயாருமெழிற்றிரிகூடமெனபர். (9)

அத்திரிகூடமால்வெற்பினுக்குநேர்வடக்கதாக
மொய்த்தடர்மருதக்காவொன்றுண்டதுமுதியவானோர்
சித்தர்கண்முனிவர்நீங்காத்திவ்வியவனமக்காவுக்
குத்தரதிசையினன்னீருசாநதியொன்றுண்டாமால். (10)

அந்நதிக்கரைக்குநேருத்தரதிசையதனிற்காக
நன்னதியுளதுபாவமகற்றுமந்நதிநீராடிற்

---

5. வடாது - வடக்கு 6. அருச்சுனம் - மருது-கழை மூங்கில்
7-நறவு-தேன் வீறு-பெருமை. 8-குன்று-மலை

சொன்னவந்நதிக்குத்தென்பாற் றுளவனுஞ்சிவனுமொன்றாய்
மன்னிவாழ்ந்திருக்கும்புன்னைவனமெனுந்தலமொன் றுண்
டால். (11)

என்றலுமுனிவர்சூதனென் னுமாதவனைநோக்கி
யொன்றியநதிக் குக்காகநதியெனவுரைக்கப்பெற்றுத்
தன் றலகினிலையந்தவாறெவன்சொல்வாயென்ன
நன்றெனநதியின்செய்கைமீளவுநவிலலுற்றான். (12)

பொன்னகர்க்கிறைவன்மைந்தன் சயந்தனபுகழயோத்தி
யன்னவனிராமன்றேவிவனமுலையதனிற்காக
மென்னுமவ்வுருவங்கொண்டுதீண்டவவ்விராமன்சாபந்
துன்னலாறகாகமாகித்துயருழந்திருக்குங்காலில். (13)

வாசவனளித்தமைந்தனமண்ணுலகதனிற்போந்தே
யீசன்வாழ்ந்திருகதபுன்னைவனத்தினிலெய்தியாற்றின்
மாசிலாமணியேயென்றுமூழ்கினன்வலியசாப
நாசமுற்றதனாற்காகநதியெனத்திகழ்ந்ததன்றே (14)

கொடிநதிக்கரையினுக்குவடக்கருமறைகுலாய
படிபுகழ்மதுரையென்னுமபதியினேர்தென்பாலாக
வடவனமொன்றுண்டந்தவனமதுசிவனைமாய
னடிமலர்போற்றிப்பண்டுவழிபடுதலமாமன்றே. (15)

பொருவிலத்தலத்திற்பாங்கர்பபூவனமொன்றுளைகு
மருகினேர்தென்பாலாகவரியயன்முனிவர்தம்மோ
டிருவிசும்பமரர்போற்றவிறையவனுமையோடின்ப
மருவிவாழ்ந்திருக்கும்வன்னிவனமெனும்பதியொன் றுண்
டால். (16)

பகருமத்தலத்தின்றென்பாற்கத்துருவெண்ணட்பாரி
னிகரிலாநதியொன்றுண்ட ந்நதிக்குநேர்தெற்கதாக

---

12 கொடிநதி - காகநதி. 15 - வடவனமென்பது ஸ்ரீவில்லி புத்தூர். 16. வன்னிவனம்-மடவார்விழாகம்.

நகரைமாநதியென்றுண்டோர்நதியதன்றென்பாலுண்டோர்
தகவுறுபலாசக்கரவத்தலத்தின்பேர்தேவதானம். (17)

மெய்ப்புறமதற்குத்தென்பால்விளங்குமோர்நதியுண்டாங்
செப்புமந்நதியினுமஞ்சேமநன்னதியென்பாரா [குச்
லபபெருநதிபின்றெனபாலண்டர்நாயகனுமெம்மா
னுப்பணியுமையாடனனோடுறைகளாவனமொன்றுண்டால்

திகழுமந்நதியைமேவுதந்தெக்கணகங்கையென்னு
நிகரிலந்நகரையந்தககபிலையாமெனநிகழ்த்து
முகமவைதோறும்வெவ்வேறொருபெயர்பெறுமானம்மாற்
பகருதற்கரியவேனுமறிந்தவாபகரக்கேண்மின். (19)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாநகராமுபயபுரியகத்தியமாநகர
மன்னுமமுதாசலமநாதிபுரமருமூர்
ஞானபாசுரமினியசித்துருவம்பரஞ்சீர்
நண்ணுசிவசத்திபுரந்திருக்களாவனமோ
ரீனமிலாச்சீவன்முத்திபுரிபாவநாச
மிலகுகரிவரநகரங்கரிவலநன்னகர
மானபெயர்பலவுளவெத்தலங்களினுமுயர்ந்த
வதிகபுகழ்மருவுதிருக்கருவைவளமபதிக்கே. (20)

வந்துமனத்தன்பொடுபூசித்தகங்கை
மாதுமைமாலயன்முதலாம்வானோராலுஞ்
செந்தமிழ்மாமுனிவன்முதலாகக்கூறுஞ்
சிறந்தமுனிவராலுஞ்செம்பொனட்டுக்
கந்தமதகளிற்றாலுந்திருநாமங்கள்
கருதிடுமொவ்வொருயுகத்திற்படைத்துப்பாரிற்

---

19-வகம் யுகம்.

சந்தமுந்துலங்குமந்தத்தலத்தின்மேன்மை
தனையெடுத்துவிரித்தெவரேசாற்றவல்லார். (21)

### எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அத்தலம்விராட்டுச்சுழிமுனைத்தான
மணிபெறுமிலங்கைபிங்கலைசீர
மொய்த்தபேரிமயமிடைகலைதில்லை
யிதயமென்றருமறைமொழியும
வித்தகனுங்கொவ்வொருதினநடிக்கு
மினிதருகளாவனத்தலத்தி
னித்தனைனடனம்புரியும்பெருமை
நிகழ்த்தலாந்தகைமையொன்றுளதோ. (22)

செம்பவளக்காடெனச்சடைக்காடு
திகழ்தரவதிற்புனற்றும்ப
வும்பர்வெண்மதியங்கதிரெறித்திடவே
யுயர்குழைவளைதுவண்டசையப்
பம்புவண்டினஞ்சூழ்பதுமமென்பதத்திற
பரிபுரங்கலகலென்றொலிப்ப
விம்பரிற்கருணையம்பலத்தமல
னிடையறாநடம்புரிந்திடுமால் (23)

மங்கையோர்பாகனகளாவனத்துறையு
மழுவலான்றனக்கெவரேனுங்
கெங்கையைநிகர்நிட்சேபமாநதிநீர்
கிரேதமாயுகந்தனிலெடுத்தே
யங்கபிடேகம்விதிமுறைப்பகற
செய்திடிலற்புதம்விளங்கும
புங்கமாமிலிங்கந்தனிற்சிவன்வடிவம்
பொலிதருமின்னமும்புகல்வாம. (24)

---

22-விராட்டு-பிரமம், 24-உம்பர்-மேல், பம்புதல்-நெருங்கல்.

ஞானநாயகன்றென்கருவைநாயகனென்
ணுட்டமூன்றுடையநாயகன்செந்
தேனலர்க்கடுக்கைச்சடாடவியுடைய
தெய்வநாயகன்றனைக்களவி
னூனமாம்பதகராயினுந்திரேதா
யுகந்தனினுகந்தபிடேக
மானதும்பாலகொண்டியற்றிடிலெவர்க்கு
மப்படியேவெளியாமால். (25)

கறைமிடற்றிறைவன்கருணைவாரிதிமா
கனகமால்வரைச்சிலையாளி
யிறைகளாவனத்தினுற்றயரன்றனைகலியா
ரேனுந்துவாபரயுகத்தி
னறுநெயினலபிடேகமேபுரிந்தா
லறிவானவன்றிருவுருவ
முறுபவனுலகந்தமதெனப்பெறுவ
ருண்மையீதின்னமுமுரைப்பாம். (26)

பானிலாக்குழவிதவழ்சடாடவியான்
பசுபதிகருவைமாநகர்வாழ்
வானவன்றனக்குக்கலியுகந்தன்னி
லேவராயினுமனமியைந்து
தேனபிடேகம்புரிந்திடிற்சோதி
திகழ்தருமிலிங்கத்துளதனை
யாநிகழ்த்துவதென்னயன்முதலிமையோ
ராலுமேயுரைப்பரிதம்மா. (27)

அரியமாதவரேயரியயனாலு
மறியொணாத்திருவுருவதனை

---

25-பதகர்-சண்டாளர், 27-பால் - வெண்மை, யாநிகழ்த்துவது-நாம் சொல்வது.

விரிகட லுலகிற் றெரித்தாக் கருணை
மிகுதியா னுமையொரு பாக
மருவியா ரணத்தி னுற்பரம் பொருணீ
மலிசடா டவியா னுறைபுங்
கருணையாற் கருக்கிணையென வுரைக்கக்
காசினிமிசைத் தலமுளதோ. (28)

இன்னணங் குருந்தனிசைத் தலுற்றனிவ
ரெங்கையே கருணையா லெமக்குச்
சொன்னவத் தலத்திறகறைப்பி னறிநிறைவன்
றலங்குறுந் தேனறியத் தந்தப
டொன்னகர்த் தனில்வாழ்ந் தேவர்கம் பொருட்டேட
புவனியாளரசர்தம் பொருட்டோ
வுனனுமத் தலந்தா னுதித்தியோ வுநாதி
யோவகுத் துரைத்திடல் வேண்டும். (29)

எனமுனிவரர் தாமிசைத்திடச் சூதன்
னெனுமொரு நதிநப்பெயர்ப் படைத்த
முனிவர்தம் பெருமானவர்தமை நோக்கி
முதுபுகழ்த் தேவருக்கா தல
கனதிரைக் கடலசூ ழுலகினைப் புரக்குங்
காவலர்க் காதலெம்பிறையோன்
மணமுவப் புறவுத் திருவருட் டுறியாய
வந்திலன் கேண்மினென வுரைப்பான். (30)

மொழியுமத் தலந்தா னுலகம்யாவையுமே
முடிவினிற் றன்னகத் தொடுங்க
வழிவிலா தென்றுமிலகுமெய்ப் பொருளா
யமாந்திடுமெய்விராட்டி னுக்குச்

30-தேவருக்கா தல காவலர்க்காதல-தேவருக்காவது காவலர்க் காவது.

சுழிமுனைத்தலமாய்மூலமோர்வரிதாய்த்
துலங்குமிவ்வேதுவாற்சுருதி
யொழிவறுபுகழ்சேரநாதிமாபுரமென
றுரைத்திமெத்தலந்தனையே. (31)

அத்தலந்தன்னிற்கொடியுருவுடையா
னருந்தவப்புசுண்டனென்றுரைக்கு
முத்தமகுணஞ்சேர்முனிவரனொருவன்
வசிட்டனெண்ணிலர்தமையுணர்ந்து
பைத்தலையரவச்சயனமாதவர்தம
பட்டபோரெட்டுணர்ந்துலகி
லித்தனையெனவேயறியொணாப்பிரா
பட்டமுநன்குணர்ந்திருந்தான். (32)

ஆதரத்துடனங்கிருந்துநற்றவஞ்செய்
தடைந்தனன்கதியெனச்சூத
னோதலுமுனிவர்கேட்டுளம்வியப்புற்
றுரைப்பதற்கரியபல்கால
மாதவம்புரிந்தப்புசுண்டனும்பெரியோன்
வயங்குமத்தலத்திடையிருந்து
கோதறவுயர்வீடடைந்தவச்சரிதங்
கூறுதியெனப்பகர்ந்தனரால். (33)

ஞானமாமுனிவர்வினவிடச்சூத
நற்றவன்புகலுவான்முன்னை
மானதவாவிக்கரையிடைச்சேட்டை
கொடியெனவாழ்பெடைக்கொடிதா
னன்னமொருநான்குடையவனேறு
மனந்தனையணைந்திடவிருப்பித்
தானதன்பாற்சென்றெண்பெருவிரகந்
தணியுமாறருள்செயென்றதுவே. (34)

---

32-கொடியுரு-காகவுரு. 34-மானதவாவி-பிரமனுலகத்திலுள்ள வோர்தடாகம். 34-சேட்டை மூதேவி.

அவ்வனங்காகப்பெடைதனைநோக்கி
யருளிலாதவள்கொடியாளு
பெவ்வமேனிக்குமிழிதுலத்துதித்தா
யிசைகிலேன்யானிதற்கெனலுங்
கவ்வையுற்றந்தக்கொடிபசுங்கழைமுனிற்
காமனைநோக்கிமாதவநதான்
செய்வதுகருதிச்சென்றுபல்கால
மருந்தவஞ்செய்திருந்ததுவே. (35)

ஙனமகிழ்நதநங்கன்கொடியின்முனரேன்றி
மாதவமபுரிவதென்பகர்தி
யெனவினவிடவச்சதுமுகத்தொருவ
னேறியவாகனமான
வனமெனைவிருப்புற்றணைவதற்குனதின்
னருள்செயவேண்டுமென்றிசைக்க
நனைமலர்க்கணையால்வயபபடுத்துவமென்
றருளினனிரதிநாயகனே. (36)

வேறு.

கருப்புவின்மதனகணைதொடமானதக்
கலையின்கணனம்போந்து
விருபபமுள்ளுறக்கொடியகமகிழவுற
மேவியததனுலே
கருப்பமுற்றதிற்புசுண்டன்வந்துதித்தன
னுள்பலகழிந்தேபின்
மருப்பெறுங்கமலததயன்முன்பனம்
வந்ததுமகவோடு. (37)

அனத்தைதான்முகனேக்கியீண்டடைந்ததென்
யாவனின்னுடன்வந்தா

---

35 கவ்வை-துன்பம், கழை-கரும்பு. 36-அநங்கன்-அங்கமில்லாதவன்காமக்கடவுள்.

னெனப்புகன்றிடத்தவ்வையின்கொடிப்பெடை
யிளநலந்தனிலாழ்ந்த
மனத்தனாகினேனவ்வயினுதித்தவென்
மகனிவனெனக்கூறச்
சினத்தினோடயன்சிறுமையுற்றனையுனைத்
தீண்டிலேம்யாமென்றான். (38)

படைக்கும்வேதனங்குறைத்திடவனமயன்
பதம்பணிந்தெழுந்தேயென
னுடைப்பெரும்பிழைபொறுத்தெனையாளுதி
யென்னலுமுரைசெய்வான்
கடற்பெரும்புவிபுகழ்கயிலையைநிகர்
களாவனமுளதாங்கு
விடக்களத்திறையிருந்தனனுலகுளோர்
வெய்யபாதகம்போக்க. (39)

இன்றுநீயவணேகெனவிசைத்தலு
மெங்ஙனமெழுந்தேகி
மன்றன்மாமலர்நறுங்களாவனந்தனின்
மகவொடுமகிழ்ந்தெய்தி
யொன்றுசிங்கையாலோவாதேயாடருந்தவ
முனைஞற்றிடவுமைபாகக
குன்றவில்லியாங்கெழுந்தெதிர்குழுகின
னிமையவர்குழுவோடும். (40)

அண்ணறோன்றலுமவ்வனமடிபணிந
தப்பனேயமுதேமுக்
கண்ணுடைக்கரும்பேயருட்செலவமே
கருணையங்கடலேமெய்த்

---

38-தவ்வை மூதேவி. 40-அவண்-அங்கு, எகினம் அன்னம் ஓகை-மகிழ்ச்சி.

தண்ணிலாத்தவழ்வேணியாய்களாவனத்
தருநறுங்கனியேயோர்
பெண்ணுடைத்தலைவா குணக்குன்றமே
பிஞ்ஞகாவெனப்போற்றி. (41)

நினறகாலையிலனத்தின்பாலரனரு
ணிரப்பிவேண்டுவதென்கொ
லென்றுகூறலுந்தன்னுடைப்பாதகமி
யாவையுமனங்கூற
நன்றுநன்றுநின்பாதகமொழிந்தனப்
புதலவனைநம்பாலடைவத
தொன்றுசிந்தையானுன்முகன்பாற்செல்கென
றுரைத்தனனிறையோனுல். (42)

அந்தவேலையினிறையவனடிபணிந்
தன்புடனிவனெந்தா
யெந்தவேளையும்பிணைப்பிரிகிலனென
விருப்பனெம்பிடத்தென்று
சிந்தையுற்றான்செப்பலுமியைந்தனன்
சென்றதுமறையோன்பாற்
பந்தநீக்கியபுசண்டனுங்கிருந்தனன்
பரமனீரடிபோற்றி. (43)

இந்தவாறுபூங்களாவனத்துறைதரு
மிறைவனைப்பலகாலஞ்
சிந்தையானினைத்திறைஞ்சியேயிருக்குமத்
தினத்திலோர்தினந்தன்னி
லுந்துவெண்கிரிநிகர்மழவிடையின்மே
லொப்பிலாவுமையோடு
வந்துதோன்றினன்மனமிகவுவந்துபால்
வண்ணநாயகன்மாதோ. (44)

தோன்றியந்தமாதவன்கொடியுருவினைத்
துலங்குதன்றிருக்கையா
லேன்றவன்பொடுவருடிமெய்ஞ்ஞானமு
மெண்ணிலாவாழ்நாளு
மூன்றுகல்வியுமெங்குமவேண்டுருவெடுத்
துலவுமாற்றலுஞ்சீர்த்தி
சான்றநற்பெரும்புசுண்டனுமபெயருமே
தந்தொளித்தனன்மாதோ. (45)

அவணிருந்தவனெவ்வுலகத்தினு
மண்டந்துமீண்டனளவில்லா
வுவணநாயகர்பிரமரெண்ணிறந்தவ
ருயர்பலதிசைப்பால
ரெவரையும்பலபிரளயங்களையுமோர்ந்
தத்தலத்திருந்தான்பே
ருவகைகூர்ந்தவன்பாலொருவசிட்டமா
முனிவன்வந்துற்றானால். (46)

அரியமாதவவசிட்டனுங்கெய்தியே
யப்புசுண்டனைநோக்கி
கரியகாகமேனியைச்சமந்தென்பயன்
கறையிடற்றனைநோக்கி
யுரியமாதவமியற்றிமேலாயசா
யுச்சியமுறுதென்கொல்
பெரியமாதவவென்றலுமருந்தவம்
பெரிதியற்றினன்மாதோ. (47)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அதிகதவம்புரிந்துசாயுச்சியத்தை
யடைந்தனனப்புசுண்டமுனியநேககாலங்

45-ஆற்றல்-வலிமை. 46-உவணம்-கருடன்.

கதிதருமால்பிரமர்களைக்கிறந்தோர்தமைக
　　கண்டிருந்தானபடாதியிலென்றுலாந்தப்
பதியுதித்தகாலம்பின்னைகாலமென்றெப்
　　படியுணரப்படுமுணரப்படாதவாற்று
லெதிராமதகலத்திறுமகண்டாமெதகரு
　　நிலக்கும்புகழுமாநிபுராணமனாபோரமா (48)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வேதகன்றினறிமுனிவாகாரத்தல
　　மங்கமையையறிந்துபார்த்த
யோதவல்லவனாயுரைத்தகுமுனிவா
　　ரெழுபுயங்கையினேன்
குதனிமிகநோக்கியருந்தவத்
　　தோனற்மேலிதாலையோன்புனை
கதையினைபுரைத்தருளெனவவன
　　கருணைகூர்ந்துரைசெய்வான். (49)

## காக புசுண்டர்கதயடைந்த சருக்கம்.

முற்றிற்று.

அகச்சருக்கம் 17-க்கு விருத்தம் 201.

---

இரண்டாவது

## உமையவள் தவசுபுரிந்த சருக்கம்.

வீ.—அகவல் விருத்தம்.

திசழும்வெள்ளியங்கிரிதனைத்தணந்துமுச்செகத்துளவனை வோரும்புகழுமற்புதக்கருவையம்பதியிடைப்போந்திறைவனை நோக்கித, துகளின்மாதவம்புரிந்தருமறைகளுந்தொடர்வரும் பரதேவி, சகளநிட்களதெரிசனம்பெற்றவோர்சரிதமன்பொடு சொல்வாம். (1)

---

48-அநாதி-ஆதியின்மை, அநாதிபுரமென்பதற்குப் பொருள் இன்னகாலத்திற்றோன்றியதெனயாவராலு மறிதற்கரிய நகரம்.

### வேறு

ஆசறுபொன்மேருவெனுமவ்வரையினேர்வடபாலெண்
ணைந்துகோடி
யோசனையுன்னதமுளதவ்யோசனையிற் றிவிரி
வுடையதென்றுந்
தேசுறுபற்பலகோடிசிகரங்களுநங்கொழுந்தையுஞ்
செய்ததென்னப்
பேசரியதவளநிறப்பொருஞ்சோதிமிகப்பரப்பும்
பெருமைத்தாமா. (2)

சிந்தையுறுங்குறைதீரக்கருதிவநந்தாமரைக்கட்
டிருமால்வேத
னிந்திரனாதியவிமையோரனைவருக்கும்புகலிடமா
யிருப்பதந்தக்
கந்தநறுந்துளவணிமாலயன்முதலோர்பதமழியுங்
காலத்துந்தா
னந்தலுறாதிலங்குவதுகயிலைநெடுங்கிரியதன்சீர்
நவிலற்பாற்றே. (3)

### கலிவிருத்தம்.

அந்தவோர்கயிலையிலண்டமியாவையுஞ்
சிந்தையன்போடுமுன்னீன்றமதேவிதா
னெந்தையாமீசனையிறைஞ்சிமேயமிக
விந்தையாரொருமொழிவிளம்புவாளரோ. (4)

என்னைநீர்பிரிகிலீரிருவினைப்பயன்
மன்னுயிரவைக்குமேவழங்குமாறனைத்
துன்னியெங்கணுநிறைந்துலவுந்தன்மையை
நன்னயமுற்றிடநவிலவேண்டுமால்- (5)

---

2. ஆசு-குற்றம்.
3. நந்தலுறு-எக்காலத்தும்கெடாத.
5. எங்கணும்-எங்கும்.

என்னறிவேபுலமையவளினிதுகூறிட
முன்னவனெம்பிரான்முகமலர்ந்துநற்
புன்னகைபுரிந்துதான்புகலவனப்பொழு
தன்னவட்கன்புடனறிபுமவண்ணமே. (6)

ஏகனுமவியாபகமாகிப்பணமுமங்
கனந்தயிரினுக்குயிராயமர்ந்துளே
மங்கையேயினையிடந்தனிலுமைநீயே
துங்கமாமைவகைத்தொழினடாத்துவேம். (7)

மேவினேனெனறகூர்விழிபிறையபதி
ஞாலகனைத்துமேநமசத்தியாற்
காலைவெயறகண்டலர்கமலமாமலர்
போலமேவசெயலுறப்புரிவிப்போமரோ. (8)

செகமிசைமன்னுயிர்செயுமவினைக்கெலா
நிகரறுசாட்சியாகினறுசந்ததம
பகர்த்நமுவினைபுபயனையவ்வுயி
ருகாதரசசெய்குவனமைநங்குலாய். (9)

அனனகன்மங்களோபயனளித்திடு
மென்னருட்செயலிலையெனநினைத்திடேல
பன்னுகன்மங்களப்பயனைநலகிடா
தன்னுமையாமன்றியேயுண்மையீதரோ. (10)

சகளமுநிட்களந்தானுமந்தமோ
ருகளமுமாகியேயுலகிலைவைதேவரு
செகமெலாமீன்றநம்டனியேயிவண்
பகருமவ்வுயாகிபார்க்கவலலையோ. (11)

7. ஐவகைத்தொழிலாவன-சிருட்டி. திதி சங்காரம்- திரோபவம் அனுக்கிரகம் என்பனவாம.

8. எற்கண்டலர்-சூரியனைக்கண்டமலாகிற

11. சகளம உருவம. நிட்களம் அருவம

அரியதாமுபயமென் றறையலுற்றனன்
றெரிவையிங்கதனையான் றெரிசிக்கும்படி
யருள்செயென் றனனெனவந்தவந்தணர்க்
குரியமாதவனெனுஞ்சூதனோதினான். (12)

மாதவமுனிவர்கேட்டுளமகிழ்ந்துதான்
சூதனையன்பொடுதுதித்திறைஞ்சியே
யாதிநாயகியுமையவ்வருட்கண்ட
தோதுநீயென றன னனைத்துநனமாயினான். (13)

செகமனைத்தினுநிறைந்தவத்தவனுமை
பகவனையுமையவள்பணிந்துதந்தருள்
சகளநிட்களதெரிசனமென்றோதினை
ணகைபுரிந்தெம்பிரானவிலவணங்குமோர (14)

எந்தவேலையினுமேமெழின்மின்றுநீடத
தந்தரங்கஞ்சொலத்தகாதனதுநீ
சிந்தையோடருந்தவஞ்செய்குவாயெனி
லந்தவிலவ்வுருவறியச்செய்குவம். (15)

என்னவேயிறையவனியம்பலுமி
யன்னையாகியவுமையடியனேகியே
புன்னுமாதவஞ்செயற்குரியவோரிட
மினனதென்றரையெனவியம்பினளரோ. (16)

தக்கமாமலயநற்சந்தியென்றதென்
றிகரினுண்டிருவரைச்சபபுமவிரு
மிக்கமால்வரையிலுடையுளதுவெள்ளிவேற
பொக்குநல்லநாதிமாபுரமென்றோர்தலம். (17)

அத்தலமடைந்தெனைநோக்கியவுடன்
மெய்த்தவம்புரிதியவ்வேலையாமவண்
சுத்தவவ்வுருவினோடெழுந்துதோன்றவேஞ்
சித்தம்வைத்தாங்குநீசேர்கவென்றனன். (18)

என்றுகூறலு மம்மையிலைநவன் றன்னிரு
மன்றன்மாமலர்ப்பதம்வணங்கிச்சிந்தையி
லொன்றியபொருந்தவமுஞற்றவெண்ணியத்
தென்றிசைநோக்கியேசேறன்மேயினள். (19)

அறுசீர்விருத்தம்.

அரமடந்தையர்களாடகின்னரரிசைகளார்ப்ப
முரசகளடம்பதாககவானிடமெலாண்டுகூறக
கரபுரணமடாமூருகுங்ககமைக்கவரிகளிரட்டத்தேவர்
விரமலர்மாரிசிந்தவிமானமீதிவர்ந்தாளன்றே. (20)

நாதனைவீற்றிருக்குமந்தக்கயிலையைநீங்கினாளைக்கு
வேதமுமபுகழ்கசாசிவியன்பொருந்நிலையாளு
மாதியாயவிளங்குமாயவ நடபதியாவும்போற்றி
மாதுமையவள்வந்துற்றாண்மதுமைமாநகரின்மாதோ. (21)

ஆலவாய்தொழுதிங்கியன்புடனெழுந்துகாந்த
காலமைந்தெழுந்தாளின்விசையெனச்சுழுதுபோந்து
வேலைசூழ்புவியினீடுவிளங்குவாழ்வெள்ளிவெற்புப்
போலவேவதிகபுராதிபூதத்திவந்தடைந்தாண்மன்றே. (22)

அறுசீர் விருத்தம்.

தாண்டவம்புரிகினை யாலவண்ணனைத்தான்றெரிசனஞ்
செய்து, பூண்டவன்பினையைந்தப்பொருவெளந்தன்னுளத்தி
டைப்பொங்க, வெண்பெற்பமைந்தாகநிரயபுரிகுவாண்மெய்புள
கமோடு, யாண்டநாயகிபோற்றிகளாமனைத்தாதிநாயகபோற்றி.

கொன்றைவார்சடைச்சங்கரபோற்றிமான்
குலவுசெங்கரபோற்றி
யன்றுமுப்புரமெரித்தவபோற்றிதண்
ணருட்பெருங்கடலேபோற்றி

19. சேறல்-செல்லல்.
23. வெள்ளம-வெளமெனநின்றது செய்யுள்விகாரம் இடைக்குறை.

யென்றுநற்றுதிபுரிந்துபூசனைமிக
வியற்றியெம்பெருமாட்டி
யொன்றுசிந்தையாதரத்துடன்பூண்டன
ளுயர்பெருந்தவவேடம். (24)

விரவுபொற்பணியாவையுநீத்துநன்
மேனியாவினுந்தூய
திருவெணீறணிந்தக்குமெய்திகழ்தரச
செஞ்சடாடவியோடு
மருவுநன்மரவுரிபுனைந்துயர்திரு
முடியின்மேன்மலர்போலு
மிருகரங்களுங்கூப்பியேயருந்தவம
புரிந்திருந்தனண்மாதோ. (25)

இவ்வகையளப்பரியபல்காலமா
தவமியற்றிடும்வேலை
நவ்விநோக்கியத்தேவிதன்பிரிவினைப்
பொறுமலோநவையில்லா
வொவ்வருந்தவமியற்றுகற்கேதிரு
வுளமிகக்கனிந்தோதான்
வெவ்விடக்களத்திறைநவனவ்வுமையவண்
முன்விருப்புடன்வந்தான். (26)

வேணிமேற்புனைகங்கையுநகடுக்கையும்
வெண்மதியமுநாகப்
பூணுமக்குமாலிகையுநற்றூயவெண
பொடியும்வெம்புலித்தோலும
பாணிமேவுமாமழுவுமெண்புயங்களும்
பவளமேனியுந்தோன்றத்
தாணுவன்புடன்வந்துமையவள்கரந்
தனைப்பிடித்துரைசெய்வான். (27)

சிறியவாகையாயிமையவெற்புதவிய
செல்வியாயுலகெல்லாம
பெறுமருட்டிருவன்னையாயுற்றநீ
பெருந்தவந்தனைப்பேணி
மறுவில்பொற்பணியாவுநீகளைந்தனை
மறைக்குமப்பணியுன்பா
லுறுமியற்கைகலெழுமினையணியிலென்
றளத்திலெண்ணினைசொல்லோ. (28)

எப்பெருபபணிகளையுநீபகளைந்துமே
யிலங்குபோழுகாலே
யொப்பிலாதவளொருமொருபெயருனைக்
குதவினேம்யாமென்று
செப்பியற்புதசகளநிட்களவுருத்
தெரிசனமளித்தேபின்
னப்புகழ்ச்சகளத்தினைக்காட்டிநிட்
களத்தையுமறிவித்தான். (29)

வேறு.

ஆரணத்தெளிவேபோற்றியானந்தக்கடலேபோற்றி
வாரணத்துரியாய்போற்றிமாணிக்கமலையேபோற்றி
பூரணப்பொருளேபோற்றிபுண்ணியாபோற்றிவேத
காரணற்கரியாய்போற்றிநாதனேபோற்றிபோற்றி. (30)

என்பெருமானேபோற்றியிமையவர்தலைவாபோற்றி
மன்பெருங்கருணைநீங்காமாசிலாமணியேபோற்றி
யின்பவாரமுதேபோற்றியென்னையாளிறைவாபோற்றி
யன்பருக்கெளியாய்போற்றியையனேபோற்றிபோற்றி. (31)

கருத்துதற்கரியாய்போற்றிகருதலர்புரமூன்றெய்த
வொருதனிமுதலேபோற்றியுபயமேனியனேபோற்றி

---

28. சொல்-விளுப்பொருளுணர்த்தி நின்றதோரிடைச்சொல் ஓ-அசைநிலை.

பிரணவத்துருவேபோற்றிபேசுதற்கிணைவேறில்லா
விரிசுடர்க்கொழுந்தேபோற்றிவிமலனேபோற்றிபோற்றி. (32)

என்றுமைபணியவெம்மானிறைஞ்சியையினிதுநோக்கி
யுன்றனக்கரியவெம்முருவுநவமுகங்காட்டினேமா
லின்றுவேண்டியவாங்கேளெனலுநின்னுருவமென்று
மென்றும்யானுணருமெண்ணமெனக்கருள்புரிதல்வேண்டும். (33)

அத்தனையரிமாதம்பூராடநாளினிற்றாறு
சித்தம்வைத்துணையன்போடுதரிசனம்புரிந்தோர்யார்க்கு
மெத்தநீயருளல்வேண்டுமென்னநின்றவாசகமென்னு
தத்தைநேர்மொழியினோடான்சாற்றிடநந்தமென்றான். (34)

பொருவிலத்தலத்தில்வாசம்புரிந்துநற்புனிதன்றாளைக்
கருதினோர்தமக்குமுத்திகாத்தலாமலர்மேலொன்றங்
குந்தவெனும்வியாசனிந்தக்கோநிலாபம்பரந்தோயன்பா
லருளினன்சிவன்றன்பாதத்தகாணமுக்காலுமென்றே. (35)

வேறு

தபனனிமையவர்முனிவர்பரவுபெருமபுகழ்பெறுமத்
தலந்தான்முன்னா
ளிபவுரியாடையப்புனைந்தானெம்பெருமாட்டியின்
றவத்துக்கிரங்கியாங்கே
சுபகாவற்புதமிகவுந்துலங்குமுகலிங்கமெனச்
சொல்லுந்தூய
வுபயதெரிசனந்தரலாலுபயபுரியெனும்பெயர்பெற்
றுளதுமாதோ. (36)

அத்தலஞ்சித்துருபமாதுமாலடைந்தோர்ஞான
சித்தியுற்றிடலாலாங்குச்சேர்ந்தவரழிவில்லாத
முத்தியும்பெறுவர்வேதமுனிவர்காண்மொழிந்தவார்த்தை
சத்தியவசனமென்றுசூதனுஞ்சாற்றினனே. (37)

---

84. அரிமாதம்-சிங்கமாதம் ஆவணி

### கலிவிருத்தம்.

தொன்னெறிமுனிவனுஞ்சூதமுனிதனும்
நன்னெறிமுனிவரர்நயந்துபோற்றியே
யந்நதிதெக்கணகங்கையானவா
றின்னந்தன்றுரையெனவியம்புவானரோ. (38)

உமையவள் தவம்புரிந்த சருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8-க்கு விருத்தம்-239.

---

மூன்றாவது

## கங்கைநடனதெரிசனம்பெற்ற சருக்கம்

### வி.—கலி விருத்தம்.

அண்டர்போற்றுமரன்சடைக்கங்கைசீர்
மண்டுதென்கருவைப்பதியிற்றவம்
பண்டுசெய்தப்பரமன்றிருநடங்
கண்டவோர்பெருங்காதையையோதுவாம். (1)

### வேறு

முன்னைநாட்கங்கையெம்முக்கணெம்பிரான்
மின்னையொத்தொளிமிகவிளங்குசெஞ்சடை
தன்னைவிட்டிறங்கியாதாரத்தினோடரன்
பொன்னடிவணங்கியேபுகலுவாளரோ. (2)

நான்முகன்பிரளயநாளின்மாதவன்
றாளுகந்திடநடமாடுந்தன்மையைத்
தேனலர்கொன்றையாய்தெரிசியாதடி
யேன்சடைக்குள்ளமைந்திருந்தன்மேயினேன். (3)

---

38. தொன்மை நன்மை யென்பன ஈறுகெட்டு நின்றன. உ-[illegible]சைநிலை

2. ஆதாரம்-ஆசை. அரோ-அசை நிலை.

விண்டுவின்பிரளயமேவுநாள்வரி
வண்டுறைகுழலுமைமகிழ்நன்போற்றிட
வண்டர்நாயகநடமாடுந்தன்மையைக்
கண்டிடாதிருந்தனன்கருமவூழினால். (4)

எண்புகுமுலகெலாமெரியுற்றோங்கவே
நண்பிலாவக்கனனடனஞ்செய்புநாட்
டண்புனலாதலாற்றக்கதன்றெனக்
கண்புனைதத்தநடங்காணப்பெற்றிலன. (5)

ஆதலாளிலாப்பெருமையாயதோர்
போதமாகியபரிபூரணந்திகழ்
நாதனேயுன்றிருநடனங்கண்ணுறக
காதலுற்றனன்றரக்கடவதென்றனள். (6)

அன்னவளடிபணிந்தறையுமெல்லையின்
முன்னவன்கலைசதன்முகத்தைநோக்கியே
பொன்னிணாரலெனைப்பூசியாமலே
யிந்நடந்தானுனக்கெளிதினெய்துமோ. (7)

ஆதலானீயெழுந்தாழிசூழ்தரு
பூதலந்தன்னிலேபொருந்திப்புண்ணிய
மாதலந்தனிலெமைவழிபட்டாயெனிற்
போதுவேமென்றிறைபுகலலுற்றனன். (8)

அப்பொழுதினினதியணங்கன்போடொளிர்
துப்பெனத்திகழ்சடையவனையேதொழு
தொப்பரும்புவியினியுகந்தோர்தலஞ்
செப்புதியொல்லையிற்சித்தியாகவே. (9)
நன்றெனவிறைவனுநயந்துநோக்கியே
தென்றிசைதனிற்றிரிகூடமால்வரை

4. விண்டு-விட்டுணு நடம் நடனம்.
5. எரி-அக்கினி.

யொன்றதற்குத்தூரத்திரண்டியோசனை
குன்றிடாச்சக்கியக்குணக்கோர்யோசனை. (10)

ஆகவேயிருக்குமத்தலத்திலெம்பிரான்
பாகமேவியபராபரை முன்னங்குறி
யேகமானதிலவடிவிரண்டிரண்ணூற
யோகமாதவம்புரிதலைமானமுண்டரோ. (11)

கண்டமத்தலத்தினிலினியவானந்த
தாண்டவதெரிசனந்தருதுபன்றியும
வேண்டுநலவரங்களுமிகவுநலகுமேய
பூண்டபேரன்பொடும்போதியென்றனன். (12)

தண்புனலணங்கடிவணங்கிச்சக்கிய
வொண்ணெறிமார்க்கமாயுலகின்மேலுயர்
வண்பிரவாகமாப்பழுதகுந்தாவிகாணு
வெண்பொருநம்வசமோடெழுந்துநண்ணினாள். (13)

கழிநெடிலடிவிருத்தம்.

இப்படியெழுந்தும்போயத்தலத்தினைவலங்கொண்டேகி
யப்பரவையினைசார்ந்தேயகமகிழ்ந்தன்பினோடு
துப்பிதழ்ச்சங்கைமங்கைதோழியரோடுமேவி
யொப்பிலாவுருவமாகியுயமாபுரத்தில்வந்தாள். (14)

ஆங்கணைந்தக்களாவினருட்குறிதன்னைநோக்கிப்
பாங்குடன்றெரிசித்தன்பாய்ப்பணிந்துபல்லாண்டுகூறித்
தேங்கமழ்கங்கைவேணிதிகழ்சிவக்கொழுந்தேயென்றே
யோங்குநலவுணர்வாலுன்னிநின்றனளுவப்பினோடு. (15)

அற்புதந்தோன்றநின்றவணங்குமெய்யன்பினோடு
தற்பரன்றன்னைநோக்கிவழிபடுந்தகைமைபூண்டு

---

10. சக்கியக்குணக்கு-ஐந்தாம் வேற்றுமையுருபுத்தொகை.
14. பரவை-சமுத்திரம்-துப்பு-பவளம்.
15. அருட்குறி சிவலிங்கம்.

பொற்பலர்புனனல்லாடைபூணிவேதனமுன்னாய
நற்பொருள்கொண்டுபூசைமுறையொடுநடத்தினாளால். (16)

ஐயனையுளத்திலெண்ணியளப்பருங்காலம்பூசை
செய்யவுமின்பநட்டதெரிசனையின்மையாலே
மையரவணிந்தசோதிபதியிற்பிழைத்தேனென்றே
வுய்வகைகாட்டும்வண்ணமுவந்துவந்திலனாயினும். (17)

திருமுடிமிசைக்கொள்ளாமனிதத்திடுஞ்செயலுட்கொண்டோ
வருள்பெறுவதற்குக்காலமணுகிலதின்னமென்றே
கருதுமித்துணைநாட்காறுங்கருணையம்பெருமானென்பால்
வருகிலனிருந்தானென்னையையனையுளம்வருந்தினாளால். (18)

இத்தகைமையினெஞ்சமிடைந்தவளிருந்துசெய்யும்
பத்தியோர்ந்திடபமாதம்பௌரணைவிசாகநாளி
லத்தனக்களவின்மேவுமருட்குறிதன்னினின்று
சித்தமலைவத்தருளினோடுதிருநடவேடங்கொண்டான். (19)

எண்சீர்க்கழிநெடிலடியகவல்விருத்தம்.

திருக்குழையிலகத்தரித்தவெள்வளையுந்
திகழ்விடமிடறுமுமையொருபுறமு
மருக்கமழ்கடுக்கைத்தொடையுமுக்கண்ணும்
வலங்கொளெண்புயமுமிலகுகுழைமம்முகமு
முருக்கியகருணைப்பெருக்குமுந்நூலு
முயர்ந்தவெண்பொடியுஞ்செழுந்தழல்வடிவுங்
குரைத்திடுகழற்பொற்றுணைத்திருப்பதமுங்
குறியினின்றிலகவிறைவன்வந்தனனால். (20)

தண்ணுமைநந்திமுழக்கிடவாணன்
றட்டிடமுழவங்கொட்டிடத்தாளங்

18 இத்துணை-இவ்வளவு. காறும் அளவும்.
19. இடபமாதம்-வைகாசி.

கண்ணனுமிசைபவெண்ணுறுசாம
கானமும்வேதன்றானனிபாட
விண்ணுறையமரரெண்ணிலர்முனிவர்
விரைமலர்தூவியரகரவெனவே
தண்ணெனச்சேடன்றன்னுடல்சோரத்
தூய்வளைகூளிவாய்வயினாத. (21)

வாரிதிசுழலக்காரினமதிர
மாலவரைசிதறக்காலவிசையொழியப்
பாரிடமுழையபம்பருலகலையும
படபடவெனவஞ்சிடவிபமெட்டும்
வீரிடவூசிவேரோடுமேரு
வெற்பசைபடவேவெருட்பிலவெனவே
யாரணிசடையோனாடினனிலமயோ
ராண்டொருசதமுங்காண்டகுநடமே. (22)

அறுசீர் விருத்தம்.

அண்ணலுநடனங்காட்டவகத்திடையுவகைபொங்கிக்
கண்ணிடையிருவிசோர்க்கரகமலங்கள்கூப்பி
யெண்ணிலாப்பெருமையாவுமெடுத்தெடுத்தியம்பிநன்னீர்ப்
பெண்ணரசியுமானந்தப்பெருங்கடறன்னிலாழ்ந்தாள். (23)

வேறு

சத்தாகியசத்தாகிச்சத்தசத்துமில்லாததகையதாகி
வித்தாகிவேராகிமேலாகிக்கீழாகிவிரித்தவேதக் [மன்றத்
கொத்தாகியெவ்வுயிர்க்குங்குறையாமனின்றருளேகொழிக்கு
தத்தாரீதாடுக்கியாடும்வகையானறியுமளவிற்றாமோ. (24)

எனையாளுடையாய்சரணம்மழியா
வெழில்சேர்கயிலைக்கிறைவாசரணம்

---

22. வாரிதி-சமுத்திரம்.
25. சரணம்மழியாவென்னுந் தொடர்மொழியிடைத்தோன்றிய மகரமெய் விரித்தல் விகாரம்.

பணிமாமதிசேர்சடிலாசரணம்
பரமாசரணம்முரகாபரணத்
தனிமாமுதலேசரணம்மிமையோர்
தலைவாசரணம்மயன்மாலறியாப்
புனிதாசரணம்மெனவேமிகவும்
புரைதீர்துதியன்பொடுசெய்தனனே. (25)

அமலனன்புடனேயாடலளப்பருங்காலஞ்செய்யக்
கமலமாமடந்தைகண்டுகாதலினுமேலபூசித்
திமையவர்தலை ரமுக்கணிறைவனேயிமயமீன்ற
வுமையவள்கேள்வாயான்செய்விண்ணப்பமொன்றுண்டென்று.

இருபதமலரைப்போற்றியெண்ணருங்காலநீங்காத்
திருநடம்புரிதலொன்றின்றிருப்பதஞ்சலிதந்திடாதோ
புரமெரித்தவனேபோற்றுமெனமுனும்புனிதன்வேண்டும்
வரமிசைத்திடுகென்றேசெவ்வாய்மலர்ந்தருளிச்செய்தான். ()

அந்தியணங்குதோழியருக்குமென்றனக்குநீங்கா
வின்னருள்புரிதல்வேண்டுமிறந்தவொன்பெண்கூறு
நன்னதியிடத்திற்றங்கிலாண்டுமுநநாண்கிலிங்க
மென்னவுற்றிடுநற்பேறும்வேண்டுமாலிதுவுமல்லால். (28)

இப்புனறன்னில்யாருமூழ்கினுமெவ்வரீங்கி
யொப்பருஞ்சுத்தராகியுனதுலகடைதல்வேண்டுஞ்
செப்புதற்கரியபாவச்செய்கையரெனினும்போந்திங்
கப்பிடைப்படிந்தான்ஞானம்பெறவுநீயருளல்வேண்டும். (20)

பற்பலநதிகளாடும்பலன்களிவ்வாற்றிலோர்கா
ளற்புதமுறவேமூழ்கிலடைந்திடல்வேண்டுமாங்குத்
தர்ப்பணஞ்செய்தோர்மூவேழ்தலைமுறைப்பிதிர்கள்யாருங்
கற்பமெய்தினுநீங்காமற்கதியடைந்திருத்தல்வேண்டும். (30)

தண்ணதிதனிலெப்போதுந்தானடைந்தாடினோர்க்கும்
புண்ணியதினத்தின்மூழ்கும்பலனெலாம்பொருந்தல்குும்

வண்ணமுமழகுநல்வேண்டுமேற்றுமிச்சலபலையயன்பாற்
கண்ணினாற்றெரிசித்தோர் நற்கதியடைந்திருத்தல்வேண்டும். ()

இன்னணங்களைக்கூறவெம்பிரான்மகிழ்ந்துநோக்கிச்
சொன்னவரங்கள்யாவுமளித்தனமென்றுசொல்லிப்
பின்னநங்கூறுவாறுறம்பொருந்தறக்கரியவிந்தத்
தொன்னகரிடமயிலாடுதுறைச்சுழிமுனைத்தானமாமால். (32)

அச்சுழிமுனையிலென்றுமலைசலிலாடனீசெய்
மேசியதவத்தினாலேயலைசந்திடமேவிற்றென்று
கச்சணிமுலையாள்சீதக்கங்கைக்கண்களிப்பநின்ற
கச்சணிகளத்தானெம்மானயந்திலிங்கத்துட்புக்கான் (33)

பரிவியேதுதித்தப்பின்னர்ப்பன்மலர்களிலலங்கா
தாவுடன்பூசையாற்றித்தன்மனமகிழ்ச்சிகூர்ந்து
வரந்திடநடைதையாங்கோர்கலைக்கணைவைத்துமறையை
விரவியகலையோமசன்வேணியென்றடைந்தாண்மன்றே (34)

இந்நிலமயாவும்பமாணிலிங்கத்துணின்றேயாடல்
புரிதலானந்தலிங்கப்புஷ்பசபாலிங்கமென்பா
ரனருள்பெற்றவாறாறுலதிருக்கங்காதன்னைக்
கிருபைமாநதியாவென்றுமேளத்துவரெவருமாதோ (35)

கங்காநடனதெரிசனம்பெற்றசருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 9-க்கு விருத்தம்-274.

---

நான்காவது

## நிட்சேபநதிச்சருக்கம்.

நீ.—கலிப்பா

பதிதவழுமணிமாடமலிந்திலங்குந்திருக்கருவைப்
பதியுறமீசனைமிகவும்பரிவொடுபூசனைபுரிந்து

---

32. தொன்மைநகர் - தொன்னகரென நின்றது தொன்மை, பழமை.
33. களகம்-நசசெனநின்றது களம் கண்டம்.

கதியுதவுமதிப்புகழ்க்கடவுணதிநிட்சேப
நதியெனும்பெயர்படைத்தகதைசிறிதுநவிலுதுமால். (1)

வீங்குதிரைக்கங்கையெனுமெல்லியல்பண்டொருநாளிற்
பாங்குறுதன்னிடைப்போந்துபடிபவர்தம்பாவமெலாந்
தாங்குவதிங்கரிதெனவிச்சகத்திலொருவருமறியா
வோங்குமொருவரைக்குகையிலுற்றுமறைந்திருந்தனளால. ()

பண்ணியன்மாமறைக்கிழவன்பசுந்துளவோன்முதலாய
விண்ணியையும்விபுதரெலாமேடசங்கராந்தியெனும்
புண்ணியநாடனிலுவந்துபுனிதநறும்புனல்படிவா
னண்ணியவப்பெருங்கங்கைநதிக்கரைவந்தடைந்தனரால். (3)

மண்டுதிரைப்புனல்படிவானவந்தடைந்தவமரரெலாங்
கண்டிலர்கங்கையைமிகவுங்கருத்தினிடைவருத்தமுறூஉ
வெண்டகுசீர்க்கங்கையெவணுற்றாளெனக்கருதி
யண்டரெலாமெங்கணுஞ்சென்றன்பொடுதேடினர்மாதோ. (4)

தேடியவட்கண்டுமிகச்சிறந்திடுபுண்ணியதினமின்
றூடியசிந்தித்துநின்பாலன்பொடுவந்தடைந்தனமா
னீடியவிவ்வரைக்குகையினிமறைவுற்றிருப்பதெவன்
வாடியநெஞ்சுடனென்றார்வானவருக்கவளுரைப்பாள். (5)

பற்றுடனென்னிடைப்படிவோர்பாவமகற்றிடும்வலிமை
சற்றுமிலேனெடுநாளித்தடங்கிரியின்குகையதனு
ளுற்றுமறைந்துளனதனாலுறைதருமிவ்விடநீத்து
மற்றினியான்வருகிலனால்வானவர்காளெனவுரைத்தாள். (6)

திருத்தகுமந்நதிமடந்தைசெப்பியசொற்கேட்டிமையோர்
கருத்துருகியன்னாயிக்கடலுலகினியிலையேல்
விருத்தியுறும்பாவமந்தோமேதினிமானதிகசுமை
வருத்தமடைகுவளிரங்கிவந்தருளென்றிரந்தனரால் (7)

---

4. உறூஉ-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். எண்டகுசீர்க்கங்கை மதிக்கத்தக்க சிறப்பினையுடையகங்கை.

**கலிவிருத்தம்.**

தொன்னெறிமுனிவருளொருதமிழோனது
நன்னெறிமுனிவரர்யாருந்தம்போற்றியே
யந்நதிதெக்கணகங்கையானவா
றின்னதென்றுரையெனவியம்புவானரோ. (38)

உமையவள் தவம்புரிந்த சருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8-க்கு விருத்தம்-239.

---

மூன்றாவது

## கங்கைநடனதெரிசனம்பெற்ற சருக்கம்

**வி.—கலி விருத்தம்.**

அண்டர்போற்றுமரன்சடைக்கங்கைசீர்
மண்டுதென்கருவைப்பதியிற்றவம்
பண்டுசெய்தப்பரமன்றிருநடங்
கண்டவோர்பெருங்காதையையோதுவாம். (1)

**வேறு**

முன்னைநாட்கங்கையெம் முக்கணெம்பிரான்
மின்னையொத்தொளிமிகவிளங்குசெஞ்சடை
தன்னைவிட்டிறங்கியாதரத்தினோடரன்
பொன்னடிவணங்கியேபுகலுவாளரோ. (2)

நான்முகன்பிரளயநாளின்மாதவன்
றானுகந்திடநடமாடுந்தன்மையைத்
தேனலர்கொன்றையாய்தெரிசியாதடி
யேன்சடைக்குள்ளமர்ந்திருந்தன்மேயினேன். (3)

---

38. தொன்மை நன்மை யென்பன ஈறுகெட்டு நின்றன. வ- அசைநிலை

2. ஆதரம்-ஆசை. அரோ-அசை நிலை.

விண்டுவின்பிரளயமேவுநாள்வரி
வண்டுறைகுழலுமைமகிழ்நன்போற்றிட
வண்டர்நாயகநடமாடுந்தன்மையைக்
கண்டிடாதிருந்தனன்கருமவூழினால். (4)

எண்புகுமுலகெலாமெரியுற்றோங்கவே
நண்பிலாவக்கனைடனஞ்செய்புநாட்
டண்புனலாதலாற்றக்கதன்றெனக்
கண்புலத்தந்நடங்காணப்பெற்றிலை. (5)

ஆதலாலளவிலாப்பெருமையாயதோர்
போதமாகியபரிபூரணந்திகழ்
நாதனேயுன்றிருநடனங்கண்ணுறக்
காதலுற்றனன்றாக்கடவதென்றனள். (6)

அன்னவளடிபணிந்தறையுமெல்லையின்
முன்னவன்கங்கைதன்முகத்தைநோக்கியே
பொன்னிணாரலெணைப்பூசியாமலே
யிந்நடந்தானுனக்கெளிதினெய்துமோ. (7)

ஆதலானீயெழுந்தாழிசூழ்தரு
பூதலந்தன்னிலேபொருந்திப்புண்ணிய
மாதலந்தனிலெனைவழிபட்டாயெனிற்
போதுவேமென்றிறைபுகலலுற்றனன். (8)

அப்பொழுதினினியணங்கன்போடொளிர்
துப்பெனத்திகழ்சடையவனையேதொழு
தொப்பரும்புவியினியுகந்ததோர்தலஞ்
செப்புதியொல்லையிற்சித்தியாகவே. (9)
நன்றெனவிறைவனுநயந்துநோக்கியே
தென்றிசைதனிற்றிரிகூடமால்வரை

4. விண்டு-விட்டுணு நடம் நடனம்.
5. எரி-அக்கினி.

யொன்றதற்குத்தாத்திரண்டுயோசனை
குன்றிடாச்சக்கியக்குணக்கோர்யோசனை. (10)

ஆகவேயிருக்குமத்தலத்திலெம்பிடப்
பாகமேவியபராபரை முன்னங்குறி
யேகமானநிலைவடிவிரண்டெண்ணுற
யோகமாதவம்புரிதலமானதுண்டரோ. (11)

சண்பமத்தலத்தினிலினியமாநந்த
தாண்டவதெரிசனந்தருதுயன்றியும்
வேண்டிநலவொகைகளுநிகவுநலருமேவ
பூண்டபேரன்பொடுபோதியவனறனன். (12)

தண்புனலணங்கடிவணங்கிச்சக்கிய
வொண்டிரிமார்க்கமாயுலகின்மேலுயர்
வண்பிரவாகமாய்வழுதுத்தரங்காணு
வெண்கபநம்வேகமொடெழுந்துநண்ணினாள். (13)

கழிநெடிலடிவிருத்தம்.

இப்படியெழுந்துபோயதத்தலைநினைவலங்கொண்டேகி
யப்பரவையினைச்சார்ந்தேயகமகிழ்ந்தன்பினோடு
துப்பிதழ்ச்சரங்கைமங்கைதோழியரோடுமேவி
யொப்பிலாவுருவமாகியுயமாபுரத்தில்வந்தாள். (14)

ஆங்கணைந்தக்களாவினருட்குறிதன்னைநோக்கிப்
பாங்குடன்றெரிசித்தன்பாய்ப்பணிந்துபல்லாண்டுகூறித்
தேங்கமழ்கடுக்கைவேணிதிகழ்சிவக்கொழுந்தேயென்றே
யோங்குநல்லுணர்வாலுன்னிநின்றனளுவப்பினோடு. (15)

அற்புதந்தோன்றநின்றவணங்குமெய்யன்பினோடு
தற்பரன்றன்னைநோக்கிவழிபடுந்தகைமைபூண்டு

---

10. சக்கியக்குணக்கு-ஐந்தாம் வேற்றுமையுருபுத்தொகை.
14 பரவை-சமுத்திரம்-துப்பு பவளம்.
15. அருட்குறி-சிவலிங்கம்.

பொற்பலர்புனனல்லாடைபூணிவேதனமுண்ணாய
நற்பொருள்கொண்டுபூசைமுறையொடுநடத்தினாளால். (16)

ஐயனையுளத்திலெண்ணியளப்பருங்காலப் பூசை
செய்யவுமின்பநட்டதெரிசனையின்மையாலே
பையாவணிந்தசோதிபதியிற்பிழைத்தேனென்றோ
வுய்வகைகாட்டும்வண்ணமுவந்துவந்திலனெனினும். (17)

திருமுடியிசைக்கொள்ளாமனீத்திடுஞ்செயலுட்கொண்டோ
வருள்பெறுவதற்குக்காலமணுகிலதின்னமென்றோ
கருதுமித்துணைநாட்காறுங்கருணையெம்பெருமானென்பால்
வருகிலனிருந்தானென்னேயெனவுளமவருந்தினாளால். (18)

இத்தகைமையினெஞ்சமிடைந்தவளிருந்துசெய்யும்
பத்தியோர்ந்திடபமாதம்பௌரணைவிசாகநாளி
லித்தனக்களவின்மேவுமருட்குறிதன்னினின்று
சித்தமலைவதகருளினோடுதிருநடவேடங்கொண்டான். (19)

### எண்சீர்க்கழிநெடிலடியகவல்விருத்தம்.

திருக்குழையிலகத்தரித்தவெள்வளையுந்
திகழ்விடமிடறுமுமையொருபுறமு
மருக்கமழ்கடுக்கைத்தொடையுமுக்கண்ணும்
வலங்கொளெண்புயமுமிலகுமைம்முகமு
முருக்கியகருணைப்பெருக்குமுந்நூலு
முயர்ந்தவெண்பொடியுஞ்செழுந்தழல்வடிவுங்
குரைத்திடுகழற்பொற்றுணைத்திருப்பதமுங்
குறியினின்றிலகவிறைவன்வந்தனனால. (20)

தண்ணுமைநந்திமுழக்கிடவாணன்
றட்டிடமுழவங்கொட்டிடத்தாளங்

18 இத்துணை-இவ்வளவு. காறும் அளவும்.
19. இடபமாதம்-வைகாசி.

கண்ணனுமிசையவென்னுறுசாம
கானமும்வேதன்றனனிபாட
விண்ணுறையமரரெண்ணிலர்முனிவர்
விரைமலர்தூவியரகரவெனவே
துண்ணெனச்சேடன்றன்னுடல்சோரத்
தூய்வளைகூனிவாய்வயிறூத. (21)

வாரிதிசுழலக்காரினமதிர
மால்வரைசிதறக்காலவிசையொழியப்
பாரிடமுலையப்பேருலகெலைவயும்
படபடவெனவஞ்சிடவிடமெட்டும்
வீரிடவூசிவேரோடுமேரு
வெற்பசைபடவேறெப்பிலவெனவே
யாரணிசடையோனுடினனிலையோ
ராண்டொருசதமுங்காண்டகூடமே. •(22)

அறுசீர்விருத்தம்.

அண்ணலுநடனங்காட்டவகத்திடையுவகைபொங்கிக்
கண்ணிடையருவிசோரக்கரகமலங்கள்கூப்பி
யெண்ணிலாப்பெருமையாவுமெடுத்தெடுத்தியம்பிநன்னீர்ப்
பெண்ணரசியுமானந்தப்பெருங்கடறன்னிலாழ்ந்தாள். (23)

வேறு

சத்தாகியசத்தாகிச்சத்தசத்துமில்லாததகையதாகி
வித்தாகிவேராகிமேலாகிக்கீழாகிவிரித்தவேதக் [மன்றத்
கொத்தாகியெவ்வுயிர்க்குங்குறையாமனின்றருளேகொழிக்கு
தத்தாநீதாடேக்கியாடும்வகையானறியுமளவிற்றேமோ. (24)

எனையாளுடையாய்சரணம்மழியா
வெழில்சேர்கயிலைக்கிறைவாசரணம்

22. வாரிதி-சமுத்திரம்.
25. சரணம்மழியாவென்னுந் தொடர்மொழியிடைத்தோன்றிய மகரமெய் விரித்தல் விகாரம்.

பனிமாமதிசேர்சடிலாசரணம்
பரமாசரணம்முரகாபரணத்
தனிமாமுதலேசரணம்மிமையோர்
தலைவாசரணம்மயன்மாலறியாப்
புனிதாசரணம்மெனவேமிகவும்
புரைதீர்துதியன்பொடுசெய்தனனே. (25)

அமலனன்புடனேயாடலளப்பருங்காலஞ்செய்யக்
கமலமாமடந்தைகண்டுகாதலினுமேல்பூசித்
திமையவர்தலைவரமுக்கணிறைவனேயிமயமீன்ற
வுமையவள்கேள்வாயான்செய்விண்ணப்பமொன்றுண்டென்று.

இருபதமலரைப்போற்றியெண்ணருங்காலநீங்காத்
திருநடம்புரிதலானின்றிருப்பதஞ்சலித்திடாதோ
புரமெரித்தவனேபோதுமெனவுறலும்புனிதன்வேண்டும்
வரமிசைத்திடுகென்றசெவ்வாய்மலர்ந்தருளிச்செய்தான். ()

அந்தியணங்குதோழியருக்குமென்றனக்குநீங்கா
வின்னருள்புரிதல்வேண்டுமிறைவவொண்பெண்கூறு
னன்னதியிடத்திற்றங்கிலாண்டுமுந்நான்கிலிங்க
மென்னவுற்றிடுநற்பேறும்வேண்டுமாலிதுவுமல்லால். (28)

இப்புனறன்னில்யாருமூழ்கினுமெவ்வநீங்கி
யொப்பருஞ்சுத்தராகியுனதுலகடைதல்வேண்டுஞ்
செப்புதற்கரியபாவச்செய்கையரெனினும்போந்திங்
கப்பிடைப்படிந்தான்ஞானம்பெறவுநீயருளல்வேண்டும். (20)

பற்பலநதிகளாடும்பலன்களிவ்வாற்றிலோர்நா
ளற்புதமுறவேமூழ்கிலடைந்திடல்வேண்டுமாங்குத்
தர்ப்பணஞ்செய்தோர்மூவேழ்தலைமுறைப்பிதிர்கள்யாருங்
கற்பமெய்தினுநீங்காமற்கதியடைந்திருத்தல்வேண்டும். (30)

தண்ணதிதனிலெப்போதுந்தானடைந்தாடினோர்க்கும்
புண்ணியதினத்தின்மூழ்கும்பலனெலாம்பொருந்தல்கும்

வண்ணமுமருளல்வேண்டுமென்றுமிச்சையையயன்பாற்
கண்ணினுற்றெரிசித்தோருங்கதியடைந்திருத்தல்வேண்டும். ()

இன்னணங்கங்கைகூறலெம்பிரான்மகிழ்ந்துநோக்கிச்
சொன்னநல்வரங்கள்யாவுமளித்தனமென்றுசொல்லிப்
பின்னருங்கூறுவானுறம்பொற்றருகரியவிந்தத்
தொன்னகரிடம்பிராட்டிசெயுழிமுனைத்தானமாமால. (32)

அச்சுழிமுனையிலென்றுமலைசலிலாநடனஞ்செய்
மெச்சியதவத்தினுலேயசைந்திடமேனிற்றென்று
கச்சணிமுலையாள்சீதக்கங்கைகண்களிப்பநின்ற
நச்சணிகளத்தாவெம்மானயந்திலிங்கத்துட்புக்கான் (33)

பரவியேதுதித்துப்பின்னர்ப்பன்மலர்களினுலங்கா
தாவுடன்பூசையாற்றித்தன்மனமகிழ்ச்சிகூர்ந்து
வரநதிமடங்கைதயாங்கோர்கலைதன்னைவைத்துமறலைற
ஷிரவியகலையோடீசன்வேண்டெனநடைந்தாண்மன்னோ (34)

இருநிலமபாவும்பொற்பாளிலிங்கத்துணின்றேயாடல்
புரிதலாலந்தலிங்கபப்புகழ்ச்சாலிங்கமெம்பா
ரனருள்பெற்றவாற்றுலத்திருக்கங்கைதன்னைக்
கிருடைமாநதியாமென்றுரைத்துவரவருமாதோ (35)

கங்காநடனதெரிசனம்பெற்றசருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 9-க்கு விருத்தம்-274.

---

நான்காவது

## நிட்சேபநதிச்சருக்கம்.

தீ.—கலிப்பா.

மதிதவழுபணிமாடமலிந்திலங்குந்திருக்கருவைப்
பதியுறமீசனைமிகவும்பரிவொடுபூசனைபுரிந்து

---

32. தொன்மைநகர் - தொன்னகரென நின்றது தொன்மை, பழமை.
33. களம்-நசசெனநின்றது களம் கண்டம்.

கதியுதவுமதிகபுகழ்க்கடவுணதிநிட்சேப
நதியெனுமாற்பெயர்படைத்தகதைசிறிதுநவிலுதுமால். (1)

நின்றுதிரைக்கங்கையெனுமெல்லியல்பண்டொருநாளிற்
பாங்குறுதன்னிடைப்போந்துபடிபவர்தம்பாவமெலாந்
தாங்குவதிங்கரிதெனவிச்சகத்திலொருவருமறியா
வோங்குமொருவரைக்குகையிலுற்றுமறைந்திருந்தனளால். ()

பண்ணியன்மாமறைக்கிழவன்பசுந்துளவோன்முதலாய
விண்ணியையும்விபுதரெலாமேடசங்கராந்தியெனும்
புண்ணியநாடணிலுவந்துபுனிதநறும்புனல்படிவா
னண்ணியவப்பெருங்கங்கைநதிக்கரைவந்தடைந்தனரால். (3)

மண்டுதிரைப்புனல்படிவான்வந்தடைந்தவமரரெலாங்
கண்டிலர்கங்கையைமிகவுங்கருத்தினிடைவருத்தமுறூ
வெண்டகுசீர்க்கங்கையிவளெவணுற்றாளெனக்கருதி
யண்டரெலாமெங்கணுஞ்சென்றன்பொடுதேடினர்மாதோ. (4)

தேடியவட்கண்டுமிகச்சிறந்திடுபுண்ணியதினமின்,
றூடியசிந்தித்துநின்பாலன்பொடுவந்தடைந்தனமா
னீடியவிவ்வரைக்குகையினிமறைவுற்றிருப்பதெவன்
வாடியநெஞ்சுடனென்றார்வானவருக்கவளுரைப்பாள். (5)

பற்றுடனென்னிடைப்படிவோர்பாவமகற்றிடும்வலிமை
சற்றுமிலேனெடுநாளித்தடங்கிரியின்குகையதனு
ளுற்றுமறைந்துளனதனாலுறைதருமிவ்விடநீத்து
மற்றினியான்வருகிலனால்வானவர்காளெனவுரைத்தாள். (6)

திருத்தகுமந்நிமடந்தைசெப்பியசொற்கேட்டிமையோர்
கருத்துருகியன்னாயிக்கடலுலகினியிலையேல்
விருத்தியுறும்பாவமந்தோமேதினிமானதிகசுமை
வருத்தமடைகுவளிரங்கிவந்தருளென்றிரந்தனரால் (7)

---

4. உறூ-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். எண்டகுசீர்க்கங்கை மதிக்கத்தக்க சிறப்பினையுடையகங்கை.

மூவகையதொழிலுடைமாமுதல்வனெனக்கெத்தகைய
பாவமுழுவதுமகற்றும்படிவலிமையளிப்பனெனிற்
பூவுலகத்திடைவருவலன்றியொருபோதுமங்கேதா
மேவிலனிப்புவியிலெனவிளம்பினளக்கங்கையரோ. (8)

கங்கையுரைத்திடுமொழியைத்தன்னுளுகலவானவன்கேட்டுத்
துங்கமுறுங்கங்கையெதிர்தோன்றியருளுடன்மகிமை
தங்குதிரிகூடமெனுஞ்சயிலமதிற்றவமுஞற்றிப்
பொங்குதகளாவனத்திடைப்போய்ப்பூசையியற்றுதிமாதோ (9)

பத்தியுடனியற்றுவைம்பெறபாவமனைத்தையுமகற்றுஞ்
சத்திதனைக்கங்காய்தந்தருளுதுமயாம்பின்னரெனக்
கத்துதிரைக்கடலவிடமுண்டமரரைமுன்காத்தபிரான்
சித்தமகிழ்ந்துரைத்திடலுஞ்செப்புவளக்கங்கையரோ. (10)

அ. விருத்தம்.

மைபுலவுதடஞ்சிகரநீடுதிரிகூடமெனும்வரை
போய்ச்சேர்வ
தையவெனக்கரிதவண்போய்ச்சேரும்வகைநீபுரிதி
யருளென்றுதக
கையின்மழுவேந்துபிரான்குறுமுனிவன்றனைநோக்கிக்
கருணைகூர்ந்து
செய்யகமண்டலத்தெடுத்திக்கங்கையையவ்வரை
யிடைவைத்திடுகவென்றான். (11)

அம்முனிவனெம்பெருமான்சொற்படிசெய்தேகினனு
லமரர்யாரு
நம்பிதயமுவந்திடவிக்கங்கைதிரிகூடமென
நவிலுமந்தச்

---

10, கங்காய் - விளிப்பெயர் கங்கையே யென்பது பொருள் அரோ - அசைநிலை.

செம்மையுறுவரையினின்றெப்போதுவருகுவ
ளென்னுஞ்சிந்தையோடு
தம்முலகந்தனைநோக்கிச்சென்றனாற்சிலகாலந்
தவிர்ந்தபின்னர். (12)

முன்னுரைத்ததிரிகூடவரையதனிலதிகதவ
முயன்றுமேவுந்
துன்னுதிரைக்கங்கையின்முன்னநாதிபுரத்
தெம்பெருமான்றோன்றிக்கங்கா
யுன்னருமைப்பெருந்தவத்துக்குளமகிழ்ந்தேதங்களா
வனத்திலுற்றாளீதான்
கன்னிகையின்வடிவொடுவந்தெமைப்பூசைசெய்க
மனங்கனிந்துமாதோ. (13)

புனல்வடிவாமுனையிக்கற்பாறையிற்சேமித்துவைத்துப்
புரக்கின்றேமையா
மெனவுரைத்துத்தனதுதிருக்கரமுறுசூலப்படையா
லிலகுவெற்பின்
கனமுறுபாறையைப்பிளந்துகரகமதைவைத்து
நெடுங்கல்லான்மூடி
மனமகிழ்வுற்றநாதிபுரவள்ளலிரட்சணைபுரிந்து
வந்தான்மன்னோ. (14)

வரியளிகண்முரலுமலர்த்திருக்களாவனத்திடைப்
பெண்வடிவுற்றெய்திக்
கரியவிடதுகர்ந்தபரம்பொருளுரைத்தமொழிப்படியக்
கங்கைசின்னா
ளரியசிவலிங்கமதையன்பொடுபூசனையியற்றி
யமர்ந்தாளன்பர்க்
குரியபிரான்சுயவடிவத்தொடுவெளிப்பட்டானவன்
முன்னொருநாளம்மா. (15)

14. சேமித்து-காத்து.

தோன்றியருள்சுரந்தகதிமடந்தைதமுகநோக்கி
மிகத்துலங்குமுள்ளத்
தூன்றியபேரன்பொடுநீபுரிதருபூசனைக்கு
மனமுவப்புற்றேமா
லான்றவரம்வேண்டுவேணீதமுனக்கென்று
பகர்ந்தருளக்கேட்டு
மூன்றுலகும்பரவுகங்கைமுதல்வனடிவணங்கி
யங்குமொழியலுற்றாள். (16)

இந்துவும்வாளரியிற்றரவுமுறவுசெயுஞ்செஞ்சடி
லத்திறைவாவெண்பா
லுந்துபெரும்பரவமெலாமொழிக்குமொருவன்மை
யெனக்குதவலவேண்டுஞ்
சிந்தைதமிகவிரங்கியெனச்செப்புதலுங்கங்கையெனச்
சிறப்புவாய்ந்த
பைந்தொடியவ்வரமுனக்குத்தந்தனம்யாமென
வுரைத்துப்பகர்வான்பின்னும். (17)

கண்ணுபருவதமுனிவனமைநோக்கித்தவம்புரிந்து
நமதுசொல்லா
லெண்ணுதிரிகூடவரைத்தடஞ்சிகரமீதுபுதைத்
திருக்குமுன்றன்
றண்ணமுதநிகர்புனலாணிறைகரகத்தினையெடுத்துச்
சலதிசூழும்
மண்ணுலகத்திதனையெவண்செலுத்துதுமென்
றுளத்தினிடைமதித்துளாளால. (18)

அந்தமுனிவானினிமேவறிடஞ்செலுத்தாவகை
விரைவுற்றங்குநின்று

---

16. ஈதும்-கொடுப்போம்.
17. பைந்தொடி-அண்மைவிளி.
18. எவண்-எங்கு.

மைந்துறுசித்திரைவிசுவாமித்தினத்திலெழுந்து
பிரவாகமாகிச்
சிந்தைமகிழ்ந்தெமதுகளாவனத்தினருட்குறியை
வலஞ்செய்துநன்னீ
ருந்துசடாகங்கைசங்கதீர்த்தமுன்னாகியநதிகளொடு
தோய்ந்தம்மா. (19)

நீவருகவுனைத்தெரிசித்திடினுமருமபாவமெலா
நீங்கியாங்கே
யேவருமுத்தியைப்பெறுகவிருப்பொடுமெதக்கண
கங்கையென்னுநின்னைத்
தேவருந்துத்தியம்புரிகவரையினிடைப்புதைக்கலுற்ற
திறத்தாலிந்தப்
பூவுலகம்புகழ்தருநிட்சேபநதியெனும்பெயர்நீ
புனைகமாதோ. (20)

என்றுவரம்பலவருளியநாதிபுரத்துறைசோதியி
லிங்கந்தன்னி
லொன்றிமறைந்திருந்தனனவ்விறைவனுரைத்த
மொழியுணர்ந்தக்கங்கை
மின்றிகழ்பைம்புயறவழுநெடியதிரிகூடமென
விளம்புவெற்பிற்
சென்றுபருவதமுனிகைக்கரகமதனிடைப்
பிரவேசித்தாண்மன்னோ. (21)

கடகடவென்றொலிக்குமுழக்கமுஞ்சிறிதுந்தாங்க
வொணாக்கனமுந்தோன்றத்
திடமுறுமப்பருவதமாமுனியுமிகமனம்
வெருவித்திகழுமந்தத்
தடவரையினெடுஞ்சிகரத்திடையிருந்தவொருகுகை
யிற்றனதுசெங்கை

யிடமருவுகரகமலைதலைவத்தனைக்கல்லைக்கிளர்ந்
தெழுந்தாண்மன்னோ. (22)

நாவலோர்புகழ்கோலாநதிசாம்பவதி
தேலாநதியினோடு
மேவுசீர்க்காகநதிகத்தருமாநதியெவரும்
வியந்துபோற்றுந
தேவிகாநதியருச்சுனாநதியென்றோது
மெழுதீர்த்தநதோடுந
தாவின்மானச முதலாம் பலகோடிநதிகளுடன்
சார்ந்துமாதோ. (23)

வண்டிமிரும்பூங்களவணமடைந்தவ்வருட்குறியை
வலஞ்செய்தேத்தி
யண்டர்மலர்மழைபொழியவந்தரத்துந்துமிமுழங்
கவிலத்துள்ளோர்
கண்டுமிகத்துதிபுரிந்துபோற்றிடவங்கிட்
சேபநங்கையென்னு
மொண்டொடியத்தண்டிலைமீதொடுமருவி
யிருந்தனளங்குவந்துமன்னோ. (24)

அந்தநதிதன்னின்மனைவி நப்பொடுசித்திரை
விசுவாமதநினத்தில
வந்துபடிந்தவர்சாயுச்சியப்பெறுவாலையமில்லை
வழுத்தற்கொண்ணு
நிந்தைபுறம்பாதகர்சாணினும்புனிதராவ
ரொனினிகழ்த்துமந்தச்
சுந்தரநிட்சேபநதிப்புனலபடிந்தோர்பெறும்
பேறுசொல்வதென்னே. (25)

நிட்சேபநதிச்சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் 10-க்கு விருத்தம்-299.

22. கரகம் - கமண்டலம். 24. இமிர்தல் ஒலித்தல் அருட்குறி-இலிங்கம்-மன்-ஓ இரண்டும் அசைநிலை.

## ஐந்தாவது

# ஒப்பனைதிருநாமம்பெற்ற சருக்கம்—தீ.

### அகவல் விருத்தம்.

தேங்கமழ்துளவினானுமயனுமுன்றேடநின்றோன்
பூங்களாநிழற்பால்வண்ணப்புனிதனைநோக்கித்தேவி
பாங்குறுதவம்புரிந்தொப்பனையெனுநாமம்பெற்ற
வோங்கியசரிதந்தன்னையுணர்ந்தவாறெடுத்துச்சொல்வாம். (1)

தவளநன்னிறஞ்சேர்வெள்ளித்தனிப்பெருங்கிரியின்மீது
பவளமால்வரையொன்றுற்றபான்மைபோற்கயிலைமேவுங்
கவளவாரணத்தோலாடைக்கண்ணுதற்பிரானைநோக்கித்
துவளுநுண்மருங்குற்றேவிசொலவளொன்றங்குமாதோ. (2)

தூயபூமணம்போல்வையத்துளவுயிர்தோறுமேவு
நாயகவனந்தகோடிஞாயிறுபோலச்சாலச்
சேயபேரொளிதானுன்பாற்றிகழுமாலெனக்குநின்பான்
மேயவிச்சோதியேபோல்விளங்கொளியருளல்வேண்டும். (3)

எனவுரைத்திடுமவ்வேலையிலங்குபுன்முறுவல்செய்து
மனமுவந்துரைப்பானெம்மான்மடமயிலனையாய்நீயு
மனவரதமுமென்போலவநம்பெறற்சோதியெய்த
நினைவுனக்குளதேலொன்றுநிகழ்த்துதுமினிதுகேண்மோ. (4)

சுலவுதெண்டிரைசேர்வேலைசூழ்ந்தபூவுலகந்தன்னி
னலமுறவெவரும்போற்றுநறுங்களாவனமுண்டாங்கே
யுலகிலாமகிமைவாய்ந்தவருட்குறியுண்டுசீர்த்தி
யிலகுநிட்சேபகங்கையெனுமொருதீர்த்தமுண்டால். (5)

அக்களாவனத்திலெய்தியரும்பவமனைத்துநீக்கு
மிக்கவர்க்கதியிற்றோய்ந்துவிருப்புடனங்குத்தோன்றுங்

---

4. அநவரதம்-எப்பொழுதும்.
5. அலகு-அளவு.

தக்கவச்சிவலிங்கத்தைத்தண்மலர்கொடுபூசித்தே
யெக்குவலயமும்போற்றவியற்றுகிதவந்தான்மன்னே. (6)

பூதலத்திடைநீயெய்திப்புனிதமாதவஞ்செய்நாளிற்
காதல்கூருனதுநெஞ்சங்களிப்புறத்தோன்றிநந்தங்
கோதிலாவடிவந்தன்னிற்குலவும்பேரொளிபோன்மிக்க
சோதியைத்தருதுமென்றான்சுருதிநூன்முடிவினின்றான். (7)

பணிவரைமடந்தைக்காங்கேபணிவிடைபுரிவானந்தத்
தனிமுதற்பெருமான்சங்கைதன்னைநாயகிபாலுய்த்தா
னனியுவந்தவட்குச்சேமம்புரிதலானவிலக்கங்கைக்
கினியநற்சேமகங்கையெனுமொருபெயருநல்கி. (8)

துன்னுதெண்டிரைசூழ்ந்தத்தொல்லுலகனைத்துமீன்ற
மன்றன்மாமலர்க்கொம்பன்னாண்மணாளனைவணங்கிமிக்க
நன்றிகொள்கருணைசசேமநதியெனுமடந்தையோடு
சென்றனள்விருப்பமுற்றுத்திருக்களாவனத்தைநோக்கி. (9)

மூசுவண்டினங்கள்கீதமூரல்களாவனத்துட்புக்கு
மாசிலீசானதிக்கின்மனமுவந்திடத்தாடீக்கித்
தேசுறுவலப்பாதத்திற்றிகழ்முழந்தாளிலேற்றிப்
பேசுமவ்வலப்பாதத்தின்பெருவிரனிலத்திலூன்றி. (10)

சென்னியின்மீதுகஞ்சத்திருக்கரமிரண்டுங்கூப்பித்
தன்னிகரில்லாவீசன்றனைத்தனதுளத்தில்வைத்துப்
பன்னெடுங்காலமந்தப்பனிவரையீன்றமுக்கட்
கன்னிமாதவஞ்செய்துற்றாள்களாவனந்தன்னின்மாதோ. (11)

---

6. தண்மலர் பண்புத்தொகைநிலைத்தொடர்-தண்மைமலர்-தண்மலரென-மைவிகுதிகெட்டுநின்றது-தண்மை-குளிர்ச்சி.

8 பனிவரை - இமயமலை. 8. புரிவான் என்பதில்-வான்-வினையெச்சவிகுதி-புரிதவற்கு என்பதுபொருள். புரிதல்-செய்தல்.

9. தெண்டிரை சமுத்திரம்.

11. சென்னி-சிரசு கஞ்சம்-தாமரை மாது - ஓ - இரண்டும் அசைநிலை.

## கலித்துறை.

'சீலமேவுமெண்ணான்கறம்வளர்த்தவத்தேவி
கோலமாமலர்த்தாள்விரலூன்றுதல்கொளலாற்
சாலவாழ்ந்தவந்நிலத்தினின்றெழுந்தவந்தணாளோர்
காலமும்புகழ்ழிவிரைப்பாதலகங்கை. (12)

பெருந்தராதலமனைத்தையுமீன்றவெம்பிராட்டி
திருந்துபூங்களாவனத்திலிங்ஙனந்தவஞ்செய்யப்
பொருந்துமோர்தினத்தெம்பிரானங்கவள்புரியு
மருந்தவத்தினுக்கிரங்கியேதோன்றினனவண்முன். (13)

தேவிதன்னெதிர்தோன்றிநின்றிந்நிலத்திடைநீ
மேவியன்பொடுபுரிதவத்தினுக்குளம்வியந்தே
நீவிரும்பியதுணர்ந்தனம்பெறுகநீநினக்குத
தாவிலென்சுயசோதிம்பாற்சோதிதந்தனமால். (14)

துன்னுநஞ்சுயவொளிக்கிணையாகியசோதி
யொன்றிநீயலங்கிருதையாயுற்றிடுதலினு
னன்றிசேர்தருமொப்பணையாளெனுநாம
மென்றுமேபிரசித்தமாகுகவுலகெங்கும. (15)

உறுதிசேர்மறைப்பொருளெனவுற்றிடுமனாது
மறுவில்சோதிகொள்வடிவினுக்கிணையிலாமையினு
னறுமலர்க்கொடியனையசிற்றிடைத்திருநங்காய்
பெறுகநீயதுலாம்பிகையெனுமொருபெயரும். (16)

துன்னுவாரிதிசூழ்தருபுவிக்கெலாந்தகட
ரன்னைநீபிதாநானெனவுணர்தியாதலினுன்
மன்னுபாரெலாமிரட்சணைபுரியவென்மருங்கே
தன்னைநேருமித்தலத்திடையிருத்திசந்ததமால். (17)

என்றுநல்வரமளித்தனனளித்தவவ்வேல்லை
குன்றவில்லியின்றிருவுருவத்திடைக்குலவு

---

14. தாவில்-கேடில்லாத.

தன் றசோதியைநிகர்தரும்பேரொளிதுலங்க
நின்றதேவியைத்துதித்தனர்வானவர்கிளைந்து (18)

### கோச்சகம்.

அண்டமெலாமீன்றளிக்குமன்னையெனநீயிருந்தும்
பண்டொருநாளுற்றுய்ப்பனிவரையின்மாமகளாய்த்
தெண்டிரைப்பார்மேலுன்றிருவிளையாட்டாரறிவார்
துண்டமதிவேணியன்சேர் தூயவதுலாம்பிகையே. (19)

தூயமறைநாலுங்தொடர்தற்கரியபொரு
ளாயவுனையாமோவறியுந்தரமுடையே
நேயவடியார்தமதுநெஞ்சிலிருந்தன்னவர்தந்
தீயவினைதீர்த்தருள்செய்தேவியதுலாம்பிகையே. (20)

முத்தொழிலும்வல்லமுதல்வியெனுநீபலநா
ளித்தரையிற்போந்தொரொளியர்தமைப்போலரிய
மெய்த்தவநீசெய்தாய்விளையாட்டெனக்கிதுவோ
வுத்தமியேமெய்ப்பொருளேயொப்பிலாநாயகியே. (21)

### வேறு.

எனநெடுந்திருமாலயனிந்திரன்
கனகமேருவிக்கடவுளர்யாவரு
மனமுவந்துதுதித்தனர்மாற்றமொன்
றனகனைப்பணிந்தம்பிகைகூறுவாள். (22)

### வேறு.

மிருதுவாயவெண்மலர்த்திருவடிப்பெருவிரலாற்
கருதுபாதலத்திடையிருந்தெழுந்தவிக்கங்கைக்
கருனல்வேண்டுநல்வரமெனவன்புடன்வேண்டச்
சுருதியின்முடிவாகியவெம்பிரான்சொல்லும். (23)

---

அதுலம்-ஒப்பின்மை.

ஆவிபோ னுயிரனைத்தினுநிறைந்தவுன்பெயராற்
றேவிதீர்த்தமென்றேவருந்துதிசெயச்சீர்த்தி
மேவியேவிளங்குகவுனதடிப்பெருவிமலாற்
பூவின்மேல்வருபாதலகங்கையெப்போதும். (24)

சீர்த்திமேவுமிக்கங்கையினோர்தரஞ்சேர்ந்து
பார்த்திவத்தெவராயினும்படிகுவோர்பன்னு
ளார்த்தர்போற்றிடுமானசசரசுமுன்னுய
தீர்த்தமாடுநற்பலனெலாமடைகுவர்திண்ணம் (25)

என்றுதேவிசொற்கிசைந்து நல்வரங்கொடுத்தருளிக்
கொன்றைவேணியனுலகருள்கொடிதனைநோக்கி
யொன்றுகூறுவனீசிலையுருவொடுசின்னாண்
மன்றவிக்குநிட்சேபமாநதியினுள்வசிப்பாய். (26)

பின்னராரியபாண்டியனென்றொருபெயர்கொண்
மன்னனித்தலம்வந்துதானெனக்குமுன்றனக்கு
பின்னுமாலயஞ்சிறப்புறவியற்றியவ்வேந்த
னுன்னையந்நதிப்புனலினின்றெடுத்துளமுவந்து. (27)

செய்குவானுளத்தன்புடனுனைப்பிரதிட்டை
மெய்குழாலெனமனமுவந்தருளொடுமொழிந்தான்
மைகுலாவியமேனியனயன்முதல்வானோ
ருய்குவான்றிரைக்கடற்பெருவிடத்தைமுன்னுண்டோன் (28)

அந்தவேலையிற்சேடியாயம்பிகைக்கதிக
சிந்தையன்புடனனுதினம்பணிவிடைசெய்வான்
வந்தசேமையெம்பிறைவனைநோக்கியுண்மகிழ்ந்து
கந்தமாமலர்க்கரங்குவித்திறைஞ்சியேகழறும். (29)

மின்னைநேர்தருவேணியாய்விரும்பியவரமிக்
கன்னியாமுலைமக்களித்தனைகருணைகூர்ந்தெனக்குந்

---

25. பார்த்திவம்-பூமி.

துன்னுவாரிருழ்ந்தவித்தொல்புவிமிசையே
மன்னுசீர்த்திபெற்றித்தலத்திருந்திடும்வண்ணம். (30)

மேவுநல்வரமருளெனவுரைப்பவவ்வேலை
யேவராயினுமின்னிடைப்படிந்தவரெண்ணில்
பாவம்யாவையுநீங்கியிவ்வுலகெல்லாம்பரவுந்
தேவராகபன்னதிகளுட்சிறந்திலங்குகநீ. (31)

செங்கண்மாதவன்பாஞ்சசன்னியமெனச்செப்பு
சங்கமேவுமந்தாகினியாயதீர்த்தத்தா
னங்கழற்கபிடேகமுன்னியற்றினனவிலக்
கங்கையோடுநிட்சேபமாநதிகலந்துளதால். (32)

அங்குநீகலந்தந்நதியுடனிருவெனவே
திங்கள்வேணியன்றிருவுருக்கரந்தனன்சேம
கங்கையந்தநிட்சேபகங்கையினொடுகலந்து
தங்கினுள்படிந்தவர்பவநீக்கியத்தலத்தில். (33)

வம்பறுமலர்க்கொன்றையந்தொடைமுடிவனைந்த
நம்புராதனநாயகனவின்றசொற்கருதி
புப்போத்ததுலாம்பிகையெனும்பெயருடைய
வெம்பிராட்டியந்நதிப்புனலிடைக்கரந்திருந்தாள். (34)

மன்னுமித்தலமான்மியஞ்சிலமுனிவரர்கா
ளின்னுமுண்டோமியம்புதுங்கேண்மினிங்கெனவே
துன்னுதெண்டிரைப்புவிபுகழ்சூதமாமுனிவ
னுன்னுநைமிசாரணியமாமுனிவருக்குரைப்பான். (35)

வேறு.

கிருபைநதிசேமநதிசங்கநதியெனவியந்துகிளத்துமூன்று
திருநதிசேர்ந்திடுதீர்த்தந்திரிவேணிதீர்த்தமெனச்செப்புவாரற்

---

34. வம்பு-மணம். 35. கேண்மினென் பதில்-மின்-முன்னிலை யேவற் பன்மை விகுதி.

கருதுறுமத்தீர்த்தமதிற்பிதிர்தேவரிருடிகளைக்கருத்திருடி
மருவுதருப்பணம்புரிவோரதிற்படிவோர்பெறும்பலனைவகுத்
துச்சொல்வாம். (36)

நலமேவுகதியிழுந்துதீசகதியையடைந்துநெடுநாளாவாடும்
பலகோடிபிதிர்களுநற்கதிசேரத்தாம்பரமபதத்தைச்சேர்வார்
நிலமீதுமறையவரைக்கொலைபுரிமாபாதகமுநீங்கியாங்கே [ல்.
புலவோரும்வியந்துரைக்கமிக்கபரிசுத்தரெனப்பொருந்துவாரா

எழுசீர்விருத்தம்.

அந்தணன்னதியிற்புனலெடுத்தன்னமாவது
கறிகளாவதுதான்
சிந்தையன்புற்றுச்சமைத்தொருபோதிற்
றிருக்களாவனத்திடையுதித்த
நந்திருச்சிவலிங்கத்தினுக்கதிகநயப்
பொடுநிவேதனஞ்செய்து
புந்தியுண்மகிழ்ந்துபுசிப்பவர்பெறுவார்
புனிதசாயுச்சியபதமே. (38)

வேறு.

பீடுறுசித்திரைமாதப்பிறப்பெனும்புண்ணிய
தினத்திற்பெரியோர்யாரு
மாடுறுமம்மூவுலகத்திடையுளமான
சமுதலாமறுபத்தாறு
கோடிநதியொடுமருவிவந்திடுநிட்சேப
மெனக்கூறுந்தீர்த்தந்
தேடும்வடதிசைதிரும்புமிடத்தின்மணிகரணி
யென்றோர்தீர்த்தமுண்டால். (39)

மணிகரணியெனச்சொலுமத்தீர்த்தமதிற்படிந்
தொருகவளவன்னத்தைத்
தணிவறுமன்புடனொருவட்டாணமியத்துவ
ரென்னிற்சகத்தோர்போற்று

மணிகொள்குருக்ஷேத்திரமாமத்தலத்திற்
சென்றுமனத்தன்புகூர்ந்து
துணிவொடுநூறுண்டனதானம்புரிந்த
பலனடைந்துதுலங்குவாரால். (40)

கலிப்பா.

கைத்தலத்தின்மானேந்துங்கத்தனுவப்புற்றிருக்கு
மெத்தலத்தினுஞ்சிறந்ததென்பர்காசித்தலத்தை
யத்தலத்தினுஞ்சிறந்ததாயிரம்பங்கென்னிலினி
யித்தலத்தின்மேன்மைமகிரிதனென்னேயுரைப்பதுவே. (41)

அன்னதிருக்காசியினுமதிசயிதுவெனப்பகர்வ
தென்னெனிலித்தலததிறந்தோரிரதத்தம்புண்ணியதீர்த்த
மன்னுதசைநரம்புசிவமண்டபமென்பிலிங்கமுயிர்
முன்னுசிவமாகிதனுன்முனிவரர்காளிதுநிசமால். (42)

ஒப்பனைதிருநாமம்பெற்றசருக்க
முற்றிற்று.

ஆகச்சருக்கம் 11-க்கு விருத்தம் 341.

---

ஆறுவது

## சிவராத்திரி யுண்டான சருக்கம்—வீ.

---

கலிவிருத்தம்.

மாதவன்மலர்த்தவிசுறையும்வானவன்
நீதறுமடிமுடிதேடலுற்றநா
ளேதமில்சிவநிசியென்றபேர்பெறு
காதைதலைச்சிறிதுநாங்கழறுவாமரோ. (1)

ஞாபகான்முகத்தவன்றயிலுமோரிரா
வாயிரஞ்சதுர்யுகமாகுமன்னவன்

---

42. முன்னுதல்-நினைத்தல்.

மேயகண்டுயில்செயும்வேலைமூழ்குமாற்
பாயவப்பிரளயந்தன்னிற்பாரெலாம். (2)

காதுமப்பிரளயகாலந்தன்னிலே
யேதமில்புவியெலாஞ்சுமந்தவெய்ப்பற
வாதிகூர்மம்விளையாடுந்தான்மகிழ்ந்
தோதுமப்பிரளயசலத்துளுற்றனோ. (3)

அட்டநாகங்களுமவனிதாங்குமோ
ரெட்டுவாரணமுமவ்வெல்லைதன்னிலம்
மட்டிலாச்சலத்தினில்லாதுவலையிற்
றிட்டெனவெழுந்துபோய்ச்சேரும்வேதன்பால். (4)

உற்றிடுமவ்விராவொழிந்துதோன்றுறு
மற்றைநாட்காலைவையம்யாவையு
நற்றயவொடுசிருட்டிப்பனுண்மலர்ப்
பொற்றவிசுறையுமப்புனிதவேதனே. (5)

அயனவனெண்ணினனகத்திலொன்றுநா
முயர்விழிமுகிழ்த்தபோதொடுங்கும்பாரெலாம்
வியனுறுமதுகண்விழித்தபோதுதா
னயர்விலெவ்வுலகுமுண்டாகுமாதலால். (6)

வேறு

என்றுமுலகுக்கிறைவன்யாமெனநினைத்துத்
துன்றியவகந்தையதுதோன்றவதனாலே
யன்றவனியற்றியவனைத்துலகுநோக்க
வென்றிகொளனத்தின்வெரிந்மீதெழுதலுற்றான். (7)

அண்டமெலவையுமவனடைந்துவருமெல்லை
பண்டுதருதந்தையுயர்பாற்கடலினுப்பண்
கண்டுயில்புரிந்திடுதல்கண்டதிககோபங்
கொண்டனனவிண்டுமுகநோக்கியிதுகூறும். (8)

தடப்புவனமத்தனையுமீன்றதலைவன்யா
னடுத்தனெதிர்வந்தினிதுநிற்பதையறிந்தங்
கடற்குழியினீபுபயகால்களையுநீட்டிப்
படுத்திவணிருந்ததெனடாபகர்தியென்றான். (9)

அப்பொழுதுமாதவனனத்திலைறலையநோக்கித்
தப்பில்புவனத்தொடுசராசரமளித்த
மெய்ப்பிரமரெண்ணிலவர்வீந்திடிலெமக்கே
யொப்பரியவோர்திவசமாவதுணராயோ. (10)

எந்தவுலகத்தையுமிரட்சணைசெய்கின்ற
நந்தமலருந்தியிலநானிடையுனைப்போல்
வந்தவதரித்தபிரமர்க்களவுமுண்டோ
விந்தவகையின்னமெனடாவறிகிலாயோ. (11)

இகழ்ந்தெதைமையுரைத்தனையெமக்குலகினீதா
னுகந்தவொருபிள்ளையெனவுற்றிடுவதாலே
புகன்றிடுநெடும்பிழைபொறுத்தனமனத்துன்
னகந்தைதலையகற்றுமதியற்றசிறுபிள்ளாய். (12)

என்றரிவிளம்பவயனும்முறுவலெய்தி
நன்றசுரர்வானைதபுறநம்புதல்வனேனோ
னொன்றியதவக்குரிசில்சாபனுக்குன்னை
யன்றுபிறப்பித்தயமார்சோனையுணவனோய். (13)

ஆதலினமபேரனெனவாயினையென்றேத
மாதவனுஞ்சிறிமலரோனைமுகநோக்கி
யோதருநமுந்தியிலுதித்ததனையுன்னே
தேதுனதுபேரனெனநீசொலியதென்றான். (14)

அந்தவமயத்தயனைகைத்துமுனம்யாமு
னுந்தியிடைவந்தினிதுதித்தவதனனீ
தந்தையெனிலுன்றனவதாரமொருபத்தி
லுந்தையொருதூணுமெனலாமெனவுரைத்தான். (15)

வேதனுரைசெய்திடவெகுண்டுநெடுமாயோன்
காதுமடல்கூர்திகிரிலைகதனிலெடுத்தான்
றுதலரவன்பிரமதண்டமதெடுத்தா
னேதிருவருங்களவனத்தினிடையுற்றார். (16)

அறுசீர் விருத்தம்.

பையரவசயனனும்வேதனுங்கொடியகதைமுதற்பல
படைகளேவி
வெய்யசமர்புரிந்தனரேவியபடைகளழிதலும்பின்
விரைந்தநேக
மையில்படைக்கலங்கள்சிருட்டித்தமர்செய்தனர்தமது
வாளியோடு
செய்யவுருத்திரகணைதீக்கணைமுதற்பற்பலகணைகள்
செலுத்தினரால். (17)

விடுத்தபலகணைகளையவ்வேறுபலப்பலகணைகள்
வெய்தினைவித்
தடுத்தனரிவ்வாறுகொடுஞ்சமர்புரியக்கணைகளின்வெந்
தழற்சுவாலை
யடுத்தளவிலாதபலவண்டமெலாந்தகித்திடக்கண்
டஞ்சிவாடி
வடுத்தவிரிந்திரன்முதலாம்வானவர்யாவருங்கயிலை
வரையுற்றாரால். (18)

கறையணிகந்தரப்பெருமான்சன்னிதியிலெய்தியடிக்
கமலம்போற்றி
முறையிடவவ்வெல்லைதனிலினியவருட்கடலெனுமெம்
முதல்வன்போந்து
குறையுறுமாலயன்படைகள்யாவையுநீறெழவெரித்துக்
குலவுஞ்சோதி
நிறையுமழற்றம்பமெனவவ்விருவரிடைத்தோன்றி
நின்றனன்மன்னே. (19)

தம்பிடையிற்றோன்றினின்றதழற்றம்பநோக்கியுளத்
தருக்குநீங்கி
விம்பிதமுற்றிதனடியாவதுமுடியாவதுகண்டோர்
மேலோரென்றே
யம்முகில்வண்ணனுமயனும்பேரதிசயித்தடிமுடியாம்
கறியவெண்ணிச்
செம்மையுறுமேனமுமன்னமுமாய்மண்விண்புகுந்து
தேடினாரால (20)

மின்றிகழ்செஞ்சடைப்பெருமானடிநோக்கிமீள்வலென
விரைவுற்றாங்கே
சென்றநெடுமாண்மருப்பாற்புவியிடந்தெண்ணருங்காலஞ்
சென்றுதேடி
பொன்றுமடிகாணுமலாடசேசர முதலா
வோதுநதூய
னன்றிமிகப்பெறுதலங்கள்பலகடந்துசெல்லுமந்த
நாளின்மாதோ. (21)

சித்தமொழிகடந்துநின்றசெழுஞ்சோதிவிராட்டுமிகச்
சிறப்புற்றோங்குஞ்
சுத்தமிகுமொருமறையோனெனத்தோன்றியேனமெனத்
தோன்றிநின்ற
வத்திருமாதவன்றனையேநோக்கியெவனேகுதிநீ
யறைதியென்று
மெத்தமனங்கனிந்துரைக்கமாயனவன்முகநோக்கி
விளம்புவானால். (22)

---

4. அட்டம்-எட்டு. அவனி பூமி.
7. வெரிந-முதுகு.
8. நாப்பண்-நடு.
9. தடம்-விசாலம்.
10. திவசம்-நாள். உபயம்-இரண்டு.
22. எவண்-எங்கு. விராட்டு-பிரமம்.

முண்டகமாமலருறையும்வேதனுக்குமெனக்குமிகன்
மூண்டவாற்றா
லண்டமுகடுருவுமொளிமுடிதேடியவனடைந்தா
னடியையயானுங்
கண்டிடவீங்குற்றனன்யானிங்குறச்சென்றனவளவில்
காலமென்றான்
வண்டுளவத்தொடையணிமாயனைநோக்கியவனகைத்து
வழுத்துவானால். (23)

இப்படிநீயளப்பரியகாலந்தேடியுமிடைமட்
டெய்தியெய்த்தா
யொப்பரியவடிசாண்பதரிதரிதுவிண்ணிலுழன்
றுறுவதுண்டோ
செப்புதம்பம்விராட்டினுயர்சுழிமுனையினின்மலமாய்த்
திகழ்ந்ததாகு
மப்பெரியபரஞ்சோதியநாதிபுரந்தனிலிலிங்க
மாகிற்றன்றே. (24)

அவ்விலிங்கமுலகமுய்யவுதித்ததுவிராட்டுவிந்து
வழுதம்வீழ்ந்தே
செவ்விபெறுமனமொழிக்கெட்டாமன்முதலிறுதி
யின்றிச்செகத்துக்கெல்லா
மொவ்வருங்காரணப்பொருளாயுற்றதுநான்முகத்
தவன்பாலுன்பாலுற்ற
வெவ்வமுறுகருவமகற்றிடுமாறிங்ஙனமெழுந்த
திங்குமாதோ. (25

அப்பொருளுக்களவில்லாவண்டமெலாமோர்சிறிய
வணுவாய்த்தோன்று

---

16. களவனம்-களாவனம்.
19. கறை-நஞ்சு.
24. அன்று-ஏ-அசைநிலை.
25. எவ்வம்-துன்பம்.

மொப்பரியவப்பொருளைமாலயனாலறியாம
    லுழல்கின்றாயம்
மெய்ப்பொருளைத்திருக்காசிகாஞ்சிசிதம்பரமாரூர்
    விளங்குங்கூட
லிப்பதியிலறிவுடையோர்தெரிசனஞ்செய்திடுவரஃ
    திதுவாமன்றே. (26)

தோன்றிவருங்கற்பங்கடொறுநீயுமயாறுகாற்
    சுரும்புமொய்க்குந்
தேன்றிகழுஞ்செழுங்கமலமலருறையுஞ்சதுமுகனுஞ்
    செருக்கினாலே
யான்றவடி முடிதேடியலைகின்றீரினியிவ்வா
    றலையாவண்ண
மூன்றுபுகழ்மேவுறுமங்கன்பினுடன்கூறுதும்யா
    மொன்றுகேண்மின். (27)

மதிக்கரியகளாவனத்தில்வாழ்சோதியிலிங்கமதை
    மனதிற்பத்தி
புதிக்குமெனிலெளிதினுணர்ந்திடலாகுங்கருவமனத்
    துதிக்குமென்னிற்
றுதிக்குரியவிவ்விலிங்கங்காண்பரிதாறாகற்பந்
    துருவினுமம
பதிக்குளுயராநாதிபுரமடைந்தநச்சிகதிடிறகாண்பாய்
    பதநீயென்றான். (28)

அந்தவகைமேவதியனுய்வந்தவிராட்டனபினுட
    னைறதலோடு
கந்தணிசெங்கரத்தலவனக்கவனையுபசரித்துமொழி
    நயந்துகூறி
வந்தநெறிமீண்டுபயமாபுரியிலடைந்தாரால
    வண்ணனென்னு

மிந்துவணிசடையானைநெடுங்காலம்பூசனைசெய்
திருக்குமெல்லை. (29)

பானிறவண்ணத்துருவாய்ச்சதுமறைநாயகன்வானிற்
பறந்துநீண்ட
வான்முகடெல்லாங்கடந்தேகியுமுடிகாணாதுமிக

தானினியென்செய்துமெமைத்தந்தருண்மாதவனெடும்பா
தலத்துளேகி
யேனவுருவாயடிகண்டெய்துறுமோவெனவயர்ந்தங்
கிருக்கும்போழ்தில். (30)

சோதிமயமகுடமிசைப்பல்பொருளுமிருக்கவினைத்
தொடர்ச்சியாலே
கேதகையுந்தடுமாறிக்கீழ்வரலுமப்பிரமன்
னெதிர்நோக்கி
மீதுயர்வானத்தினிலெங்கிருந்திவண்போந்தனையென்ன
விளம்பலோடு
மோதரியபேரொளியின்றிருமுடிநின்றிடறுறவீங்
குற்றேன்மன்னே. (31)

எண்ணருங்காலங்கழிந்தவிம்முடிநின்றிறங்கியிவ
ணெய்தவென்று
பண்ணமையாரணற்குரைப்பப்பதறியவன்கேதகையைப்
பார்த்துக்கூறுங்
கண்ணனும்யானுஞ்சபதம்புரிந்திவொளியடியவன்றான்
காணப்போனா
னண்ணரியநெடுங்காலமுடிதேடியீங்கடைந்தே
னானுமன்னே. (32

ஆதலினான்முடியறிவதரிதறிந்தேனெனவொருசொல்
லறைதல்வேண்டு

---

29. எல்லை-காலம்.

மாதவனுக்கென்றிரப்பக்கேதகையும்பொய்வார்த்தை
வழுத்தல்யார்க்கு
நீதெனவேபகரவயன்செயலழிந்தோர்க்குதவிசெயச்
செப்பினன்றா
மீதுமறைகளுமொழியுமெனப்புகலக்கைதைநன்றென்
றிசைந்ததம்மா. (33)

போதவனுங்கேதகையுந்தம்பநெறியேயுபய
புரியிற்போந்தே
காதனடிகாணவெனப்பூசனைசெய்தேயிருக்கு
களிணைச்செங்கண்
மாதவனையடைந்துமுடியுணர்ந்துவந்தேனெனக்கமல
மலரோனுங்கே
யோதினனக்கேதகையுமுண்மையிஃதென்றுபொய்ச்
சான்றுரைத்ததம்மா. (34)

கலிவிருத்தம்.

ஆயனுமறிவழிந்தயரும்வேலையிற்
றூயநற்சுதைவனச்சோதிலிங்கத்து
ளேயதோர்வடிவுகொண்டிமையவல்லிதன
னாயகன்றோன்றினான்முகனைச்சீறியே. (35)

பொய்வசனம்புகன்றாய்முன்னாளொரு
செய்யபங்கயத்தவன்செய்ததீமையாற்
கையிணையறுத்தனன்கயிலாதவன்
வையகம்படைத்திடும்வண்ணமின்மையால். (36)

அப்புவின்மூர்த்திநஞ்சத்தியாகிய
மெய்ப்பெருமாலிடைவீரியம்பளித்

---

34. சான்று-சாட்சி.
35. சுதை-அமுதம் வனம் வன்னம் நிறம் வன்னமென்பதினி
டை நின்ற னகரவொற்றுக்கெட்டது இடைக்குறைவிகாரம்.

தொப்பருநாபியிலுதித்துளாய்பெருந்
தப்பினான்முன்னொருதலையுங்கொய்தனம். (37)

நாரவாரிதியிடைநம்முடைப்பெரு
வீரியத்தால்வருமினிர்பொன்னண்டத்தி
லேருறுபிரமர்களெண்ணிலார்பிறந்
தாரெனமறையுரைத்ததுமுணர்ந்திலாய். (38)

இறந்துளபிரமர்களெண்ணிலாதவர்
செறிந்தவஞ்சனையுடைச்சிறியவேதனே
யுறுந்திறற்சத்திசேர்மூர்த்தியாமுண்மை
யறிந்துகொள்வாய்திருவானைக்காவிலே. (39)

மறிலையநேர்விழித்திருமாதுமேவிய
வெறிதிகிரிக்காதகேதந்தலுந்தியா
நறியபங்கயத்தினீநாளும்வைகிய
தறிகிலையோதிருவரங்கந்தன்னிலே. (40)

என்றயன்றனைவெகுண்டேசுரீயிவ
ணின்றிடிற்பிழைமுவ நமெனநிகழ்த்தியே
மன்றலங்கேதகைமலரைநோக்கிநீ
யொன்றிடாப்பொய்க்கரியுரைத்தபான்மையால. (41)

உரியதாய்கொள்கிலமுன்னைநீததனம்
பரிவினாலெலமைபலகாலுமேபணிக
தரியபூசனைசெய்வோருனையணிந்திடி
லெரிநரகிடையுறக்கடவதென்றனன். (42)

நின்மலன்றிருவுளத்திகழ்ந்துநீத்கலாற்
பொன்மகள்கணவனுமகிழ்சசிபொங்கியே
சின்மயவடிவினிற்றிகழ்செஞ்சோதியைப்
பன்முறைதுதிசெய்துபரவினனரோ. (43)

எண்சீர்க்கழிநெடிலடியகவல்விருத்தம்.

ஒருமாமணியினொளியேசரண
முயிருக்குயிராயுறைவாய்சரண

மருவாயுருவாயுறைவாய்சரண
மனுவுக்கனுவாமமலாசரண
மிருமாமறையின்பொருளேசரண
மென்னையாள்கருணைக்கடலேசரணம
பரிபூரணநாயகனேசரணம
பரமானந்தாசரணஞ்சரணம (44)

திருவெண்பொடிமேனியனேசரணந்
திகழ்சந்திரசேகரனேசரணங்
கருவாதையறக்களைவாய்சரணங்
கறைசேர்கண்டத்திறைவாசரண
மருவாரிதழிச்சடையாய்சரண
மனவாசகமெய்க்கரியாய்சரணந்
தருவானவர்தந்தலைவாசரணஞ்
சருமாம்பரனேசரணஞ்சரணம. (45)

கனகாசலவிற்கரனேசரணங்
கதிசேர்விடைவாகனனேசரண
மநகாசரணம்பயாசரண
மரனேசரணம்பரனேசரணம
பணகாபரணப்பதியேசரணம
பவளாசலமேனியனேசரணஞ்
சனகாதியர்தங்குருவாசரணஞ்
சதுமற்புயனேசரணஞ்சரணம். (46)

அறுசீர்விருத்தம்.

அடியனேனறிவிலேன்செய்பிழைபொறுத்தருள்கவென்று
முடியடிமலரிற்சாத்தமுன்னவன்மகிழ்ச்சிகூர்ந்து
நெடியவன்றன்னைநோக்கிநீகற்பகந்தோறுமிந்தப்
படியலையாதவண்ணம்பகர்ந்திடக்கேண்மோவென்றான். (47)

---

46. அநகம்- அகமின்மை.
பன்னகம்-பணகமெனநின்றது இடைக்குறைவிகாரம்.

னின்கலைதன்னிலொன்றெங்கோமுமேனமாகி
யன்பொடெம்மைப்பூசித்தடியில்வாழ்ந்திடுகவென்று
மின்புரைசடையான்கூறமிகமகிழ்வுற்றான்மாயோ
னின்புறபானுமிப்பேறெய்தவும்பெற்றேனென்றே. (48)

அன்றரன்கருணையெய்தாதிருக்குமவ்வயன்வந்தென்பா
லொன்றியகருணைசெய்யுங்காலமுமுளதோவென்று
வென்றிகொண்மழுமானேந்துமிளிர்திருச்செங்கையெம்மான்
மன்றன்மாமலர்ப்பொற்றாண்மேலடியறுமரம்போல்வீழ்ந்தான்.

எண்சீர்விருத்தம்.

பெருவாழ்வேபோற்றியுணர்வில்லார்செய்யும்
பிழைபொறுத்துக்காத்தருளும்பெரியோய்போற்றி
யுருவாகியருவாகியுறைவாய்போற்றி
யுயர்கருணைப்பெருங்கடலாயுற்றோய்போற்றி
துரியாதீதத்தமருஞ்சுடரேபோற்றி
தொழிலைந்துமுடையபரஞ்சோதிபோற்றி
யருள்சேரொப்பனையுமைபங்காளாபோற்றி
யப்பனேபோற்றியெனப்பணிந்துநின்றான். (50)

கலிவிருத்தம்.

மறையவனிவ்வணம்வணங்கிநிற்றல்கண்
டிறையவன்றிருவுளமிரங்கிக்கற்பங்க
டொறுமகந்தையினுநீதோய்வுறாதுநின்
னுறுகலைகளிலொருகலையொரன்னமாய். (51)

இருந்துநம்முடியிற்பூசிக்கவென்றுதான்
திருந்தியவருளினாற்செப்பிப்பின்னரு
மருந்திறன்மாலையும்பார்த்தகந்தைநீர்
புரிந்தமைகெடவிவண்பொலிந்துதோன்றினேம். (52)

---

48. மின்புரையென்பதிற்புரை-உவமையுருபு-மின்போலுமென்பதுபொருள்.

மருவுமிக்கும்பமாதத்தில்வண்புகழ்
பரவுறுமபரபக்கத்திற்பண்பொடு
விரவியதிதிபதினான்கின்மேவியிவ்
விரவிடைத்துயிலுணவின்றிரீரரோ. (53)

பூசனைபுரிந்ததாற்பொருந்துமித்தின
மாசிவராத்திரியெனவழங்குமா
லாசிலாத்துயிலுணவின்றியர்ச்சிப்போர்
பேசுசாயுச்சியம்பெறுவர்திண்ணமே. (54)

புகலுமிச்சிவநிசிப்பொழுதிராப்பகன்
மகிழ்தருமூண்டுயிலின்றிமறலைறநாட்
பகலிடைத்துயிலிலாதிருந்தபண்பினர்
தகவுறுமினியசாரூபஞ்சார்குவார். (55)

மலைவறுசிவநிசிதினத்தின்மட்டுமிந
நிலைபெறுவிரதமேநினைந்தியற்றுவோர்
கலமுறுநம்முலகதனின்கணத்
தலைவராகுவரையஞ்சற்றுமில்லையால. (56)

இச்சிவராத்திரிவிரதமேவரு
மெச்சியவிரதம்யாவினுக்குமேலதா
மச்சமிலிவ்விரதத்தையாற்றுவோர்
கச்சமில்பவந்துடைத்தெமைக்கலப்பரால. (57)

என்றுரைத்தனன்மலரிருக்கும்வேதனு
மன்றலந்துளவணிமாலுமெம்பிரான்
றன்றிருவருளைநெஞ்சத்திலுன்னியே
துன்றியவுவகையாற்றுதிசெய்தாரரோ. (58)

அறுசீர்விருத்தம்.

ஐயனேபோற்றியெங்களகந்தைவேர்களைந்தாய்போற்றி
மெய்யனேபோற்றிஞானமேனியாய்போற்றிவெற்பின்

---

57. கச்சம்-அளவு.

றையலோர்பாகாபோற்றிசச்சிதானந்தாபோற்றி
யுய்யுமாறருளுமுக்கணொருவனேபோற்றிபோற்றி. (59)

என்றுநற்றுதிசெய்காலையெம்பிரான்கருணைகூர்ந்து
வென்றிகொள்படைகள்யாவும்விருப்புடன்வழங்கினானு
லன்றருகடைந்துதாளிலன்புடன்வீழ்ந்துபோற்றி
நின்றகேதகையைநோக்கிநின்மலனியம்புமன்றே. (60)

கைதையேநீபொய்ச்சான்றுகழறியுமிரந்தவாற்றாற்
செய்பிழைபொறுத்தோமொன்றுசெப்புதுமுனக்குநீதா
னுய்வலகேண்மோவாமத்துமைக்குமைந்தருக்குமாவா
யெய்துதியென்றுஞ்சென்றதிம்மறவிபார்க்கைதமாதோ. (61)

அம்மறையவனுமாலுமாரணையோராண்டுபூசித்
தெம்பிறைமுடியிலன்னம்பதத்திடையேனமாகத்
தம்பிருங்கலையைவைத்துத்தம்பதஞ்சென்றுபுக்கார்
செம்மைசேர்தலத்தின்மகிமையார்செப்பவல்லார். (62)

இத்திறஞ்சூதன்கூறவிருந்தவமுனிவர்போற்றிப்
புத்தமுதனையகாதைபுகன்றனைசெவியிற்கேட்டு
வித்தகமுனிவயாங்கள்வியந்துளமகிழ்ந்தேமின்னு
மத்தலமகிமைகூறுகென்னலுமவன்சொல்வானால். (63)

சிவராத்திரியுண்டானசருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 12-க்கு விருத்தம்-405.

---

61. மோ-முன்னிலையசை-வாமம் இடப்பக்கம் அழகெனினும் பொருந்தும்.

63. இருமை-பெருமை மைவிகுதிகெட்டு இனவெழுத்துத்தோன்றி இருமைதவ-இருந்தவவெனநின்றது.

## ஏழாவது

# கணபதிகுமரன்பூசித்த சருக்கம்.

### சீ.—அகவல்விருத்தம்.

பொலங்கிரிபொருவத்தோன்றும்பொன்மதிற்கருவையென்னு
நலங்கிளர்பதியிற்சென்றுநற்சிவநிசியிற்றொண்டர்
கலங்கலின்மனத்துள்வைகுங்கயமுகத்தவனுஞ்செங்கை
யிலங்குவேற்குகனும்பூசையியற்றியசரிதஞ்சொல்வாம். (1)

வேறு

முடையிருக்குமளைநுகர்ந்தோனயனறியாத்திருவடியு
முருகார்கொன்றைத்
தொடையிருக்குமுடியுமுளோனைங்கரன்வேற்குமரனெனுந்
தகவோர்மக்கள்
புடையிருக்கமலையரசன்புதல்வியெனுமுதல்வியிருப்
பொடுதென்பாகத்
திடையிருக்கமகிழ்ந்ததிகழ்வெள்ளிலிருக்குங்கயிலையில்வீற்
றிருந்தான்மன்னோ. (2)

இருந்தவருட்கடலெனுமெம்பிறைபவனையன்பினுட
னிறைஞ்சிநோக்கித
திருந்துநலம்பெறுசிவராத்திரிவிரதமகிமையெலாந்
தெரியுமவண்ணம்
பொருந்தவெனக்குரைத்தருளென்றியம்பலுமவ்விமயமென
ப்புகழ்பெற்றோங்கும்
பெருந்தனிவெற்புதவுமிளம்பிடி பின்முகநோக்கியங்குப்
பேசுவானால் (3)

எமதுசிவராத்திரியாமத்தினத்தின்மூவுலகத்
திடையேயுள்ள

---

2. அளை-தயிர்-முருகு-வாசம் தொடை-மாலை-புடை-பக்கம் இடை-ஏழாம்வேற்றுமை யுருபிடைச்சொல்.

வமலசிவசுயம்பிலிங்கதெரிசனம்பெற்றிடுகபெற
லரிதாமென்னிற்
சமயில்சகத்திரசுயம்புலிங்கதெரிசனம்பெறுக
சயிலமீன்ற
குமரியெனுமடமயிலேபெறுவதரிததுவுமெனிற்
கூறக்கேண்மோ. (4)

பரிவினுடனினியபிருதிவிலிங்கமுதலாய
பஞ்சலிங்க
தெரிசனம்பெற்றிடுகபஞ்சலிங்கதெரிசனமேயெச்
செகத்துமுள்ள
வரியசிவசுயம்பிலிங்கமனைத்தையுமேதெரிசித்த
தாகுநன்மை
தருசிவராத்திரியெனுமத்தினஞ்சுயம்பிலிங்கதெரி
சனம்பெற்றுள்ளோர். (5)

இக்கடல்சூழ்வியனுலகத்தெவரெனினுமவரோரா
மியம்புமன்னோர்
மிக்கபுகழ்ச்சாரூபகதியடைவாரையமிலை
விளம்புமிந்தத்
தக்கசிவராத்திரிமான்மியமனைத்துமுரைப்பரிது
தையாலென்றம்
முக்கணுடையெம்மிறைவன்மொழிந்திடக்கேட்டுளமகிழ்
ந்தாண்முதல்விமாதோ. (6)

செகமுழுதுமீன்றவுமைக்கரனுரைக்கவறுமுகத்தோன்
செவியிற்கேளா
வகமகிழ்வினொடுமெறுநாள்வருசிவராத்திரிநாளி
லவ்விரவிற்

6. தையல்-தையாலென-விளித்தற்கண்ணீற்றயனீண்டது.
7. கேளா-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் கேட்டு என்பது பொருள்.

றகவுரமுன் றலகினுஞ்சஞ்சரித்துவிரைவுடனெந்தத்
தலத்துமுள்ள
ரிகரில்சிவலிங்கமெலாங்கண்டுபூசித்துவா
ரினைத்தான்மன்றே (7)

வேறு

பூமேலெலத்தக்காரியமும்பொருந்தமுடிக்கும்வல்லமையா
ளுமேசிறந்தோம்பெருவயிற்றோணமதுதலையனிவனாலென்
ளுமேயெனவுநினைத்தனன்றேனருந்திவரிவண்டிசைபாடுந் [ல்
தேமேவிதழிச்சடைப்பெருமான்றிருமுன்னெய்திச்செப்புவனு

நிந்தையறுநற்றாயசிவநிசிதானனைத்தினமுறலா
லந்தவிரவின்மூவுலகமனைத்தும்விரைவிற்சென்றெனது
சிந்தையுவப்பவவனுறையுமிலிங்கமனைத்துந்தெரிசனஞ்செய்
தெந்தைவருவல்விடையருளென்றிசைத்தானவனுமீந்தனனால்.

வேறு

கருங்கடலின்முகட்டிடைநின்றெழுந்தவிளங்கிரணதிவா
கரன்போற்சோதி
தருங்கலவமயிலிவர்ந்துசிவநிசியவ்விரவிடையெச்
சகத்துமுள்ள
பெருங்கருணைச்சுயம்புலிங்கமனைத்தையுமேதெரிசிப்பா
ன்பெரிதுநாடிச்
சுருங்குமிடைக்குறமடந்தைமருவுகுகனதிகவனத்
தொடுசென்றானால். (10)

வேறு

மின்னவிரொளிகூர்செய்யவேற்படைக்குமரனென்னும்
பின்னவன்றனையிகழ்ந்தபெற்றியுஞ்செருக்குநோக்கி

---

10. தெரிசிப்பான் என்பதில்-பான் வினையெச்சவிகுதி தெரிசித்தற்கு என்பதுபொருள்.

முன்னவனென்னுநதநதிமுகததவன்றனைதுதாதை
பொன்னடியனைததுள்வைததுபபுரிந்தனனிடடைமாதோ. (11)

உறறபோனபானிடடையுஞறறுமவேலலைவதன்னிற
கறலைறயஞசடையான்மைநதன்கணடனைகருததிலெங்கும
பற்றுசெஞசோதிவீசப்பறபலகோடிலிங்கஞ
சுறறிடநடுவிற்றோனறுஞசுயமபெனுமிலிங்கமொனறை. (12)

நிடடைவிட்டெழுநதுபோநதுநிகரிலாததனதுதாலை
மட்டவிழ்கமலபபாதமவணஙகிநினறியமபிஞறை
றட்டறுநிடடையாறறிததனதுளததிலடததானகண்ட
கட்டறுசுயமபிலிங்கககாடசியையவனுககமமா. (13)

இயம்பலுங்கேடடதாதையியமபுவானிடடைசெயது
வியன்பெறுகருததினீதானவிபபுறககணடலிங்க
மயன்றிருமாலுங்காண்டறகரியதுனனனபாலநதச
சுயமபிலிங்கததைநிறகுததோறறுவிததனமெனதோனறல. ()

தோமின்மூவுலகததுளளசுயமபிலிங்கங்கடகெலலா
மாமிதுமூலமிநதவருடகுறியுறையுநதான
நாமவிபுகழ்பெற்றோங்குஞானபாசுரமாமநதச
சேமமார்தலததிறசெனறுசிவநிசியதனினமாதோ. (15)

பொருவறுசாமநானகுமபூசனையியறறிநீதான
வருகவென்றுரைததானமிககமனமகிழவுறறுததநதை
திருவடியிலைறஞசிபபோறறிததிசழதருமாகுவெனனக
கருதுவாகனததிலாரோகணமபுரிநதேகினனால. (16)

ஞானபாசுரததிலெயதிநண்ணுநிடடேசபங்கைகத
தூநறுமபுனலின்மூழ்கிததுலங்குருததிராககமபூண்டு

---

13. தட்டு-குற்றம்.
14. வியன்-பெருமை
15. தோம-குறறம.
16. ஆகு-பெருச்சாளி ஆரோகணம ஏறுதல
17. தூ-சுத்தம் மாணம-பெருமை.

மானவெண்ணீறுசாத்திவாய்ந்தநற்பூசைக்கேற்ற
வானநற்பொருள்கள்யாவுமகத்தினாலமைத்துமன்றே. (17)

இடமொடுதனதுதூயசித்தமோர்வழிநிறுத்தி
யிடாறுகளின்மேவுமிலிங்கத்தின்கீழ்பாலுற்று
வடதிசைநோக்கிப்பாரில்வைகியவிலிங்கமெல்லாம்
படிவமொன்றுற்றதென்னப்பாவனைபுரிந்துமாதோ. (18)

மன்னுமத்தலத்தின்மேவுமபானிறவிலிங்கந்தன்னைத்
தன்னுளத்திடைதியானந்தான்புரிந்திருக்குமெல்லை
மன்னுமச்சிவலிங்கத்தின்மருங்குநான்கினுமேசூழ்ந்து
துன்னியேயிருந்தவட்டமாதுலங்குபல்கோடிலிங்கம். (19)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தவளநிறங்கரியநிறஞ்செய்யநிறமுதலாச்
சாற்றுநானாவிதமாகியநிறங்கண்மருவி
நவமுறுவட்டஞ்சதுரமுக்கோணமுதலா
நவிலும்வடிவங்கள்பலபடைத்துமலைமயமா
யுவகையுறுசிலைமயமாயுளத்திலதிசயமே
யுற்றிடுபுற்றின்மயமாயோங்குமணன்மயமாய்ப்
புவனமிசையெவருமிகப்புகழ்தருமண்மயமாய்ப்
பொலிந்தனவற்புதசிவலிங்கங்கள்பலபலவே. (20)

அறுசீர்க்கழிநெடிலடியகவல் விருத்தம்.

விரவுவைடூரியங்கோமேதகம்புட்பராக
மரகதந்தரளநீலம்வயிரமாணிக்கஞ்சோதி
பரவியபவளம்போன்றும்விளங்கினபகரவொண்ணாச்
சுருதிகள்புகழுமேலாஞ்சுயம்புலிங்கங்கள்கோடி. (21)

---

19. இருந்த-வினைமுற்று அன்சாரியை யின்றிவந்தது அம்ம அசை நிலை.

20. நவம்-புதுமை.

வேறு

எவ்வுலகங்களினுமமர்ந்திருந்தபலபலகோடி
யிலிங்கஞ்சூழச்
செவ்விபெறுமவ்விலிங்கத்திடையிருந்தசுவேதலிங்கத்
தினைக்கண்ணுற்றுக்
கவ்வையறவிட்டைபுரிந்தன்பினுடன்முன்னமது
கருத்திற்கண்ட
வவ்வரியவிலிங்கமன்றேயிவ்விலிங்கமென்றுதன
தகத்திலெண்ணி. (22)

கனிவகையுமலர்வகையுங்கமழ்தருசந்தனமுநறுங்
கலவைச்சாந்து
மினியபரிமளதூபதீபமும்பூசனைக்குரிய
வெவையுங்கொண்டு
நனிசிவராத்திரியிலொருநாற்சாமந்தொறுங்கருவை
நகரின்மேவும்
புனிதசிவலிங்கமதைவிதிமுறைநேர்ந்தன்பினுடன்
பூசித்தானால். (23)

சங்கிருக்குங்குழைப்பெருமான்முதற்புதல்வனிவ்வனம்
பூசனையியற்றி
யிங்கிருக்குமேல்வைதனின்மூவுலகத்துளதலங்க
ளெங்குந்தான்சென்
றங்கிருக்குந்தலமுழுதுங்கண்டுசிவலிங்கமொன்று
மவண்காணமற்
கொங்கிருக்குமலர்க்கடம்பன்மீண்டனனுளத்தி
டையாகுலமுற்றம்மா. (24)

மாறனிலாகுலமுற்றச்சிவராத்திரிநாளின்
மருவுகாலாஞ்
சாமமதிற்றிருக்கருவைத்தலத்திடைவந்தடைந்த
னனத்தலத்திலவ்வி

22. செவ்வி-அழகு-கவ்வை-துன்பம்
24 குழை-காது கொங்கு மணம் ஆகுலம் வருத்தம்

யேழுறுபல்கோடிலிங்கத்திடையிலங்கும்பால்வண்
ணவிலிங்கந்தன்னைச.
காமருபூசனையியற்றுமுனைவனைபபின்னவன்று
ன்கணுற்றானே. (25)

வண்டுமுரலகடம்பணிதோடகுமரவேணமுன்னவனை
மகிழ்ச்சிகூர
கண்டுமிகவுயர்ந்தவனைப்பிரனுநமறுதலையனெனக்
கருத்திலெண்ணை [க்
கொண்டுசெருசெய்தழிந்தயபுரியெனுமத்தலத்தினிடை
குலவிவாழு
மெண்டகுபாலவண்ணலிங்கந்தனைப்பூசித்திடநினை
ந்தானித்தபதத்தமமா (26)

ஆய்ந்தசிவாகதிரியோராசமுளதின்னுமென்னு
மமயர்ந்தன்னில
வாய்ந்தபெருங்குணநிதியாங்கணபதியையன்பொடுமு
ன்வணங்கிப்பூசை
கேய்ந்தபலவனகபொருள்கொண்டிரவியெழுந்திடு
ங்காறுமிருந்துநூலபோற்
றேய்ந்தவிடைககுறமடநலைதசேர்குமரப்பெருமான்பூ
சித்தானமண்ணே. (27)

வேறு

இன்னணங்குமரவேளுங்கயமுகத்தெந்தைதானும்
பன்னருஞ்சிறப்பிற்பூசைபரிவுடனியற்றுங்காலை
யுன்னுமங்கவர்செய்பூசைசுவந்தருட்குறியினின்று
மின்னவிர்சடிலத்தெம்மான்றோன்றினன்விடையின்மீது. (28)

---

26 முரலல்-ஒலித்தல் என்னேன்னுமுதனிலை செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமாய் நின்றது

27 அமயம்-காலம் காறு அளவு

கையின்மான்மழுவுங்காளகண்டமுமொருமுக்கண்ணுஞ்
செய்யவேணியுமெண்டோளுந்திருமுகாம்புயமோரைந்து
மெய்யிலோர்பாகந்தன்னின்மிளிர்பசுங்கொடியுந்தோன்றத்
துய்யநற்புதல்வர்முன்னேதோன்றிநின்றனனெம்மாதோ. (29)

மைந்தர்காள்வேண்டின்வேண்டும்வரநமக்களித்துமீங்குச்
சிந்தையினுவந்தோநீவிர்செய்தபூசனைக்கென்றோதத்
தந்திமாமுகத்தெம்மானுந்தனிச்சுதிர்வடிவேலேந்துங்
கந்தநாயகனுந்தந்தைகழல்பணிந்தியம்புவாரால். (30)

அத்தவித்தலத்திலெய்தியநட்சிவநிசியிற்றூய
சித்தமுற்றிவ்விலிங்கத்தெரிசனஞ்செய்தோர்யார்க்குஞ்
சுத்தமூவுலகத்துள்ளசயம்புலிங்கங்கள்யாவும்
பத்தியிற்றெரிசித்தேத்துபலனினைத்தருகவென்றார். (31)

வேறு

அந்தவரமவர்க்கருளியெம்பெருமான்பின்னருமங்
கவரின்மூத்த
கந்தமதகயமுகத்தோன்றனைநோக்கிமைந்தவுனைக்
கருதினோர்க்குச்
சிந்துபுடைசூழுலகத்திடைச்சருவகாரியமுஞ்
சித்தியாகுஞ்
சந்ததமாதலினுனக்குச்சித்திவிநாயகனெனும்பேர்
தந்தேமென்றான். (32)

முருகனெனுமிளங்குமரன்முகநோக்கிமகிழ்ந்துலக
மூன்றுஞ்சென்று
கருதரியவவ்வுலகங்களிலுளலிங்கங்களெலாங்
கண்டுபோற்றி
வருகுவலோரிரவிலெனமனவிரத்துடனேகி
வந்தவாற்று

---

32 சிந்து-கடல் சந்ததம் எப்போதும்
33 வருகுவல்-உயர்திணையாண்பாலொருமைத்தன்மை யெதிர்
கால வினைமுற்று வருவேனென்பது பொருள்.

லொருபெயர்தந்தனம்வீரசன்முகனென்றெனவுரைத்தா
னுவமையில்லான் (33)
எனவுரைத்ததந்தைதனைப்பிறைஞ்சிவடிவேற்குகவே
ளிசைப்பானெந்தாய் [று
மனதிடையோரையமெனக்குளதஃதென்னெனின்மூன்
வையஞ்சென்றங் [ர
கனமருவுமிலிங்கமொரவறங்கண்டிலனென்முன்னுதித்தே
ன்கண்டுபூசித
தனிவன்மலிங்கமதைப்பதுவிதற்கெவனெனக்குச்
சாற்றுவென்றான். (34)

ஐயமறவிவ்விலிங்கமோருமதுவடிவமென
வறிவுறவுறந்து
கையனையன்பொடுபூசித்ததனுவிதல்தக்க

றய்யவவனிலுமுயர்ந்தோனென்றுசெருக்குற்றதனாற்
றுலங்குமூன்று
வையமேலற்றினுந்தேடிக்கண்டிலையாலேதுவிது
மதலாயென்றான். (35)

திருத்தகுமூவுலகனைத்துந்தேடியுங்காணுமலுளங்

வருத்தமடைந்தமைபுணர்ந்துகாட்டினமித்தலத்திடை
யிம்மாலிங்கத்தைத்
கருதவினைநள்கரந்துதினைகொளனவுரைத்துப்பின்னவெரா
னறுகழறுவானுற
பருத்தவரைச்சிலைப்பெருமான்றனதிருநற்புதலவ
னையும்பார்த்துமாதோ. (36)

---

34 பூசித்தனன்-உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கையிறந்தகாலவினைமுற்று பூசித்தானென்பது பொருள்.

கலித்துறை.

செம்மைசேர்தெரிசனமுமக்களித்தனஞ்சிறிது
மும்மைசேர்பவரொருவருமிலையெமையலலான்
மும்மைமாநிலத்திடையெனமொழிந்துருக்கரந்தா
னெம்மைநாடொறுமன்பொடுபுரந்தருளிறையோன். (37)

பதிகுமரன் பூசித்தசருக்க
முற்றிற்று.

ஆகச் சருக்கம்-13க்கு-விருத்தம்-441.

எட்டாவது

## சிவராத்திரிவிரதவியல்புரைத்தசருக்கம்.

அறுசீர்விருத்தம்.

நற்றவமகலாத்தூயநைமிசாரணியந்தன்னி
லுற்றமாமுனிவர்கேட்பவுயர்சிவநிசியின்மேன்மைப்
பெற்றிகளனைத்துமந்தப்பெரும்புகழ்க்கலைகள்யாவுங்
கற்றுணர்சூதன்சொன்னகதைசிறிதெடுத்துச்சொல்வாம். (1)

கலிவிருத்தம்.

சீதமாருவரிசூழ்செகமெலாம்புகழ்தருஞ்
சூதமாமுனிபதந்தொழுதுமாபதியெனு
நாதன்மேலன்பறுநைமிசாரணியம்வாழ்
வேதமாதவரெலாம்வினவுவாரொன்றரோ. (2)

சீலமேபெறுதிருச்சிவவிராவிரதமே
மேலதாந்தூயமாவிரதம்யாவற்றினுந்
தாலமீதென்றுநீசாற்றினுய்மேலதென்
றேலவேபகருதற்கேதுவென்னென்றனர். (3)

ஏதுவென்னென்றமாமுனிவருக்கினிதுவந்
தோதுவன்சூதன்முன்னொருதினந்தனினறுந்

தாதுறுந்துளவனுஞ்சதுமறைக்கிழவனுங்
காதுவெம்போர்செய்தார்கருவமேலிட்டோர்.. (4)

விண்ணுளோர்யாவரும்வெருவுறக்கொடியபோர்
பண்ணுமவ்வேலையிற்பைங்களாநீழல்வா
முண்ணலங்கவர்செருக்கினையடக்குதுமென
வெண்ணினன்றனதுநற்றிருவுளத்திடையரோ. (5)

எம்பிரானவ்விலிங்கத்தினின்றெரியழற்
றம்பமாய்நின்றனன்சாருமோர்நாளிடைக்
கும்புடன்றோன்றுபல்கோடிசூரியரெனப்
பம்புசெஞ்சோதியெவ்வுலகமும்பரவவே. (6)

அறுசீர்விருத்தம்.

கடிகமழும்பசுந்துளவத்திருமாலுமலரயனுங்
　　கண்ணுற்றாங்கே
யடிமுடிதேடினர்காணாதுளமயர்வுற்றிருந்தனரா
　　லந்தவேலை
பொடியணியுந்திருமேனிப்புனிதனவர்க்கெதிரிமை
　　யோர்புடைசூழ்ந்தேத்த
நெடியதிருவருள்சுரந்துசயவடிவதொடுதோன்றி
　　நின்றானமன்றே. (7)

நின்றதனிப்பரம்பொருளவ்விருவரையன்பொடுநோக்கி
　　நீர்தாமிங்கே
யின்றுதுயிலுணவுதவிர்ந்தெமதுதெரிசனம்பெறலா
　　லிற்றைநாட்போர்
நன்றிபெறுசிவநிசியாமித்தினத்தின்மாவிரத
　　நயந்தோர்யாரு
மொன்றுவரெப்பாவமுந்தீர்ந்துயர்வுறுசாயுச்சியமென்
　　றுரைசெய்தானால். (8)

---

5. எனு-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்று என்பது பொருள்.

ஆதலினாலிச்சிவராத்திரிவிரதமிகச்சிறந்த
தனைத்தினுள்ளு
மாதவத்தீரிவ்விரதந்தனையனுட்டித்திடுமியல்பும்
வழுத்தக்கேண்மி
னோதுமுதனாளடியிலொருவேளையருந்திமன
வொருமையுற்றுத்
தீதில்சிவராத்திரியாமத்தினத்திரவிலெழுந்
திடுமுன்மாதோ. (9)

பத்தியுடனேயெழுந்தாகமவிதியினைப்படிந்தியிற
. படிந்தமேலாஞ்
சுத்திகொள்வெண்பொடிதிரிபுண்டரமாகத்தரித்துமிகத்
துலங்குமெய்யிற்
சித்தியளித்திடுமுருத்திராக்கமணிந்துணவொடுங்கித்
திரையகற்றி
யத்தினமற்புதமூலமானசிவலிங்கமதையா
தன்மாதோ. (10)

புற்றுமண்சோமயமுதலாகியலிங்கங்களையாதல
பூசித்தேயன
புறமபிடேகம்புரிந்துகுங்குமஞ்சந்தனங்களப
மொளிருந்தூய
நற்றனிமாமலர்கனிமணநூந்தூபதீபமுத
னவிலத்தக்க
மற்றெலவாபுங்கொடுசதுர்ச்சாமந்தொறும்பூசித்திடுக
மகிழ்ந்துமன்னே. (11)

வருமறுநாடனிலருணோதயகாலம்புனல்படிந்து
மறுத்தீர்த்திய

---

9. அடிசில்-சோறு.
11. கொண்டென்பது-கொடுவெனநின்றது செய்யுள் விகாரம்.

கருமவனுட்டானமுடித்துண்ணுமாதந்தொறுமுட்
கனிந்திவ்வண்ணந்
தருபுனிதவபரபக்கச்சதுர்த்தசியிற்செயும்விரதந்
தனையிப்பாரிற்
பொருவருங்கேவலசிவராத்திரியெனத்தேர்ந்திடுபெரி
யோர்புகலுவாரால. (12)
மதிதொறுமிவ்விரதமனுட்டித்தலரிதெனிலோர்
வருடந்தன்னிற்
றதிமருவுகும்பரவியபரபக்கச்சதுர்த்தசியிற்
கூறுமிந்த
விதிபெறுநலவிரதமனுட்டித்தவாலவேண்டுமிந்த
விரதந்தன்னை
யெதிராமகாசிவராத்திரிவிரதமெனப்புவியி
லிசைப்பர்மேலோர். (13

வேறு

செப்புசிவராத்திரிவிரதஞ்சிரத்தையொடு
வற்சரந்தோறு
மிப்புவியின்மீதனுட்டிப்போரெல்லாவிரதப்
பலனுமுற்றுத்
தப்பின்மனத்தானினைத்தவெல்லாந்தாமேயெய்தி
மறுமைதனி
லொப்பில்சிவசாயுச்சியமென்றுரைக்கும்பதமும்
பெறுவாரால். (14)

உவரார்கலிசூழ்புவியின்மிசையுயர்வானுலகத்
திமையவராற்
றவாற்புகழுமிவ்விரதந்தன்னையனுட்டித்
திடுதலின்றிச்

14. வற்சரம்-வருடம்.

சிவராத்திரியென்றுரைத்திடுமித்தினத்திலனத்தைப்
புசிப்பவர்தா
மெவராயினுமற்றவரோகாயிலைதச்சிதனையுண
டவராவார். (15)

கலித்துறை

சிறப்புறுஞ்சிவராத்திரியெனுந்தினத்தின்மாவிரத
மறப்பிலாமலன்புடனனுட்டித்திடுமாட்சி
யுறப்பெறுதவர்பிறப்புநீருலகிடையெந்தப்
பிறப்பினுமடையப்பிறப்பெனப்பேசுவர்பெரியோர். (16)

சிவராத்திரிவிரதவியல்புரைத்த சருக்கம்.

முற்றிற்று.

ஆகச சருச ப-14-சகு-விருத்தம்-457.

ஒன்பதாவது

## பஞ்சலிங்கதெரிசனம்பெற்ற சருக்கம்.

தீ.— கலிவிருத்தம்

நற்றுழாயணிநாதனுமவேதனுங்
கற்றைவார்சடையீசன்கருணையா
லுற்றபஞ்சலிங்கதனைதயுணர்ந்திடப்
பெற்றதோர்கதைபேசுதுமயாமரோ. (1)

வேறு

முந்தையொருநாளதனின்முண்டகநறும்பூ
வுந்தியிடைவந்துலகம்யாவையுமொருங்கே
தந்தபிரமன்றனியிருந்துநனிதானே
சிந்தையறவொன்றுளநினைந்தனன்வியந்தே. (2)

பங்கமறுமிப்புவிபடைக்குமுனிருந்த
தெங்கெவனிருந்துபினர்வந்ததிதுவென்று

சங்கையுறுநெஞ்சமொடுசார்ந்தனனறம்பூ
மங்கைபுணர்செங்கணெடுமாதவனிடத்தே. (3)

காமருபயோததியிடைப்பருவகால
மாமுகில்படிந்ததுகிடந்ததெனவைகித்
தாமரைநெடுங்கண்வளர்கின்றபுனிதன்றன்
மாமலரடித்துணைவணங்கியுரைசெய்வான். (4)

எண்சீர்விருத்தம்.

சநித்ததிரைப்பாற்கடலிலியாவுமோர்ந்து
கண்வளரும்பெருங்கருணைக்கடலேயிஞ்ஞான்
றநித்ததெனவுளதநின்னிடையையமொன்றென்
னுளத்துறுமவ்வையமனைத்தையொழிக்கும்வண்ண
மதித்துனதுசன்னிதிவந்தடைந்தேனிந்த
வையகமெவ்விடத்திருந்துவந்ததான்முன்
விதித்தவனீதிருந்ததுதானெங்குநன்கு
விளங்கவெனக்கருள்புரிதல்வேண்டுமென்றான். (5)

கலிப்பா

மெய்யுற்றவேதன்விளம்புமொழிதான்கேட்டு
மையுற்றமேனியுடைமாதவனப்போதுநின்போ
லையுற்றநெஞ்சேனறிந்திலேன்யானுமினிப்
பையுற்றபூணணிந்தோன்பாலுற்றிடுதுமென்றான். (6)

கன்றால்விளவின்கனியுகுத்தமாயவனுங்
குன்றுமணங்கமழ்செங்கோகனகப்புத்தேளுஞ்
சென்றொருநால்வருக்குபதேசித்திடுவா
னன்றாலிருந்தோனமர்கயிலைநோக்கியரோ. (7)

பொங்குபுகழ்விண்ணோர்புடைசூழ்ந்தினிதிறைஞ்ச
விங்கிதயாழ்வல்லோரிசைத்தேன்செவிமடுப்பப்

---

3. சங்கை-சந்தேகம்.
4. காமர்-அழகு. சாரியையிடைச்சொல்-பயோததி பாற்கடல் முகில்-மேகம்.

பங்கமீறவெவ்வுலகுமீன் றபசுங்கொடியோ
டங்கயிலைவீற்றிருந்தவண்ணலைக்கண் ணுற்றனரால். (8)

போற்றினார்சென்னிபுனைந்தாரடிமலரை
யேற்றினான்பைத்தமதுமனதெண்ணமதைச்
சாற்றினானோர்தமைநோக்கிநுங்கருத்தைத்
தேற்றுவாம்பின்னரொன்றுகேண்மினெனச்செப்புவனால்.

சித்துருவமாபுரமென்றோதுந்திருத்தலத்திற்
பத்தியுடனெய்திப்பசுபபூங்களாவனம்வாழ்
விதகரமாலிங்கமதைவேண்டியிரப்பூசைபுரிந்
தத்தலமீருற்றிடுமின்சின்னாளெனவறைந்தான். (10)

அறுசீர்விருத்தம்.

சிந்தையினுவகைகூர்ந்துதிருநெடுஞ்செங்கண்மாலுங்
கந்தமார்செய்யபூம்பங்கயத்தவிசுறையுந்தேவு
மந்தமாதலத்திலெய்தியருட்சிவலிங்கந்தன்னைப்
புந்தியன்பொடுபூசித்துப்போற்றியங்கிருந்தார்சின்னாள். (11)

தேன்றிகழ்மலர்ப்பூஞ்சோலைச்சித்துருநகரத்தன்னோ
ரேன்றபத்தியினாற்பூசித்தினனமிருக்குங்காலை
யான்றமூவுலகுமீன்றவதுலசுந்தரியினோடு
தோன்றினனவர்முன்னந்தச்சோதிலிங்கத்தினின்றே. (12)

கலிவிருத்தம்.

பாடினார்நற்பரவசமாகநின்
றாடினார்மனத்தன்பிற்புளகமெய்யம்
மூடினாரிருமுண்டகத்தாள்சிரஞ்
சூடினார்மெய்த்துதிபுரிந்தாரரோ. (13)

பூங்களாநிழற்புங்கவனப்பொழு
தோங்குமிப்புவிக்கோர்முதலாகிய
பாங்குசேர்திருப்பஞ்சலிங்கங்களை
யாங்கவர்க்குமெய்யன்புடன்காட்டுவான். (14)

## அறுசீர்விருத்தம்.

மருவுதென்றிசையிற்புன்னைவனத்துறுமிவ்விலிங்கம்
பிருதிவிலிங்கமப்பிலிங்கமாம்பிரவனத்து
னிருதிதிக்குறுமிலிங்கநிகரிலாத்தேயுலிங்கங்
கருதரும்புகழ்சேரிந்தக்களாவனத்துறுமிலிங்கம். (15)

வாயுவின்றிசையில்வில்வவனத்துறுமிவ்விலிங்க
மேயுறற்புகழ்கூர்வாயுலிங்கமாதாகுமிந்தத்
தூயசீர்வாயுதிக்கிற்றோன்றுமிப்பலாசக்கானி
னேயமுற்றுறையுமிலிங்கநிகரிலாகாயலிங்கம் (16)

காதலிற்காண்டியென்றுகாட்டினனுரைப்பானிந்த
மேதகுபஞ்சபூதலிங்காலயங்களையெல்லா
மாதியிற்றோன்றுமிந்தவைந்திலிங்கத்தினின்றிங்
கோதியவிவற்றினுள்ளேயொன்றதுபந்தத்தினைமாதோ. (17)

செப்புமற்றையலிங்கங்கள்சித்துருவானவிந்த
வொப்பறுசோதிலிங்கத்தனிமுத்திதந்திடுமொடுங்குந்
தப்பறுமுதலிலீற்றிற்சாற்றுமிவ்விலிங்கந்தானே
யெப்புவிகளுக்குமூலமெனவுணர்ந்திடுகமாதோ. (18)

என்றுதானெம்மான்கூறவிருந்தமதிநெஞ்சத
தோன்றியேயெழுந்துபொங்குமுவகையங்கடலுண்மூழ்கி
மன்றவக்கடலுக்காங்கே [illegible] வாசக்
கொன்றையஞ்சடையான்பொற்றாள்பணிந்திதுகூறலுற்றார். ( )

காதலித்தலத்திற்போந்துநாமிருந்தேமிங்கு
மேதகுஞானம்பெற்றேம்விளம்புதற்கரியபொல்லாப்
பாதகமொழியுமிந்தப்பதியிடையடைந்தோர்யாருங்
கோதறுஞானமெய்தத்திருவருள்கொடுத்தியென்றார். (20)

---

15. ஆம்பிரவனம்-மாவனம்.
19. மன்ற-தேற்றப்பொருளுணர்த்திநின்ற தோரிடைச்சொல்.

நிரந்தவன்னவருக்கந்தவரமதையினிதுநல்கிக்
காந்தனவிருந்தானந்தக்கருணைமாவிலிங்கந்தன்னு
ணிரந்தரமடியார்தங்கணெஞ்சிடைவைகியன்னு
ரரந்தைநோயகற்றிக்காக்குமதுலசுந்தரியோடம்மா. (21)

## எண்சீர்விருத்தம்.

தக்கபெருந்தவமுடையீருரைததுமின்னுந
தனிக்களாவனப்பெருமான்சரிதங்கேண்மின்
றெக்கணதிக்கினிலரையோசனைத்தூரத்திற
திகழ்நாகசுனையெனுநற்றீர்த்தமேவு
மிக்கசெழுமபுன்னைவனத்திடைமாலோடு
விளங்குருவந்தெரிசிப்பான்விரும்பிமுன்னாண்
முக்கணுமையவண்முனிவர்சங்கபத்மர்
முதியவருந்தவமதனைமுயலுநாளில். (22)

அங்கவர்செய்பெருந்தவத்துக்கிரங்கியேதா
னருமைபெறுதனதுதிருவுருவந்தன்னிற்
செங்கமலவிழித்திருமால்வடிவங்காட்டிச்
சிந்தையுவந்திடக்கருணைசிறப்பநல்கிப்
பங்கமில்கோமதியெனும்பேர்படைத்துமேவும்
பசுங்கொடியினொடுகருவைப்பதிப்பால்வண்ணன்
சங்கரநாரணனெனும்பேரதனைப்பூண்டு
தனிப்பிருதிவிலிங்கமெனத்தானுற்றனல். (23)

திருவுலவுமித்தலத்தினிருதிதிக்கிற்
சிவகங்கையென்னுமொருதீர்த்தத்தோடு
மருவுமுக்கால்யோசனைத்தூரத்திற்சூத
வனமெனுமோர்தலமுளதம்மாதலத்திற்

---

21. நிரந்தரம் எப்போதும்-அரந்தை துன்பம்.
22. உரைத்தும்-சொல்வோம் தும்விகுதியெதிர்காலங்காட்டி னறது.
24. சூதவனம்-மாவனம்.

பொருவறுசேரலன்வளவன்வழுதியென்னும்
புகழ்பெறுமூவேந்தருமோர்போதுதங்கள்
பெருவளநாட்டெல்லைகாரணமதாகப்
பெருஞ்சமரம்புரியநினைந்திடுமந்நாளில். (24)

அவ்வரசர்தமக்குநடுநிலைமைதானுற்
றருளுடனவ்வெல்லைவழக்கதுதீர்த்தன்றோர்
வெவ்வியதோரிகலகற்றிப்புரந்தவாற்றான்
மேன்மையுறுமத்தியத்தனெனும்பேர்பெற்றுச்
செவ்விதிகழகிலாண்டேசுவரியென்னுந்
திருநாமம்படைத்தபராதேவிதன்னோ
டெவ்வுலகும்புகழ்தருமப்பிலிங்கமாக
விருந்தனன்பல்வரமடியார்க்கீந்துமாதோ. (25)

இலகுபெரும்புகழ்பரவுமவாயுத்திக்கி
லின்பமுறுமோரைந்துகுரோசந்தன்னில
விலகருஞ்சீர்வில்வவனமென்றுகூறும்
விசேடதலமொன்றுளதால்விளங்குமந்தத்
தலமதின்முப்புரவசுரர்தம்மைவென்று
தங்குமயர்வறவாயுலிங்கமாக
வுலவுதிரிபுரத்தீசனெனும்பேர்பெற்
றமர்ந்திருந்தான்சிவபரிபூரணியோடம்மா. (26)

சீருறும்வானவருமுனிவரும்பலகோடி
சித்தரும்வந்தனுதினம்பூசித்துப்போற்றும்
பேருளவவ்வில்வவனத்தலத்தின்வாயுப்
பெருந்திசையிலோரைந்துகுரோசந்தன்னிற்
கோரைநதிதேவிநதியெனப்பேர்வாய்ந்து
குலவுமிருநதிநடுவிற்குறைதீர்மேன்மை

---

26. குரோசம் கூப்பிடுதூரம் ஆல்-அம்மா இரண்டும் அசைநிலையிடைச்சொற்கள்.

சாருமெழிற்பலாசவனமென்றுந்தேவ
தானமென்றுங்கூறுகின்றதலமொன்றுண்டால். (27)

தேவியுமைபண்டொருநாட்டன்னைநோக்கிச்
செய்ததவத்தினுக்குவாஞ்சிறப்பநல்கிக்
காவிரிநன்னாடனுயர்வழுதியாவி
கவரும்வகையுய்த்தவிடக்கலையைநீக்கி
மாவியனச்சாடைதவிர்த்தவனென்றோது
மாண்புறுபேர்தரித்துவெளியிலிங்கமாகத்
தாவில்புகழ்மேவுதவம்பெற்றாளொன்னுந்
தையலுடனிருந்தனனத்தலத்தின்மாதோ. (28)

கிருபைநதிமுதலியபன்மூன்றுதீர்த்தக்
கிளர்பெருமைவாய்ந்துவிராட்டினுக்குமேன்மை
மருவுசுழிமுனைத்தானமாகியோங்கு
மகிமைபெறுமிக்கருவைத்தலத்திலென்றும
பொருவறுமொப்பனையெனுமம்பிகையினோடு
புவியனைத்தும்புகழ்தேயுவிலிங்கமாகத்
திருவடிவந்தனைக்கொடுவீற்றிருந்தானெம்மான்
சீர்த்தியுரைத்திடவல்லார்செகத்தில்யாரோ. (29)

பஞ்சலிங்கதெரிசனம்பெற்றசருக்கம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 15-க்கு விருத்தம்-486.

---

28. விடம்-நஞ்சு கலை ஆடை நஞ்சு ஆடை நச்சாடையென நின்றது.

பத்தாவது

## பாலவண்ணர் திருநாமமுண்டான சருக்கம்—தி,

### அகவல் விருத்தம்.

கருப்புவின்மதனைக்காய்ந்தகண்ணுதற்பெருமான்றன்னை
விருப்புடன்பரவியேத்தும்வியன்கலிக்காகமுன்னாள்
மருப்பொலிகளாவனத்தில்வயங்குபாலவண்ணனென்னுந்
திருப்பெயர்படைத்தகாதைதெரிந்தவாறெடுத்துச்சொல்வாம்

காதலிற்சுரரும்யாமுங்கடலைகடைந்ததனிற்றோன்றுங்
கோதறுமமுதெமக்குக்கொடுத்திலர்தாமேயுண்டு
மாதிரத்திமையோர்நம்மைவஞ்சித்தாரெனவன்றோர்பான்
மோதமர்புரிவான்சென்றார் மூதூனுடையவுணரெல்லாம். (2)

சென்றுபலகாலம்வெம்போர்செயதனிலிமையோர்தம்மை
வென்றிலர்சமஞ்செய்துபின்னையிளைத்தனரேயன்றிக்
கன்றியமனத்தராகிக்கடவுளர்தம்மைவெல்வ
தொன்றியவுபாயம்யாதெனவுளத்திடைநினைத்தார்மன்னோ ()

ஓங்குநங்குரவன்றன்பாலுற்றுநாமுரைத்துமென்னி
னீங்குநங்குறையீதல்லானினைவுவேறிலையென்றன்னி
யாங்குநற்புகர்பாலெய்தியவனடிக்கமலஞ்சென்னி
தாங்கினருரைக்கலுற்றார்தம்மனக்கருத்தைமாதோ. (4)

எம்மைவஞ்சித்துமுன்னம்பின்னமுதுண்டவாற்று
லம்மவென்றனரவ்வானோர்தோற்றனமவர்க்குநாமால்
வெம்மைசேர்சமரிலந்தப்பகைஞராய்மேவும்விண்ணோர்
தம்மையாம்வெல்வானையதண்ணருள்புரிதியென்றார். (5)

அங்கவர்தம்மைநோக்கியறைகுவன்றவத்தினாலோர்
பொங்குபாற்றடமமைத்துமக்கப்பால்பொருந்தவூட்டித்
துங்கவெஞ்சமரிலந்தச்சுடர்முடியிமையோராற்றல்
சிங்கலுற்றழியும்வண்ணந்திறனுமக்களித்தும்யாமால். (6)

---

6. ஆற்றல்-வலிமை. சிங்கல்-கெடுதல். அளித்தும்-கொடுப்போம்.

திடமொடுநீவிர்சென்றுதிருத்தவம்புரிதற்கேற்ற
விடமதுனோர்க்கிவமயினெனவுரைத்திடலுமன்றோர்
புடவியெங்கணுமேதேடிப்பொருந்துறுமிடமீதேயென்
றடர்களாவனத்தைநோக்கியாங்குவந்துரைத்தார்மன்னோ. (7)

தள்ளருந்திறல்கூர்வெய்யதானவருரைக்கக்கேளா
வுள்ளுவந்தவரோடந்தவுபர்களாவனத்தையெய்தி
யொள்ளியகருணைச்சோதியிலிங்கத்தின்முன்னருற்று
வெள்ளிசெய்தனனற்பன்னாண்மிக்கநற்றவந்தான்மாதோ. (8)

வேறு

கொடியபெருந்திறன்மருவுமவுணர்திருமுடியின்மிசைக்
கொள்ளுஞ்செய்ய
கடிகமழ்பங்கயசரணக்குரவனெனப்புகழ்பெறுமக்
கவிதான்செய்யு
நெடியபெருந்தவமதனான்மகிழ்வுறவந்துதித்ததவ
ணிகரின்மேன்மைப்
படிபுகழும்படிகிரணம்படியுமணிப்படியுடனோர்
பாற்றடாகம். (9)

சாற்றுறுமவ்வேலைமகபதிமுதல்வானவர்முன்னந்
தமக்குப்போரிற்
றோற்றதயித்தியரமரிற்சயம்பெருவான்றவம்புரிந்து
துலங்கவாங்குப்
பாற்றடமொன்றமைத்தனனவ்வவுணர்குருவெனக்
கடல்சூழ்பாரில்யாரும்
போற்றுதவமுனிவரெலாம்புகழ்தருநாரதமுனிவன்
புகலக்கேட்டார். (10)

அடலுறுமவ்வவுணர்குருவரியபெருந்தவமியற்றி
யதனால்வந்த

---

8. கவி-சுங்கன். புக்ர்-சுக்கிரன். குரவன்-ஆசான்.

தடமதனினிறைந்தபயந்தனையவுணர்நுகர்வரெனிற்
சமரஞ்செய்வான்
றிடமொடுவெந்திடுவரவர்தமையாம்வென்றிடலரிதென்
செய்வேமென்று
கடவுளர்யாவருமனதிற்கவலைநனியடைந்து
திருக்கயிலைபுக்கார் (11)

பயிலுமொருநான்மறையுங்காணரியமங்கைமிகப்
படைத்தநீல
மயிலொடுபொன்மலையொருவெண்மலையின்மிசை
யிருந்ததெனமாலில்லாமேவார்
கயிலைதனில்வீற்றிருந்ததனிப்பொருளையுளத்தொடு
கண்களிப்பக்கண்டு
வெயிலவிர்பொன்முடிமிசையவ்விறைவனடித்துணை
மலரைவிரும்பிச்சூடி (12)

படர்திரைவாரிதிவிடமுண்டமைப்புரந்தவாரமுதே
பன்னூலாயுந
தொடர்பரியதனிப்பொருளேசுகநிலையேகுணமலையே
தொண்டர்யாரு
மிடரொனுமக்கடலில்விழாதெடுத்தாண்டவருட்கடலே
யெனறேங்கா
வடர்பவநோயினையகற்றுமருமருந்தேயெனத்துதி
செய்தறைவர்யாதோ (13)

கலிப்பா

தூயதவஞ்செய்துபுகர்தோற்றுவித்தான்பாற்றடமொன்
றுயதடத்தின்பாலருந்துவரேல்வாளவுணர்
தீயசமராற்றிச்செருப்பாரெமைக்கருணை
நாயகவுன்றனேசரணமெனநாமடைந்தேம் (14)

---

11. புக்கார்-என்பதன் முதனிலை விகாரபட்டு இறந்தகால முணர்த்திநின்றது புகுந்தாரென்பது பொருள்-பயம்-பால்

என்றமரர்கூறவிறையோனதுகேளாக்
குன்றனையதிண்டோளவுணர்கொடுஞ்சமரால்
வன்றுயரெய்தாமேபுரத்தும்யாமவானவர்காள்
சென்றிடுமினும்முலகென்றெமபெருமான்செப்பினான் (15)

எம்பெருமான்சொன்னமொழிகேட்டிதயமகிழ்ந்
தும்பர்செழும்பொன்னுடைநாடருவந்ததன்பின்
னம்புயமைமையோர்தங்குறைமுடிப்பானங்கையமர்
செம்பவளமெய்யானினைத்தான்றிருவுளத்தில் (16)

பத்தர்பணிந்தேத்தும்பசுபதீங்களாவனை
சுத்தமுறுஞ்சோதிச்சுயம்பாமருட்குறிநின
றுத்தமஞ்சேர்திவ்யவொருபுருடனபோலெழுந்து
புத்தமுதவாவியிடையேபுகுந்தனனால் (17)

அங்கதனிற்றோய்ந்தெழுந்தானவ்வேலையெம்பெருமான்
பங்கமிலாமேனிவிளங்கியகாற்பான்மயமாய்த்
துங்கமுறுமத்தீஞ்சுவைப்பாற்றடமதுதான
றங்குமொருநன்னீர்த்தடமாயிருந்ததுவே (18)

தெள்ளுதிரைப்பாற்கடலின்முனனோர்தினமதனி
லொள்ளியவெண்டிங்களுதித்தங்கெழுந்ததுபோற்
றள்ளரியமேன்மைத்தடத்தினிடைதானமூழ்கி
வெண்ணைவடிவத்தோடெழுந்தான்வெளிப்படலும் (19)

கலிவிருத்தம்.

சீர்த்தவத்தால்வருசிறந்தபாற்றட
நீர்த்தடமானதுநிகரில்பாலினாற்
போர்த்தமெய்யுடனொருபுருடனிற்பதும்
பார்த்தனன்சுங்கனோர்பார்வையாலரோ (20)

நோக்கியப்புருடனைநொய்தினிங்ஙன
மாக்கினனிங்கிவனுவிசென்றிடத்

தாக்குறுமிவனையாமெனு முதன்மனத்
தாக்கினனெழுந்தனனோடினனரோ (21)

தாங்கருஞ்சினத்துடன்றன்னைத்தாக்குவா
னோங்குவந்திடுமவறகன்றியோடல்போற்
றீங்கலப்புறுடலுஞ்சிறிதுவேகமா
யோங்குமக்களாவனைநோக்கியோடினன் (22)

ஈடினன்மறைப்பிராணிங்ஙனோடலு
மோடினன்பின்றொடர்ந்துசனனைகண்டிலன்
றேடினனெங்குமவன்சென்றுளானென
வாடினனக்களாவனத்தினிறம்போர (23)

அக்களாவனத்திடைப்பிலனாரன்னவன்
றொக்கவெணகலமதிரிகருஞ்சோதிகூ
மிக்கநலவடிவொடுவிளங்கத்தோன்றுறுந
தக்கவோருடற்றிறந்தனைக்கண்டானரோ (24)

ஆசிரிய விருத்தம்.

வாய்ந்ததவத்தால்வருபாற்றடமதனி
லொருபுறடனவந்துபுகுத்
தோய்ந்தனபாலவடிவமுடனெழுந்து
களாவனமபுகுந்தான்றொடர்ந்துந்தோனு
தேய்ந்தவனத்திடைமறைந்தனபானிறமு
ற்றருட்குறியொனறிருந்ததிங்கே
பாய்ந்தபுனற்றடமாயிற்றத்தடங்கா
ரணமெவனெனறையுற்றானால (25)

இங்கிதனைத்திடைபுரிந்தறிதுமெனக்
கருதுயஃதியற்றுங்காலைப்
பொங்குதிறற்புருடனெனப்போந்துபாற்றட
த்தினிடைபுகுந்துவாவி

23. ஈடு-உவமை, உசனன்-சுக்கிரன், அரோ-அசைநிலை

தங்குபயங்கவர்ந்துகளாவனத்திடையி
வ்வருட்குறியாய்ச்சயிலப்பாவை
பங்குறுமெம்பெருமானையிருந்தனனென்
றறிந்தனனப்பளிங்குமாதோ (26)

கலிவிருத்தம்.

இனிதங்குணர்வுற்றவனெய்தியவோர்
புனிதமபெறுமற்புதலிங்கமதைப்
பனிதங்கியபன்மலர்கொண்டுபெருந்
தனியன்பொடுபூசனைசெய்தனனால் (27)

இயல்போடுதனிக்கவியிங்ஙனமங்
குயர்பூசையுஞற்றியபோதொருநா
ளயன்மாலறியாதவெமானவன்முன்
சுயமாவடிவத்தொடுதோன்றினனே (28)

எங்குந்திகழெம்பிறைதோன்றலுமே
பொங்குந்தனியன்பொடுகண்டிமையோர்
பங்கன்பதபங்கயமாமலரைச்
சுங்கன்பரவித்துதிசெய்தனனே. (29)

துனிதீரருமைச்சுருதிப்பொருளே
கனியேயமுதேகருணைக்கடலே
பனிமால்வரையீன்றபசுங்கொடிசேர்
தனிமாமுதலேசரணஞ்சரணம் (30)

கொலைவாரணமாவுரியாய்குளிர்வெண்
கலைவாண்மதிசேர்சடையாய்கனமா
மலைவார்சிலையாய்வரதாவிமையோர்
தலைவாவெளியான்சரணஞ்சரணம் (31)

---

26. பளிங்கு-சுக்கிரன்
29. தனியொப்பின்மை

என்றேநற் றிசெய்திடவெம்பெருமா
னன்றேயுனதனபுகயகதனமுன்
குன்றுவினைவெந்தறுகடறகரீ
யின்றேவராமீகுதமென்றனனால (32)

சொல்வானுயர்சுவகனருஞ்சமரில்
வலவானவாதமமையவான்வுணா
வெல்வானவாமீயென வேண்டலும்
நலவான்மதிசேர்சடையானிலவான் (33)

எபபோதிமையோரெமையேகருதா
ரபபோதவாதம்மையருஞ்சமரிற
றபபாதுவெலவாருயா தானவரென
னெப்போதரியானுரைசெய்தனனால (34)

அகவல் விருத்தம்

அததனுரைசெயபபுகர்பினனருமபகர்வானென்றவத்
தாலமைநதகாய
விததடஞ்சுககிரதீர்த்தமென் றுநறுமபாலுடனுற்
றிடலான்மிகக
சுத்திகொள்பாலவாவியெனறுமபுருடனெனவந்திதினீ
தோயநதவாறறால
விததகமகாபுருடதீர்த்தமெனறுமபெயர்படைத்து
விளஙகலவேண்டும (35)

இன்னமுதததடமபடிநதனறிருமேனிவெண்ணிறமுற்
றிருந்தவாறறாற
பன்னுதிருப்பேருனக்குபபாலவணணனெனவுலகிற்
பரவல்வேண்டு

---

33. வெல்வானென்பது-வினையெச்சம் [illegible] முன் னிலையே வல்வினைச்சொல்-ஆய் திரிபுணர்ந்து குன்றி [illegible] ன்றது [illegible] பொருள்

முன்னுலகம்பெறலவேண்டுமித்தடத்திற்படிந்தவரென்
றுரைக்கத்தக்கதே
முன்னியவிவ்வாமுனகலெகன்றுளமகிழ்நதுசொலி
மறைந்தானமுதலீறிலலான் (36)

கறையுறுவாளவுணரைபபாதலததிடைபபோயச
சேர்மினெனககமுறிசசுலக
னுறையுமிடனுசேர்நதனனமுனிவராகாளததலததி
னுறுநாறபானு
மறைதருமைங்குரோசவரையுளபுனல்புணணியதீர்தத
மாகுமெனனிற
குறைதவிரசசுககிராதீாததபபெருமைதனையெடுததுக
னை

பாலவணணாதிருநாமமுணடான சருககம.

முற்றிறறு.

ஆகச சருககம-17-கரு-விருததம-524.

---

பதினொன்றாவது

## நாரதகாளாயபாவந்தீர்த்த சருக்கம்.

---

வி—கலிவிருத்தம்.

காவணமபெறுதிருக்கருவைமாநகர்த்
தேவனாதபபெயர்முனியைச்சீரமிகு
தாவில்காளாயனைச்சார்நதவோர்பெரும
பாவநீக்கியகதைதபகருவாமரோ (1)

---

36. முன்னிய—நினைத்த—சொல்லியென்பது சொலியென நின்றது இடைக்குறை விகாரம-தடம்-தடாகம

37. குரோசம்-கூப்பிடுதூரம்-வரை-அளவு-ஏ-அசைநிலை

தண்ணறுங்கொடைபுனைசாத்தன்பூரணைப்
பெண்ணுடன்புட்கலைமேவும்பெற்றியான்
விண்ணின்மேற்கிளர்தருவெள்ளிவெற்பினின்
றெண்ணுதெக்கணதிசைநோக்கியேயரோ (2)

இலகுவெண்கரியின்மேலேறிச்சேனையுந்
தலைவன்காளாயனுஞ்சார்ந்துபோந்திடக்
குலவியேசெல்லுமப்போதுகோதிலா
நலமுறுநாரதமுனிவனண்ணினான் (3)

அரிகரபுத்திரனங்கைநீட்டியே
பரிவுடனுசிதானபண்ணலுமடிக
வெரியெழநோக்கியேயம்முனியொரு
பெரியவனைப்போற்கரநீட்டிப்பேசினாய் (4)

கஞ்சன்மாமகனெனக்கண்டுசற்றுநீ
யஞ்சினாயிலைமனத்தகந்தையுற்றுளாய்
கொஞ்சமேகூறினாய்கூறுறவனா
சஞ்சரித்துறுவெனச்சாபமிட்டனன் (5)

ஞானமாமுனிவரனவின்றகாலையிற்
சேனைகாவலன்மிகுசீற்றத்தோடுநீ
தானுரைசெய்யுமிச்சாபநன்றுவெங்
கானகமாழ்வியானகருத்துளேமென (6)

வித்தகமுனிவனைவெகுண்டுநண்டுணிப்
பித்தர்கலகத்திற்பிரியனாகியே
பெத்தலத்தினுமுனையிகழ்ந்துகூறவென்
றய்த்தவன்கதையினாலுந்திவீசினான் (7)

---

3. வெண்கரி-வெள்ளையானை
4. எரி அக்கினி-கஞ்சன்-பிரமன் ஆசி-ஆசிர்வாதம்
7. கதை-தண்டு-கூற வென்பதனிறுதியகரம் வியங்கோட் பொருளுணர்த்தி நின்றது

எவியகதைதனின்வேகத்தினுமெழுந்
தாவெனவபயமென்றலறிவாய்வெரீஇ
மூவிழிக்கடவுண்முன்முறையிட்டோடிட
மேவினன்கயிலையில்விதியின்கொட்பினால் (8)

அண்ணறன்றிருமுனமடைந்துநாரதன்
கண்ணினீர்மல்கமெய்கலங்கியெம்பிரான்
றண்ணுறுந்தாமரைத்தாளில்வீழ்ந்தனு
முண்ணெகிழ்ந்திதன்கொலென்றோதவோதினன் (9)

இருநிலநீங்கியானிறைவநின்பதத்
தெரிசனைக்கெழுந்திவண்சேருங்காலையில்
விரிகடற்பெரும்படையோடுமேவியே
வருகின்றான்கடனிறவையனவயின (10)

நாணுபசாரநன்மொழிநவிற்றலுந்
தானுரைத்திலனென்றுந்தானைகாவல
னேனெனையஞ்சலிசெய்திடாதெதன்
றானமில்கதையினாலுயரவீசினன் (11)

வன்றிறலுடையகாளாயன்வன்பினாற்
கொன்றிடக்கருதியேகொடியதண்டினா
லின்றெறிதலும்புகலின்றியெந்தையே
யுன்றிருவுளத்தினாலுய்ந்துபோந்தனன் (12)

என்னலுமிறையவன்வெகுளியெய்தியே
நன்னெறிநந்தியைநோக்கிநம்வழி
னன்னகாளாயனையழையென்றோதலு
மின்னதீர்நந்தியும்விரைவினெய்தியே (13)

வம்பினையுடையகாளாயவாவனை
யெம்பிரானழைத்தனனெனவியப்பலுங்

---

9. மல்க-நிறைய
10. வயின் இடம்

கம்பிதத்தொடுமவன்கடிதினெய்தவே
தம்பிரான்செயலென்றேவெனாசாத்தனும் (14)

ஏகினன்கயிலையிலிறைவனையாற்
சேருமனத்தன்காளாயன்சென்றுதா
ளுகுலத்தொடுமலரடியில்வீழ்தலும்
வேகியாயவன்றனைவிமலனோக்கியே (15)

விஞ்சைமாமுனிவரனலிநம்பியன்னையே
யஞ்சலிசெய்திலனென்றவனறனை
யுஞ்சிடாவண்ணமேமாயனைத்தண்டினூ
லெஞ்சலுறறிடவெடுத்தெறிந்தசென்னென்றான் (16)

அக்கணந்தன்னிற்காளாயனபோயறியே
தெக்கணநோக்கியாஞ்செலலுங்காலையின்
முக்கணையகவிந்தமுனிவனைபோந்தனன்
றக்கதெனவெம்மன்கைதனைநீட்டியே (17)

ஆசிகூறினனவனன்றந்தகாலையின்
மாசறுதவனெனைவணங்கிடாமலே
பேசினுய்கரந்தனைநீட்டிப்பேனதநீ
வாசமுற்றிடுகரீவனத்திலென்றுதான் (18)

சாபமொன்றிசைத்தனன்றமியனேற்கென்றே
கோபம்வக்தெறிந்தனன் றறமாமெனிற்
றூபரமில்லிஙின்சலததுக்காற்றலே
னீபமென்றடிதொழுதுநின்றனன (19)

அஞ்சலிசெய்திலனெனநகந்தைசேர்
செஞ்சடைமூடகமமிடத்தினீகொடு

14. கம்பிதம்-நடுக்கம்.
17. எம்மன்-எமது அரசன்
19. சலம்-கோபம்

வஞ்சனையுற்றபொய்வார்த்தைபேசலால்
விஞ்சியபாதகமேவினையன்றே (20)

இப்பவந்தீர்வதற்கியம்புவோமுனக்
கொப்பறுமநாதமாபுரத்திலொன்றிநீ
யப்பதிதனிலெம்மையருச்சிப்பாயெனி
லெப்பவங்களுமறுமெய்துவென்றனன் (21)

நாதனுமருள்செய்நாரதன்பணிந்
தோதுபற்பலதுதியுஞற்றித்தன்னுடை
யேதமகற்றுவானெழுந்துவேலைசூழ்
பூதலத்துபயமாபுரத்திற்போந்தனன் (22)

இன்றவனேகவெம்பிறைவனபக்கனி
னின்றகாளாயனேயக்காரிசொல்
லின்றியேகதையெறிந்திடுகடும்பிழை
யினற்றவுபயமாபுரத்திலையதியே (23)

ஆங்குநீசென்றெனையருச்சிப்பாயெனிற
நீங்குறுபாதகந்தீருமென்றலு
மோங்குசெண்டாயுதக்கடவுளோடுமே
பாங்குடனவனுமப்பதியிற்போந்தனன் (24)

துங்கநாரதனெனுமுனிவனாயதோர்
கெங்கையாகியபெருங்கிருபைமாநதிப்
பொங்குதண்புனலிடைமூழ்கிபுண்ணியன்
பங்கயப்பதத்தினைபரிந்துபூசித்தான் (25)

பரிவினோராண்டவன்பரவிப்பூசனை
புரிதரமழுவலானபொலிந்துதோன்றியே
யுரியநம்பூசனையுஞற்றலாலுனை
விரவியபாதகம்வீட்டினோமின்றே (26)

---

22. ஏதம்-குற்றம்
28. காரி-ஐயன்
26. பரிவு-அன்பு-உஞற்றல்-செய்தல்-வீட்டினோம்-ஒழித்தோம்.

இப்பதியடைந்தலைசரியையிற்றி
யப்பிடையாடுகல்கிரியையன்பினு
லொப்பறுபூசனையுஞற்றல்யோகமாஞ்
செப்புநம்முருத்தெரிசித்தனஞானமே (27)

என்றுரைத்திறையவனிகளிறேடுனைக்
கன்றுகாளாயனங்களிந்தசாபமு
மின்றுலகனுக்குக்கிரகமாமென
வொன்றினனிங்கத்துருயர்ந்தமாதவன (28)

அரனடிவணங்கியாகாடையனறன்றொடு
விரவியநன்மொழிவிளம்பிவேல்சூழ்
தரையினிலறமயிலாத்தகைமைசானுமின்
திரனுலகத்தினிறசென்றுமேயினுன் (29)

கண்ணுதறன்னைக்காளாயனாறுனவர்
தெண்ணறுபூசனைபெற்றுவந்தபால்
வண்ணநாயகனைவெளிவந்துன்பாலமிக
நணணியபாதகமொழிககண்ணினேம (30)

என்னவுமருள்புரிந்திகளினேடுதி
ரொன்னலநயிரிலாமுண்ணுந்தண்டமொன்
றன்னகாளாயனுக்களிக்கப்பெற்றவன்
மன்னியகடனிறவையனபால்வந்தான் (31)

அறுசீர் விருத்தம்.

வந்தகாளாயனந்தவநாதிபுரமகிமையெலாம்
வழுத்தக்கேளாச்
சிந்தைமகிழ்ந்தையன்விசித்திரவிரதமிவர்ந்துவந்தச்
சிவலிங்கத்தைக்
கந்தமலர்கொடுபூசித்திருந்தனனவ்வேலையிற்பூங்
களவிலமேவு
மெந்தையுளமுவந்தவன்முனமேன்றினன்மால்விடை
யினமிசையிறைவியோடும் (32)

தோன்றியவெம்மையனையன்றனைசோகிக்சித்திரத்
    தேர்துண்டிநீவர்
தான்றனைமைப்பூசனைசெய்தமையாற்சித்திரவிரத
    வையனென்று
தான்றிருப்பேர்பெற்றிருப்பாயடியவர்க்குவேண்டும்
    வரந்தக்கொடென்றோதி
மான்றிகழ்செங்கரதலத்தவள்ளனபலைமடந்தை
    யொடுமறைந்தானன்றே (33)

கலிவிருத்தம்.

ஞானமாதவர்காணருணமபொரு
மாணுவந்துவழுத்தியவாழுளான
காணுறுங்கணகளாவிலிங்கத்தினி
சானந்தச்சாதத்தனமகிழ்ந்தரோ (34)

நாரதகாளையர் பாவந்தீர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 18க்கு விருத்தம் 558.

---

பன்னிரண்டாவது

## யமவாதை யொழித்த சருக்கம்—தி.

கலிவிருத்தம்.

சூதைநேர்முலைத்தோகைபங்காளனைக்
தாதைபால்வணன்றனறலத்தேயம
வாதைதானணுகாதுசெய்மாதிருக
காதைதன்னைச்சிறிதுகழறுவாம (1)

அகவல் விருத்தம்

கந்தமுறுநறுமலர்ப்பூவகளாவனகதென்கயிலையெனக்
    கருத்துட்கொண்டு
வந்துறையுந்திருக்கருணைவள்ளலெனத்திகழ்சிவபால்
    வண்ணனெம்மா

னந்தணர்வானவரெவருமறிவரியவேதமுடி
னமுதமிந்து
விந்துபிரணவமெனுமோர்நான்கும்வரவழைத்தினிது
விளம்புவானால (2)

கலிப்பா.

கஞ்சமலர்த்தடம்புடைசூழ்கருவைவளம்பதியதனிற்
பஞ்சகுரோசத்தினுக்குள்ளுறைதருபலவுயிர்க்கு
மிஞ்சியமவாதையினியணுகாமேவெற்புருவா
வெஞ்சலினுற்றிசையிலுநின்றினிதுபுரந்திடுமினென்றான் ()

திங்களணிசடைப்பெருமானசெப்பியசொற்கேட்டுவந்து
தங்கினதவ்வமுதமிந்துசயிலமெனக்கீழ்த்திசையிற்
பொங்குகடலுலகமெலாம்புகழ்தருநற்பிரணவமுந்
துங்கமுடனின்றனசிர்துலங்கியதெக்கணத்திசையில் (4)

மெச்சுபெருந்தகைமையுறமேவிநதுவுநின்றதுவால்
பச்சிமதிக்கினிலவேதம்பகர்தருமுத்தரதிசையி
னிசைசையொடுநின்றதன்னிணையடித்தாமரைபணிவோ
ரச்சமொழித்திடுமின்பமேயானருளியசொற்படிமாதோ (5)

மூத்தசுதனெனுங்யமமுகன்வழுவேற்குகனுயர்மா
சாத்தனவயிரவனெனனச்சாற்றுமொருநாலவரையு
மேத்துமிமையவர்கமக்காவிங்கிட்டுநகர்ந்தவரைக்
காத்திருக்களாவுடையானறிருவுளத்திற்கருதினனால. (6)

எனதைதிருவுளமதனினினைத்தலுமேயினிதுணர்ந்து
வந்தனர்நால்வருமிறைதாள்வணங்குணுரெபெருமான்
சிந்தைதனின்றனைநினைத்திடநாஞ்செய்தவேதன்னோ
முந்துதவமெனவுவகைப்பெருங்கடலுண்மூழ்கினரால் (7)

---

4. உத்துங்கம்-உயர்ச்சி
5. பச்சிமம்-மேற்கு உத்தரம்-வடக்கு

அவர்தலைமையெம்பிறைநோக்கியறைகுவன்யாம்வீற்றிருக்கும
பவமறுமித்தலமதனிற்பஞ்சகுரோசகதினுக்கு
ளுவகையொடுமருவுமெல்லாவுயிர்க்குமயமவாதையொடு
றுவல்ரியபெருங்கொடியநோயுமணுகாமலரோ (8)

நாற்றிசையினுற்றிடுமவ்வமுதயிந்துநகமுதலாச்
சாற்றியவோர்நால்வரையின்றடஞ்சிகரத்திடையிருந்து
போற்றிடுமினவண்ணிமைந்துபோமினெனப்புகன்றனுற்
றேற்றமுடனிறுதியெனச்சொலுமிரண்டுமில்லாதான் (9)

பூரணைபுட்கலையெனுமப்பூங்கொடிகளுடனவெள்ளை
வாரணமீதிவர்ந்துசுடரவயங்குபெரும்படைகள்
சீரணியுங்கரத்தேந்தித்திகழமுதசுரியதனிற
றூரணியானையும்பரவச்சாததனமர்ந்தனன்மாதோ (10)

அன்றுமதகயவதனத்தவுணனையவ்வருஞ்சமரில்
வென்றசுரர்தமைப்புரந்தவேழமுகத்தெம்பெருமானை
றன்றுபலபடைகளுடன்றுலங்குமூடிகத்தேறிச்
சென்றபிரணவமலையின்சிகரமதிலிருந்தனனால் (11)

தனதுதிருக்கரதலத்திறறரியலர்கண்டுளம்வெருவுஞ்
சினமுறுமுத்தலைவேலுந்திறமுறுந்தண்டமுந்தாங்கிக
கனமுடைவெற்பனையகூழைக்கருயபுரவிமிசையேறி
மனமகிழ்வுற்றெய்தினிருமலைப்பல்லவபிரவனிருந்தான். (12)

எற்றுதிரைக்கருங்கடன்மேலெழுந்தவிளங்கதிரவன்போல்
வெற்றிவடிவேற்படைதன்விளங்குதிருக்கரத்தேந்தி
நற்றணிமாமயிலேறிநண்ணியவறுமுகப்பெருமான்
குற்றமிலறபுதவேதக்குன்றிடைவீற்றிருந்தனனால் (13)

ஆகச் சருக்கம் 19-க்கு விருத்தம் 571.

யமவாதை யொழித்த சருக்கம் முற்றிற்று.

---

9. நகம்-மலை வரை-மலை 10. படை-ஆயுதம் 11. மூடிகம் பெருச்சாளி 12. முகைல்-நாய் கரும்புரவி-கருங்குதிரை

## பதின்மூன்றாவது
## தக்கன் வேள்விச்சருக்கம்—வி.

---

அறுசீர் விருத்தம்.

புரமொருமூன்றும்வேவப்புன்னகைபுரிந்தமுக்கட்
பரமனையமரர்யார்க்கும்பரம்பொருளெனவுன்னுமே
வரமுறுதக்கன்செய்தயாகந்தனைக்கண்டானசெனற
பிரமன்மால்முதலோர்யாவரும்படுபேகார்சரிதஞ்சொல்வாம்

எழுசீர் விருத்தம்.

பண்டொருகாலமயனருள்புதல்வர்பதின்மரிற்
றலைமகவாய
திண்டிறலுடையதக்கனையொருநயனத்தெம்மையாற்
செகமெலாந்தாங்கைக்க
கொண்டிடவேண்டுங்குறிப்புடையவனாய்க்குளிர்
மதியிரவிவெங்கனலாங்
கண்டலமுடையகடவுளைநோக்கிப்புரிந்தனன்றவ
நெடுங்காலம் (2)

அக்கணிசயலிக்கறைமிடற்றண்ணலப்பொழு
தருந்தவம்புரியுந்
தக்கன்முன்றோன்றிவேண்டியதென்கொல்சாற்று
கென்றலுமவன்சாற்றுஞ்
செக்கர்மேனியநின்றேவியாமுமையென்செல்வியாய்
வந்திடவுனது
மிக்கநற்கருணைபுரிந்திடவேண்டுமென்றலு
மருளினன்விமலன் (3)

ஆங்குநல்வரந்தான்பெற்றபினிமயாசலமரு
ளுமைதனைநோக்கி
போங்குறுதவஞ்செய்தனன்செயும்பொழுதெவ்
வுலகமுமீன்றவெம்மிறைவி

பாங்குறுமகரத்தடத்தில்வெள்வளைமேலொரு
பசுங்குழவியாயுதித்தா
ளுங்கறுதக்கனிருவிழிகளிக்கக்கண்டுதன்செங்
கையாலெடுத்தான் (4)

முதிரொளிவளையிலுதித்தவோராணிமுத்தெனக்
கண்டினிதெடுத்த
புதியவோர்மகவைததன திருமனையாள்பூங்கரத்
திடைகொடுத்திடலு
மதிநிகர்வதனத்தெரிவைதன்கரத்தால்வாங்கினள்
வடமணிந்திலங்குங்
கதிர்முலையமுதஞ்சுரந்ததுநெஞ்சமுவகையங்கட
லுளாழ்ந்ததும்வ (5)

ஓகையினுடனந்தணர்தமைக்கூவியுதித்தநாட்
சாதகமவருத்தி
யாகமவழிநலவித்துகளுதவியருந்திக்குப்பைக
ளளித்துப்
பாகுறுமிசைவாணருக்கமுதூட்டிடப்பல்பணியாவை
யுமவழங்கிச்
சோகமின்மறையுங்காணுமையிலைத்தொட்டின்
மேல்வைத்தினிதாட்டி (6)

நாளொருவேழிற்காப்பிணையணிந்துநகைமணி
யரைவடஞ்சாத்தித்
தாளிடைச்சதங்கைபரிபுரமணிந்துதரளமாமணி
முதன்மணியின்
கேழ்கிளர்கோவைவடம்பலதரித்துக்கிளர்மணிச்
சுடிகையும்வனைந்து
வாள்விழிகளிலஞ்சனமணிந்தன்பினொடுவளர்த்திட
வளர்ந்தனளால் (7)

5. மதிநிகர்வதனம் - என்றமையால் பொருத்தன்மைத் தொகையுவமையணிகதிர்-ஒளி
7. கேழ்-நிறம் சுடிகை-சுட்டி

தரையிடைத்தவழ்ந்தாண்டொன்றுசென்றதன்
பின்றக்காற்சடங்குகண்முடித்து
வரவரவயதோரிரண்டேழொன்றுமெதிவளர்வதுவென
மங்கைப்
பருவம்வந்தெய்தியமுன்னூற்றிகழ்ந்துபன்னிரண்
டாண்டுசென்றதன்பின்
கிரியைசுற்றகசுவரோடுந்தக்கன்கிளைவியற்றிருக்
கும்போதொருநாள் (8)

இறைவிபெணபுதலவியாகையாலிவளையின்றியே
யைகதொழிலினத்துங்
கறைமிடற்றிறைவன்புரிவதிதங்களைநங்கனணியை
யவனுக்கேபோமனை
மறையவனொருவனறனைக்களித்தெயதுயனையில
வைத்தலகிலுக்கிறைமை
பெறுதலைமைக்தொழிலுடைத்துமயாமேயென்றுதா
ன்பெருஞ்செருக்கடைந்து (9)

இருந்தனன்சிவனையிகழ்ந்தவனிவ்வாறிருந்ததற்
கேதுவென்னெனிலோ
வருந்தவமுடையமுனிவர்காள்கேண்மினவனியி
லொருவனுக்கந்தோ
வருந்துதுகேடுவரும்பொழுதவற்குமதிகெடுமாத
லான்மடமை
பொருந்தியெப்பிழையும் ... றலதற்குரியனுயிரு
வையன்றருபுதல்வன் (10)

விதிமுறைவழுவாவதுவைநாட்குறித்துமெய்ப்பு
துமறையவர்களிலோர்
முதியனைத்தேடியவன்வெளிவாதுமுக்கணையக
னஃதுணர்ந்து

மதிதவழ்சடையுமறிமழுக்கரமுமறைத்தொருமு
தியவனாக
யெதிர்வரக்கண்டுதக்கனுங்கெய்திமணமிலையத்தொ
ருமொழியியம்பும் (11)

நான்மறைமுதியோயுனக்கருமறையினுள்ளுறு
நற்பொருள்வருமேல்
யானுணர்ந்திடநீயுரையெனவிறைவன்யாவருமறி
யொணாப்பொருளைத்
தானுரைத்திடலுந்தக்கனுமகிழ்ந்துதருகுவெனக்
கொண்டுவந்தெழில்கூர்
வேனிகர்விழியாடனையருமறையின்விதிமுறை
மணம்புணர்வித்தான் (12)

தக்கனற்றனையைவியானவள்சலித்துததனக்குநே
ரில்லவடனையே
யிக்கிழவனுக்கோகொடுத்தனனென்றேயிருந்து
யர்க்கடலினுளாழ்ந்தா
ளொக்கலும்பரிவுற்றிரங்கினரதனையுணர்ந்திறைய
வனறனதுருவை
யக்கணந்தோற்றிமறைத்துமையவளோடகன்ற
னன்மழவிடையதனமேல் (13

இச்செயலறிந்ததக்கனென்புதல்விதன்னையேவேற்
றுருவெடுத்தே
யச்சிவன்கொண்டேகினதழகம்மாவென்றுதன்னக
மிகக்கொதித்து

---

11-வதுவை - கல்யாணம் - இயம்பும் - சொல்வான் - பல்லே
படர்க்கைமுன்னிலைதன்-மையிற்-செல்லாதாகுஞ்செய்
யுமென்-முற்றே - என்னும் விதியால்-உயர்திணையாண்
லொருமைப்படர்க்கையில் வந்தது

நச்சராவெனத்தன்றுணையோடெழுந்தானுமையே
யென்னுடன்பகர்ந்த
பொச்சமாமறையோப்போகனீநில்லென்றடர்ந்துரு
மேற்றெனப்பொருந்தான (14)

ஒல்லையிலமலன்வெருண்டடர்ந்தெழுந்தேயுலப்பருந்
தானையைமடக்குப்
புல்லறிவுடைப்பதகனைத்தராற்புடைத்தலுந்
தீமொழிபுகன்றே
செல்லலுற்றனன்றன்பதிகளிலந்தத்தீமையோன்
றேசேயினையுகைத்துத்
தொலைப்பருவெள்ளிவெற்பினையடைந்தான்றேற்றமு
மீறுமில்லவனே (15)

எண்ணருங்காலங்கழிந்தபின்விரிஞ்சனிமையவர்
முனிவர்தம்மோடு
மண்ணறைகயிலையடைந்தனனந்தவமலன்பால
டைந்தருட்கடலே
விண்ணவரோடுமயனிவண்போந்தானென்றலும்
விடுகெனவிறையோ
னுண்ணெகிழ்ந்தருளோடுரைத்தலும்பிரமன்சென்
றடிபணிந்துரைசெய்வான (16)

அருட்பெருங்கடலேயடியனேனரியயாகமொன்றிய
ற்றிடக்கருதி
விருப்புடனிருமுன்னடைந்தனனியாங்குவர்
திடவேள்வியினீயுந்
திருக்கருணையினுலெழுந்தருளென்றன்செல்வமே
யெனவுரைத்திடலு
மருப்பொதிமடுக்கைச்சடிலனாங்கியையாங்கேகென
வழுத்தினன்மாதோ (17)

---

15 சே-எருது-உகைத்து-செலுத்தி-தொல்லை-பழமை-ஈறு-முடிவு.
16. விரிஞ்சன்-பிரமன்-போந்தான்-வந்தான். 17-திரு-சன்னிதி.

அப்பொழுதயனுநந்திபோடிமையோருமறைமுனி
வர்சூழச்
செப்பருங்கயிலைதன்னைவிட்டகன்றுசென்றுதம்
பூலகிடைப்போந்தாங்
கொப்பருவேள்வியியற்றுதற்கிசைந்ததுணர்ந்தனன்
றக்கனுமொழிய
வெப்பமோடெழுந்துதந்தைபாற்குறுகிவெகுண்
டொருமொழிபகர்ந்தனனால (18)

சுடலையாடரங்காயென்பணியாய்த்தோலாடையாயூர்
தொறும்பலிகொண்
டிரிவதேதொழிலாய்க்கொண்டவன்றனையோரிறை
யெனவேள்விபுரித
லடைவதன்றவனுக்கவியுதவிடலவ்வேள்வியும்பழு
தெனவெகுள
மடலவிழ்கமலத்தவிசுறைபுத்தேண்மனமயர்ந்தஃ
தொழித்தனனால் (19)

நீதறுமொழியாற்றக்கனங்குனைத்தசிறுமையை
நந்தியுங்கேட்டுப்
பாதகாசிவனையன்றியேயாகம்பண்ணவுமுடியுமோ
வவிதா
னுதனுக்குதவாவேள்வியுமுளதோவதிற்பலனல்
குவதெவனோ
யாதுநீயிறைவன்றனையிகழ்ந்துரைத்ததுன்றலையின்
றரிந்திடுவேன் (20)

பங்கயத்தொருவன்புதல்வனுதலினுற்பொறுத்தன
னென்னவேபகர்ந்து
மங்குறூப்வெள்ளிவரைதனினந்திபடைந்தனன்
மகத்திலுக்கடைந்த

---

19. அன்று-எதிர்மறைக்குறிப்புவினைமுற்று-புத்தேள்-தெய்வம்.

வெங்கணுமுனைமாமுனிவரரிமையோரரனைப்பின்னை
ரர்புவியனைத்த
செங்கண்மான்முதலோர்யாவருந்தந்தமுறைமைவிடஞ்
சென்றடைந்தனரால் (21)

## கலிவிருத்தம்.

நன்னெறியிறக்கனென்றுநஞ்சன்றமனதிற்று
றுன்னினன்முடிப்பரியதாயசெயலொன்றைய
பொன்னுலகுக்கிறைவனெனுமகன்மணாளன்
றன்னுடையனைவானவரைத்தான்வரவழைத்தான் (22)

ஆண்டவரடைந்திடலுமாங்கினிதடைந்த
வேண்டுமிமையோர்தமையிருப்பியென்றுநோக்கிக்
காண்டகுமகந்திசெலக்கண்டுபயமுற்றே
மீண்டுபெருவேள்விபுரியாதிவணிருந்தீர் (23)

ஈசனுலகுக்கிறையனென்றுநினைவுறாப்
பேசவது தானுமதுபேதைமையதாமாற்
காசினியின்மீதுநலிகண்டவர்கள்யாரு
மேசிடவுழன்றுபணியேற்றமுறுகர்ந்தான் (24)

ஓர்க்கிலெயினீர்ச்சடிலையுற்றுணர்வினைதனும்
போர்ந்துகடமாடுமொருபித்தனவனன்றோ
வார்த்தபுகழ்மேன்மையுளநாமனைவருந்தாஞ்
சோர்ந்திடலவன்றனதுசெய்கைவெவனுமால் (25)

என்றவனரன்றனையிகழ்ந்துபலகூற
வென்றிபெறுமாயன்முதல்விண்ணவர்கள்யாரு
நன்றெனவியைந்தனையதவணிருந்தார்
வன்றுயர்வரும்பொழுதுபாறுமதியன்றோ (26)

இப்படிமயக்கியிமையோரைமுனிவோரை
யொப்பரியவேள்விசெய்வதற்குமனதன்னி

---

25-எவன்-என்ன-ஆம்-ஆகும்

யப்பிரமன்மைந்தனுயரண்டமுகடெட்டச்
செப்புமகசாலைகள்சிருட்டிசெயலுற்றான் (27)

வேதிகைகுண்டங்கள்பலவேண்டுவவமைத்துக்
கோதில்பொருள்பற்பலகொணர்ந்துதரவேதா
னாதரவுடன்புரியுமந்தமகமேன்மை
யீதளவதாமெனவெடுத்துரைக்கலாமோ (28)

ஈசன்மனதிற்சினமெழுந்தபொழுதிந்தக்
கேசவனுமவேதனும்விறைஞதல்செய்கின்ற
வாசவனுமவானவருமற்றையருமங்கோ
வீசொளிவிளக்கில்விழுவிட்டிலெனவெண்ணான் (29)

இந்திரன்முதற்சுரர்கண்மாலயனிவர்க்கு
வெந்தவலியவவியினுடனையுதவவேண்டிக்
கந்தமலரோன்புதல்வனுங்கடிதினெய்தி
வந்தனனமைத்தமகசாலையுண்மகிழ்ந்தே (30)

முக்கணனையனறியயன்மான்முதலினோராற்
றக்கனுயர்வேள்விபுரிதன்மைதனையாங்குத
தொக்கதவமேவியததீசிமுனிசூழ்ந்தே
யக்கணமதக்கனையடைந்துரையலுற்றான் (31)

தொன்மையுலகுக்கிறைவனைபரஞ்சோதி
யின்மையிலிவேள்வினிறைவேறுவதெவ்வண்ணம்
முன்மனதின்மாலயன்வினோர்களுளராக
நன்மைபெறும்வேள்வியெனவேமிகநயந்தாய் (32)

எண்ணரியவேகமொடெழுந்திடுவிடத்தால்
விண்ணவரிமான்முதலினோர்வெருவியோட
வுண்ணெகிழவேகருணையுற்றவிடந்தன்னை
யண்ணல்களந்தன்னிலுமணிந்ததறியாயோ (33)

---

28-ஓ-எதிர்மறையிடைச்சொல்.
30-அவி-தேவருணவு.

பண்டிறைவனுண்டவிடமபற்றிவரும்போழ்தி
லண்டர்முதலோரபயமென்றிடுமொரானின்
மண்டெழுமின்புகைவயங்கெபகனுளிவ்
விண்டுவுநலங்கறுத்துவிட்டகறியாயோ (34)

ஒப்பிலுமையாணையுருவுமீசனமுனமோர்நாட்
கைப்புறுமகக்கையதுசெய்திடுதலைகண்டு
செப்புறுதனேருஞ்சிறுமைசிதையவேயுன்
னப்பனையுமோர்தலைபரிந்ததுணராயோ (35)

பாகனமொழிக்கவுரிபாகனையலாதன்
யாகவிறைவேற்றுபவர்யாரெனநினைத்தாய்
மாகொடியவாவயனிமால்பிறவியாய
சாகரமுளோர்களொருதனைமையரியாயோ (36)

ஏனமனமாயறிவெறித்தயனுமாலுந்
தானுணர்வதற்கரியதற்பரனுஞ்செய்
யீனமகமாயவுமுனிற்றிடுமயல்வல்லை
வானவர்முனிற்பரெனவேமனத்திலெண்ணேல (37)

என்றுமொழிந்தமுனியியம்பிடதக்கா
வுன்றுடையவேள்வியுடனுன்றுயிருமின்னே
சின்னமுறுமாலிஃதுறுதிண்ணமெனவேதா
றுன்னரியசாபமதுநல்கியகலவுற்றான் (38)

இத்தகையபாகமதியாறுசெயற்றன்னை
கந்தியுணர்ந்தகருணைநாதனிடநண்ணி
பந்தமிலவாகொடியதக்கனறிவில்லான்
வெந்தவவிதேவர்பெறவேள்விபுரிகின்றான் (39)

---

35-கைப்பு-வெறுப்பு-36-அன்ன-உவமவுருபிடைச்சொல் அனை யென்றது செய்யுள் விகாரம் இ-சுட்டிடைச்சொல்.

37-எல்லை-காலம்-எண்ணேல்-என்பதில்- எல்-எதிர்மறையிய ங்கோள்விகுதி-நினையாதே யென்பது பொருள் 39 அந்தம்—முடிவு

என்றபொழுதேயுமையைநோக்கியிறைகூறு
முன்றனதுதகைமையிமையோரவியுவப்ப
வென்றிபெறுவேள்விபுரிகின்றனன்விரைந்தே
யின்றவனையாருயிர்முடிப்பதியல்பென்றான் (40)

அத்தகைமைகண்டவுமையாண்மனநடுங்கி
வித்தகனமலர்ப்பதம்விழுந்தினிதிறைஞ்சி
மெய்த்தகவிலாதவனிடத்தில்விரைவிற்போய்ப்
புத்திவருமாறுபுகன்றேவருவனென்றான் (41)

ஏதமுறுதக்கனவனைத்தனைசொலினும
போதமுறுநீயுரைசெய்புத்தியுணரானென
மீறுதவுலகீன்றவளுமோர்பிழைபொறுத்தி
காதவெனநேயமுடனேநவிலலுற்றாள (42)

அன்னமொழிகேட்டிறையவன்னருளினோடு
புன்னகைபுரிந்தினிதுபோவெனவுரைத்தான்
பொன்னொளிவிமானமிசைப்பொற்புறவெழுந்தாள்
மின்னிடையரம்பையர்கள்வெண்கவரிவீசு (43)

துன்றுபலவாத்தியமுழங்கவளிசூழு
மன்றல்கமழ்புட்பமழைவானவர்கடூற்றச்
சென்றனள்விரைந்தினியசிக்கையருளேகூர்த்
தன்றனுகிருடனதுதாதையருகம்மா (44)

உன்னியுலசக்கிறைவியென்றுமணமோரா
னன்னவடனக்குமகவாகுமெனவெண்ணித்
தன்னடிபணிந்திலனெனத்தறுகணுளன்
முன்னமவணிற்பமுனிந்தாளுமைமொழிந்தாள (45)

முந்தவொருவற்கெனையளித்திடமுயன்றாய்
நந்தையையிகழ்ந்துமகநன்குபுரியென்றாய்
தந்தியுரியோர்க்கவிதராமலிமையோரா
லிந்தமகநீபுரியவிப்பொழுதிசைத்தாய் (46)

---

46-நந்தி-சிவன்.

இக்குறைகண் மூன்றையும்பொறுத்தனனென்றாலே
முக்கணனையன்றியுயர் வேள்விமுடியாதா
லக்கடுவரும்பொழுதங்கனகைறுத்தபாலோ
மிக்கபெருவேள்விநிறை வேற்றிடுவன்வெய்யோய் (47)

உத்தமமறைக்கிழவனுக்கைசசியொன்று
வித்தகனகநுதியிட்டதுணராயோ
வெதநிறமகத்தினையிடற்பிநிவையங்கோ
பிததனைநிகர்த்தனைபி முகசூரியனுயை (48)

வேதனுடனமாலுமற்றிவனையெயினின்மேனுட
பாதமுடிகாணவனையன்றியுநவாகி
யோதரியகாலநனிதேடியுணர்ந்தாரோ
வாதனினிநோரெவியாரவர்கொலமமா (49)

நத்தணிகரத்தவனுமான்முகனுமுனைஞ்
சித்தமயர்வுற்றுநனி தேடியறியாதோ
னந்தனெனினிவிருஞ்சன்முனுமிமையோர்தா
மெத்தனைகயராவாசிறிநீசனமுனிவுற்றால் (50)

கைதவமனத்தையுடையாய்கழுமகேகண்மோ
வையகமெலாயவிளக்கும்வண்மையுடையோனும்
வெய்யவனெனிக்கெரிவிளக்கொளியொப்பாகின்
மையிலிறையோறருநெடுமாயனிணையாவான் (51)

அந்தமுதலெனபனவனைறனிறையோனை
நிந்தனைபுரிந்தகொடுநெஞ்சமுறுபேதாய்
விந்தைபெறுசூரியனைமின்மினிநிகர்த்தா
னந்தையுமெனுயகனையொத்திடுவன்மாதோ. (52)

வெய்யமதியோயுனதுவேள்வியுமவந்தோரு
மையமுறநீயுமினியழிகுவனவேதான்
றையலுமையாள்சபிக்கத்தக்கன்வெகுளுற்றுப்

50-அத்தன்-சிவன்-51 கைதவம்-வஞ்சகம்.

பையரவுசீறியதெனப்படாகாலுற்றான். (53)

பேயுள்றவதானபுறங்காடிருக்கைபேணி
யாயசுடலைப்பொடியணிந்தவரையினமீது
தூயகலையாயபுலியினதோலினையுடுத்தே
மேயமுழுபாம்பூணெனவெலும்பினையணிந்தே (54)

வாகடொறுமையமிரந்துண்டுதிரிவோனை
யாரணிக்குவாரளிவதலவநவதெனவே
மேயருலவுநாணெடியவிரேழுபுவிக்கு
மோரிறைவனென கையுணாநதில்லைகொலின்னும (55)

வீசுபுகழ்மாலிபமேனிவென்வாழ்வு
நாசமுறுமென்பசாநநாளுழிலைநீதா
னீசனவனலனதுவேவவியிறுமென்றே
பேசியதுகின்னும்டாதைமையதாமால் (56)

மாசுறுவெயோனிவைவழுத்தவுமையாடா
னீசமுறையாலிறைவனிந்தனைசெய்கின்றாய்
காசினியிலெண்ணரியகற்படிந்தாலு
மீசனையிகழ்ந்தபிழையென்றுமொழியாதால் (57)

உன்மகளெனச்செகமுனாதடவெடுத்த
வெனனுடலைவைததடுக்கிலனினியெனததான்
சின்னமுறவேசிதறினரிந்துசிந்து
மின்னவயவங்களபலமெய்படஇகளான. (58)

தேனமொழிக்கவரிசெங்கமலமொத்த
வானம்விழநதவிடமாதழகாம்ப
மூனமிறனங்கள்விழுந்துற்றவிடமண்மேன்
ஞானதனகோட்டமெனவேநவில்வர்மாதோ (59)

---

52-உந்தை-உன்றந்தை

57-இறை-சிவன்-என்றும்-எப்போதும

58-மின்-ஒளி ஆன-வினைமுற்று-ஆயின
வென்பது பொருள்

விரியுமிந்தமபம்விழுக்தகாமவிரகோட்ட
மரியபதம்வீழ்ந்தவிடமாகு முனைப்பாதஞ்
சுருதிபுகழ்தேவியின்பெயர் ஞானவேயிடுக்கண்ணைக்
தரைபணிசனுர்க்கனைத்தாவுலநசாறமும (60)

இத்திறமியற்றியுமைநானவநவெய்தி
வித்தகமுறுக்கரிலையவுபூதாங்கே
யத்தனமுறக்கணிலகிகோசயவீர
பத்திராறுத்தனைப்பணிக்கிறநங்க (61)

வேகமுடைவீரனெறுமேவுதுணையாக
மாகமுகடுநவுவண்மைபுறபான
தேகமுடைவீரிரைறசிறநரிலுறாநா
கேகினர்களண்டனிறையாவுமசைவெய்த (62)

அக்கணமெமம்மைகினயாங்கழலிடைசிர்
பிக்கசெய்பக்கிரைவிளக தபலகாளி
தக்கபலகளிகளெழுந்தவகரிதுசு
தொககபுகழ்வீரனையடைந்தனர்தொர்கதே (63)

அப்பொழுதுவீரனெமைதயினையிறைஞ்சி
யிப்பொழுதமைத்திலகவனென்னையடிமையற்குச்
செப்பென முனிறகமுணங்கியவுணர்ங்கண்
மூப்புரமெரித்தபரனமுறுவலசெய்துரைப்பான் (64)

தக்கனுயிருமமகத்தின புரக்கயக்தோர்
மிக்கதிறலுமமவனசெயவேளவியுஞ்சிதைத்தே
யிக்கணமடைந்திடுதியிங்கெனவுரைக்க
வக்கடியவீரனுமடித்துணைபணிந்தே (65)

எழுந்தனனெழுந்துவிடை வாங்கியெதிரிலா
னெழுந்தவதரதெய்திறதுகபாலியிலலாக
கொழுந்தெரிகனன்றமந்தவிழிகொதிப்ப
வழுந்துருளுமவேலைதனினமீள்வரலெனவுணி (66)

---

60-வீரகோட்டம்-காமக்கோட்டம்-61 பணிக்கிறை-சேடன்

அண்டமுழுதுங்கிடுகிடென்றசையவேதான்
சண்டகதிகொண்டிகனிதக்கன்மகநோக்கித்
திண்டிறல்கொளும்பரியதேரின்மிசையேறி
யெண்டலையவீரனவனேகினனவிரைந்தே (67)

இக்கடியவீரனுடனேகடிதெழுந்த
மிக்ககணபூதர்கணமிகுந்தசினமோடு
புக்கனரடற்பகைபுடைத்திடுதுமெனாவு
தக்கனவனவைத்தமகசாலையைவளைந்தார் (68)

சேனைதனையேநிறுவியேதிறல்கொள்வீரன்
றானொருவனாகமகசாலையுளடைந்தே
மோனமுடனேவெள்ளியின்முகத்திலமர்தக்க
னானவொருபாதகனைநோக்கியறைவானால் (69)

அறுசீர்க்கழிநெடிலடியகவல் விருத்தம்.

இந்தமாமகத்திறமேறவர்க்கினிதவியீந்தனீயே
யந்தமிலொருபிலைகளெந்துமுடையவனுயினுமோ
பந்தமாமிமையோர்சுற்றும்பான்மையால்யாமுமீங்கு
வந்ததுமுணர்கிலாயோமவுனமுற்றனைகொனீயே (70)

மாலயனுன்னைப்பூசைசெய்திடவந்துளாரோ
சீலமாரிமையோர்கிட்டாத்தெரிசனைக்கெழுந்துளாரோ
சாலவிவ்வுலகுக்கெல்லாமிறைவனுந்தனையுற்றுனோ
மேல்வருங்கருமமோநம்பெருமையுமேனினையோ (71)

அங்கனேயிகழ்ந்துநீதான்விருப்புடனாற்றுகின்ற
வுனதுநன்மகத்தில்வந்திங்குளமகிழ்ந்திருக்குமாலோ
டினியமாமலரோன்வானோரிவர்க்கவியீந்துநாமுன்
றனதுவேள்வியினுக்குளபலனையுந்தரவந்தேமால் (72)

நானவியளிப்பேனெனாநீகொளெண்ணமுமீங்குற்ற
வூனமாரயன்மால்வானோருனைப்புரக்கின்றவாறு
மோனமாய்வேள்விமுற்றுந்தன்மையுங்காண்டும்பேதா
யீனர்கள்செல்வம்பெறுவிடும்பையேவிளைப்பான்றே (73)

ஆண்டலைக்கிறைவனிவ்வாறறைதலுமிரக்க
 வேடம்
பூண்டுவந்தவாறகங்கில்லையென்றிடற்
 போவதன்றி
மீண்டுரைசெய்வதுண்டோவெனவிளம்
 பினனத்தேவர்
கண்டபோரவையிற்றக்கனெனும்பெயர்க்
 கொடியோனமாதோ. (74)

அத்திறமவனுங்கூறவிறைவனுமரனே
 பாரின்
மெய்த்தனிப்பசுக்கட்கெல்லாம்பதியென
 விளம்புமவேதம்
முத்தனையெத்தொழிற்குமீசனையறி
 யுரியனாக
வெத்தொழிற்கு நீயேயுரியனே
 னியம்பாயெனறான் (75)

இத்திறமுரையொன்றுஞ்சொல்லாத்தக்கனை
 யிடனுதாளா
லுதைத்தவன்றந்தைசென்னியுறக்கையாற்
 புடைத்துவெய்ய
கதக்கனற்கடவுளைவுங்கையுமே
 மிகவுஞ்சீறி
மதிக்கிடுதனதுசெங்கைவாளினாலறுத்து
 வீழ்த்தி (76)

இரவிவானவன்றன்கண்ணையெயிறினைப்
 பிடுங்கியாங்கே
விரவுருத்திரர்க்கையால்வேலையிலெறிந்து
 தண்சந்

---

78-முற்றும்-முடியும்-காண்டும்-காண்போம்-இம்மை-துன்பம்.

திரண்மருத்துவகைத்தாளாற்றனையிடைத்
தேய்த்தோட்ட
வுரவகக்களைச்சினத்தேயடித்துயிரொழித்து
விட்டான (77)

இப்படியியற்றியாங்கேவரும்பொழு
திட்டுத்தாளா
லொப்பருவீரன முன்னந்தாக்கிடவுயங்
கியாக
வைப்பிடைக்கிடந்த தங்கள் வாண்முக
நிமிர்ந்துநோக்க
வெப்பனவிடைப்பெய்தானவ்வெய்யவன் றலைக்
கொய்து (78)

புக்கணர்தன்னிற்பூதகணங்கள்வந்
தடைந்துநின்ற
மிக்கதேவரைத தங்காலால்விசும்பிடை
யெற்றிப்பினனர்க்
கைக்கழுவாலேயேந்திக்கழியவிட்டெறிந்
துவேள்வி
நெய்க்குடமனைத்தும்வாயின்மடுத்தன
நெடுங்கைநீட்டி (79)

கரிகளைவாலிற்பற்றிக்காலினைத்
தெறிந்துவீரப்
பரிகளைக்குரத்திற்பறறிப்பதைத்திடவடித்
தாங்கோமப
பொரிகளையொன்றுக்கொன்றுபுகட்டிவாய்
குதட்டிவேள்வி

---

77-அட்டம்-எட்டு-உரம்-வலிமை-வசுக்கள்-ஒருவகைத்தேவர்
எயிறு-பல்-வேலை-சமுத்திரம்-

யெரிகளிற்குதித்துக்கையாலெடுத்தெறிந்
வித்தமாதோ (80)

போரினிற்சினவிநின்றபூதர்
களப்பிலாத
தேரினையெடுத்துவானிற்செல்லவிட்டெறிய
வின்றே
ரூரினிற்புசந்துவீரமொடித்திட
வற்றினின்ற
தாருவிற்றங்கணாளுறவாவலின்றகைமை
போன்ற (81)

அஞ்சியேயகன்றுபோனோருளபயிலர்
வீரர்கையாற்
றஞ்சியேகழிந்துபோனோர்தொகையிலர்
துஞ்சலின்றி
விஞ்சியதேவரோடுமிக்கிரனைவிரைந்து
மூல்பாற்
றஞ்செனககருதிவீழ்ந்தோர்மாற்றமுஞ்
சாற்றுகின்றான் (82)

செகதிருமார்பகேண்மோசிவகணங்
தம்மிலொன்று
வந்துவேள்வியைமாய்த்தேதக்கன்றலை
மற்றுளோராக
டந்தலையறுத்துவீழ்த்ததெனறுதான்
சாற்றலோடு
கந்தணிகரத்துமாயோனடுக்கமுற்றெழுந்
தான்மன்னோ (83)

மகபதிமாயோன்றன்னையிறைமையாய்
வைகுவாயென்

---

80-கரி-யானை-பரி-குதிரை.
குரம்-குளம்பு-அவித்த-வினைமுற்று-அவித்தனவென்பது
பொருள்-மாது-ஓ-அசைநிலை.

றகமிகக்கொதித்துவெள்ளையானைமீதி
லூர்ந்துதேவர்
மிகவிருபாலுஞ்சூழ்ந்துநெருங்கிட
வேள்விநீங்கி
யிகல்புரிகளத்திற்போந்துவீரனையினிது
கண்டான் (84)

கோரவீரனுந்தான்கண்டுறுநகை
புரிந்துகற்ப
தாருவானவனைநோக்கித்தக்கன்மா
மகத்தில்வந்து
நீரவிப்பாகம்வாங்காதிருக்கின்றீர்நீவிர்
கொள்ள
வோரவிப்பாகம்யாமீங்குதவுதும
பெறுகவென்றே (85)

இந்திரன்கரத்தைக்கொய்தாங்கியமனல்
வயிற்றைக்கீறிப்
புந்தியினிருதிவெய்யகழுத்தினைப்போக்கிப்
போரில்
வந்தவாயுவையுந்தாளைத்துணித்துயர்
வருணன்மார்பு
சிந்திடவாளாற்போழ்ந்துமதனையுஞ்சினத்
திற்றாக்கி (86)

சினமொடுவீரனின்றசெயலனைத்
தையுமேகண்டு
தனதனீசானனென்னுமிருவருந்
தாமேயஞ்சி
மனமயர்ந்தாங்குநின்றவீரனைவணங்
கியாமு
முனதடைக்கலமென்றன்னேருரைத்தனும
பயமென்றான் (87)

அருகிலவ் விருவர் தமமை நிறுவியாண் டகன்று நின்ற
பிருகுவைக் கன்னந் தன்னிற் குத்தினன் பின்னர்ச் செய்ய
மருமலர் மகளை வெண்டா மரைமலர் மகளைப் பற்றிக்
கரமலர் வருந்த வீக்கி யீர்த்தனள் காளி மாதோ. (88)

விஞ்சைய ரியக்கர் சித்தர் கின்னரர் கலுழ வேந்தர்
தஞ்சிரங் கரங்கள் கால்க டடிந்துவெம் போரி னுள்ள
மஞ்சினை விரைவிற் போக்கி யுருவமீந் தாண்மை வீரன்
மஞ்சுறு வுதிர வெற்றி வலம்புரி நாதஞ் செய்தான். (89)

திசைதகிர் சங்க நாத மிருசெவி வெதும்பக் கேட்டு
விசைகொ டெழுந் தரிபுள் செங்கட் கலுழன் மேல் விரைவி னெய்தி
வசைநகிர் முடைய தேவர் மாண்டதும வாணி செய்பாள்
புயத்திடைப் பணிப்பும் வீரன் புயவரை வலியு நோக்கி. (90)

திருமகள் கொழுநனை வீரன் றிருமுக நோக்கித் தக்க
னென்னவ னீமை செய்ய வுய்யுமோ பொறுக்க லாமோ
பொருவிலா விறலோய் நீபோ ரென்றலும் பொங்கு தீப்போல்
வீறிறிச் சிவந்து வீர னிளநகை புரிந்து கூறும். (91)

ஆண்மக னுனக்குக் காதற் பாவென வறைந்து பின்னர்த்
திரமுடை யுலகி டைசை செய்புநீ யிருந்த வைக
வரமுடைத் தேவர் யாருந் தன்மையும வாலாங் கொல்லோ
தாமுடைப் புகழ்சேர் வானோர் தமைப்புரந் திடவொண் ணாதோ

வசையுற விவவா றோது மாற்றமால் செவியிற் கேளா
விசையுடன் றிகிரி தன்னை விடுத்தலும வீரன் றோளின்
மிசைபுனை தலையி லொன்று விழுங்கின போது சென்னி
யசைதர வாளொன் றேச வதுபொடி பாடிற றன்றே. (93)

அக்கணந் தண்ட மொன்றை யேவினு னதுவும் பஞ்சா
யுக்கபின் பகழி மாரி பொழிந்தனன் பொழிந்த லோடு
மிக்கவெங் கணையி யான் றேவி விலையு மறுத்தம மால்கைத்
தக்கதோர் சங்கம பற்றிக் கொடுத்தனன் பூதர் தம்பால். (94)

---

(91) திருமகள்-இலக்குமி. கொழுநன்-கணவன்.

மாயவன் றானும் பின்னர்ப் பலபல வடிவ முற்றுக்
காயெரி யென்னச் சீறிப் பொருதனன் கனன்று வீர
னேயபல் லுருவாய் நின்று பொருதுபின் னெதிர்த்த மாய
னைப்புறு மாறு மார்பி லடித்தலு மயக்க முற்றான். (95)

மாதவன் மயக்க முற்ற வாறுகண் ணுதலு மோர்ந்தப்
போதுமை யொடுவெள் ளேற்றிற் றோன்றியே புலவர் தம்மைக்
காதிய வீரன் றன்னைத் திருக்கையா லணைத்த காலைத்
தாதவிழ் கடுக்கை வேணிச் சங்கர னடியிற் றாழ்ந்தான். (96)

அமலன் வெள் விடையின் மீதே யாங்கெழுந் தருளக் கண்டு
கமலநான் முகனு மாலுங் கற்பக நாட்டு வேந்துந்
தமதுமா மயக்க நீங்கித் தடங்கணி ரருவி சோர
வுமையொரு பாகா காவென் றோலமிட் டடியில் வீழ்ந்து. (97)

தேவர்கள் தேவா போற்றி செகப்பர பதியே போற்றி
பூவலர் கடுக்கை வேணிப் புண்ணியா போற்றி யாஞ்செய்
பாவமியா வையுமே போக்கும் பரஞ்சுடர்க் கொழுந்தே போற்றி
தாவறு கயிலை மேவுந் தாணுவே போற்றி யென்று. (98)

துதிபுரிந் திறைஞ்ச லோடு முமையவ ளிரங்கிச் சோதி
மதிகவழ் சடையி னானை வணங்கியென் னாதே புந்தி
துதியிழந் திழிவு பெற்று நொந்தன ரந்தோ வேறு
கதியில ரிவரைக் காத்துக் கருணைசெய் தருள்க வென்றாள். (99)

விமலையீ துரைப்ப வண்ணல் வீரபத் திரனை நோக்கி
யிமையவர் கமலை வாணி யிறந்துளோ ரிருந்து ளோர்க
டமையளித் திடுமா றீங்குன் றயுனை வேண்டி னுமளன்
றமலனு மருள வீர னமரரை யெழுப்பிப் போந்தான். (100)

ஈசனை யெய்தி யன்னோ ரிறைவனே போற்றி பாவ
நாசனே போற்றி முக்க ணாதனே போற்றி யன்பர்
நேசனே போற்றி யெங்கு நிறைபரம் பொருளே போற்றி
மாசிலா மணியே போற்றி வாதனே போற்றி போற்றி. (101)

---

(96)மாதவன்-அரி.(97)அமலன்-சிவபெருமான்.
(100)விமலை-உமையவள். கமலை-இலக்குமி. வாணி-நாமகள்.

தாமரைப் பொகுட்டின் மேவிச் சராசரம் படைப்பாய் போற்றி
காமரு துளவ மாலைக் கடவுளாய்க் காப்பாய் போற்றி
தேர்மறக் கடையில் வந்தே யாவையுந் துடைப்பாய் போற்றி
தேமலர்க் கொன்றை வேணிச் செல்வனே போற்றி போற்றி.

உற்பவ மிறுதி யென்னு மும்மையு மொழித்தாய் போற்றி
கற்பகக் கனியே போற்றி கறைமிடற் றவனே போற்றி
அற்புதச் சுடரே போற்றி யண்டநா யகனே போற்றி
தற்பரா னந்தா போற்றி சங்கரா போற்றி போற்றி. (103)

இன்னண மமரர் போற்றி யிறைஞ்சலு மிருக்கை நீங்கு
முன்னவன் றங்க ளெங்கே யென்றலு மொழிவான் வீர
னென்னவன் றலையை யன்னி பாதகன் றனைக் காலை யூட்டிச்
சென்னியு நைகின்ற தென்றலுஞ் சிரித்துப் பின்னர். (104)

பொங்குதெண் டிரையு லாவும் புணரிசூழ் கொடிய வைய
மெங்கணு நிறைந்த பேய வெம்பிரா னங்கு நின்ற
பங்கயச் செங்கண் மாயோ னயனாய்ப் பகரும் வானோர்
தங்களை நோக்கிச் சொல்வான் றண்ணருள் சுரக்கு மாதோ. (105)

புகழ்பெறு மகத்தி யாரு மூனவி பழுதை நோக்க
மிகழ்ந்தன னமைந்த போந்து மணக்கட வல்லி பெணைப்
பகருப திட்டதந் தேரன்ன பழிபவம் புரிகுதிர் பாவ
மகலுறச் சென்பி னீவி ருபயமா புரத்தி லன்றே. (106)

அங்கக ரிருந்தோ ராண்டு பூசிப்பீர் கமையொன் றருத்தப்
பொன்னமர் மார்பி னானை வேதனைப் புகன்று பின்னர்
மன்மத னிரதி மாது மதியுடுக் கணநிட் சேய
நன்னதி தனிற்ச வேத னினமா மலரா மன்றே. (107)

நந்துலா நதியின் பாங்கர் நான்மறை தருப்பை யாக
விந்திரன் சயந்த னிந்தி ராணிவெவ் வெயினா மாக
வந்துறு பிதிர்கள் கங்கா வயங்கெரி சுணங்க ளாக
வந்தகன் மன்றி யாக நிருதியோ ருழுவை யாக. (108)

---

(104 சென்னி - தலை.)

புனலிறை யெண்கா வாயுப் பொருந்தும்வெண் கழுக தாகத்
தனபதி நான மாகத் தக்கவீ சான னேறு
வினவுகின் னரர்கள் சித்தர் மிளிர்பசுங் கிளியாத் தக்கன்
புனையுமுத் தரவா யிற்கண் பொருந்திநின் றிடுபே யாக. (109)

அருக்கர்பன் னிருவர் தாழு நீபமா வருகி னின்ற
மருத்துமா மாமா வட்ட வசுக்கள்பூம் பனச மாக
வுருத்திர ரகிலாத் தக்க னுடைப்பெருந தம்பி மார்கள்
விருப்புறு வில்வ மாக மேருக்கன் மலைய தாக. (110)

வானுல குறையு மின்னு ரிலைகையா வயங்கு காம
தேனுவோர் சுரபி யாகத் திகழ்தரு கற்ப தாருத்
தானுமுள் விருக்க மாகத் தங்குக நெடுநா ளென்றைந்
தானன னுரைக்க வப்போ தக்கருந் தொழுது கூறும். (111)

அண்ணலே யுலகு தன்னி லவரவர் மனத்தி னுள்ள
வெண்ணமே புணர்ந்து நல்கென் றெனக்கருள் புரிந்தா யானும்
பண்ணிய பாவ மென்றோ வென்றுரு பகர நானக்
கண்ணுத லிரங்கி நம்பாற் களவென வருக வென்றும். (112)

உம்பருக் கருளு முன்ன முனக்கருள் புரிது மென்று
மெம்பிரான் கூறப் பின்ன ரிமையவ ரயன்மா லேனோர்
வெம்புமஞ் ஞானத் தால்யாம் புரிபிழை பொறுத்தல் வேண்டு
நம்பரா வென்னப் போற்ற நாயக னருளிச் செய்வான். (113)

ஒப்பரும் புகழ்சேர் தூய வுபயமா புரமென் றோது
மப்பெரும் பதியிற் சென்றே யமர்ந்திடு நீவிர் செய்த
தப்பரும் பாவந் தீர்த்துத் தமைப்புரந் திடுவோ மென்று
செப்பியே வீர னோடு மிறையவன் கயிலை சேர்ந்தான். (114)

என்பது சூதன் கூற விருந்தவ முனிவர் யாரு
மன்புடன் மகிழ்ந்து வாழ்த்தி யநாதிமா புரத்தின் காதை
யின்பவா ரமுதை யின்னு மெமக்கருத் துகவென் றோத
மன்பெருங் கருணை கூர்ந்து மாதவ னியம்பு வானல். (115)

தக்கன் வேள்விச்சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம்20க்கு-திருவிருத்தம்686.

### பதினொன்காவது



## கற்பகதருக் களாவான சருக்கம்.

### கலிவிருத்தம்.

மருக்கமழ் கொன்றையந் தொடையல் வானவன்
பெருக்குறு திருவருள் பெற்று வானிடை
யிருக்குமக் கற்பக மினிது வந்துபூந்
திருக்களா வாயதோர் சரிதஞ் செப்புவாம். (1)

வேறு

தருவைந்துங் களவாய்த் தலத்திடைவந் திடுதியென
வந்தளிப்பகா லஃதெழுந்தே யருட்குறிக்கீ சானமதின்
மந்திரிதண் களாவனமாய் வைகிப்பக்க களவினுடைய
பெருமைமையா மெடுத்துரைப்போங் கேண்மினுயர் பெரு
ந்தவத்தீர். (2)

உலகினுள கருமமெலா மொருகுழுவாய்த் திரண்டெழுந்தே
யலகிலபுகழ்க் களாவனமா யவதரித்தத் தெனவுதித்து
மலரிலைகள் கனிசாய்கள் கோடுபல வாகமலிந்த
முலவுநந்த கொரிசித்தாற் கொடுக்குநினைத் தனைவனைத்தும். (3)

அம்மலரினை றண்ணறவே யப்பேக மாகமலை
செம்மலுக்காச் சினைபாகச் செழுங்கனிநை வேதனமாக
கமழ்கைபோங் கிப்பசும்பூங் களவினிழல் கவிகைபதா
விம்மமது சாமவொலியே விருமபுறுமின் னிசையாக. (4)

கோடுகணின் றசைவதுவே குழகனது திருமுன்ன
மாடுறுநாட் டியமாக வளப்பரிய நெடுநாளன்
போடியர்பூ சனைபுரிந்தாங் கொருகாலஞ் சுராவடிவாய்
நாடரிய சிவன்றனையே தோத்திரஞ்செய் திடுமொன்று. (5)

முக்கணனக் களவினுக்கு முன்றோன்றி நீயுலகின்
மிக்கநெடு நாளிருக்க விளைந்ததுமுன் னுலன்றே

---

(2) கரு-கற்பகதரு. அருட்குறி-சிவலிங்கம்.
(5) கோடு-மரக்கொம்பு. சுரர்வடிவு-தேவர்வடிவம்.

வக்கதைபா முரைக்குதுங்கே ளமரரெலாம் பாற்கடலிற்
புக்கமுதங் கடைந்திடுமப் போதமுதத் துளிவீழ்ந்தே. (6)

சீர்திகழு மமுதபிந்து வெனச்சொலுமோர் திருத்தலத்திற்
கூர்சடுக்கொள் வதரியென நம்மருகிற குலவியநீ
யோர்பெறுகற் பகதருவா யிருக்கவிரும் பினையவ்வா
றூர்வமுட னீயிருக்கு மந்நாளி லொருஞான்று. (7)

இருமையுள சத்தியைப்பூ சனைபுரியா தெமைப்பூசை
புரிதலுற்றான் பிருங்கியுமை பொருபலவன் றன்னுடலிற்
குருதிதசை நாமபேவைபுந் தன்கூறென் றவர்கொளலான்
மருவுசத்தி யிலஞ்கி மனதின்மிகத் துயரடைந்து. (8)

புத்தியுளே மாயிருந்தும புகர்புரிந்தோ னெனக்கருதிப்
பத்தியுடன் மனவொருமை தானுற்றுப் பன்மலரா
சத்தியையு மெம்மையுமப் பூசனைபுரிந்தா னிலிங்கத்தி
னந்தநா ரீசுரனை வெழுந்துதெரி சனையளித்தேம். (9)

உற்றதனை நாரதன்று ணர்ந்துமக பதிதனக்குச
சொற்றனனங் கவனெழுந்து போந்தினனைந் தருவுடனே
நற்றளிர்நன் மலர்களினு னமைப்பூசித் திருந்தனைப
பொற்றருநன் னிழலளித்துப புரிந்ததெமக் குவகையரோ. (10)

மகபதிக்கு மேவணடிபல வரமளித்துத் தருவுடனே
புகவிடுத்தோ னு சுவர்க்கமதி னீமனதிற் புரிந்தபடி
யகல்விசும்பு தனிலடைந்தாங் கமரர்கோ னருகிருக்க
மிகவுமளித் திடுதருவாய் மேவுவா யெனவிளம்ப. (11)

வானவர்கோ னடித்தியமாம வாழ்வுடையோ னுதனினல்
யானிசையே னென் றுரைத்தா யித்தலம்போ கதைநல்கு
மானதனுற் றருவாய்நின் னடைந்காசை திருதிநம
பான்மிதுபோ கத்துடனே மோக்கமருள் பதியளிப்போம். (12)

புக்கிநீ வென் றுரைத்திடலும் போய்க்கருவா யிருந்துபின்னும்
தக்கமக சாபத்தா னீயுமிந்தத் தலத்திடைநம்

---

(7)வதரி-இலந்தை. (10)ஐந்தரு-சந்தானம்,
அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பக,மென்பன

பக்கலின்முட் களவாய்வந் தடைந்தனையாற் பரிவினுடன்
மிக்கவரம்வேண்டுகெனவிடைப்பெருமான்விளம்பினனால். (13)

ஐயவுன தடியிணையா னகலாதுற் றிடவுமிந்தச்
செய்யதலங் களாவனமென் றுலகமெலாஞ் செப்பவுமுன்
றுய்யபெயர் திருக்களா நாதனெனத் துலங்கவுநின்
மெய்யருள்செய் திடுகவெனக் களவுரைக்க விளம்புவனால். (14)

இப்பதியிவ் வுலகமிசை யிலங்குகளா வனமெனவே
செப்புதிநப் பெயர்படைத்துச் சிறந்திடுமெஞ் ஞான்றினுமே
யப்புநின்வேர் தனிலாட்ட வபிடேக நமக்காகு
மொப்பரிய பூசையுனைப் புரிவதெமக் குணவாகும். (15)

நமதுபெயர் திருக்களா நாதனென வுலகுரைக்குங்
கமழுநறுங் களாநாதனெனவொருகாற் கழறுவரே
லெமதெழுத்தைந் தினைப்பதினா யிரந்தரஞ்செப் புதற்கிணையா
மமைவுறுநல் விகபரசித் திமையுமினி தடைகுவரால். (16)

என்பதுமெய்ப் பெருமைப்பிரான் திருப்பெயரான வரமருள
வன்புடனக் களாமரமும் வணங்கியவண் ணமர்ந்துளதான்
பின்பொருவி பொன் னுலகினிடை விளங்கியகற் பகதருப்போ
லின்புறவேண் டினவெலா மிறைஞ்சுமடி யவர்க்களித்தே. (17)

வேறு.

நின்மல வடிவா யெங்கு நிறைந்ததெய்வம் பெருமான் கூற்றாற்
கன்மலை யாகத் தோன்றிக் களாவனத் தலத்தின் மேவிப்
பொன்மலை தவஞ்செய் காலைப் புனிதனை மிறைவி யோடு
நன்மழவிடைமேற் றோன்றி நல்குதும்வரங்கேளென்றான். (18)

என்னலு மிறைஞ்சி யெந்தாய் நின்னையே தெரிசித் தென்று
மன்னிவாழ்ந் திடவே யெற்கு வரமரு ளென்று வேண்ட
முன்னவ னதனை நோக்கி மொழியுமிப் பதியின் கீழ்பாற்
பன்னுமுக்குரோசநதன்னில் வரையுருப்படைத்துமன்னே.(19)

---

(15)அப்பு நீர்(17)அவண்-அங்கு.
(18)பொன்மலை-மகாமேரு.
(19)முக்குரோசம்-மூன்றுகூப்பிடுதூரம்-

பொருவிலிப் பதிக்குக் காவல் பூண்டுள தமுத பிந்தவ்
வுருவுடை யமுத பிந்து வொடுகலந் தெம்மைச் சேவித்
திருவமு தாச லப்பேர் படைத்தென வெம்மான் கூறி
யருளினன் மறைந்தான் மேரு விருந்ததவ் வாறு மாதோ. (20)

கற்பகதருக் களாவான சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 21 க்கு விருத்தம் 706.

---

திருச்சிற்றம்பலம்

## அரிபிரமாதியர் சாபந்தீர்த்த சருக்கம்.

---

தரவு கொச்சகக் கலிப்பா.

கரியவிட நுகர்ந்துமுனு ளமரர்தமைக் காத்தபிரான்
விரியுமலர்க் களவுறையும் வித்தகன்மெய்த் திருவருளால்
வரியளிமொய்த் திசைமுழக்கு மலர்த்துளவத் தொடைபுனைந்த
கரியயனு தியர்சாப மகன்றசரித் திரமுரைப்பாம். (1)

வேறு

மிக்கவருந் தவத்திலுயர் சூதனையம் முனிவர்மிக
விரும்பி நோக்கித்
தக்கன்மகந் தனிலடைந்த மாலயன்வா னவர்முனிவர்
சாப முற்றுப்
புக்குபய மாபுரியி லரியதவம் பூசனைகள்
புரித லோடு
மக்கணிவே ணியனவருக் கருளியவா றுரைசெயென
வறைய லுற்றான். (2)

அருநகரிற் கிருபைநதி யகன்கரையி லருமறைக
டருப்பை யாக
மன்னுமதி யுடுகளின மாகமருந் தவரிரண்டு
கோடி மாவாய்ப்
பன்னிருவெய் யோர்கோடி கடம்பாவெண் கோடி பலா
வசுக்க ளாகத்

---

(1) விடம்-நஞ்சு. அளி-வண்டு. அரி-விட்டுணு. அயன்-பிரமன்.
(2) உபயபுரி-இத்தலத்தின் திருநாமத்தொன்று. அக்கு-உருத்திராக்கம்.

துன்னுபதி னொருகோடி யகிலாக வுருத்திரனுந்
தோன்றி னால். (3)

சிறுவிதிதன் னிளையவரோன் பதின்மருங்கூ விளமாகத
தெளிந்த சிந்தை
யுறுபிருகு கடுக்கையதா வுயர்ந்ததவ முனிவரரா
யுள்ளோ ரெல்லா
மறுகதா வெச்சனும்வெள் ளெருக்காவேழ் கிரகமுமா
துளங்க மாக
நறவுமிழு மலர்ப்பகழி மதனுமிர தியுமாறு
நணுகி னால். (4)

மற்றுளயா வருமிருநம் பறவைமரங் கொடிபுதலா
வதிந்தா ராங்கே
கொற்றநெடு மாலயனு மிருவர்தந்தே வியரோடு
குலவி யேவந
துற்றுபய புரியில்விறற் கலுழனனத் தினைப்பூசைக்
குரியு வாய
நற்றளிர்மா மலர்கனிகள் கொடுவாரு மெனவேவி
நதியின் மூழ்கி. (5)

அநநதியி னிடைத்தருப்பை நளினமல ரெடுத்துமதி
யணியுந் தூய
மின்னவிர்செஞ் சடையிறைவன் சந்நிதியிற் போந்துகனி
விரைமென் போது
நன்னறவு களாவனத்தி லெடுத்தனமுங் கலுழனுமே
நல்க வாங்கி
வன்னமலர்த் தவிசுறையு மயிலனையா ருதவமன
மகிழ்ச்சி கூர்ந்து. (6)

(4)சிறுவிதி-தக்கன்.கூவிளம்-வில்வம்.
(5) கலுழன்-கருடன். அனம்-அன்னம்.செய்யுள்விகாரம்இடைக்குறை.
(6) நறவு-தேன்.

எண்ணரியநெடுங்காலம்விதிமுறையிற்பூசனைசெய் திருந்தா ரந்நா
ளண்ண றிருவுளமிரங்கியவர்க்கருளவேண்டியுமையவளோடெய்தித் [பை
திண்ணியவோர்வேடனெனவுருககொண்டுநான்மறையாந்திகழ்தருப
மண்ணினுறப்பரப்பியதிற்கரியுரியைவிரித்திருகண்வளர்வார்போல.

வேடுவமாதாகவந்தவுமைதனதுதிருவடிகண்மீதுகையா
லேடவிழ்வெண்கமலமலரெடுத்தணியக்கிடந்தனனவ்வேல்லைதன்னி
லீடரியும் வேதனுந்தண் புனலாடி மலர்தருப்பை நிமலர்க் காக
நாடிவரும்போதெயினன்கிடக்குநிலைமையைவிழியானன்குகண்டார்.

ஆடாவறிவிலோய்தரையின்மிசைகுசைபரப்பியதன்மேல் யானைப்
பாரவுரிவிரித்ததன்மேற்படுத்துமலரடிக்கணிந்துபழுதேசெய்தாய்
நீர்மலியும்வேணியனார்தமக்கானபொருள்கெடுததாய்நிமிடமொன்றிற்
கூர்திகிரியாலுனுயிர்குடிப்பனெனவரிமனதுகொதித்துச்சென்றான் (9)

ஆனகாலையிலுமையாம் வேடுவப்பெண் ணரியைமுக
நோக்கிக் கூறு
மேனடா சினந்துவந்தா யென்னலுமே தருப்பைதரை
யிடைப் பரப்பித்
தானதன்மேற் கரியுரியை விரித்ததன்மேற் சயனித்தான்
றாளின் மேற்செந்
தேனமர்பங் கயமலரைப் பறித்திட்டா யவனுயிரைச்
செகுப்பே னென்றான். (10)

கூறலுமே யுமையவளுங் குறுநகைசெய் திவ்வனம்யாங்
குலவுந் தான
மாறதனி லிப்பொருளுண் டாக்கினவ ரெம்புதல்வ
ராத லானீ
மீறுசினங் கொடுவருதன் முறையோவென் றுரைத்திடமான்
மேனுட் கிட்டாக்
காறனையே பிடித்திழுப்பத் துயினீங்கி விழிப்பவர்போற்
கடைக்க ணோக்கி. (11)

---

(7) கரியுரி-யானைத்தோல். (8) வெண்கமலம்-வெள்ளைத்தாமரை. எயினன்-வேடன். (9) குசை-தருப்பை. (10) பங்கயம்-தாமரை.
(11) குறுநகை-புன்சிரிப்பு.

என்னடா பிடித்திழுப்ப தெனவேடன் வினவவரி
யிசைப்ப தின்றித்
தனனிருகை யாற்புடைத்தான் சங்கரனென் றறியாத
தகைமை யாலே
கன்னவிறோள் வேடனெனுங் கடவுள்விளை யாடுதல்போற்
கமலக் கண்ணன்
றன்னையுறப் பிணித்திறுகக வவ்வமயத் தூற்றனன்வே
தன்றான் மன்னோ. (12)

வண்கரத்தால் வேடனையே புடைத்திடவவ் வெயினனுமவ்
விருவர் தம்மைத்
திண்கரத்தா லெடுத்தெறியக் களவின்முன்வீழ்ந்தனர்மயங்குஞ்
செயலை நோக்கி
வெண்கமலை திருமகளிச் செயல்விளைந்த தென்கொலென
வெருவி யேதங்
கண்கலுழ வுற்றனராக் கணத்தனமுங் கலுழனுமே
கடிதிற் போந்தா. (13)

ஆண்டுநின்ற வேடனுடன் போர்புரிய லுற்றனவப்
பொழுதவ் வேடன்
பூண்டசிலை நாணியினா லனங்கலுழனைப்பிணியப்
போகினனு
நீண்டதிருமாலுமுக்கட் கடவுளே யிவனன்றி
நினைக்குங் காலை
யீண்டெயின னல்லனிவ னெனவொருவ ருடனொருவ
ரியம்பும் வேலை. (14)

அண்ணறிருக் கருணைகூர்ந்த தவ்வெயின வுருவமொழித்
தரவப் பூணுங்
கண்ணுதலும் வெண்ணீறுங் கறைமிடறு மெண்டோளுங்
கையின் மானு
நண்ணியவோர் கரத்தின்மழு வாட்படையும் புலியதளு
நயந்தோர் பாலிற்
பெண்ணுமிலங் குறத்தோன்றி நின்றனனு லெமையாளும்
பெருமான் மாதோ. (15)

அருகுநின்ற தருக்குலங்கள் செடிபுதல்கள் கொடிபறவை
மிருகம் யாவு
மிருமிசும்பிற் றேவர்முனி வராகக் குசைமறையா
வெழில்வெண் கஞ்ச
மருவுமதி யுடுவாகத் தோன்றினவா யிடைக்கமல
மலரி னுனுந்
திருநெடுமா தவனுமிரு விழிகளிக்கக் கண்டுதுதி
செய்தார் மன்னோ. (16)

விண்ணவருக் கிறையவனே மெய்ப்பொருளே பகவமுக்கண்
விமலா தூய
தண்ணிலவு முடித்தசடைச் சங்கரா வெமைப்புரக்குந்
தலைவா வாசக்
கண்ணறும்பூங் களவிலமர் வெண்கனியே யருட்கடலே
கயிலை வாழு
மண்ணலே நான்மறையு மறிவரிய பரஞ்சுடரே
யரனே போற்றி. (17)

வேறு.

விரிந்திடு கொடிய பாசப் பிணிப்பினை விடுவித் தென்றும்
பரிந்தபல் பசுக்கட் கின்ப மளிக்குமோர்பதிநீ பாரிற்
புரிந்தநல் லுயிர்கட் கெல்லாம் பொதுநிலைச் சாட்சி யாக
விருந்தவைக் குள்ள கன்மப் பலனரு ளிறைவ னீயே. (18)

உரந்தரு புவன மெங்கு முயர்மலர் வாசம் போல
நிரந்தர நிறைந்து வாழ்வாய் நின்பெரு மாயை தன்னாற்
றிருந்துமிச் செகத்தை யெல்லா மயக்குவாய் சிந்தை யானே
பொருந்துமைந்தொழிலுஞ்செய்யும்புகழ்மிகச்சிறந்தோனீயே

எம்பெருந் தலைவ னாகி யெமைப்பணி கொள்வாய் நீயே
பம்புநின் பெருமை யெம்மா லறிதரும் பான்மைத் தாமோ
சம்புவேயாஞ்செய் குற்றம் பொறுத்தரு ளென்று சாற்றி
யம்புயத் தயனு மாலு மடிதொழ வமலன் கூறும். (20)

---

(16) கஞ்சம்-தாமரை.

சிறுவிதி யாகந் தன்னிற் சிந்தையுண் மகிழ்ந்து சென்று
பெறுமவிக் குவந்து நின்று பிழைமிகப் புரிந்தீ ரிங்கே
யுறுமனத் தன்பா லோராண் டுணவிலா திருந்து நம்மை
நறுமலர் கொண்டு பூசை புரிதரு நலத்தான் மன்னே. (21)

துன்னரும் பாவந் தீர்த்தேம் பிறநதுள சுரர்கள் யாரு
மிந்நகர் தன்னி லெம்மைத் தெரிசித்த வியல்பி னாலே
யன்னவர் பவமுந் தீர்த்தே மென்றறி யயனை நீவிர்
மன்னுறும் பதவி சேர்மி னெனச்சொலி மறைந்தான்மன்னே.

என்பது சூதன் கூற விருந்தவ முனிவர் யாரு
முன்பனை நோக்கி வானோர் முனிவரர் பிறவி மேவத்
தன்புரத் துடனே மாலும் வேதனும் போந்த தன்மை
யன்புடனருள்கவென்ன வவன்றெரிந்துரைக்கலுற்றான். (23)

ஐம்பெரும் புலனும் வென்ற வரியமா தவத்திர் கேண்மி
னும்பர்முற சனனந் தன்னி லுற்றவஞ் ஞானத் தாலே
பம்புறும் பிறவி யுற்றார் பங்கயத் தயனு மாலுந்
தம்புரத்துடனேபோந்தார் தமதுமெய்யுணர்வான்மன்னே. (24)

தெருமரும பிறவி யில்லை செங்கண்மா லயனுக் கென்றே
யருளொடு பகர்ந்து பின்ன ரன்புறு மனைவி யோடு
பெருமக பதிதான் வநதோ ரெயினனுப் பிறந்து நந்தங்
கருவைநா தனைப்பூ சித்த கதையொடுத் தியம்பு வானால். (25)

அரிபிரமாதியர் சாபந்தீர்த்தசருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் 22க்கு திருவிருத்தம்-731.

பதினொருவது

## இந்திராதியர் சாபந்தீர்த்த சருக்கம்.

---

தரவு கொச்சகக் கலிப்பா. வீ,

புயங்கமணி செழுஞ்சடையோன் புகழ்க்கருவைக் களவுடையா
னயங்குலவு பதம்பரவி நவையறுமிந் திரன்முதலோ

(21) அவி-தேவருண்டி. (22) சுரர்கள்-தேவர்கள். பவம்-பாவம்.

ருயங்குறுசா பந்தவிர்வுற் றும்பர்கோன் வாரணத்தால்
வயங்குகரி வலநகர்ப்பேர் வந்ததிருக் கதைபகர்வாம். (1)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தகவுறுதென் கருவைநகர்க் காவல் பூண்ட
தனியமுத கிரிக்கீழ்பா லெயினர் வாழு
நகரமது திட்டினிய மெனவொன் றுண்டந்
நகர்க்கரசன் காதகனென் றுளனோர் வேடன்
பகருமவன் றனக்கிடும்பி யென்னு நாமம்
படைத்தவொரு மனைவியுண்டு பால ரின்றி
மிகவருந்தி யென்செயலா மெனவவ் வேடன்
வினவவினத் தவரவற்கு விளம்பு வாரால். (2)

நமதுகுல தெய்வமெனுஞ் சாத்தன் றன்னை
நற்குகனைப பணிந்துதவ நன்கு செய்யி
னமதுமன மகிழுமகப் பேறுண் டாமென்
றுரைத்திடவாங் கிருந்தவரு ளொருவன் றன்மேற்
கமழுநறு மலர்ச்செண்டா யுதத்தை யேந்துங்
கடவுளுறுஞ்சன் னதமாய்க்கா தகனை நோக்கி
யெமதுபெயர் மூன்றுதலை முறைக்கு நீதா
னிடுவையெனிற் புதல்வரளித் திடுவோ மென்றே. (3)

கூறியவன் போயபின்னர்க் குமரன் சாத்தன்
குரைகழற்று ளிணைமலரைக கும்பிட் டேத்தி
மீறுமன துவப்புடன்றன் மனையிற் போந்து
மிக்கவெழின் மனைவியொடு மேவி வாழ்நா
ளாறணிசெஞ் சடைககடவு ளருளாற் றக்கன்
யாகசா பத்தால்வந் தமரா கோமா
னூறுமலர்க் குழலிடும்பி யான வேட
நங்கைவயிற் றிடைச்செனித்தான் றிங்கள் பத்தும். (4)

(2) கிரிக்கீழ்-ஐந்தாம்வேற்றுமையுருபுத்தொகை.

போனபின்கா தகன்மனைவி யெவரு மெச்சப்
புதல்வனையீன் றெடுத்தனளப் புதல்வன் றன்பேர்
தானருமை யாகவே காரி யென்று
சாற்றிவய தைந்தில்வின் னூல் கற்பித் திரெட்
டானவய தினில்வதுவை முடிப்பா னெண்ணு
மகத்திடைவைத் தனன்சசிபவ் வரசன் றேவி
தேனமாபூங் குழலிடும்பி முன்னே னென்னுஞ்
செகன்மனைவி சுனிக்கருமைச் செல்வி யாக. (5)

பிறந்திரா சேநதிரியென் றொருபேர் பூண்டு
பெருமையுடன வாழ்நதிருக்கு மங்கா டனனிற்
சிறந்தபுகழ்க் காதகனக் காரிக் கந்தச்
சேயிழையை வதுவைசெய்யச் சிநதை யுன்னி
மறந்தருநற் கருவிபுவி நகங்கள் சங்க
மணிகள்பல பரிசமெனக் கொண்டவ் வேடர்
செறிநதபெரும படையுடன்கா தகன்றன் செல்லச்
செகனுமெதிர் கொண்டழைத்து மனையிற் சென்று. (6)

கொண்டுவநத பரிசமெலாங் கைக்கொண் டேதன்
குலமகளைக் காதகன்றன் குமா ரனை
திண்டிறல்சேர் காரிதனக குவநது நல்கச்
சிநதைமிக மகிழ்ந்துமணஞ் செய்வித் தந்த
வண்டுறையுங் குழலிரா சேநத்ரி யோடு
மைந்தனொடுந தன்மனையிற் போந்து வாழ்நா
ளொண்டொடிதன் வயிற்றினின்முன் வினையாற் காரிக்
கொருமகவாய்ச் சயந்தனுமவந் துதித்தான் மன்னோ. (7)

காரியுந்தன் புதல்வனுக்குச் சாத்த னென்றே
கருதியொரு நாமமிட்டு வாழு நாளிற்
கூரிலைவேற் காதகன்மூப் படைந்து காலங்
கூடியிறந் தனன்வேடர் குழாத்தி னோடுஞ்

[5] வதுவை-விவாகம்.சுனி-வேடப்பெண்ஒருத்தியின்பெயர்.

சீரிசையும் பலவளமுஞ் செழித்து மிக்க
சிறப்புமிகுந் திரவிகதிர் செல்ல வொண்ணு
வாரணியந் தனைப்பரிபா லனஞ்செய் தேநல்
லறிவுடனக் காரியமர்ந் திருநதா னன்றே. (8)

சிறுவிதியுத் தரவாயி றன்னிற் பேயாய்
நின்றனன்றே யுவுந்தனது தேவி யென்னும்
பெறலருஞ்சீர்ச் சுவாகையொடு ஞமலி யாகப்
பிறந்தனன்றா மோரணையாம் பெண்ணி னோடு
மறலிபன்றி யாய்ப்பிறந்தா னுக்ரி யென்னு
மனைவியுட னிருதியும்வல் லுழுவை யாகப்
பிறவியுற்முன் வாருணியாந் தெரிவை யோடு
பிறங்குபுகழ் வருணனெண்காப் பிறநதான் மன்னே. (9)

வாயுவுந்தன் மனைவியெனுந் துரோணி யோடு
வன்கழுகாப் பிறந்தனன்கு பேரன் முனுந்
தூயபுகழ் மனைவிசுப்ர கூயை யோடு
துலங்குபெருஞ் சிறப்புறுகத் தூரி யாக
மேயினனீ சானனுமா வினியென் றோது
மின்னனையா ளுடனேமுய்ப் பிறந்து போநதா
ஞயவர்வா கனங்களுமங் கவரைப் போல
வவதரித்த வின்னமும்யா மறையக் கேண்மின். (10)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிதிர்கள்வெண் கழுகே யாகப் பிறந்தனர் பஞ்சதாருப்
பதியிறை கயங்காட் டானை யாகவுற் பவித்த தந்தத்
துதிகொள்விஞ்சையர்கள்சித்தர் சுகங்களாப்பிறந்தார்பின்னர்
விதியினுற் காம தேனுப் பிறநததை விளம்பு வாமால். (11)

அந்நகர்த் தலத்தில் வந்துற் பவித்ததா லருணிட் சேப
நன்னதி தன்னிற் முன பானஞ்செய் நலத்தா லன்னோர்
மன்னுபூங் களவி னீழல் வைகுபால் வண்ண நாதன்
பொன்னடி பூசித் தேத்துங் குணமிகப் பொருந்தி னூரால். (12)

[9] சிறுவிதி-தக்கன். [11] கயம்-யானை. சுகங்கள்-கிளிகள்.

தத்தைக ளீசன் பாதந் தனைத்துதி செய்துபோற்றும்
பத்தியாய் ஞமலி தானும் வலஞ்செய்து பரவி யோநா
னந்தினை நான மாவு நாதனுக கணிபு மெண்கோ
டொத்தபே ருழுவை பன்றி பறவைமற் றுள்ள வெல்லாம்.(13)

பரமனுக் குரிய வாய பணிசெயுந் தந்தி வெய்யோன்
விரிகதிர் படாது பந்தர் தருக்களான் மிடையச் செய்து
திரமுறு மரணை னத்தான வேலியு மமைத்துச் சிந்தை
யொருமையினிறையைச்சூழ்வநதுணர்விஞைதியிற்போந்து.

றுன்றுநீ ராடி யேதன் றுதிக்கையாற் புனலை வாரிச்
சென்றுநல்லபிடேகந்தான் செய்துபன்மலர்கள்சாத்திக்
குன்றவிற் பிடித்த முக்கட் குழகனைப் போற்று மவ்வா
றென்றுமக்களாவனத்தி லிருக்குமந்நாளிலோர்நாள். (15)

காரியா கியவவ் வேடன் கானவர் குழாத்தோ டுந்தன்
னோர்மக வான சாத்த னோடுமத் தென்பா லுள்ள
வாரணி யதநில வேட்டை யாடவந் தவ்வ னத்திற்
சீரருள் கனிசுவேதச்சிவக்கொழுந்தினைக்கண் ணுற்ருன். (16)

காண்டலு மெய்யன் புற்றுக் காதலி ஞலங் கெய்தி
யிண்டரன் றன்னைப் பூசை யியற்றிஞர் யாவ ரென்றே
யாண்டநா யகனைத் தானு மவ்வணம் பூசித் தேத்தப்
பூண்டபேரன்பாற்கங்கைப் புனலிடைமூழ்கச்சென்ருன். (17)

அநநதி யாடிக் கங்கை யரும்புன லெடுத்து வாசப்
பொன்னிணர் தளிர்கள் கொய்து பூங்களா நீழல் வைகு
மின்னவிர் சடையி ஞனை விதியிஞ லருச்சித் தேத்தத்
தன்னக மகிழ்ச்சி கூர்ந்து சன்னிதி தன்னிற்போநதே. (18)
புனலபி டேகம் பண்ணிப் போதுகண் மிகவுஞ் சாத்தி
மனதுவப் போடு நல்லூன் மதுக்கனி நைவே தித்துத்
தினமுநற் பூசை செய்யச் சிந்தையி லன்பு பொங்கிப்
பணிமதிச் சடையி ஞன்பாற் பத்தியே முதிர்ச்சி யாகி. (19)

[13] ஞமலி-நாய்.

என்னையா ளுடையான் பக்கன் மிருகங்க ளெய்து மென்று
தன்னறி வதனு லுன்னிக் கண்டகத் தருக்க ளாலே
துன்னரி தாய வேலி சூழவே யிட்டோர் வாயின்
முன்னமைத்ததற்குச்சாத்துமுட்படலொன் றுண் டாக்கி. (20)

பத்திரஞ் செய்து வைத்துப் பதிபுக வினைத்தோர் கூடிப்
பித்தனு யினனந் தோறம் பெருங்குலத நாச னென்றே
யத்திற மவனை யீன்ற வன்னையி னிடத்திற் சென்று
சத்துரு வனையார் போலத் தகாதன சாற்று கின்றார். (21)

வனத்தினின் றிடுமோர்வெள்ளைக் கல்லினைமனத்தினாலே
தனிப்பெருந்தெய்வமென்று நினைத்துநற்சலத்தினாலும்
கனத்தசை யாலும பூசை செய்கின்றான் காரி தானென்
றினத்தவர் புகல வன்னேன் றாயெனு மிடும்பி கேளா. (22)

மைந்தனை நோக்கி நீயும் வனத்திலோ ரிலிங்கந தன்னைச்
சிந்தையின்விருபபாற்பூசை செய்கின்றாயென்றுகேட்டே
னுந்தைநம் வனத்தி லேயோ ரிலிங்கமுண் டென்று கூறி
யந்தமா விலிங்கந் தன்னை யருமபுன லாட்டி மன்னே. (23)

கானமர் மலர்கள் சாத்திக் கருத்திடை விருபப முற்றுத்
தேனொடுதினைமாநைவே தனஞ்செய்துநினமும்போற்றி
யானதோர் வழிபா டுற்றான் பழுதிவ ரறைநதார் முககண்
வானவ னவனே யென்று மைநதனுக் கியம்பி னளால். (24)

அத்திறங் கேட்ட காரி யகமகிழ்ந் தன்பு கூர்ந்து
பத்தியாய்த் தானு மந்தப் படியருச் சனைசெய் கின்ற
புத்திய னனன் கங்குற் போதிடை மிருகம் யாவு
நித்திய பூசை செய்யுந் திறமினி நிகழ்த்து வாமால். (25)

பன்றியோ டுழுவை யெண்கு பறவைகள் யாவும் போந்து
வென்றிகொண்மழுவாளேநதும் விமலனைப்பூசித்தேத்தத்
துன்றிவந் தடைந்து வேலி சூழ்ந்திருப் பதனை நோக்கி
வன்றிறல் வேடர் நம்மைப் படுத்திட வளைத்த தாமால்.

---

(20) கண்டகத்தரு - முண்மரம். (22) கேளா – கேட்டு.

என்பதோ ரைய முற்றே யிறைவனைப் பூசி யாமே
யின்புறப் புசிப்ப தில்லை யெனவுள மருண்டு வெந்
துன்புடன் வேலி தன்னைச் சூழ்ந்துசூழ்ந்த கயருங்
யன்புட னரனைப் பூசித் தடிதொழக் கருதி மாதோ. (27)

வாலிப மான தாங்கே வநதுழுன் காரி யிட்ட
வேலியை யுறித் தூட் புக்கு விமலனைப் பூசித் தேகச்
சீலமாய்ப் பின்னர் வேங்கை சினங்கொளொண் கேனம யா
மேலுமந் நெறியே சென்று பரமனை யிறைஞ்சி யேத்தி. (28)

பறவைகண் மிருகம யாவும் படர்மத கரியை நோக்கி
யிறைவனை யாங்கள் பூசை யியற்றிட நெறியுண் டாகக்
குறைவுறச் செல்வ பெற்றக் கொடுத்தனை பிரிவில் லாய்
துறைவம்யா மெல்லா மிந்த வனத்திலென் றுவந்து பேசி. (29)

பகைத்திற நீங்கி யாவும பரிவினோ டிருநதெந் நாளுஞ்
செகப்பசு பதியைப் பூசை செய்தைற் கிடையூ றற்று
லகற்றியே பூசிப போமென றவையவை யினிது வாழு
நகத்தில்வெவ்வனத திற்சென்ற நள்ளிருணீங்கிற்றன்றே. (30)

ஆதவ னுதயஞ் செய்த காலையிற் காரி யானோன்
றாதைபூ சித்த வண்ணந் தாயுந் தேகஞ் செய்பவ
போதமா யுணர்நது கேயப புனையிலை புகல்ல தோடு
காதன்மீக்கூர்ந்துமுக்கட் கடவுடன்றிருமுன்போநது. (31)

முரணுறச் செய்த வேலி முழுநுமே யழிந்த தன்னி
யாரணழித் திலைநு செய்தார் யாவரென் றழுங்கிக் கூர்முண்
மாநனி யிட்டு வேலி முன்னினு மலியச் செய்து
புரமெரித் தவனைப் பூசை புரிந்திடு கருத்த னானான். (32)

புரிந்திடு கருத்த னாகிப் புனலபி டேகஞ் செய்து
திருந்துபன் மலர்கள் சாத்தித் தேன்றினை மாவிற் பெய்து
விரிந்தசீர் நறுங்க ளாவின் மென்கனி விரவிச் சேர்த்துப்
பரிந்துநை வேதித் துள்ள முருகியே பணிநது போற்றி. (33)

(30) நகம்-மலை. (31) போதம் - ஞானம்.

சேயிழை மனையி ராசேந் திரியொடும் புதல்வ னோடு
நாயகன் சேட மான மாவினை நயந்து துய்த்தே
யேயுறு மேலைக் குன்றி லிரவியுற் றிடுகா லத்திற்
போயினன் பதிக்குக் கங்குற் போதிடை மிருகம் யாவும். (34)

வந்தான் றன்னைப் போற்றி வழிபட வடைத்த வேலி
சிந்திய நாதன் பூசை செய்துசென் றனவக் காரி
யந்தமில் லவனைப் போற்றக் காலையி லடைந்தே யன்பால்
வெந்திறற் களிறு சாய்த்த வேலியு மமைத்து மன்னோ. (35)

பூசனை புரிந்து சென்றான் போதக மிருகம் யாவு
மீசனைப் பூசித் தேத்து மிரவிடைத் தினமுங் காரி
நேசமோ டெழுந்து காலை நிமலனைப் பூசை செய்வான்
மாசிலான் றனையிவ் வாறு வழிபட்டே வருமந் நாளில். (36)

மாதுல னெனவே யோதுஞ் செகனோடு மள்ள ரோடுங்
காதல னாய சாத்த னோடுமக் காரி போந்து
தாதலர் கடுக்கை வேணிச சங்கரன் றன்னைப் பூசித்
தோதருஞ் சாப நீங்கு மூழினா லிரவிற் றங்கி. (37)

இருந்துகானகத்தில்வேட்டையாடுவானெண்ணிச் செல்லப்
பெருந்திறற் களிறு நாதன் பூசனை புரியப் போந்து
விரிந்தமெய் யன்பி னோடு பூசனை புரிந்து மீளத்
திருந்துகூ ரிலைவேற் காரி திண்மத கரியைக் கண்டான். (38)

மற்றுள மிருகம் யாவும் வனத்தினில் வேடர் செய்ய
லுற்றபே ரொலியி னாலே நடுக்கமுற் றோடிப் போந்து
கற்றைவாசடையான்பூசை செயுங்கருத்தழிநதெம்மானைச்
சுற்றிய வேலி தன்னுட் டுயருழந் திருந்த மாதோ. (39)

மிக்கவக் காரி வேழ முதற்பல மிருகம் யாவும
பக்கநின் றிடுத னோக்கி ஞமலியைப் பாசம் வாங்கித்
தக்கதோர் களிற்றின் மீது விடுத்தலுந் தந்தி சீறப்
புக்கனஞாளியெல்லாம் வெருவியேமீண்டபோழ்தில். (40)

---

(35) களிறு-யானை. (37) காதலன்-மகன்.

சாத்தனக் களிற்றை நோக்கி நடந்தனன் காரி தானும்
பார்த்தவன் றன்னை நீநில் லென்றுவிற் பற்றி யம்பு
கோதறுவா ரணத்தின் மீது விடுத்தலுங் கொடிய பன்றி
யார்த்தவன்பதத்தைக்கோட்டாற்பிளந்திட வன்றேன்சீறி.

கணையொன்று விடுத்த லோடும் பன்றியுங் கலங்கி யேக
வணையும்பெண் பன்றி மீதே யடற்கணை யேவி யாதப்
பணையொன்றுதிரட்டோட்காரிவதைத்தலுமதனைப்பார்த்தவ்
விணைகொண்டகோட்டுப்பன்றிமீண்டதாலெதிர்த்துமாதோ. (42)

சீறியே காரி யென்னச் செப்புமன் னவன்மேற் சிந்தை
மாறுகொண் டெழுந்து போந்த வராகமும் புலிமுன் னாய
வீறுகொண் மிருகம் யாவும் வீந்திடக் கணைக ளேவிக்
கூறுமக் காரி நின்றான் குலவுபல் படைக ளோடும். (43)

மணங்கமழ் வனத்திற் சிந்தை மகிழ்வொடு நின்ற காரி
குணங்கொண்மாதுலனென்றோது செகன்றனைக்கொடியஞாளி
யிணங்குகந்தரத்தைக்கவ்விக் கொன்றதவ்வெல்லையந்த
வணங்குவான்ஞமலியைப்பெண் சுவாவொடுமாய்த்தானன்றே.

வெஞ்சின மிருகத் தாலே யிறந்தனர் வேடர் பல்லோ
ரெஞ்சின வேட ரோடி யிடும்பியா னுடைய முன்னோன்
றுஞ்சினன் காரி தானு மிருகத்தாற் றுஞ்சு வானென்
றஞ்சிடச் சொல்லி ராசேந் திரியுட னவளங் குற்றாள். (45)

காரியு மவர்க டம்மைக் கண்டவ ணின்மி னென்று
போர்மத கரியின் மீது கணைமழை பொழித லோடு
மூரிவெங் களிறி ராசேந் திரிசுத னிடும்பி மூவ
ராருயிர் மடிய வேதன் றுதிக்கையா லடித்துப் பின்னர். (46)

நின்றவோர் காரி யைக்கைந் நீட்டியே பற்றி யீர்க்க
வென்றிகொ ளன்னோ னந்தக் கைவழி விரைந்தே யேறி
வன்றிற லுடைய வேழ மத்தகத் திருக்கும் போழ்தி
லொன்றிய வவனை வீழ்வா னுதறிடப் புவியி லுற்றே. (47)

---

(41) கோடு - கொம்பு. (44) மாதுலன்- மாமன். ஞாளி- நாய்.
கந்தரம்- கழுத்து. (46) மூரி- வலிமை.

கோட்டினை வாளி னாலே கூறுசெய் தெடுத்துக் கோட்டாற்
றூட்டுணை நகத்திற் காரி யடித்தனன் றந்தி தானு
நாட்டமூன் றுடைய ஞான நாயகன் றனக்கே யாங்குப்
போட்டவேலியினைச்சூழ்ந்துவருதலும்புடைத்துப்போந்தான்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

போதகமும் பொறிகலங்கி மயங்கி யேதான்
புவிதனிலே படிந்திடவும புடைத்துப் போந்த
காதகன்றன் புதல்வனுக்குங் கரிக்கு நாபபண்
கையின்மழு மானுநுதற் கண்ணுஞ் செய்ய
தாதலர்பூங் கடுக்கையணி சடையுந் தோன்றத்
தந்திமுகன் சண்முகன்மா நந்தி யோடு
நாதனுமை யொருபாக னாகி யந்த
நரைவிடைமே லெழுந்தருளித் தோன்றி நின்றான். (49)

கண்ணுதலங் கெழுந்தருளி நின்ற போழ்திற்
காரிமக பதியானான் கடக்கை வேழம்
விண்ணவர்கோன களிறாய்ப்பின் றதுவி யாசேந்
திரிபுலோ மசையெனவே மேவி நின்றா
னெண்ணுமவ னிறந்தமிரு கங்கள் யாவு
மிமையவரா யினகாரி மகவாஞ் சாத்தன்
றண்ணரிய மலர்ப்பாரி சாத மாலைத்
தடவரைத்திண் டோளுடைய சயந்த னானான் (50)

அருங்கொடிய பாவமெலாந் தீர்த்தே நீவி
ரடைமினும துலகெனவா னவரை நோக்கிப்
பெருங்கருணை யுடனிறைவன் சொலவவ் வேலை
பிறைநிகர்நாற் கோட்டுமத கரிதான் போற்றி
நெருங்குதிரைக் கடல்விடமுண் டவனே யெந்தாய்
நினைநானென் பொடுவலம்வந் திடலா லிந்தக்
கருங்களா வனத்தலத்துக் கெந்த ஞான்றுங்
கரிவலநன் னகரெனும்பேர் துலங்கல் வேண்டும். (51)

49 போதகம்-யானை. 50 கடம்- மதம். புலோமசை-இந்திராணி. வேழம்-யானை.

விரிபுவியெங் கணுமெனவெண் டுதல்செய் காலை
வெள்ளைவா ரணமதனை விரும்பி நோக்கி
யரியயன்முன் றேடியறி வரிய பெம்மா
னன்பொடுவெண் டியவார்த் தலத்தி னுக்குக்
கரிவலநன் னகரெனும்பே ரிந்தோ மென்று
கழறிமறைந் தனனுமையாள் புதல்வ ரோடுந்
தருவுறையிந் திரனயிரா வதத்தி லேறிச்
சார்ந்தனன்வா னவரொடுவிண் டலத்தின் மாதோ. (52)

அறுசீர் விருத்தம்.

கருவையென் றொருகா லோதுங் கருத்தின ருலகிற் போந்து
கருவையென் றுநதான் மேவார் கயிலையே காணி யாக
மருவிவீற் றிருப்பர் கைமமா வலநகர் மகிமை வேத
னரிமுதற் றேவ ராலு மறிவரி தாய தம்மா. (53)

எனமுனி வர்கோன் சூத னிசைத்திட வினிது கேட்டு
முனிவரர் மகிழ்ந்து போற்றி மூதறி வுடையோய் சிந்தை
கனிவுறப புகன்ற யந்தக் கருவையம் பதியின் காதை
யினமுள வெல்லாங் கூறு கென்றலு மியம்பு வானல். (54)

இந்திராதியர் சாபந்திர்த்த சருக்கம்.

முற்றிற்று.

ஆ சருக்கம் 23க்கு திருவிருத்தம் 785.

---

(54) இன்னம்-இனமெனநின்றது. செய்யுள்விகாரம்இடைக்குறை.

## பதினேழாவது

## சூரியன்பாவந்தீர்த்தசருக்கம்.

கலிவிருத்தம். -இ-

சகலமன் னுயிர்க்குமோர் தாய்நி கர்த்துளான்
புகலருங் களாநிழற் புனிதன் முன்னைநாட்
பகலவன் றனைத்தொடா பாவ மானதங்
ககலுறச் செயுங்கதை யறைகு வாமரோ. (1)

கொச்சகக்கலிப்பா.

பொங்குகடற் பாரமுழு தும்போர்த்தவிரு ளோடவிண்ணிற்
றங்கியவோ ராழித் தடந்தோ மிசையுலவுஞ்
செங்கதிரோன் றன்பாற் சிலவே தியர்விரும்பிப்
பங்கமற வேதம் படிப்பா னடைந்தனரால். (2)

ஆதவன்றன் பாங்கரடைந் தன்னோ ரினிதுரைக்க
வேதமதை யாங்கே படித்துவரும் வேலைதொறு
மோதுகதி ரோன்றே ரொலியா லினியசுரம்
பேதமுற வேபடித்தா ரந்தோ பிழையுணரார். (3)

சின்னாட் கழிந்தபின்னர்ச் செங்கதிரோன் வேதமதை
முன்னா முரைத்த முறைபோன் மொழியாமே
சொன்னா ரிவர்தாஞ் சுரமவழுவி யென்றுதெரிந்
தன்னார் தமைமீச ராகவென வேசபித்தான். (4)

செய்யமறை வேதியர்தாஞ் சிந்தைமிக வேவருந்தி
யையவுணர் விலரா வடியேம் பிழைபொறுத்திவ்
வெய்யபெருஞ் சாபம் விலக்கியரு ளென்றருணன்
றுய்யமலர்த் தாளிணையில் வீழ்ந்தார் தொழுதனரால். (5)

(3) வேலை-காலம். அந்தோ-இரக்கப்பொருளுணர்த்திநின்றதோரிடைச்சொல். (5) ஐய—விளிப்பெயர். ஐயனேயென்பது பொருள்.

இன்னல்பெரி துற்றங் கெழில்சேர் தனுதிருப்
பொன்னடியில் வீழ்ந்திறைஞ்சும் பூசுரரைத் தானோக்கித்
துன்னுதிரை வாரிசூழ் தொல்லுலகில் யாவருக்கு
மன்னுதிருக் கண்ணனையான் சொல்வான் மனதிரங்கி. (6)

நண்பகற்கா லத்தினிடை நாழிகையோர் மூன்றுவரை
பண்பில்புலைத் தன்மை படைத்துத் தினந்தோறுந்
தண்புனலின் மூழ்கித் தனிப்புனித ராவீரென்
றெண்பகலோன் செப்ப மறையோ ருளமகிழ்ந்தார். (7)

மேதினியில் யாவும் விளக்குகதி ரோன்றனது
சோதி குறைந்திடலுந் துண்ணென் றுளம்வெருவி
வேதியரை யாஞ்சபித்த வாற்றான் விளைந்ததெனை
வாதிமுடி வில்லா னமர்கயிலை யுற்றனனால். (8)

அறுசீர் விருத்தம்.

தொக்கசீர்க் கயிலை யுற்றுச் சுருதியு மறித றேற்று
முக்கணா னிருபொற் பாத முடிமிசைப் புனைந்து போற்றித்
தக்கமா மறையோர் தம்மைச் சபித்தவெம் பாவந் தீர்வான்
மிக்கநற்கருணைசெய்தல் வேண்டுமென் றிரந்தான் மன்னோ. (9)

சிந்தையுள் ளுருகிப் போற்றுந் தினகரன் றன்னை நோக்கி
யெந்தைநற் கருணை கூர்ந்தங் கியம்புவா னீதான் செய்த
நிந்தைகொள் பாவ நீங்கி நிறையொளி பெறுதல் வேண்டின்
விந்தைசேர்பொதியமென்னும் வெற்பினுத்தரத்தின்மாதோ.

மைக்கடற் றனை சுற்றும் வையகந் தன்னில் யாருந்
தெக்கண கயிலை யென்றே சிந்தையில் வியந்து போற்றத்
தக்கதோர் சிறப்புற் றோங்குந் தண்களா வனமொன் றுண்டா
லக்களாவனத்தின்கீழ்பா லமையுமுக்குரோசந்தன்னில். (11)

வன்றிற லமுத பிந்து வொடுகலந் தழகு வாய்ப்ப
வீன்றது மேரு வென்னு நெடுங்கிரி யதனை யாரு

(6) இன்னல்-துன்பம், எழில்- அழகு.

பொன்றிய வமுத வெற்பென் றுலகதுரைத் திடுவ ராங்குச்
சென்றுநீ யந்த வெற்பின் சாரலிற் சேர்ந்து மாதோ. (12)

அந்தமால் வரையின் மேலபா லருணதி தன்னிற் றோய்ந்து
சிந்தையின் மகிழ்ந்தி லிங்கப பிரதிட்டை செய்து பின்னர்க்
கந்தமார் களாவ னத்தெங் கருணைமா விலிங்கந் தன்னை
யுகநுமோ ராண்டு காறு முளுற்றுபூ சனைநீ யென்றான. (13)

செப்பிய விறைவன் செமபொற் றிருவடி வணங்கி மீண்டு
தபபிலா வமுத வெற்பின சாரலின் மேல்பான் மேவு

மெய்ப்பிர திட்டை செய்து விருமபியோ ராண்டு காறும். (14)

வாசமென் மலாக்க ளாவின் மன்னிய சிவலிங கத்தைப்
பூசனை புரிந்து வைகும போதிலங கொருநா ளநதத
தேசுறு சிவலிங கததி னினறுபல செகததை யீனற
பாசிளங் கொடியி னோடு தோன்றினன் பரமன் மாதோ. (15)

எழுசீர் விருததம

தோற்றிய பெருமான றனறிரு வடிவுந
துலங்குறக் கண்டுகண் களிததுப
போற்றினன் சரணும புயத்துணை மலரைப
புனைநதனன றன றிரு முடிமேன்
மாற்றின னிதயத துறறவோர் துயரை
மகிழ்ந்தன னின்றனன் முன்னுட்
கூற்றினை யுதைத்தோ னவனமுக நோக்கிக
கூறுவன் றிருவருள் கூர்ந்து. (16)

மறையவர் தமைநீ சபிததசா பத்தால்
வந்தோர் பாவநீக கினம்பாங்
குறைவில்பே ரொளிநீ பெறுகவென் றுரைத்துக்
கூறுவான் பின்னுநீ தோய்ந்த
வறைதரு தீர்த்தஞ் சூரிய தீர்த்த
மாகநீ பூசனை புரிந்த

(13) அருணதி - இருபாநதி. காறு - அளவு.

நிறையிலிங் கஞ்சூ ரியலிங்க மெனவே
 நீணில மிசைவிளங் குகவே. (17)

ஈடியன் மகா சங்காரந் தியினு
 மிரதசத் தமியொனுந் தினத்து
நாடிய வேளை நாளெவற் றினுமே
 நவிறரு மப்பெருந் தீர்த்த
மாடியவ் விலிங்கந் தனையருச் சிப்போ
 ரருமபவ நீங்கியிம் மையிற்சீர்
கூடிய பல்போ கமுமிக நுகர்ந்து
 மறுமையி லெமையடை குவரே. (18)

என்றுகூ றலுமே யென்றுதா னிறைஞ்சி
 யென்றுநா னுன்னரு கிருப்பா
னென்றுமே யருணீ புரிகவென் றிரப்ப
 வுயர்வுறு நந்திருக் கயிலை
சென்றுநீ விமான மாகியுற் றிடுக
 சில்பகற் பின்னரித் தலத்தின்
மன்றல்கூர் களாவி னிலிங்கமா கியநந்
 தமகருநீ டர்னமா குவையால். (19)

எனவுரைத் திறைவ னவ்விலிங் கத்தி
 னிடைத்திரு வுருக்கரந் தனனே
மனமுவந் திரவி நிறையொளி விரவி
 வளர்திருக் கயிலைசென் றெய்திச்
சினமிகு மவுணர் புரநகைத் தெரித்தோன்
 றிருப்பெருஞ் சந்நிதி தன்னிற்
கனமுறு விமான மாகிவீற் றிருந்தான்
 கருத்திலன் புறச்சில காலம். (20)

இன்னணங் கதிரோ னிருந்திடுங் காலை
 யெழின்மிகுங் கற்பக நாட்டுப்
பொன்னகர்க் கிறையோ னொருதினத் தெம்மான்
 பொற்பத சேவைசெய் திடுவா

---

(18) ஈடி-பெருமை. [19] என்று-சூரியன், இருப்பான்-வினையெச்சம். இருப்பதற்கு என்பது பொருள். மானம்-விமானம்.

னுன்னின னடைந்தான் கயிலைவா ழிறையோ
னுயர்பதம் பணிந்துபின் னிறையோன்
சன்னிதி தன்னிற் றிகழுமவ் விமானந்
தனையவன் பார்த்திது பகர்வான். (21)

ஐயநீ யுறையுங் கயிலைவா யிலினுன்
னரும்பெறற் சந்நிதி தன்னின்
மையில்விண் மணிபோன் றிலங்குமவ் விமானம்
வந்ததெங் ஙனமென வினவ
வெய்யவன் முன்னோர் தினத்திடைச் சென்று
வியன்றிருக் கருவையம் பதியிற்
றுய்யபூ சனைசெய் தெமையவேண் டினனாற்
றுலங்குமெம மருகினி திருப்பான். (22)

ஆதலா லவனுக் கிவ்விமா னமதா
யமர்ந்திடத் திருவருள் புரிந்தேநங்
காதலுற் றந்நாண் முதலிது வரையிக்
கயிலையில விமானமா யமர்ந்ததனை
மேதகு கருவைப் பதிக்களா வனத்தின்
மேவுநம மிலிங்கத்தின் பாலித்
தீதறு விமானந் தனைக்கொடு சென்று
சேர்த்துவைத் திடுகவென் றுரைத்தான். (23)

அவ்விமா னத்தைக் கடவுளர்க் கிறைவ
னகமிக மகிழ்ந்துகைக் கொண்டு
செவ்விகூர் தனது பொன்னக ரடைந்து
திகழயி ராவதத் தேற்றி
நவ்விநேர் தடங்கண் ணரம்பையர் பல்லோர்
நடஞ்செய விஞ்சையர் முதலோர்
திவ்விய கானம பாடமா முனிவோர்
தேவரெண் ணிலர்புடை சூழ. (24)

---

(22) வெய்யவன்-சூரியன். (23) கொண்டென்பது கொடுவென நின்றது செய்யுள் விகாரம். (24) நவ்வி-மான்.

தெண்டிரை சுருட்டுங் கடன்முழக் கெனவே
தேவதுந் துபிபல முழங்க
வண்டிமிர் மலர்ப்பூங் களாவன மடைந்து
வயங்குபால் வண்ணனு கியவெம்
மண்டர்நா யகன்பா லவ்விமா னத்தை
யருட்பிர திட்டைசெய் தன்பு
கொண்டுபூ சித்துச் சசியெனு நறும்பூங்
கொடியுடன் பொன்னுல கடைந்தான். (25)

கருவைநா யகன்மனங் களித்து வைகுமித்
திருவிமா னந்தெரி சிக்கி னிம்மையின்
மருவுபல் போகமு மறுமை தன்னின்மா
பொருவறு மோககமும் பொருந்து வாரரோ. (26)

சூரியன்பாவந் தீர்த்த சருக்கம் முற்றிற்று.
ஆகச்சருக்கம் 24-க்கு விருத்தம்-811.

பதினெட்டாவது

## யன்பூசித்த சருக்கம்.

அறுசீர் விருத்தம்.

ஈசனை மன்று ளாடு மிறைவனை யொப்பி லாதா
ணேசனை யுலகம் யாவு நின்றபே ரொளியை மிக்க
வாசனை மலர்க்க ளாவின் வரதனைக் கண்டு கும்பன்
பூசனை புரிந்து பேறு பெறுகதை புகலு வாமால். (1)

வேறு

செம்பவளச்சடைப்பெருமா னுமையைமணஞ்செயுவிமையஞ்
செனுநாண் மண்ணோ
ரும்பர்தயித் தியரியக்கர் கின்னரர்கந் தருவர்திற
லுறுபூ தங்கள்

(25) சசி-இந்திராணி.

கிம்புருடர் கலைகாட்டை முகூர்த்தமதி யாண்டுகடல்
கிரிகளாறு
பமபுநிசா சாரயன்மா லிந்திரன்முன் னுயதிசைப்
பாலரெல்லாம். (2)

இறைவனுடன் செலக்கனமாய் வடதிசைதாழ்ந் ததுபார
மின்மை யாலே
குறையறுதெக் கணதிசைதா னுயர்ந்ததெனத் திருவுளத்திற்
குறித்தது வெள்ளைப்
பிறையொடுவா ளெயிற்றரவு நெடியசடை முடிக்கணிந்த

நறைகமழ்ந்த தனபொதியக் குறுமுனிவன் றனைநோக்கி
நவில்வான் மன்னோ. (3)

வேறு.

தக்கமா தவத்தோ யிப்பார சமன்செய வேண்டு மென்னின்
மிக்கநீ யேகல் வேண்டு மலதுநா மேகல் வேண்டு
மிக்கணத் தவரு ளுன்னை யொத்தவ ரில்லை யின்னே
தெக்கண திசையிற் சென்று சேர்திநீ யென்றான் மன்னோ. (4)

ம.

எனவே யிறையோ னருள்செய் திடவே
தனிமா தவனுந் தமிழ்மா முனிவன்
மனமா துயரோ டுவணங் கியெழுந்
தினிதா மொருமாற் றமியம் பிடுமால். (5)

எந்தாய் வருவன் சின்மைதவ வுலகும
வந்தே தெரிசித் திடநான் வறிதே
யகதோ வகல்வேன் கொலுனக் கடியேன்
சிந்தா குலமுற் றிடல்சீர் மையதோ. (6)

கருணைக் கடலே கருதற் கரிய
வருமைத் திருமா மணமின் பொடுநான்
றெரிசித் தலையா துதிரும் புவதற்
கிருமைப் பிழையென் னிலைசெய் தனனால். (7)

(4) இன்னே-இப்பொழுதே. (5) சிந்தாகுலம்-மனவருத்தம்.

இருகட புலனு மினிதுற் றிடநீ
புரிமன் றலையுன் பொடுகண் டுளமே
யுருகிப பணியப் பெறுதற் குனதின்
னருளைப் பெறுதற் கறமில் லவனே. (8)

அகல்வா னவர்நா யகனே யழியாச
சுகவா ரிதியே சுருதிப பொருளே
மிகநீ மணமே வியகாட் சிதனை
யகமே குளிரப் பெறவன் பிலனே. (9)

அறுசீர்விருத்தம்.

அன்னையே யப்ப னேநல் லறவனே யமுதே செய்ய
பொன்னவிர் சடையா யென்னைப புரந்தரு ளுனது திவ்ய
நன்னய வதுவைக் காட்சி நல்கிடென் றினிது வேண்ட
மன்னுமமமுனியைநோக்கி வ ழுத துவனெமமான்மன்னோ. (10)

இன்புறு மணக்கோ லத்தை யிருநதவக குரிசி லேயாங்
தென்பொதியத்தினீதான் றெரிசிககச்செய்வேம்வெயயோன
றன்பெரு மார்க்கஞ் செல்ல றடுததுமீக் கொண்டு நின்ற
வன்பினை யுடைய விநத மலைசெருக கசுற்றி மாதோ. (11)

ஆதவன் றனககு மாாககங் கொடுததவ னகன்று மிகக
மாதவர்க கூறு செய்வா தாமிவில வலனென் றேதும
பாதக வசுரர் மாயும படி புரிந தாங்கு வைகு
மேதகு முனிவர் யாாககு நலததினை விளைதகுப் பின்னர். (12)

நானிலஞ் செழிகக வாங்கோர் நதிபபிர வாகஞ் செய்து
கூனல்வெண் பிறைதோய் கின்ற வயாதிரி கூட வெற்பிற்
றேனிறைந் தொழுகு தண்பூஞ் செண்பகா ரணியந் தன்னிற்
றுனுறு மாலை யாங்கே யிலிங்கமாச் சமைநது மன்னோ. (13)

சித்தரு முனிவர் தாமுந தேவருந தினமும போந்து
பத்தியி னோடு போற்றிப் பணிநதிடு மகிமை வாயநத
வத்திரி கூட மென்ன வறைதருந திருத்த லததி
னத்தாக் கனிவி ரண்டி யோசனை தன்னின் மாதோ. (14)

(13) மால்-விட்டுணு. மாலென்னும் பெயர் இரண்டாம் வேற்றுமை யுருபேற்று நின்றது.

கண்ணனு மயனு மற்றைக கடவுளர் பலருந் தூய
விண்ணவர்க ளிறைபு நாளும் விரைநறு மலாற் பூசை
பண்ணியேயெமமைப்போற்றிப் பணியயா்முவநதுவைகும்
புண்ணிய தலம நாதி புரமென வொனறுண் டமமா. (15)

அததலந தனினீ சென்று லருமபெறற புகழு ஞான
சிததியு மிகவுண் டாகுஞ செழுந்தமி ழுணைததுந தோ்நத
விததக முனிவர் யாாகரும வேநதென விளஙகுந தூய
வுததம முனிவ வேண்டும வரமுனக் குதவு வோமால். (16)

வாருறு மலய வெற்பு வயஙகுதென் கயிலை யாமா
லாகையா லாஙகுச செலகென் றரனருள புரித லோடும
பாகுநோ மொழியி னுடன் பாகனைப பணிநது தென்பா
லேகுவான்விடையும்பெற்றவ் விருநதவனெழுநதான்மன்னோ.

அகமகிழ்ந தாங்கு நீங்கி யரியகே தாரம வேதம
புகழ்குருக கேததி ரஞசீாக் காசிசீ சயிலம போற்றிய
பகலவ னொடு சீதப பனிமதிக் கிடையூ றுக
மிகவளாந தோங்கி நின்ற விநதமால வரையிற் போநதே. (18)

மலிசெருக குடைய விநத மலையினைக கரநதி னுலே
நிலனுறச செய்து வஞச நிலைபுரி யவுண ராமவில
வலனுட னுயர்வா தாவி யென்பவர் தமமை மாய்ததே
யலகினன் னெறியி னிற்கு மருநதவ ரிடுககண் டீாத்தது. (19)

கோகன்னந திருககா ளததி கோதறுங் காஞ்சி யின்சொற்
பாகுறுந் தமிழ்ச்சீ காழி பழமலை யருணை தில்லை
வாகுறு புகழ்பெற் றோங்கி வயங்குபுள் ளிருக்கும் வேளூர்
மேகமீ தலவு பூகம விரிபொழிற் றிருமா யூரம். (20)

அருட்டுரு மாளூர் வேதா ரணியநல் லழகு வாய்ந்த
திருவிடை மருதூர் ஞானந் திக்குகும்ப கோண நாளும்
பரவுமா யவனும் போற்றிப் பணிதிரு வாணைக் காநல்
விரைகமழ் கடுக்கை வேணி மீனவன் மதுரை மூதூர். (21)

என்னுநற் றலங்களை யாவும வலமபுரிந் தினிது போற்றி
மின்னவிர் சடையோன் வாழு மகாதிமா புரத்தை மேவி
மன்னுபல் வளங்கள் சால வழங்குதிவ் வியமா நன்னீர்த்
தென்னமர் கங்கை யென்னுஞ் சேமமா நதியைக் கண்டான்.

பொருவிலந் நதியைக் கண்ட போழ்தினி லறிவு தோன்றி
யொருவனா லுலகு தன்னைச் சமன்செய வொண்ணு மோவென்
றருமறை முதலா முக்க ணமலனை வினவி டாமல்
வருவது புத்தி யின்மை யாமென மனதிற் கொண்டான். (23)

நதிக்கரை தன்னி லற்றை நாளிர விருந்து வெய்யோ
னுதித்திடு காலை யாற்றின் மூழ்கியே யுணர்வி னோடு
மதித்திடு தவஞ்சேர் கும்ப முனிவரு நெறியி லேவெண்
சுதைச்சிவ லிங்க மாங்கே யருளுடன் றோன்றக் கண்டான்.

காட்டிடை நான மாவோர் துணையுடன் கண்டோர் பாலும்
வீட்டிடு நாதன் பக்க விருந்திடக் கண்டோர் வேங்கை
தாட்டுணை பெயர்த்துப் பற்று மளவினிற் றறுகண் வேங்கை
நாட்டமூன் றுடைய கோனைக் காண்டலு நடுக்க முற்றே. (25)

போயின கண்டு நின்ற போதமா முனிவ னாங்கு
மேயின நான மாவை வெய்யதோர் வேங்கை சீறித்
தூயவெண் சுதையி லிங்கந் தோன்றிடக் கண்டு ளஞ்சிப்
பாய்திற மறந்த திந்தப் பரன்செயன் மகிமை யன்றோ. (26)

என்றுமெய் யன்பு கூர்ந்தே யிறைவனைப் பூசித் தேத்த
வொன்றிய சிந்தை தன்னா லுவந்துதே னாவையுஞ் செய்ய
மென்றருத தனையு முன்ன விமலநா யகன்றன் பாங்கர்
நிறைவக் களவு நானத் தருமென் நினைத்த வெல்லாம். (27)

இக்கண நல்கு வேனென் றியம்பியன் புடனே யாங்குச்
செக்கர்மே னியன்றன் பூசைத் திரவிய மினிது நல்க
வக்கணந் தேனுப் போந்தே யளித்தநற் பொருளும் வாங்கி
முக்கணா யகனைக் கும்ப முனிவான் பூசித் தானால். (28)

---

([illegible]) [illegible]ன்-அழகு. (24) சுதை-அமுது. (27) முன்ன-நினைக்க. உன்ன[illegible]ம்பிய ருர்த்தம். முன்னல் உன்னல்-ஒரு பொருட்கிளவி:

அண்ணலே போற்றி முக்க ணமலனே போற்றி சீத
வெண்ணிலாத் தவழுஞ் செய்ய வேணியாய் போற்றி தூய்ய
தண்ணறுங் களவி னீழ லுறைதனி முதலே போற்றி
யெண்ணிய வாறு முன்னின் றெனக்கருள் செய்வாய் போற்றி

என்றுநற் றுதிசெய் காலை யினியபூங் களவின் மேவும்
வென்றிகூர்விடைவல்லோனம்முனிவன்முன்வெளிப்பட்டாங்கே
நன்றுநின் றனக்கு வேண்டும வரநவி லளித்து மென்று
றொன்றிய வுணர்வி னோடு குறுமுனி யுரைக்கு மன்னோ. (30)

அண்ணலே தென்பாற் செலகென் றடியனேற் கருளு நாளெவ்
வண்ணம்பூச் சமமா மென்று வினவிட மதியன் றில்லேன்
றண்ணிலாச சடையாய் பூமி தன்னையே சமஞ்செய் கின்ற
திண்ணமென் றனக்கு நல்கத் திருவுள மிரங்கல் வேண்டும்.(31)

அப்பொழு திறைவன் றானு மருந்தவன் றன்னை நோக்கி
யெப்புவ னமுநம் முள்ளே யிருக்கின்ற தியாமே யன்பா
லொப்பறு நினது நெஞ்சத துறைகின்றே மாத லாலே
செப்புதற் கரிய தான தென்றிசை சமமா மென்றான். (32)

என்றிறை யவன்றான் செப்ப விருந்தவ முனிவன் கூறுந்
தென்றிசைக் கெழுந்த போழ்திற் றெரிசித்த தலங்க டம்மி
லொன்றிய வுணர்வு தோன்று தொழிந்துபே ரறிவு ஞானந்
துன்றுமித் தலத்தி லெய்தத தோன்றிய வாறென் கொல்லோ

இறைவவித் தலத்தின் பெற்றி யானுணர்ந் திடுமா றின்னே
யறைகுதி யென்ன லோடு மன்பினோ டறைகு வானுன்
மறையொரு நான்கி னாலு மலரய னாலு மிக்க
நறைகமழ் துளவ னாலு மறியொணா நம்பன் மாதோ. (34)

இந்நகர் தனினன் புற்றுப் போந்துநம் மிலிங்க தன்னைப்
புன்னெறி யுடையா ரேனுந் தெரிசித்த போதி னந்தஞ்
சின்மயம் பெறுமா றிங்கே தெரிசனை கொடுப்பே மிந்தத்
தொன்னகர் தனிற்சென் மிப்போ ரவர்களா யிருப்ப ரன்றே.

---

(31) பூ-பூமி. (34) [illegible] செய்யு [illegible].
(35). [illegible]

இக்கடி நகரி லுள்ளோ ரியம்பிடு மொழிக ணம்மஞ்
சக்கர மென்ன லாகு மவர்கள்சஞ சரிப்ப தெம்மை
மிக்கநல் வலம தாக மேவின தொக்கும் யோக
மொக்குநித் திரைதா னன்றே ரூணிவே தனமொப் பாமால்.

வாசனை மலர்கள் சாந்து வனைவது மணுத்து ணிங்கா
வாசையி னோடு நம்மை யலங்கரித் ததுவா மென்றும்
பேசறு புகழ்பெற் றோங்கு மந்தமா தலத்தின் பெற்றி
தேசிக முனிவ வேதஞ் செப்புதற் கரிய தாமால். (37)

கத்துதெண் டிரைசூழ் பார்மீ தளப்பருங் காலஞ் செய்த
மெய்த்தவப் பலன்க ளெல்லா மெத்தலங் களினு மேலா
மித்தலந் தனிற்போந் தோர்நா ளமைத்தெரி சிக்கி னெய்து
முத்தமிழ் முனிவ வின்னு மொழிகுவா மினிது கேண்மோ. (38)

தந்தையைத் தாயை யாசான் றனைத்தமர் களைத்தெய் வந்தை
நிந்தித்தோர் பிறர்தா ரத்தை நினைத்தவர் பிறர்தம் பொன்னைச்
சிந்தித்துக் கவர்ந்தோர் சைவச் செய்கைவிட் டசைவந் தன்னில்
வந்தவர் நாளுஞ் சீவ வதைசெயும் வன்க ணாளர். (39)

அருந்துவ திருக்க வேதா னருந்திடா தருந்தி னோர்கள்
வருந்துறு கேடு சூழ மதுவுண்போ ரறத்தி னுண்மை
தெரிந்திடு மொருவன் செய்த நன்றியை மறந்தோர் தீமை
தருங்கொடும் பஞ்ச மாபா தகம்புரிந் தவர்கள் யாரும். (40)

உரைத்திடற் கரிய சீர்த்தி யுபயமா புரத்தி லின்புற்
றிருப்பவ ரோடு நண்புற் றிருக்கினு மிதயத் துண்மை
பரிக்குநல் லன்பர் தம்மைப் பரிசித்துத் தெரிசித் தாலு
முருக்குநன் மொழிக ளன்னோ ருரைத்திடச் செவியுற் றாலும்

அன்பரோ டுரைசெய் தாலு மவர்க்குப சரித்திட் டாலு
மின்புறு கிருபை யாற்றி விரும்பின லாடி னாலும்
வன்பெரும் பாவ மென்முன் வல்விரு ளென்ன வே நீங்கி
மின்புரைச் சடையாய் நந்தம் வெள்ளிவெற் படைந்து வாழ்வார்

சாந்திரா யணம்பத் தேகா தசிசகத் திரம்பன் னூல்க
ளாய்ந்தவர் புகழுஞ் சோம வாரநூ றரிய மாசி
யேய்ந்தநந் நிசிகண் மூன்றி யாகங்க ளிவற்றி னாலே
வாய்ந்திடு பலனிங் கோர்நாள் வதிந்தவர் தமக்குண் டாமால்

நறவொரு படியி ரட்டி நறுநெய்பா னதிநீர் கொண்டே
யுறுதியோ டெம்மை யாட்டு முணர்வுடை யவர்கள் யாரும்
வெறிகம ழலங்கல் வேய்ந்த மிளிர்முடி யிமையோர் போற்று
மிறையர சுரிமை பெற்றே யிருப்பரெஞ் ஞான்று மாதோ. (44)

இத்தலந் தன்னி லேநம் பூசனைக் கினிமை யாகப்
பத்தியாய்த் துளவம் வில்வம் பதுமமென் கழுநீர் நீலங்
கொத்திணர்க் கொன்றை வாசக் குளிர்கர வீரம் யாவுஞ்
சித்தியாம் படிக்கன் போடு திருநந்த வனங்கள் செய்தோர்.

தமக்குறு பலனை யெம்மாற் சாற்றிட முடியா தன்றே
யெமக்கிள நீரோர் துள்ளி யிதனிடைக் குழம்புச் சந்த
மமைத்தபி டேகஞ் செய்யி னச்சுவமகப்பேறெய்துந்
தமிழ்க்குறு முனிவ விந்தத் தலத்தியல் பின்னுங் கேளாய்.(46)

கஞ்சநாண் மலர்பத் தேனுங் கடிகமழ் குவளைப் போதீ
ரஞ்சுகூ விளமூன் றேனுந் துளவமவ் வளவு தேனுஞ்
செஞ்சவே யெடுத்தன் பாய்நஞ் சிவலிங்கத் தைப்பூ சித்தோர்
விஞ்சுநம் முலக மேவி யருகுவீற் றிருப்ப ரன்றே. (47)

அருமறை யவர்க்கே யாத லருந்தவர் தமக்கே யாதல்
பரிவினோ டன்ன மிந்தப பதிதனி லளித்து ளோர்க
ளொருவுடி இலுக்குத் தேவாண் டொன்றுநங் கயிலை தன்னின்
மருவிவாழ்ந் திருப்ப ரென்றால் விரித்தினி வழுத்த லென்னே.

இந்தமா நகரந் தன்னி லெந்தமக் குவப்ப தாகச்
சிந்தையுயர்ந் தொருநா ளீங்கோர் திருவிளக் கிடுவ ரென்னி
லந்தமி லாரு ஞானம் பெறுவதற் கைய மில்லை
சந்துலா விமயீட் சேப கதிதனை யடைந்து மாதோ. (49)

---

(45) பதுமம்-தாமரை. [illegible]

பன்னுநற் பூமி யானின் பதக்குளம் பளவு நல்கின்
மன்னுபூ வுலக தானம் வழங்கிய பலனுண் டாங்கு
மிந்நகர்தனிற்செம்பொன்னைத் திலத்தனவிரப்போக்கிந்தாற்
பொன்னொரு கோடி தானம் புரிபலன் பெறுவ ரன்றே. (50)

மன்னிய பலகோ தான மாசிலாப் பூமி தானங்
கன்னிகா தானம் வெள்ளி கனவயி ராக்கி யத்தோ
டுன்னுநற் றவஞ்செய் கின்ற பேறெலா முறுவ ரிந்த
விந்நதிப் புனலோர் துள்ளி யேவர்மேற் படினு மாதோ. (51)

சத்தவா ரிதிசூழ் பாரிற் றருமமோ டத்தங் காம
முத்தியும் பெறுவர் கும்ப முனிவகே ணமதி லிங்கம்
பத்துட னூறு சாளக் கிராமஞ்சற் பாத்தி ரநதேர்ந்
தெத்திருத் தலத்தி லேனு மீந்திடு பலன்கள் யாவும். (52)

வயங்குசீர் மேவு மிந்த மாதலந் தன்னிற் போகது
நயந்தவற் றினிலொவ் வொன்று நல்கினு மடைகு வாரா
வியங்குமா சியமா வாசை யிந்நதி தன்னிற் றோய்ந்தோர்
வியன்கொள்சா ரூப மேவி வீற்றிருப் பார்கண் மாதோ. (53)

திருக்களா வுடையா னென்று சேயருக் கியற்பே ரிட்டோர்
பெருகுறு கதியின் மூவேழ் தலைமுறைப் பிதிர்க ளோடு
மிருப்பரெண் ணரிய காலமின் னுமொன் றியம்பு வேமால்
விருப்புறு கரிகிட் சேப னெனுமிரு திருடர் மேனாள். (54)

உன்னுமக் களவு சித்தி யுற்றிடும் பொருட்டு நாளு
மன்னுநற் களவைத் தங்கண் மனத்திடை நினைத்துச் சென்று
புன்னெறிச் சோரஞ் செய்து வருவர்பின் போவா ரங்கே
யின்னண மிருக்கு நாளி னிகழ்ந்ததை யியம்பக் கேண்மோ.

சோரமே புரியு மந்தத் துட்டராங் கரிகிட் சேபப்
பேருடை யவர்தங் காலம் பிற்பட முடிவு தோன்றி
யாருயி ரிறக்குங் காலை யந்தகன் றூதர் போந்து
பாசவெம் பாசந் தன்னாற் பற்றிட வணுகி னரால். (56)

எம்முடைக் கணங்கள் சூழ்ந்தங் கிருந்தது கோக்கி யன்னோர்
மம்மர்கோ யுளத்த ராகி வெருவியே வலியு மோயந்து

தம்முடைக காத்துப பாசக தனைத்தகை யிடையே வீழ்த்திப்
பொம்மெனமீண்டுபோய்த்தென் புலகதனையடைந்தார்மாதோ

அந்தகன் றன்னை தூத ரடைநதல் தறைத லோடுஞ
சிந்தையி னைய முற்றுச் சித்திர குத்தர்க் கூவிப்
பந்தவல் வினைக்க ணுற்ற பாதக ராயி னுநக்
கிநதவா றென்கொ லென்ன வியமபுவர் கணக்கர் மாதோ.

கண்ணுத லுறைதா னப்பேர் கரிவல நகரா மாங்கே
நண்ணிய கருணைத் தீர்த்த நாமநிட் சேப மாமாற்
றண்ணிய களவி னீழற் றனிமுதல் வைகு மநதப
புண்ணிய நகர்ந திப்பேர் புனைநதத னுலு மன்றே. (59)

நித்தியுங் களவு செய்பு நியமத்தாற் களவை யுன்னித
துத்தியஞ் செய்த தாலுஞ் சொல்லுமன் னவர்யாம வைகு
மிததிசைக் குறுவ ரல்ல ரென்றுதான் றருமன் முன்னர்ச
சித்திர குத்த ராங்கே செபபலுஞ் செவியிற் கேளா. (60)

சண்டனுச் சரிய முற்றித் தலத்திடைக் கடிதிற் போந்து
கண்டனன் பதவிக் கெய்துங் கரிநிட்சே பரைக்கண் ணுரப்
பண்டுசெய் சுகிர்தத் தாலே பலாக்கனி யொத்தீ ரும்மைத்
தொண்டரென் றறியே னென்று துதிபல புரிநது போனன்.

அன்னவர் தம்மை நந்த மடியிணை போற்றி நாளு
மன்னிவாழ்ந் திருக்கு மாறு வயிரவ னிடத்தன் ஞர்தந்
துன்னரும் பாவ நீக்கித் துவாரகா வலரா வைத்தே
மின்னுமித்தலததின்பெற்றி யிசைத்திடமுடி யாதன்றே. (62)

உத்தம முறுமெய்ஞ் ஞான முனக்கினி துரிக்கப் பெற்ற
இத்தல மகிமை யாமா லென்றருந் தவத்தின் மிக்க
முத்தமிழ் முனிக்குத தோற்ற முடிவிலா னயன்மாற் கெட்டா
வித்தக னுரைத்தான் பின்னர்க குறுமுனி விளம்ப லுற்றான்.

ஐயனே யடிய னேனின் னருட்டிரு மணக்கோ லங்கண்
டுய்யுமா றருளல் வேண்டு மென்றினி துரைத்த லோடும்
பையரா வணிந்த வேணிப் பசுபதி பதரும் புரிந்து
செய்யசற் றவத்தின் மேலாஞ் செழுந்தமிழ் முனியை நோக்கி.

(61) ... ரருத்தரக கடி -இயல்பின் விகாரமு மென்னுமவியாள் விகாரமாயின. (61) கண்டனன்-இயல்பில்.

மேடசங் காரத்தி யோடு பிரதமை மிகுபொன் வாரங்
கூடிய தினத்தி லார்க்குங் கூறுதற் கரிய தாய
நீடுசீர்ப் பொதியந் தன்னி னீமண மகிழ்ச்சி மேவத்
தேடரு மணக்கோ லத்தின் றெரிசனை கொடுப்போ மென்று.

ஈசனு முரைக்க வாங்கே யிருந்தவ முனிவ னன்பாய்
வாசமா மலர்ப்பொற் றாளை வணங்கியே விடைகொண் டேகித்
தேசிகக் குடுமி வாய்ந்த திகழ்கிரி கூடந் தன்னிற்
காசில்பூந் துளவ மாலைக் கடவுள்வீற் றிருக்கக் கண்டு. (66)

அந்தமா தவனை யீச னாகவே யமைத்துப் பின்னர்ச்
சிந்தையாற் றியானஞ் செய்து திருக்குற்றா லாவென் றோதி
யெந்தநா ளினுமே போக மோக்கமெவ் வுயிர்க்கு நீதான்
றந்திடல் வேண்டு மென்றத் தலத்தினை வலங்கொண் டேத்தி.

அத்தல நீங்கிச் செண்ப காடவி மார்க்க மாக
முத்தமிழ் முனிவன் சிந்தை முன்செலக் கடிதிற் போந்து
வித்தகன் மணக்கோ லத்தை வியப்புறக் காணும் வண்ணஞ்
சித்தமவைத் தன்பி னோடு தென்பொதி யதனிற் புக்கான். (68)

என்னுமிக் கதையைச் சூத னிசைத்தலு மினிது கேட்ட
மன்னுமா தவத்தி னோர்கா மனமகிழ் வெய்தி ஞான
நன்னெறி முனிவ வநத நற்றல மகிமை கேட்டெம்
புன்னெறி யொழிய வின்னும புகலெனப் புகல்கின் றானால். (69)

அகத்தியன் பூசித்த சருக்க முற்றிற்று.

ஆ. சருக்கம் 25-க்கு திருவிருத்தம்-880.

---

பத்தொன்பதாவது

## இந்திரன் வேள்விச் சருக்கம். -வீ-

அறுசீர் விருத்தம்.

மந்திர முனிவர் வானோர் வணங்குதென் கருணை யென்னுஞ்
செந்திரு வகலாச் செல்வத் திருநகர் தன்னிற் போந்து
[illegible]ர வுலகை யாளுந் தனிப்பெரு வயிர வாட்கை[illegible]
[illegible] னின்று வேள்வி யியற்றிய கதையைச் சொல்லுவாம் (1)

---

(66) காசு-குற்றம். (1) செந்திரு-பொன். வயிரவாள்-வச்சிராயுதம்.

மகபதி யொருநாற் கோட்டு வாரண வூர்தி யானோன்
செகமகிழ் வுறவோர் வேள்வி செய்திடக் கருதி யேதான்
றகவுறு குரவ னென்னைச் சாற்றுபொன் னிடத்திற் போந்து
பகருவான் பரிவி னோடு பதம்பணிந் தெழுந்து நின்றே. (2)

பண்டயன் வேள்வி யொன்று தொடங்குநாட் பதக னென்னுந்
திண்டிற லுடைய தக்கன் செருக்குட னுரைத்த சொல்லால்
வண்டிமிர் கடுக்கை வேய்ந்தோன் மனமுவப் புறவே யாநத
முண்டகத் துறையும் வேதன் முற்றுவித் திலனவ் வேள்வி. (3)

நான்முகன் வேள்வி நீங்கி நாட்பல கழிந்த பின்னர்த்
தானரு ளில்லா வேள்வி யியற்றினன் றகக னந்நாட்
டேனமர் மொழியாள் பாகச் செம்மலுக் குவப்பி லாமற்
போனதா லந்த வேள்வி புன்னெறித் தக்க னோடும். (4)

காதலா லிந்நாண் முக்கட் கடவுளுக் குவகை யெய்த
வோதரு மகந்தா னொன்று முடிப்பதற குன்னி னேனால்
வேதநன் னூலிற் கூறும் விதிமுறை யின்ன தென்று
மேதமில் வேள்வி செய்கு வதற்கிட மின்ன தென்றும். (5)

வகுத்துரை செய்க வென்று மகபதி புகற லோடு
மிகக்கரு ணையினு னோக்கி விளம்புவான் வியாழப் புத்தேண்
மகத்தினில் விருப்பங் கூர்ந்து வந்ததான் மகிழ்ந்தே நீதா
னகத்திலன் புற்றெம் மீச னருளினைக் கருதி மாதோ. (6)

திருந்திய மகேச யாகஞ் செய்திடல் வேண்டும் யாகம்
புரிந்திடற் குரிய தானங் கேட்டிநீ புகலு வேமாற்
பெருந்தட வரைகளீசன் பிறங்குநற் றலங்கண் மேன்மை
பொருந்துறு நதிக ளோடு புண்ணிய வனங்க ளாமால். (7)

எண்சீர் விருத்தம்.

எனவுரைத்துப் பின்னரந்த வேள்வி செய்தற்
கிசைந்தபல விதியனைத்து மியம்பக் கேட்டுத்
தனதுமனை மிகக்களித்து வேள்வி செய்யத்
தக்கவொரு தலமெனக்குச் சாற்று கென்று

(2) பொன்-வியாழம், பரிவு-அன்பு.

வினவினனப் பொழுதமரர் குரவன் சொல்வான்
வெய்யமனத் தக்கன்மக சாபந் தீர்த்த
கனமுறுநற் றலமடைந்து செய்யின் முக்கட்
கடவுடிரு வுளமிகவுங் களிக்கு மன்றோ. (8)

அந்தநக ரந்தனினீ யடைந்தன் பாக
வரியமகம புரிதியென வறைத லோடு
மிந்திரனு மனமகிழ்ந்து தேவர் சூழ்ந்தங்
கிருபாலு நெருங்கிவர விருமை சேர்வெண்
டந்திமிசை யிவர்ந்துவிரை வாகப் போந்து
தனக்குரிய வேள்விசெயுந் தகைமை யெல்லாம்
புந்திதனி லுணர்ந்துபெரும் புகழ நாதி
புரமடைந்து மனவொருமை பூண்டு மன்னோ. (9)

எண்ணரிய கருவைநகர்ப் பெருமான் றன்னை
யிதயமதி லிருத்திமக மியற்ற வெண்ணி
விண்ணுலகத் திடைமருவு மிமையோர் மேன்மை
மிகுதவ மாமுனிவர் திக்குப் பாலர்
பண்ணமரு மருமறையோர் நெருங்க வாசான்
பகர்ந்திடப்பன் னிருவருடம் வேள்வி செய்து
புண்ணியன்பால் வண்ணனருட் செல்வம் பெற்று
நகுடன்முன்னு யவர்பகையைப் போக்கி யாங்கே. (10)

அயிராணி யொடுமருவி மகிழ்ந்தெஞ் ஞான்று
மகல்விசும்பு முழுதாளு மரிய செல்வம்
பெயராத படிபெற்று வாழ்ந்தா னந்தப்
பெருங்கருவைத் தலமகிமை பேசற் பாற்றோ
கயிலாய மாகுமது வெனவே சூதன்
கழறிடவப் பொழுதுமனங் கனிந்து சீர்த்தி
யுயர்மாமெய்த் தவமுனிவர் காம தேனு
வுற்றிடுமச் சாபமின்னு மொழியா தென்னே. (11)

கூறுதியென் றுளமுருகிப் புலன்க ளொன்றிக்
குலவுசிர மீதிருகை குவித்துக் கண்ணீ
ராறொழுக மெய்புளகித் தார்வ மோடு
மாங்குவின விடுங்காலை யமுதம் வாயி

(9) வெண்டந்தி-வெள்ளையானை. இவர்ந்து-ஏறி. (12) ஆறொழுக-உவமைத்தொகை. ஆறுபோலொழுக வென்பது பொருள். கண்ணீராறென்னுஞ் சொற்றொடரில் கண்ணீராகிய ஆறு எனப்பொருள். கொள்ளின் உருவகமாம்.

றாறிவழி வதுபோல வவரை நோக்கி
யுமக்கதனை யுரைக்குதுமென் றுவகை கூர்ந்து
வீற்பெறுந் தவமுனிவர் பெருமா னென்ன
விளங்குபுகழ்ச் சூதமுனி விளம்பு வானால். (12)

இந்திரன் வேள்விச்சருக்கம் முற்றிற்று.

ஆகச் சருக்கம் 26-க்கு விருத்தம்-892.

---

இருபதாவது

## காமதேனு மக்கட்பேறு பெற்ற சருக்கம்.

---

அறுசீர்விருத்தம்.

ஏடவிழ் மலரின் மேவு மணங்கர்த் தெண்ணி லாத
நீடிய வுலகம் யாவு நிறைகளா வீசன் றன்னைக்
கேடில்வான் சுரபி யன்பாற் கிளர்தவ மியற்றி முன்னாட்
பீடுறு மக்கட் பேறு பெற்றவோர் சரிதஞ் சொல்வாம். (1)

எழுசீர்விருத்தம்.

மேலை நாளரிய காம தேனுமழ
விடைத னைத்தழுவ வேண்டியே
புால வாயுதனை நோக்கி யெண்ணரிய
கால மாதவசு பண்ணலும்
கால காலனஃ துணர்ந்து நேயமுற
காம தேனுவின்மு னேபசுங்
கோல மேவுபர தேவி யோடினிது
தோன்றி னனுவகை கூரவே. (2

நீத வம்புரில தியாதெ னக்கருணை
யுற்று நின்மலனு ரைத்திடக்
கோதி லாவுனது விடையின் மீதுமயல்
கொண்டு சிந்தைமெலி வுற்றனே

---

(2) விடை-இடபம்.

ஞத லாலருள்செய் விடையை யானணையு
மாறெ னக்கபிலை கூறலுஞ்
சீத ரன்கமல வேத னுடரிய
தேவ தேவனுரை செய்குவான். (3)

தேனு வேவிடையின் மேன மைத்தெரிச
னஞ்செய் நாளுனது சிந்தையே
தானு வப்படையு மாறு னக்குவா
மீது நாமிஃது சரதமென்
றூனு டைக்கடவுள் கூற வச்சுரபி
யரிய வுன்றெரிச னத்தையே
நானு றப்பெறுவ தெந்த நாள்கருணை
நாத னேயெனவு ரைத்ததால். (4)

இறைவ னத்துணையின் முறுவ லித்துவிரை
வினிலு னக்கெமது தெரிசனை
யுறுமெ னக்கழறி யொளிகொ ளக்கயிலை
தனிலு வப்பினொடு மேவியே
கறைமி டற்றன்மழ விடைத னிற்சிறிது
கால மேகியபி னுணர்விலாச்
சிறுவி திப்பதகன் வேள்வி புக்கபல
தேவர் சாபமுற மேவுநாள். (5)

அவ்வ யிற்சுரபி யெவ்வ முற்றமக
மதில ரும்பிழைசெய் தனமெனக்
கவ்வை யுற்றவணி ருந்து நாதனுயர்
கயிலை மால்வரைய டைந்தபின்
வெவ்வி டத்தரவ வேணி யீசனைவி
ருப்பு டன்றொழுதி ருந்ததா
லெவ்வு யிர்க்குமருள் செய்து காக்குமெம
திறைவ னங்கஃது ணர்ந்தரோ. (6)

---

(4) ஈதும்-கொடுப்போம். சரதம்-உண்மை.

தொக்க சீர்கொள்கண தேவ ரைக்கழித்து
கூவி யேயருள்சு ரந்துநீர்
தக்க வக்கயிலை யைகொ டிங்கணேமி
னென்று ரைக்கவவர் தாமுமே
மிக்க வோகையொடு சென்ற ழைக்கவுயர்
வெள்ளி மால்வரையின் மேவியே
யக்க ணிந்தவிறை யோன டிக்கமல
மன்பு டன்பரவி நின்றதால். (7)

அப்பு வேணியன்வி டைக்கு நற்சுரபி
யைச்சி றந்தமண மாற்றியே
தப்பி லாதகயி லையையு மந்தவிடை
தனையு மனயிெனொடு நோக்கியே
யொப்பி லாதகயி லாய மால்வரையி
னுத்த ரத்தினிடை யுள்ளதோ
ரப்பெ ருந்தனிவ னத்தி லெய்தியவண்
வாழ்மி னென்றருள்செய் தானரோ. (8)

அறுசீர்விருத்தம்.

கயிலைவட பாலிடப வனமெனப்பேர் துலங்கவவண்
கருதி நோன்பு
பயிலுமுனி வார்வடிவம் பூண்டுசுர பியும்விடையும்
பன்னு ளாகச்
செயிரறுமின் புறமருவி யிருந்தனபின் மகவின்மை
தேர்ந்து முன்னு
ளெயிலொருமூன் றெரித்தபிரா னிருக்குநெடுந் திருக்கயிலை
யெய்தி மாதோ. (9)

நீறுலவுந் திருமேனி நிமலனிரு பதமிறைஞ்சி
நிகரி லெந்தாய்
தேறுமதி யுற்றுநின்பாற் சந்ததமன் புறுதவத்திற்
சிறந்த மக்கட்

---

(8) மணம்-கல்யாணம். ஆற்றி-செய்து.

பேறுதரல் வேண்டுமென வேண்டலுமவ் வேல்லையிலெம்
பெருமா னுங்குக்
கூறுதும்யாங் கேண்மின்மகப் பேறுபெறக் கருதினெனக்
கூறு வானல். (10)

வாசமலர்க் களாவனத்தின் மருங்கமுதா சலமென்னும்
வரையின் மீது
தேசுறுநங் காற்குளம்பு பதித்ததிலுண் டாகுமுயர்
தீர்த்தந் தோய்ந்தவ்
வாசின்மலர்க் களாவினிழ லுற்றவருட் குறிதனையோ
ராண்டு நீவிர்
பூசனைசெய் திடுமின்மகப் பேறுநமக் கீதுமெனப்
புகன்றான் மன்னோ. (11)

சருப்பமணி வேணியன்கூ றியவாறு சென்றமுதா
சலத்திற் சேர்ந்தப்
பருப்பதமேற் றிருப்பதத்தின் குளம்பாற்றோற் றியதீர்த்தம்
படிந்து மேலாந்
திருப்புகழ்சே ரநாதிபுரத் தலத்துறைசு வேதநிறச்
சிவலிங் கத்தை
விருப்பொடுபூ சித்தோராண் டிருந்தனவச் சுரபியுநல்
விடையு மாதோ. (12)

மிக்கமனத் தன்பினுட னிங்ஙனம்பூ சித்திருக்கும்
வேலை தன்னி
லக்களவி னிழற்பெருமான் றோன்றிமகிழ்ந் தெமக்குநிக
ராகுந் தூய
மக்களளித் தனநுமக்கு நும்மாலுண் டாகியவிம்
மாதீர்த் தங்க
டொக்கபுக ழிடபதீர்த் தந்தேனு தீர்த்தமெனத்
துலங்கு மாலோ. (13)

உகப்புறவிவ் விருதீர்த்தங் களிற்படிந்தோர் பெருஞ்செல்வத்
துடனின் பங்க
ளிகத்திலடை குவரவர்செய் பாவமெலா மிரவியின்முன்
னிருள்போ னீங்கு

(14) உகப்பு—விருப்பம்.

மகப்பெறுவர் மறுமையினிந் திரபோக நுகர்ந்துபின்னர்
வாழ்வார் நந்தஞ்
சுகப்பரம பதத்திலிருந் தெனவுரைத்து மறைந்தனனத்
தோகை யாகன். (14)

ஆவலுடன் றம்மிடஞ்சேர்ந் திடபமுந்தே னுவுமகிழ்வுற்
றணைந்து வாம
தேவனென்று முயர்வாம தேவியென்றுங் கபிலனென்றுஞ்
செகத்தோர் போற்ற
மேவுபுகழ்க் கபிலையென்றுஞ் சொலுநான்கு மக்கடமை
விரும்பி யீன்று
மாவடிவேற் கான்றநை பதந்தொழுவந் தனகயிலை
வரைக்கு மாதோ. (15)

வன்னமதிச் சடையுடையான் கபிலனைப்பா தலத்திலுநல்
வாம தேவன்
றன்னையய னுலகிலுமவ் விடையைநந்தி யிடத்திலுமுத்
தமதே வாவைப்
பொன்னுலகத் திலும்வாம தேவியையுங் கபிலையையும்
புவன மீன்ற
அன்னியிடத் திலுமடைந்து வாழ்கவென வுரைத்தனனக்
காலை மன்னே. (16)

மானமருங் கரதலத்து வள்ளலரு மலாபபதத்தை
வணங்கிக் காம
தேனுவுரைத் திடுமெந்தாய் தக்கன்மகத் திடைவிளைந்த
தீய சாபந்
தானகல்வ தெந்நாளென் றனக்கருள்செ யெனவுரைக்கத்
தயவு கூர்ந்து
கூனலிளம் பிறையணிந்தோன் றேனுவின்மா முகநோக்கிக்
கூறு வானால். (17)

(14) மக-சந்ததி. (15) தேவா-தெய்வப்பசு.

தக்கன்மகத் திடைநம்மாற் சபித்தகுபே ரனுமன்னோன்
தனியில் லாளு
மக்கருவைத் தலத்திடைக்கத் தூரிகளாத் தோன்றியவ
ணமரு நந்த
மிக்கவருட் குறிக்குநரந் தம்புனைபுண் ணியபலத்தால்
விரும்பு போகந்
தொக்கசகத் திரயுகமட் டயனுலகிந் திரனுலகிற்
றுய்த்து மாதோ. (18)

பின்றுவா பரயுகத்தி னிறுதியிற்றென் கருவைநகர்
பேணி யாளும்
வென்றிபெறு வீரசிகா மணிவழுதி சுதனெனவும்
விளங்குஞ் சென்னி
தன்றிருமா மகளெனவு மவதரிப்பார் புலையனெனத்
தக்கன் றோன்று
மொன்றுபசு வெனவுதிப்பாய் நீயுமந்நா ளகன்றிடுமா
லுனது சாபம். (19)

(வேறு)

எனவுரைத் தனனென் றந்த விரும்புகழ்ச் சூதன் கூற
மனமுவந் தினிது கேட்ட மாதவர் வணங்கி யெந்தா
யினமுமத் தலத்தின் காதை யுரைத்தரு ளென்று வேண்டத்
தனதுள மகிழ்ந்தச் சூத முனிவரன் சாற்று வானால். (20)

**காமதேனு மக்கட் பேறு பெற்ற சருக்க முற்றிற்று.**

**ஆகச் சருக்கம் 27-க்கு விருத்தம்-912.**

---

## இருபத்தொன்றாவது
## ஆரியனுலயஞ் செய்த சருக்கம்.

---

**கலிவிருத்தம்.** -தி-

கூரிய வாள்விழிக் கோதை பங்கினன்
காரியல் கந்தரக் கருவை நாதனுக்

---

(18) சகத்திரம்-ஆயிரம். நரந்தம்-கத்தூரி. (19) வழுதி-பாண்டியன்.
சென்னி-சோழன்.

காரிய னாலய நகர மைத்ததோர்
சீரிய கதைசிறி தெடுத்துச் செப்புவாம். (1)

எழுசீர் விருத்தம்.

விரைமலர்ப் பிரமர் மூவர்சென் றதன்பின்
மேவிய பிரமனா ளதனி
விசைவத மனுவா மேந்தலின் காலத்
திருபதாஞ் சதுர்யுக மவற்றுள்
வரைதரு திரேதா யுகந்தனிற் சத்தி
மலையமா மிருவரை நடுவிற்
புரைதவிர் மணலூ ரெனுந்திரு நாமம்
பொருந்துறு நகரமொன் றுளதால். (2)

அநந்தன் னகருக் கரசெனச் சிரமே
லழகுற மணிமுடி புனைந்து
சநந்தந தனது பெயர்ப்பொருட் கேற்பத்
தறுகண்மே வலர்தமை யடக்கி
யெந்தனா லமுநதன் குடைநிழ லிடைவைத்
தினிதர சாண்டிருந் தனனால
விநதைசேர் கனக வரைப்புயத் தினனோர்
வீரபாண் டியனெனும் வேந்தன். (3)

வேந்தர்வேந் தெனுமவ் வீரபாண் டியன்றான்
விறன்மிகு சேரல னீன்ற
பூந்திரு வெனவே யுலகெலாம் வியந்து
போற்றுபே ரழகுறு மிந்து
காந்தையென் பவளைக் காந்தையாக் கொண்டு
காமனு மிரதியு மெனவச
சாந்தணி முலையா ளொடுகலந் தருமைத்
தனையரோ ரிருவரைப் பயந்தான். (4)

பாரெலா மகிழத் தானினி தீன்ற
பாலருக் கன்புட னிராச
சூரனா ரியனென் றியற்பெயர் புனைந்து
தலைக்குபே ரன்புடன் வளர்த்தான்

(1) காந்தை-மனைவி. பயந்தான்-பெற்றான்.

சீருறும் வடிவாற் கல்வியாற் றிறலாற்
சிலைமத னனுமனந் தனுமக்
கூரிய வடிவேற் குகனுமொப் பெனவக்
குமாரு மிகவிளங் கினரால். (5)

அறுசீர் விருத்தம்.

அந்தகைய குமாரின்மூத்த தோனையிள வரசெனவே
யமைத்துப் பின்னர்ச்
சுத்தபதும ரேகைசங்க ரேகைமுத லிலக்கணங்க
டோன்ற லாலே
யெந்தலமும் புரக்குமிறை யவனுவா னிவனேயென்
றெண்ணி யந்த
வுத்தமனு மிளங்குமரன் முகநோக்கித் தந்தைசிந்தை
யுவந்து சொல்வான். (6)

எழுசீர் விருத்தம்.

என்றிரு மதலா யொன்றியம் புவல்கேண்
மலயமென் றொருமலை யிந்தத்
தென்றிசை யுளதவ் வரையினுத் தரத்தோர்
றிகழ்கிரி கூடமென் றுரைக்குங்
குன்றமொன் றுளதக் குன்றினுத் தரத்தோர்
குன்றுரக் கியமென வுளதப்
பொன்றிகழ் திரிகூ டத்தின்கீழ் திசையிற்
பொருந்துமோர் கிரியுள தம்மா. (7)

அக்கிரி யமுத கிரியென வுரைப்ப
ரவற்றிடை நதிகண்மா வளங்கண்
மிக்கபன் னகரங் களுமுள வாங்கே
மேவுபன் முனிவரர் மறையோர்
செக்கர்வான் சிகைக்கா ருடற்றிணி யரக்கர்
தீயவே டுவர்முதற் பலராற்
றுக்கமுற் றுளராங் கேகியன் னவர்தந்
துயரெலாம் வேரறக் களைந்து. (8)

ஆங்குநின் கருத்துக் கிசைந்தவோ ரிடத்தி
லழகுறு நகரமொன் றமைத்து
நீங்கருங் கருணை மிகப்படைத் தந்த
நிகரறு தெக்கண நாட்டைப்
பாங்குடன் புரந்தங் கிருவெனப் பகரப்
பார்த்திவன் புதல்வனன் பொடுகேட்
டோங்குதென் னாட்டை நோக்கின னெழுந்தா
னுவகைதன் னுளத்தெழுந் திடவே. (9)

துங்கமா மணித்தேர் துனைநெடுங் கரமாத்
துரகதம் பதாதியென் றுரைக்கும்
பொங்குநால் வகைய படைக்கடல் சூழப்
புனைமணி முடியிசை நிறைந்த
திங்களங் கவிகை நிழற்றவாத் தியம்பஃ
றிரைக்கடன் முழக்கென முழங்க
வங்குநின் றெழுந்து போந்துநல் வளங்கூர்
தென்றிரு வாலங்கா டடைந்தான். (10)

தென்றிரு வாலங் காடெனும் பதியைச்
சேர்ந்தபோ திரவிதான் மேலைக்
குன்றிடைச் சார்ந்தா னெவணினி நகராக்
குதுமெனு நினைவொடு வேந்த
னன்றிர வந்தப் பதியிடை வைகி
யருந்துயில் புரியுமவ் வேலை
மன்றினு டகஞ்செய் யெம்பிரா னந்த
மன்னவன் கனவிடை வந்து. (11)

ஒருமறை யவன்போ னின்றுமன் னவநீ
யுளம்வருந் தற்கவிப் பதியிற்
கருதுதெற் கிருயோ சனையிற்சக் கியமாங்
கனவரை யுளததி னின்று

---

(9) பார்த்திவன்-அரசன். (10) பல்லிரை யென்னுஞ்சொற்றொடர் பஃறிரையென நின்றது. புணர்ச்சிவிகாரம்.

வருமொரு கிருபா நதியுள தந்த
நதியின்றெற் குளதுநல் வாசந்
தருகளா வனமவ வனத்திடை யொளிகூர்
தணிச்சிவ லிங்கமொன் றுளதால். (12)

இவணிருந் தந்தக் களாவனத் திடைநீ
யெய்துக வெய்துமப் பொழுது
தவமிகு பொதிய முனியவண் வருவான்
சாற்றுமம் முனிமொழி வழியே
யுவகையுற் றெனக்கா லயமமைத் தந்த
வுயர்மணிக் கோயிலின் வடபாற்
புவனம்யா வைபுமே யீன்றவொப் பனைக்குப்
புரிகநீ யாலய மாதோ. (13)

மிக்கவா லயமாங் கியற்றிப்பின் னெமது
விமலமா லிலிங்கத்தின் வாயுத்
திக்கினிட் சேப நதிப்புன லிடையே
சிராவண விம்பமா வுருக்கொண்
டிக்குவ லயத்தோ ரறிவுறு தமிழ்வுற்
றிருக்குநந் தேவியை யினிநீ
யக்குளிர் புனனின் றெடுத்தியற் றுகவவ்
வாலயத் திடைப்பிர திட்டை. (14)

எண்சீர் விருத்தம்.

சிகரநெடு மேருவென வோங்கு செம்பொற்
சிகரியொடு மணிமாடந் திகழ்ந்து தோன்று
நகரமழ குறவமைத்தொப் பனையென் றோது
நாயகிக்கு மெமக்கும்விழா நடத்தி யாரும்
பகரரிய பெருஞ்சீர்த்தி யொடுதென் னாட்டிற்
பராசர ரெவருமிகப் பணிந்து போற்ற
நிகரறுசெங் கோலோச்சி வாழ்க வென்று
நிகழ்த்திமறை தனனெமையா ணிமலன் மாதோ. (15)

அறுசீர் விருத்தம்.

துங்கவேன் மன்னர் கோமான் றுயிலுணர்ந் தெழுந்தா னந்தச்
செங்கதி ரவனுங் கீழைத் திசையினின் றெழுந்தா னற்றைக்

கங்குலி னிடைத்தான் கண்ட கனவையே கருதி நெஞ்சிற்
பொங்கிய வுவகை யுந்தப் புறப்பட்டா னவனின் றம்மா. (16)

சிந்தையி னுவகை யோடுஞ் செறிந்தபல் படைக ளோடும்
வந்துபூங் களாவ னத்தை யடைந்தனன் மறுவில் லாவக்
கந்தமார் வனத்தைக் கண்ணிற் கண்டவப் பொழுதே யந்தச்
சந்தணி தடந்தோண் மன்னன் மறந்தனன் றன்னை மாதோ.

மன்றவவ் வனத்திற் றன்னை மறந்தவன் சிறிது நேரஞ்
சென்றபின் கனவி லீசன் செப்பிய வாறத் தென்றற்
குன்றவன் வருநா ளென்றே யிலிங்கமெங் குளது கொல்லோ
வென்றுதன் னுளத்தேயெண் ணிந திகைத்தன னிருநதான்
மன்னோ. (18)

இன்னணந் திகைத்து வேந்த னிருக்குமவ் வேல்லை தன்னிற்
பன்னகா பரணன் வேந்தன் கனவிடைப பகர்நத வாறே
மன்னனெஞ் சுவப்ப வந்து தோன்றினன் வயங்கு சோதிப்
பொன்னக ரிமையோர் வேண்டப் புணரிநீ ருண்ட மேலோன்.

வந்தவம் முனிவன் பாத மலர்திரு முடிமேற் கொண்டு
சிந்தையின் மகிழ்வுற் றன்னோன் செபபிய வாறே யன்பா
யந்தநற் களாவனத்தை யழகுறத் திருத்திப் பின்ன
ரெந்தைபால் வணநா தற்கு மிறைவியொப் பனைக்கு மாநோ.

சிற்பநூ லதனிற் கூறும் விதிகளிற் றிறம்ப லின்றி
நற்பெருங் கனகத் தானு நவமணித் தொகுதி யானும்
பொற்புறப் புனைந்து பல்கோ புரங்களோ டிலங்கித் தோன்று
மற்புத மேவு கோயி லியற்றினன் ராசன் மாதோ. (21)

தன்னக மகிழ்ந்து கோயில் சமைத்தபின புவனந் தாங்கும்
பன்னக வரச னாலும் பகாருஞ் சிறப்பு வாய்ந்த
நன்னக ரியற்றி னான லளகைமா நகரு மந்தப்
பொன்னக ரமுமே நாண முற்றிடப் புரிநது மாதோ. (22)

வரிசிலை மதனு நாணும் வனப்பினனு யர்ந்த வந்தக்
குரிசிலா ரியன்று வின்பங் கூர்ந்துவீற் றிருப்பா னவ்வூர்க்

(22) புரிந்து-விரும்பி. (23) குரிசில்-அரசன்.

கரிசிலீ காணத் திக்கித் தணைகமால் வரையி னெங்கும்
புரிசைசூழ்ந் திலங்கு செம்பொன் மாளிகை புரிவித் தானால்.

முந்தைதமுத் தமிழை யெல்லா மறிந்திய முனிவர் கோமான்
சிந்தையின் படிபொற் கோயிற் றிருநகர் யாவுஞ் செய்து
நிர்மையி னமைச்சரோடு நீள்பெரும் படைக ளோடுந்
தந்தையை வேந்தர் வேந்தன் முன்னுற வழைத்தான் மன்னோ.

நறுமலர்த் தருவி னீழ லண்ணலுமிந் திரனுஞ் சோதி
யுறுமணி மவுலித் தேவர் யாவரு முளத்தி னேவு
மறுபகை யனைத்தும் வென்ற முனிவரு மன்பு கூர்ந்து
குறுமுனி நினைக்க வாங்கு வந்தனர் குழுமி னாரால். (25)

வந்தவிந் திரன்முன் னாய வானவர் முனிவர் சேயத்
தந்தைதென் பொதிய மேவுந் தமிழ்முனி யவரோ டெய்தி
யந்தநன் னதியின் மூழ்கிக் காந்துறை யதுலே தன்னைச்
சுந்தரப் புனலி னின்று தோற்றுவித் தங்கு மாதோ. (26)

குருமணி யுயிர்க்குஞ் செம்பொற் கோயிலிற் கொணர்ந்தி யாரும்
பெருமகிழ் வுற்றுப போற்றப் பிரதிட்டை புரிந்து பின்னர்
மருமலர்க் களவின் வாழ்பால் வண்ணநா தனையு மந்த
வருமறை புகழொப் பில்லா வம்பிகை தனையு மன்னோ. (27)

கதிதரும் புகழ்நீட் சேப கங்கையென் றுரைக்குந் தூய
நதியிடை மூழ்கித் திவ்ய நறுமலர் கொடுபூசித்துத்
துதிபுரிந் திறைஞ்சி ஞனித் தொல்லுல கனைத்து மேயோர்
மதிநெடுங் குடைக்கீழ் வைத்துப் புரந்திடு மன்னர் மன்னன்.

சிந்தையி னினைத்தான் பின்னர்த் திருக்களா வுடையா னுக்குஞ்
சுந்தரி யெனுமொப் பில்லாத் தூயநா யகிக்கு மீங்கு
விந்தைகொள் புதிய மன்றல் விழாநடத் துதுமென் றந்த
விந்திர னகர மேபோ லெழினகர் புனைந்து மன்னோ. (29)

வேறு.

சீதருகிற் றுனியெனவர்த் தியங்கள்பல முழங்கமிகச்
சிறந்த வேத
கீதவொலித் திடவரம்பை மாதர்திரு நடமுஞற்றக்
கிளரு நல்யாழ்க்

(28) கரிசு-குற்றம். (27) குரு-நிறம். மரு-மணம். [29] புனைந்து-அலங்கரித்து.

கோதறுநா ரதன்முதலோ ரின்னிசைபா டிடப்புவியிற்
குலவும் யாருங்
காதலுடன் கண்டிருகண் களுமிதயங் களுமிகவுங்
களிக்க மாதோ. (30)

செப்புமொரு சுபதினத்திற் சிறப்பொடுநல் வதுவைவிழாச்
செய்து பின்னர்த்
தப்பறுவா ரணவாசித் தலமறையோ ரெனுமாதி
சைவர் தம்மை
யப்பதியில் வரவழைத் துத்திருக்களா வுடையானை
யகில மீன்ற
வொப்பனையைப் பூசனைநன் குஞற்றிடச்செய் தனனிதய
முவந்து மன்னே. (31)

முனைகொளயிற் கரவீர பாண்டியமன் னவனிமையோர்
முனிவ ரென்னு
மனைவருமவ் வாரியன்பொன் மனைபுகுந்து பொன்னுலகத்
தரசன் கையாற்
புனைமணிமா முடிசூட்டித் தென்னாடு புரந்திருநற்
புகழோ டென்று
நனையவிழ்தார் மன்னவனை வாழ்த்தியவ ருறையுமிட
நணுகி னரால். (32)

செம்பொன் மாமுடி வீரபாண் டியனெனுஞ் செம்ம
லும்பர் மாதவ ரனைவருஞ் சென்றபி னுயர்வாங்
கும்ப மாமுனி திருக்களா வனத்திலங் குரித்த
வெம்பி ரான்றிருச் சன்னிதி யெய்திநின் றியம்பும். (33)

அறுசீர் விருத்தம்.

மன்றினடம் புரிந்தசெழு மாமணியே யருட்கடலே
மறைக்கெட் டாம
னின்றதனிப் பழம்பொருளே மலர்மணம்போ லுலகனைத்து
நிறைந்த வாழ்வே.

---

(32) நனை-அரும்பு. நணுகினர்-சேர்ந்தார். (33) அங்குரித்த
முளைத்த.

துன்றுமலர்க் களவினிழற் பாஞ்சுடரே ஞானமனுத்
துணையு மில்லாப்
புன்றகைமை யுடையேனைப் புரந்தபெருங் குணநிதியே
போற்றி யென்று. (34)

கலி விருத்தம்.

துதிபுரிந் ததுலசுந் தரியின் றாயசன்
னிதிபுகுந் திறைஞ்சியே நிகரி லாப்புக
ழுதிபனு ரியன்றனை வாழ்த்தி யன்புடன்
பெர்தியவெற் படைந்தனன் புகழ டைந்துளான். (35)

அகவல் விருத்தம்.

ஆயுமறை யவர்கண்முனி வரர்முதலோர்க் கிடர்புரியு
மரக்கர் மூன்றுந்
தீயவர்க டமைவதைத்துத் திசைவிசயந் தான்புரிந்திந்
திரனூர் சென்று
நேயமொடு தருதிறைபெற் றுளமகிழ்ந்து வந்துமனு
நீதி யாயத்
தூயகரி வலநகரி னிருந்தரசு புரிந்தனன்சீர்
துலங்க மன்னே. (36)

அற்றமிலா ரியவேந்த னரசியற்றி வாழ்ந்திடுநா
ளவனுக் காங்கே
யுற்றகுல பூடணபாண் டியனென்னு மொருசுதன்வந்
துதித்தான் வேலை
சுற்றுபெரும் பூவுலக மனைத்தையுமத் திருப்புதல்வன்
றோண்மேல் வைத்துச
சிற்றிடையொப் பனைபாகன் றிருவுருவத் தொடுகலந்தான்
றென்னர் கோமான். (37)

ஆரியனுலையஞ் செய்த சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் 28-க்கு விருத்தம்- 949.

---

(36) திறை-கப்பம். (37) அற்றம்-சோர்வு.

## இருபத்திரண்டாவது

## பசாசுவாதைதீர்த்த சருக்கம்

தரவு கொச்சகக்கலிப்பா.-தி.

பூசுவரிச் சுரும்பரிசை முழக்குபொழிற் கருவையெனப்
பேசுதிரு நகரிலுளோர் வந்திறைஞ்சப் பெரிதிரங்கி
யாசுதவிர் பெருங்கருணை யதுலகவுந் தரியொருபை
சாசுபுரி யிடரொழித்த சரிதமெடுத் தியம்புதுமால். (1)

மூக்கணிறை வனைச்சிறிது மதியாமே முன்னொருநாண்
மிக்கமகம் புரிந்ததனால் வெறியுருவம் படைத்துழலுந்
தக்கனுயர் பூதபிரே தங்களுக்கோ ரதிபதியா
யக்கருவை நகரிலிருந் தலக்கணியற் றினன்மாதோ. (2)

அந்நகரத் தரசன்முத லனைவருமாங் கவன்புரிபு
மின்னல்சகிந் திலராகி யிறைவியது லாம்பிகையின்
சன்னிதியுற் றன்பொடுபூ சனைபுரிந்து பலகாலம்
பன்னுதுதி புரிந்திருந்தார் பத்தியுட னவ்வேலை. (3)

செகமுழுது மீன்றபரா தேவியது லாம்பிகைதான்
றகவுடனங் கவர்புரிபூ சனையாலுந் துதியாலு
மகமதனின் மிகமகிழ்வுற் றரியசுய வடிவுடனச்
சுகநகரத் தவரெதிரே தோன்றினன்சொல் லுவண்மாதோ. (4)

கலிவிருத்தம்.

சற்றுநீர் நெஞ்சமஞ் சற்க நாமொடாறும்
பற்றுறு தக்கவெம் பசாசி னாற்றுயரா
ருற்றிடா வகையினி யும்மைக் காக்குது
நற்றய வுடனென நவின்று பின்னரோ. (5)

செயிரறு பத்தியிற் சிறந்த தொண்டராம்
பயிர்தமக் கருட்புனல் பாய்ச்சிக் காத்திடும்

---

(1) ஆசு—குற்றம். பைசாசு—பசாசு. (2) வெறி—பேய். அலக்கண்—துன்பம். (4) தோன்றினன்றோற்று, எச்சப்பொருள்படநின்றது.

வயிரவன் றனைவர வழைத்து வையகத்
துயிர்தொறு நிறைந்தவெம் பிராட்டி யோதுவாள். (6)

இயலுறு மிப்பதி வசிக்கு மேவரு
மயலுறுங் கொண்டுழல் வலிய தக்கனுற்
றுயர்மிக வடைந்தது துடைத்தல் வேண்டுநம்
முயர்வுறு சன்னிதி யுற்று ளாரரோ. (7)

அலகையாந் தக்கனை யவனைச் சார்ந்துள
சிலசில கணத்தையுக் கணத்திற் சென்றுநீ
பெலமிகு தொடர்களாற் பிணித்துப் பற்றிநங்
குலவுசன் னிதிதனிற் கொணர்க வென்றனள். (8)

அடிபணிந் தெழுந்துசென் றநத வித்தகன்
படிபுகழ் கருவையம் பதியி னுத்தரக்
கொடிமதில் வாயிலிற் குறுகி யாங்குறு
கடியவத் தக்கவெம் பசாசைக் கண்ணுற்றான். (9)

தக்கனும் பசாசையு மப்ப சாசுடன்
றொக்கபல கணத்தையுந் தொடர்க ளாற்பிணித்
தக்கணத் திடைக்கொணர்ந் தவனி றுத்தினன்
முக்கணெம பிராட்டிசன் னிதியின் முன்னரோ. (10)

தன்றிருச் சன்னிதி யடைந்த தாழ்வொடு
நின்றவப் பசாசெனு நெறியி றக்கனை
மன்றுளா டியபிரான் மருவு நாயகி
பொன்றிய சினத்துட னோக்கி யோதுவாள். (11)

தீயவை நீமுனஞ் செய்து நந்திரு
நாயகன் முனிவினுன் ஞால மேசிடப்
பேயுரு வடைந்தனை யின்னும் பேதைநீ
யாயுநல் லுணர்வுசற் றடைந்தி லாயரோ. (12)

நன்னய மதியுட னைந்த ஞான்றுமே
யிந்நகர் தனிலுளோர்க் கிடர்செ யாதுநீ

(8) கணம்-பேய். தொடர்-சங்கிலி. (9) வித்தகன்-வயிரவன். குறுகி-அணுகி.

யுன்னுமிப் பேயுரு வொழியுங் காறுநற்
சன்னிதி மன்னுதி யென்று சாற்றினான். (13)

விழிகண் மூன்றுடை யவன்றரு வெய்யசா பந்தான்
கழியு நாள்வரை தக்கன்வன் றொடரினுற் கட்டுண்
டிழிபு சேர்பல கழுதுட னிருந்தன னென்று
மழிவி லாவது லாம்பிகை சன்னிதி யதனில. (14)

வெருவு தக்கவெம் பசாசினுல் விளைந்தவவ வாதை
யொருவி யின்பசா கரந்தனிற் படிந்துசீ ரோங்குந
கருவை யம்பதி மாந்தர்யா வருமனங் களித்து
மருவு நற்பெரு வாழ்க்கையுற் றிருந்தனா மனறே. (15)

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

எண்டிசையும் பணிவயிர வனைநோக்கி மயனுருவுற்
றிடர்விளைக்கு
திண்டிறல்சேர் தக்கனெனுந் தீயனைமா வேகமுடன்
சென்று கட்டிக்
கொண்டெமதுசனனிதிவநதடைநதமையான்மகிழ்ந்துனக்குக்
கொடுத்தும யாமேரா
சண்டவயி ரவனெனுமப் பெயரெனவுரைத்துக் கரந்தனளெச்
சகமு மீன்றாள். (16)

பசாச வாதை யொழித்த சருக்க முற்றிற்று.
ஆகச் சருக்கம்-29-க்கு விருத்தம்-965.

---

இருபத்துமூன்றாவது

## பராசத்திபீடமுண்டான சருக்கம். ௩.

கலிவிருத்தம்.

---

கேடறு மோர்நவக் கிரகத் தால்வரு
தோடமு மன்னையாற் றோன்றும வாதையுந்

---

(16) கொடுத்தும-கொடுத்தோம்.

சாடுபன் ஞேய்களுந் தவிர்ப ராசத்தி
பீடமுண் டாயதோர் சரிதம் பேசுவாம். (1)

தாவிறன் கருவைமா நகரந் தன்னையாள்
காவலன் வீரசே கரனென் போன்பர
தேவியொப் பனையருண் மனதிற் சிந்தியா
மேவுநல் லிராப்பகல் விழிதுஞ் சாதரோ. (2)

அருந்துநல் லுணவினை யகற்றி முததின
மிருந்தனன் விரதமோ டெம்பி ராட்டிதன்
றிருந்துசன் னிதியிலிவ் வாறு சோமிகப்
பொருந்துமம் மன்னவ னிருக்கும் போழ்தரோ. (3)

தேன்றிகழு மாலைபணி, தோன்றலின்மு னேழுலகு
மீன்றபரா தேவியுமை, தோன்றினட யாவுடனே. (4)

காவலவ னங்கருவை, மாவதுல சுந்தரியை
யர்வமொடு கண்டுபய, சேவடிவ ணங்கியரோர். (5)

முன்னமொரு போதுமலை, மன்னன்மக ளாகவரு
மின்னமுத மேபசிய, வன்னமுறு மோதிமமே. (6)

பொங்குதிரை மொய்த்துலவு, பைங்கடலு டுத்தபுவி
யெங்குநிறை வுற்றிடுக, ளங்கரகி தப்பொருளே. (7)

நேயவடி யாரிதய, கோயிலக லாதுநித
மேயசுட ரேயினிய, தூயகரு ணைநிதியே. (8)

கனபுவழ டைந்துழலு, மெனதிடமொ ழிந்துமிக
மனமகிழ வுந்துதெரி, சனமுதவு சுந்தரியே. (9)

கஞ்சமமு தாக்குங், குஞ்சிலவபி ரானினிது
கொஞ்சுமயி லேபுனது, செஞ்சரண மேசரணம். (10)

(2) சிந்தியா-செய்யாவென்னும்வாய்பாட்டுவினையெச்சம். சிந்தித்தென்பது பொருள்.

என்றுதுதி யன்பொடுசெய், கின்றபொழு தெந்திரம
தோன்றிறைவி தந்தனள, வென்றியா சன்கையிலே.(11)

தந்துபின ரோதுவளி, வெந்திரம தேயெனது
சொந்தவுரு வாமெனநி, னைந்திடுதி நீயினியே. (12)

நாடொறும்வ ருத்துபிணி, யோடுபல்க ணத்தொகைசெய்
பீடையுந வக்கிரக, கோடமும கற்றிடுமால். (13)

வஞ்சிவிருத்தம்.

பெருமை சேர்மகப் பேறுடன், மருவு செல்வமும்வாழ்க்கையும்
பொருவில் பல்வகைப் போகமுந், தருமி வெந்திரந் தானரோ.

நந்த மற்புத நற்பதம், புந்தி யன்பொடு போற்றுவான்
வந்தி டுங்குறு மாமுனி, சிந்தை யின்படி தேர்ந்துநீ. (15)

கூறு நந்திருக் கோயிலின், மாறி றெக்கண வாயிலி
லூறி லாலய மொன்றமைத், தேறு பீடமி யற்றியே. (16)

தட்டி லெந்திரந் தன்னையக், கிட்டு பீடத்தின் கீழ்ப்பிர
திட்டை செய்தருச் சித்திடென், றிட்ட மாகவி யம்பியே. (17)

கன்னி யங்குக் கரந்தனள், பின்ன ரந்தப் பெரும்பதி
தன்னில் வந்த தமிழ்முனி, பன்னு சொல்லின் படியரோ. (18)

கொச்சகக் கலிப்பா.

ஆலயமொன் றாற்றி யதனுண்மணிப் பீடமொன்று
கோலமுறச் செய்ததன்கீழ்க் கூறுமந்த வெந்திரத்தை
யேலவே தாபனஞ்செய் தென்றும்பூ சித்திருந்தான்
சீலமிகு நல்வீர சேகரப்பேர் மன்னனரோ, (19)

---

(13) கணத்தொகை-பேய்த்திரள். (15) போற்றுவான-வினையெச்சம்.
போற்றுதற் கென்பது பொருள்.

தென்னர்பிரா னென்னத் திகழ்வீர சேகரனோ
டந்நகரத் துள்ளோ ரனைவோரும் பூசனைசெய்
துன்னுவரம் யாவையும்பெற் றென்று முயர்ந்தோங்கு
மன்னுபெரு வாழ்க்கை படைத்து வசித்தனரால். (20)

பராசத்தி பீடமுண்டான சருக்க முற்றிற்று.

ஆ. சருக்கம் 30-க்கு விருத்தம் 985.

இருபத்து நான்காவது

## இலக்குவன் பிரமகத்தி தீர்த்த சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

கலக்கமி லிலங்கை மேவு மிராவணி களத்திற் சால
வலக்கணுற் றுங்கு வீழ வடர்ந்தவோர் பாவந் தன்னை
யிலக்குவான் கருதிப் போந்து விரைநறு மலர்கொண் டந்நா
ளிலக்குவ னினிது பூசித் திருந்தவோர் சரிதஞ் சொல்வாம். (1)

கலி விருத்தம்.

கந்தமா மலர்த்திருக் களாவ னப்பதிக்
கெநதைவாழ் தயிலையே யிணைய தாகுமோ
வந்தமா தலத்தினற் பெருமை யன்புறு
புந்தியா லுரைக்கநா முண்டு போதுமோ. (2)

யாநும்க் கறிந்தவா றறைகு வாமெனத்
தானுயர் சூதமா முனிவன் சாற்றுவான்
கோனிரா கவனிலக் குவனு டன்கவிச்
சேனையோ டிலங்கையிற் சென்ற ரக்கரை. (3)

கொன்றிரா வணனையக் கும்ப கன்னனை
யன்றடர்ந் திரகவீ டணற்கு நல்கியே
பின்றிரும் பனுங்கோடும் பிரம கத்திமுன்
சென்றதவ் விராவணன் போல சேர்ந்ததோ. (4)

(1) இராவணி-இராவணன் மகன்.

அநந்தவே லையிற்கடி தடலி ராகவன்
சிந்தையிற் றிகைத்துவெஞ் சிலைவ ளோத்தனன்
புந்தியோ டுரைப்பனப் போது வீடண
னிந்தைக்கூர் பிரமகத் தியது நின்றதால். (5)

திண்ணிய சிவபிர திட்டை யேபுரிந்
தெண்ணுபூ சனைசெயி னொழியு மென்றலு
மண்ணல்கும பனைத்தன தகத்தி லுன்னவப
புண்ணிய முனிவனப் போழ்தி லெய்தினன். (6)

மாதவன் றிருமுக நோக்கி மாதவன்
மேதகு மெனையிவண் மேவு மிப்பெருந்
தீத்துறு பிரமகத் தியது தீரவே
யோதொரு நெறியெனக் கெனலு மோதுவான். (7)

மாதவர் புகழுநிர் மீந்தியிற் றென்றெருந்
(1) லோருது சிவலிங்கங் கொணர்ந்து வந்தாற்
சேதுவிற் பிரதிட்டை செயினி ராவணப
பாதகன் றனைக்கொன்ற பாவ நீங்குமால். (8)

அம்புவி புகழ்திரு வானைக் காவுறை
நம்பனைப் பூசனை புரிந்து நன்கவன்
செம்பதி மிறைஞ்சினற் றிருமாற் கொடுங்
(2) கும்பகன் றனைமுனங் கொன்ற தோடமே. (9)

இட்டமாயக் கருவையம் பதியி லெய்தியே
சிட்டர்வுந் தனைபுரி சிவலிங் கப்பிர
(3) திட்டையான் றியற்றியத் திருக்க ளாவுறை
மட்டில்சீர் மேவுபால் வண்ண நாதனை. (10)

பூசனை புரிந்துதான் போற்றி னேகுமந்
நீசனு மிலங்கைவாழ் நிருதன் மைந்தனை
மாசழுக் கொடுத்திடை மாய்த்த பாவமென்
(4) றேச முமனப்பட விரும்பி னனரோ. (11)

[10] சிட்டர்-நல்லோர்.

மாதவ முனிவனிவ் வாறு கூறலுங்
கோதின்மா ருதிதனைக் கடிது கூவியே
சீதநீர் மலையினிற் சென்றோர் லிங்கமிப்
போதுகொண் டடைகெனப் புரிந்து செப்பினன். (12)

அக்கண மாருதி யன்பி னோடுமே
தக்கநல் லிராகவன் றனைப்ப ணிந்துசீர்
மிக்கதோ ரருட்சிவ லிங்க மேயெடுத்
திக்கண மீள்வலென் றெழுந்து போயினன். (13)

எண்சீர் விருத்தம்.

மாருதியா னவனிலிங்கங் கொண்டுமீண்டு
வரக்காலஞ் சென்றிடவே மனதி னோர்ந்து
சீர்மலியு நல்லமுகூர்த் தத்தி லேதான்
சிவலிங்கப் பிரதிட்டை செய்ய வெண்ணி
யார்கலியின் மணலிலிங்க மாக்கிப் பூசித்
தகமகிழ்வுற் றிராகவனங் கமரும் வேலை
யோர்மருவு நிர்மலைதமா நதியி லிங்க
மினிதுகொணர்ந் தனுமனவ ணெய்தி னானால். (14)

மாதவனம் மணலையருட் குறியாக் கொண்டு
மகிழ்ந்துபூ சனைபுரிந்த துணர்ந்தி ராமன்
பாதமலர் வணங்கியடி யேனிப் போது
பரிவினுடன் கொணர்ந்தசிவ லிங்கந் தன்னை
யேதமிலா வன்பொடுபூ சித்தல் [illegible]
மெனமிகவும் வேண்டினனவ் வேலை தன்னிற்
சீதரனம் மாருதியை நோக்கி யேதான
சிறுநகைசெய் தொருமாற்றஞ் செப்பு வானால். (15)

ஈங்குநீ வருமுனம்யாம் பூசை செய்த
விலிங்கத்தை நின்பலத்தா லெடுப்பா யென்னிற்
பாங்குபெற நீகொணர்ந்த விலிங்கந் தன்னைப்
பரிவுடனே பூசனையாஞ் செய்வோ மென்று

[12] மாருதி-அனுமன். [14] ஆர்கலி-கடல். [01]

வாங்குசிலைத் திருக்கையிரா கவனருள் கூற
மாருதிவன் கூலத்தால் வளைத்துச் சுற்றி
யோங்குவலி யகற்பிடுங்க லோடு மன்னோ
னூரமோய்ந்து மனமயர்ந்தங் கொல்கி நின்றான். (16)

மன்னவனி ராகவன்மா ருதியை நோக்கி
வாவெனத்தன் னருகழைத்து மகிழ்ந்தன் போடு
புன்னகைசெய் திங்குநீ கொண்டு போந்த
புனிதவிலிங் கத்தையுநாம் பூசிப் போமென்
றின்னருளான் முன்னையவிங் கத்தி னுக்கே
யிணையாகத் தாபனஞ்செய் தினிமை கூரப்
பொன்னிணர்மா மலராற்பூ சனைசெய் தாதை
புதல்வன்மகிழ்ந் திடவொருசொற் புகல்வான் மன்னோ.

இந்தவிலிங் கத்தைமுன்னே தெரிசித் தேபின்
யாம்பூசை புரிந்தசிவ லிங்கந் தன்னை
வந்துதெரி சித்தவர்நற் பலன்கொள் வார்நிர்
மதைச்சிவலிங் கத்தைமுன்னர் வணங்கி டாம
னந்தமுறு சிவலிங்கந் தெரிசித் தோர்க்கு
நற்பலனிற் பலனுகு மெனவே கூறிச்
செந்திருநா யகனிளவ லோடு மற்றைச்
சேனையொடு மவணீங்கிச் செல்லும் போழ்தில். (18)

கும்பகன்னன் றனைவதைத்த பிரம கத்தி
கோரமுடன் வீரன்முனர்க் குறுகி நிற்பச்
செம்பதுமை நாயகன்ற னதனை நீக்கத்
திருவானைக் காவினிடைச் சென்றன் போடு
சம்புநிழ றனிலுகந்து வாழு முக்கட்
சம்புமலர்த் தாளினைப்பூ சனைசெய் தேத்த
வெம்புறுமத் தோடமொழிந் துவகை கூர்ந்து
மீண்டனனவ் விராகவனந் நெறியின் மாதோ. (19)

[16] [illegible] (17) [illegible] புதல்வன்-மகன்.

இந்திரன்றன் பகைஞனைமுன் வதைத்த தோட
மிலக்குவன்றன் மனமருள வெதிரே தோன்றி
வந்துநிற்க வஃதொழிக்கும் வண்ணங் கும்ப
மாமுனிவ னுரைத்தபடி மனநி னைந்தே
யெந்தைநதி யணங்குவணங் கிடவோர் பாத
மெடுத்துநடித் தவன்கடுக்கந் தரத்தோ னாதி
யந்தமிலான் வாழ்கருவை நகரந் தன்னை
யவ்விரா கவன்முதலோ ரடைந்தார் மன்னோ. (20)

சண்டியசெந் தமிழ்முனிவ னுடனி ராம
னிலக்குவனு தியர்தமையந் நகரங் காக்கும்
பாண்டியன்வந் தெதிர்கொளக்கண் டுவகை கூர்ந்து
பவந்தவிர்க்கிட் சேபநதி தன்னின் மூழ்கி
வேண்டியருட் சினகரத்துட் புகுந்து சிந்தை
மிகவுருக வானந்த விழிநீர் சோரச்
சேண்டிகழ்தண் பிறைச்சடிலப் பெருமா னென்னுந்
திருக்களா வுடையானைத் தெரிசித் தாரால். (21)

இலக்குவனன் பூற்றுலகத் தெவரும் போற்று
மிருந்தவமா முனிவர்பிரா னிசைத்த வாறே
யலக்கணகற் றிடுகளவின் மேவுந் திவ்ய
வருட்சிவலிங் கத்தினீ சான திக்கிற்
றுலக்குறுபச் சிமவாயிற் கோயி லாற்றித்
தூயலிங்கப் பிரதிட்டை புரிந்து பாரச்
சிலைக்கையிரா கவப்பெருமா னன்பு கூர்ந்து
செப்பியவா றவ்விலிங்கத் தினுக்கு மாதோ. (22)

ஏமமா ரிலக்குமனே சுரனென் றோது
மெழிற்பெயரும் பிரதிட்டை புரிதே விக்குக்
கோமளாம் பிகையென்னும் பெயரு மிட்டுக்
குளிர்நறுமா மலர்க்களவி னீழல் வைகுங்

---

29 வந்தேன்-இதில் எதிர்காலமிறந்தகாலமாயிற்று. சூத்திரம்-விரைவினுமிக வினுந்தெளிவினுமியல்பினும். பிறழவும் பெறூஉமுக்காலமு மேற்புழியெ ன்றதனா னீண்டுத் தெளிவு பற்றி வந்ததென்க.

காமர்பால் வண்ணநா தனையொப் பில்லாக்
கன்னிபா கனைவாசங் கமழுங் கொன்றைத்
தாமவே ணியனைவிருப் பொடுபூ சித்துத்
தனதுமனங் கனிந்துதுதி புரிந்தான் மன்னோ. (23)

நம்பனே போற்றிமுக்க ணாதா போற்றி
நண்ணலார் புரமெரிய நகைத்தோய் போற்றி
யெம்பிரா னேபோற்றி முன்னங் கங்கைக்
கின்பநடங் காட்டியரு ளிறைவா போற்றி
கும்பமுனிக் கருள்புரிந்த குழகா போற்றி
கூர்மழுமான் றரித்தகுணக் குன்றே போற்றி
கம்பவா ரணத்துரிமெய் தரித்தோய் போற்றி
களாநிழற்கீ ழுதித்தவருட் கடலே போற்றி. (24)

என்றுதுதி புரிந்துதனைத் தொடர்ந்து மம்ம
ரியற்றியவப் பிரமகத்தி தோட நீங்கி
வென்றிபெறு சுடர்வடிவேற் படைக்கை வேந்தர்
வேந்தெனும்பாண் டியனிடத்து மிக்க வாசந்
துன்றியசந் தனப்பொதிய வரையின் மேவுந்
தூயமுனி வரனிடத்தும் விடைபெற் றுள்ளத்
தோன்றியபே ருவகையுட னிராமன் றானோ
டுயர்வளங்கூ ரயோத்திநக ருற்றான் மன்னோ. (25)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வரிசிலைரா கவனுரைத்த வாறுமன மகிழ்ந்தவன்பின்
வந்த வந்தப்
பரிசுபெறு மிலக்குவன்முன் னிட்டபெருந் திருநாமப்
படைத்த வந்தக்
கரிசிலிலக் குமணேசு ரனைக்கோம ளாம்பிகையைக்
கருதிப் போந்து
தெரிசனஞ்செய் தவர்பிரம கத்திமுதற் பாவமெலாந்
தீர்ந்துய் வாரால். (26)

(24) நம்பன்-இன்பன்; காமர்-அழகு. (25) மம்மர்-மயக்கம். (26) கரிசு-குற்றம்.

வேறு.

அசைவின்மா தவர்காள் கேண்மி
னின்னுமா லயத்தின் மேற்குத்
திசைதனில் விளங்குந் தூய
செம்பொனா லயத்தின் மேவி
யிசைபெறு பிராமண சிதை
யிலக்குவன் முதலோர் யாரும்
வசையற வுள்ள மானபால
வணங்கினா ரெனித் தமமர். (27)

இலக்குவன்பிரமகத்திதீர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 31-க்கு விருத்தம்-1012.

---

இருபத்தைந்தாவது

## வேதியன் பாவந் தீர்த்த சருக்கம். தி

---

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

முன்னொரு மறையோன் போதனு முநிவயற் செந்நெல் யாவுங்
கன்னலி னழகு காட்டுங் கருவைமா பதியின் மேவி
யன்னையைக் கொலைசெய் பாவ மகன்றுநல் லியோகதி யென்னுந்
தன்னக ரடைந்த காதை தன்னைச்சிற் றெடுத்துச் சொல்வாம். (1)

கலி விருத்தம்.

தன்புகழ் விளங்கவொரு தண்குடை நிழற்கீழ்
மண்பதை புரந்துறைய வன்சிலை யிராம
னன்பொருவ ளம்பொலிய யோகதிநகர் தன்னி
லின்புறவி ருந்தரசி யற்றிடுமந் நாளில். (2)

வானிடுமை சூழுமவ யோகதிநகர் வாசன்
றுவின்மறை நாலுநனி தானினிது ணர்ந்தோ
னவிலொரு பொய்யுரைம றந்துநனி லாதோன்
றீவினைபு ரிந்துபல தீவினைதுறந் தோன். (3)

---

(27) இசைபுகழ். (3) தீவினை-தீ வளர்க்குந் தொழில், யாகஞ் செய்தல்.

அம்பகம்வி ழித்துமல ரம்பனையெ ரித்த
வம்பகவ னின்சரண மாமுபய பங்க
யம்பகலி ராநினையு மன்புறும னத்தோ
னம்பகனெ னச்சொலுமொ ரந்தணனி ருந்தான். (4)

வித்தகனெ னச்சொலும வேதியன்வி ரும்பு
சுத்தகுண முற்றவொரு சுவிரதையெ னும்பேர்ப்
பதிதினியொ ருத்தியுளள் பன்னுமவ ளாங்கோர்
புத்திரனை யீன்றனள்பு ரிந்துளம கிழ்ந்தே. (5)

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

காதலன் றனக்கு நாமங் காலவ னெனவே யிட்டு
மாதய வுடனன் புற்று வளர்த்தனர் வளர்த்துப் பின்னர்க்
கோதினூல் பயிற்றிச் சான்றோ னாகினன் குமர னென்றவ்
வேதியன் றானு மச்சு விரதையு மகிழ்ந்த ரம்மா. (6)

மையினு லனைத்துங் கற்று வன்னியாய்ப் பன்னா ளன்னா
னையமேற் றுண்டு வாழ்நதான் சென்றது வயதங் கைம்பான்
றுய்யகா லவனுக் கக்கா லவன்றனை நோக்கிச் சொல்வான்.
செய்யநான் மறைபு மோதித் தேர்ந்தவம் பகன்றன் மன்னோ.

செல்வநான் செல்வ னையந் திரிபறப் பலநூல் கற்றுக்
கல்வியி னுயர்ந்த சிந்தைக் கௌதம முனிவன் றன்பா
னல்வியன் மகஞ்செய் திங்கு நான்வருங் காறு நந்தந்
தொல்வளமனைக்காத் திங் கிருமெனசசொலிச்சென்றானல்.

தந்தைதான் றனக்கன் போடு சாற்றிய மாற்றந் தன்னைச்
சிந்தையிற் கருதி மைந்தன் றிருமனை வைகு நாளி
லந்தவம் பகன்றன் றேவி சுவிரதை யாவி கொள்வா
னந்தன னொருநாட் கங்குன் மறலியின் றூதர் மன்னோ. (9)

இடம்படு மனையுட் புக்க ருணர்வுசற் றின்றித் தூங்கு
மடந்தையைக் கண்டார் நோயொன் றிலைச்சிறி திந்த மாதி
னுடம்பிலெய் வனமிவ் வேளை யுயிர்கவர்ந் திடுவ தென்று
மிடம்பெறு தூதர் நெஞ்சந் திகைத்தனர் நிற்கும் போழ்தில்.

(4) அம்-அழகு. புலவன்-சிவன். பம்பயம்-பகல். இரண்டாம் வேற்றுமை உருபுத் தொக்க விலைத் தொடர். (7) வன்னி-பிரமசாரி.

கொச்சகக் கலிப்பா.

சண்டாமன் றன்றூதர் தம்மிலொரு தூதனிந்த
வொண்டொடியி ளுவிகவர் வுற்றிடுதற் கியோசனையென்
கண்டிடுமி னிப்பொழுதிக் காரிகையின் றன்டிகளைக்
கொண்டிவடன் ளுவி கவர்வமெலனக் கூறியரோ. (11)

ஏனு முணர்வுசிறி தின்றித் துயில்புரியுங்
காலவனைச் சென்று கடித்தான் பிபீலிகையாய்ச்
சீலமிகு மாதமறைச் செல்வன் விழித்தெழுந்து
சூல்முறு வன்கையம தூதரைக்கண் ணுற்றனனால். (12)

நந்தமனை யுட்புகுந்தார் நம்பொருளை வவ்வுதற்கு
நிநதையுறுங் கள்ளர்சில ரென்றே நினைத்தனனு
லந்தமுறுந் தன்றுயி ளுருயிர்கொண் டேகுதற்கு
வந்தவரென் றந்தோ வுணரான் மனதிலரோ. (13)

பொங்குசின முற்றவரைத் தாக்குவான் பூங்கமலச்
செங்கையிலோர் பாரத் தடியேந்திச் சென்றனனு
லங்குநமன் றூத ரவன்விழிக்குத் தோன்றுமே
பங்கமிலன் ஞேன்றுய்ப் படுக்கையறை யுட்புகுந்தார். (14)

அவ்வறையுட் புக்கொருவ ரோடொருவ ராங்கிருந்து
செவ்வையுறப் பேசு மொலியைத் திருமனையுள்
வெவ்வுயிர்க்கண் டுஞ்சுமட மெல்லியல்கேட் டாள்விழித்தா
ளிவ்வொலியே தென்று திகைத்தா ளெழுந்தனளால். (15)

ஈங்குவந்த கள்ள ரெவண்மறைந்தா ரென்றுதிகைத்
தோங்குபெரும் பார வுலக்கைவலக் கையேந்தித்
தாங்கரிய மாகோப சன்னதமோ டங்குநின்ற
பாங்குபெறு தன்மகன்முன் சென்றாள் பதறியரோ. (16)

செந்தா மரைமேற் றிருவெனுமப் பார்ப்பனியை
நந்தா யிவளென் றறியா னமதகத்தில்
வந்தே நுழைந்த திருடனெனை மாதரவை
யுந்தோ வடித்தான் றடியா லவன்மாதோ. (17)

(12) பிபீலிகை-எறும்பு. (14) [illegible]

கலித்துறை.

துஞ்சினள் பார்மேல் வீழ்ந்து சுடர்ப்பொற் றொடியாவி
வெஞ்சம னேவு தூதர்க ளீர்த்து மீண்டார்பின்
னெஞ்சலின் மைந்தன் மாய்ந்தன னென்னை யெனவேதா
னெஞ்சிறு வார்ந்து வீழ்ந்து புலம்பா நின்றானால். (18)

பொன்னே கண்ணே மாமணி யேநற் புகழ்மேவு
மன்னே தேனே யாரமு தேயிங் கறியாமே
நன்னே யத்தோ டென்றனு னைத்தா னைக்கொன்றே
னென்னே செய்வேன் பாதகன் யான்மற் றினியந்தோ. (19)

கோதறு நேயத் தானுயர் தாயைக் கொலைசெய்த
பாதக னென்றிங் கெவரு மெனனைப் பழியாரோ
வோதுறு நிரையைக் கேயிட மாயிங் குயிர்வாழேன்
மாதிரு வன்னுடன் னுட னின்னே வருதேனே. (20)

ஒன்றிய பத்துத திங்கள் சுமந்தன் புடனீன்றே
யென்றனை நீதா னிங்கு வளர்த்த தென்கையாற்
பொன்றவ தற்கோ வென்றழு வெம்பிய புகலொண்ணு
வன்றுய ராழி வீழ்ந்தன னம்மா மறையோனால். (21)

வேறு.

பருவ ரற்கடலை வீழ்ந்தவன் றன்னைப்பா தகமோ
ருருவ மாயுட னிழலெனத் தொடர்ந்துதன் புறத்த
வெருவி நன்மனங் கலங்கியே மெய்யுணர் வின்மை
மருவு பித்தனை யொத்தனன் வனத்திடைச் சென்றான். (22)

இன்ப முகிடர்க் காலமே னெகிழப் பின்னர்
வின்னயி லெற்பகன் மாய்க்கப் புரிந்ததா மீண்டு
புன்பு வீண்மனை யடைந்தனன் றன்னுயிர் போலு
மன்னுறு மைந்தனைக் கண்டிலன் மயங்கினன் மாதோ. (23)

அன்ன காலையி லவ்வழி னோ[illegible] யையர் மதியின்
முன்ன ரன்னிரு பவிளை யாகியே முதிர்ந்தீங்

(22) ஒத்தனன் என்னுமுற்று எச்சமாயின்.சூத்திரம் "வினைமுற்றேவினை
யெச்சமாகலும் [illegible] யென்றதனாலுணர்க.

கன்னவேள்மொழி மடக்கைதான் கிடந்திடக் கண்டே
யின்னநீருநின் மைந்தனைக் கண்டிலே மென்றார். (24)

தேவி தன்னையா னிழந்தன னென்செய்கோ சிறந்த
வாவி யன்னவென் னருமபெறற சுதனையுங் காணேன்
மேவி யிவ்வுயிர் வாழ்க்கையை விரும்பியீங் குள்ளேன்
பாவி யென்னைநேர் பாதகர் யாவரிப பார்மேல. (25)

ஐய கோவெனப் புலம்பின னழுவிடு மெழுகாச
செய்ய தன்மனங் கலங்கினன் சிறிதுளந் தேறித்
துய்ய வன்பொடு தேடினன் பலவிடந் தோறும
வெய்ய பாவமுற் றழலுமப புதல்வனை விருமபி. (26)

தேடி யோர்பெருங் கானிடைக் கண்டனன் சென்றே
யோடி மார்புறத் தழுவினு னுளமிக வுருகிக்
கூடு நற்சுதன் மாசுடல கழுவினன் குறைதீர்
நீடு மன்பொடு விழிகளிற் பொழிதரு நீரால். (27)

மைந்தன் மாமுக நோக்கியென் னருமபெறன் மதலாய்
முந்து நானுனக் கியம்பிய மொழிகடந் தநதோ
விந்த நீளவனத் தெய்திய தெனகொனீ யீங்கென்
சிந்தை தேர்ந்திடச் செப்பெனச் செப்பினன் மைந்தோ. (28)

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

முன்னநிகழ்ந் தனயாவுஞ் சிறிதுமனந் தெளிந்துசுதன்
மொழியக் கேளா
வென்னினியானு செய்துமந்தோ விப்பெரும்பா தகந்தீர்வா
னெனத்தேர்ந்த தன்மேனன்
மன்னுவட காசிசிதம் பரமாரூர் திருவால
வாய்முன் னாகப்
பன்னுபலப் பலதலங்கள் சென்றுதெரி சனமபுரியப்
பணித்து மன்றே. (29)

கங்கைபிர யாகைமுந்து பலநதியின் மூழ்குவிக்கும்
கால [illegible]
றங்கியபா தகமதுதான் றணிந்திலதென் [illegible]
[illegible]

பொங்குபல வளமலியு மயோத்தியெனுந் திருநகரம்
புகுந்து செய்ய
பங்கயக்க ணிராகவன்சன் னிதியடைந்து நிகழ்ந்தவெலாம்
பகர்ந்து மாதோ. (30)

உற்றபெரும் பாதகமீ தொழியுமொரு நெறிதனையிங்
குணர்வித் தைய
நற்றவைசெய் திடல்வேண்டு மெனவிரந்தா னவ்வேலை
ஞால மெல்லாம்
பெற்றவனை முந்தவா விந்தமல ருந்தியிடைப்
பெற்றோன் வேத
முற்றுமுணர் வேதியன்மா முகநோக்கி யருள்கூர்ந்து
மொழிகு வானால். (31)

எம்பியிலக் குவன்முதனு ளிந்திரசித் துவைச்சமரி
லிலங்கு மோர்கூர்
வெம்பகழி கொடுவதைத்த பாவமகற் றியதலமிவ்
வேலை சூழ்ந்த
வம்புவிமீ துள்ளசிவ தலங்களின்மே லாயதல
மமரர் யாரு
நம்புகரு வைத்தலமென் றோர்தலமுண் டத்தலத்தி
னணுகி மாதோ. (32)

மூதறிஞர் புகழ்தருநிட் சேபந்திப் புனலினிடை
மூழ்கி யந்தச்
சீதமலர்க் களவுறைபால் வண்ணலிங்கப் பெருமானைத்
தெரிசித் தேத்திற்
பாதகமீ தகலுமெனப் பகர்ந்திடக்கேட் டந்தணனும்
பாலன் றானு
மேதகுதென் றிருக்கருவைத் தலநோக்கி நடந்தனரால்
விரும்பி மன்னோ. (33)

ஏழுமதி யொடுநடந்தோ சேழுமதி கடந்துலகத்
தெவரும் போற்றுஞ்
சீலமுறு வேதகிரிச் சாரலடைந் தனரந்தச்
செல்வி தன்னிற்

(29) பலபல-பலப்பலவெனநின்றது. புணர்ச்சி விகாரம்.

காலில்வீழ்ந் தான்றொடர்ந்த பெரும்பாவ மகன்றதுசெங்
கதிரோன் கீழ்பாற்
கோலமிகு முதயகிரி யணுகியபோ திருளகன்ற
குணம்போ லம்மா. (34)

உயர்வுறுதன் மைந்தனெனுங் காலவனாற் பண்டுகொலை
யுண்டு மாய்ந்து
மயலுறுவம் படைத்திருந்த பார்ப்பனியுங் கொருதேவ
வடிவங் கொண்டு
முயலுமருந் தவமுறுநா யகன்றனைய னெனுமிருவர்
முன்னர்த் தோன்றி
நயமிகுநற் கதிபெறுவான் கருதியவர் தமைநோக்கி
நவிலு மன்றே. (35)

நீண்டபுகழ்த் திருக்கருவைத் தலமடைந்து தெரிசித்து
நீவி ரிங்கே
மீண்டுவருங் காலையினிட் சேபநதிப் புனல்கொணர்ந்தென்
மிசைத்தெளிக்கி
னீண்டுபா தகியதனி லெய்துவல்யா னெனவேண்டி
யியம்பக் கேட்டுப்
பூண்டமனத் தன்பொடுநாம் புரிகுதுமங் ஙனமெனவே
புகன்று மாதோ. (36)

உன்னருஞ்சே ரவ்வேத கிரிச்சாரல் விடுத்தகன்றிவ்
வுலகின் மேலாம்
பன்னருஞ்சீர்க் கருவைநக ரெய்திச்சக் கிரதீர்த்தம்
பகர்நிட் சேப
நன்னதிமுன் னம்பலதீர்த் தம்படிந்து திருக்களா
நாதன் சேவை
[illegible] லாம்பின்னர்ப் பேறெய்துபெரும்
புனித ராகி. (37)

இரும்பிணைசெல் வேதியனி மருங்கணைந்து பார்ப்பனியொடுந்,
தெரிவை யாங்கு
விரும்பிமுனர்த் தம்பிணைச்செய்பவியன்று புரிந்துமக்கல்
வீட்டி னுய்த்துப்
பெரும்புகழ்சேரயோத்திநகரடைந்தவண்போய்வந்தவெலாம்
பிறங்குசெங்கட்
கரும்புயலுக் குரைத்துவாழ்ந் திருந்தனரந் நகரின்மனை
களித்து மாதோ. (38)

வேதியன் பாவந் தீர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் 31க்கு விருத்தம் 1050.

---

இருபத்தாறாவது

## சுகுணபாண்டியனுக்குத் தலமகிமையுரைத்த சருக்கம். தி.

கலிவிருத்தம்.

அணை புயசுகுண பாண்டி யற்குநீண்
மருத்துணர் மலிபொழிற் கருவை மாநகர்த்
திருத்தல மகிமையைத் திருக்க ளாநிழற்
கருத்தனன் றுரைத்ததோர் கதையைக் கூறுவாம். (1)

கன்னலங் கழனிசூழ் கருவை மாநகர்
நன்னெறி செலுத்தியிஞ் ஞாலம் போற்றிடப்
பன்னரு திறற்சுகுண பாண்டி யன்னெனு
மன்னவன் புகழொடு வாழு நாளரோ. (2)

வெண்ணெய்த்தங் கரத்திடை யிருப்ப மென்சுவை
நண்ணுநெய் தேடியே யலைகு வாரெனா
வண்ணலைக் கருவைமா தலத்தமர்ந்துமே
பெண்ணுருவில் [illegible] (3)

---

(38) உய்த்து-செலுத்தி.

வெறுப்புறு துன்பமும் வேந்த னென்னையிங்
கிறப்புமுக் கருவைமா ரேக்கி டுத்தெழு
தற்புதத் தென்றிரு வாலங் காட்டெனும்
பொற்புறும் பதியிடைப் புக்கு வைகுனை. (4)

அருடரு தென்றிரு வாலங்காட்டுறை
தருபரமனைத்தெரி சனஞ்செய்ச் சேவலம்
வருபொழு திடைத்திருக் கோயின மன்னுமக்
கருதுமுத் தரப்பிர காரந் தன்னிலே. (5)

அருநதனி யோகதண் டங்கை பற்றியே
திருந்துமோ ரற்புதச சித்தன் போற்புகழ்
பொருந்துநற் களாநிழற் புனித னைமயிரா
விருநதனை யிட்டடையி லெவரு மேத்தவே. (6)

இவ்வணங் கிட்டையி லிருந்த சித்தனைத்
தெவ்வடு வாட்படைச் செங்கை மன்னவன்
கவ்வையி றன்றிரு கண்க ளிதறிட
வவ்வயிற் கண்டுளத் தன்பு கூர்ந்தரோ. (7)

பொன்னடி யிரமினைப் புனைந்து கூறுவான்
மன்னுசீர்க் காசிபோய் வாசி னைத்துளேன்
முன்னுமென் கருத்தது முற்று மகொல்லிய
னன்னமா புனிதமுற் றது கொல்லரோ. (8)

உரந்தரு நின்றிரு வுளைத்திறந் தண்ணருள்
சுரந்தெனக் கியம்புதி யென்று சொல்லியாங்
கிரந்தனை னுலகெலா மினிது தங்குசீர்
பரந்தவோர் திங்களங் கவிகைப் பாண்டியன். (9)

சித்தவன் புடையநற் சித்த னாகிய
வித்தகன் கண்மலர் விழித்து நோக்கியே
புத்தவன் றென்றுரைத் [illegible]
[illegible] (10)

(7) தெவ்-பகை. (8) புனிதன் என்னும் பெயர் விளியுரு பெற்றுப் புனிதவெனநின்றது-புனிதனே யென்பது பொருள்.

என்றது மன்னுடனொருங் கொண்ணுடூழ்த்துமவ
னுன்றிரு வுருவ்செயெங் றுரைக்க வுந்தொன்று
மன்றுநன் றென்றுநா மறைக்கு கிழினி
நன்றெனக் கருதிலங் கனைஞ்செய் நன்கென்றான். (11)

தின்னணிய சித்தனிவ் வாறு செப்பலுந்
தன்னருளொடுவிடை தந்துவனமென்ன
வென்னுறு படையுட னெழுந்த வன்புகழ்
தன்னுமக் காசிமா நகர நோக்கியே. (12)

உவந்துநற் றிங்களா றொன்று சென்றபின்வெம்
புவந்தனிர் காசிபம் பதியை யெய்தின
னிவந்தமன் னவர்முடி நிதமுந் தோய்தலாந்
சிவந்தபங் கயபதத் தென்னர் கோனரோ. (13)

எய்தியற் றைத்தினத் திசவில் வைகினன்
கைதரு மற்றைநாட் கங்கை யாடுபு
மெய்திக ழெம்பிரான் விசுவ நாதனை
மைதவி ரன்பொடு வணங்கு வோமென. ((14)

மன்னுமத் தினத்திரா வைகிக் கண்டுயி
றுன்னுபல் படைகளுந் துலங்கு வோதனும்
பன்னுபிட் சேடமா நதித்தெதன் பாலவா
வுன்னினன் திருக்கரை வுறையு மெம்பிரான். (15)

தரவுகொச்சகக்கலிப்பா.

வாரணவா சியிலிரவு துயிலபுரிந்த மன்னவன்றன்
போரணிவாட் படையெத்தும் படைகளுடன் புகழுதுலங்குந்
தாரணிமேன் மிகவுயர்ந்த தலமெனுந்தென் கருவைநகர்ச்
சீரணிநிட் சேபநதித் தென்கரைவந் தடைந்தனனே. (16)

காலைதனித் [illegible]
(ஒ) [illegible]

[illegible]

மேலவனு [illegible]
தேலவ [illegible] மாதோ.

வெருவறுநாற் படைகளுடன் வெப்பசமர் களத்தேதிர்கு
மருவலர்க் கொருகூற்றாய் வயங்கொளிவேற் படைக்கைத்தான்
றிருவுறை [illegible] திருகைக் [illegible]
[illegible] தனைக்கண்டான் கருத்திலியப் படைத்தன்னால்.

மலலலுறுந் தென்றிருவிலங்காட்டின் மதித்தேவருஞ்
சொல்லுமொரு பெருஞ்சித்தன் சென்றினன்வழிக்கேதிரே
யல்லலொழித் தினியகதி யருள்காசித் தலத்தினுக்குச்
செல்லவினை வுரைத்தானவ் வுரைமறுத்துச் சென்றனன்மால்.

சித்தனவ னங்கருவைத் திருக்களா வுடையானை
யத்தலுறை தனைமறுத்து காமவண்சென் றடைந்ததுதான்
விததகவக் கங்கையின்மூழ் காமல்விசு வேசனெனுங்
கத்தனைககா ணுமலிவ னடைந்தமைக்கோர் காரணமாலு. (20)

எனவிதயங் தனிலுணர்வுற் றெழிலுறுகட் சேயகதிப
புனல்படிந்தா லயமடைநது புனிதவழி டேகநிவே
தனமுதலா னவைபுரிநது களாவுறையுந் தனிபபொருளை
மனமகிழ்வுற் றிறைஞ்சினனம் மன்னவர்மன் [illegible].

இன்னணமன் பொடுபோற்றி யிறைஞ்சியவர் [illegible]
மன்னவன்முன் றோன்றினனுள் [illegible]
வன்னமொனத் திகழ்கருணை [illegible]
கன்னல்செறி வயல்புடைசூழ் கருவைக்கப் பெருமானே. (22)

சீலமொடு தோன்றியவப் பெருமானைத் தெரிசித்துச்
சாலமகிழ்ந் திறைஞ்சியக்கத் [illegible]
கோலமிகுங் காசிநகர்க் கும்பொருளு [illegible]
காலையினிற் செழுந்திருந்த காரணம்யா தெனமாதோ. (23)

போரியெனு [illegible] மன்னவனைக் குறைப்பணிம்
மணிருபா [illegible] வன்னைவிக்க

(19) [illegible]
பத பொருள். (20) [illegible]

மாலியம் [illegible] [illegible]
[illegible] (24)

[illegible] புவிபுகழ் [illegible] திருவாலங் காட்டுடையோர்
இத்தலமெனத் தோன்றியவன் செல்வமெனை [illegible]
முத்தமுடன் [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]மால்.

காசிநகர் துணையுடைத்தும் கங்கைநதி [illegible]மே
[illegible] சிவ லிங்கமெரி சனம்பெற்று வணங்காமே
தேசிலுய ரிக்கருவைத் தலத்தினுறச் செய்தனமாற்
பேசிடுமிக் கருவைநகர்ப் பெருமையுரைக் குதுந்தேண்மோ.

கலித்துறை.

பொழியு மாமதுப் பூந்துழா யரியயன் முதலா
மிழிவில் வானவ ரேவரு மீரெழு புவியு
மாறுவர் துற்றிடும் யுகாந்தகா லதது
மழிவி லாதுயின் றிலங்குவ தித்தல மம்மா. (27)

நற்றி றம்பெறு கருணையம் பதித்தல் நமக்குச்
சொற்ற வோர்பெருஞ் சீழ்மென்த் தான்மாப்த் துலங்கு
மெற்று நீடினர்க் கடற்புவி யெனயுமித் தலத்தி
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]. (28)

[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
மாத [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] (29)

[illegible]விருத்தம்.

திரு[illegible] [illegible] [illegible] துறநவன
பொ[illegible] [illegible] கருவை யம்பதிக் கண்ணுதல்.

சுணபாண்டியனுக்குத் தல மகிமை யுரைத்த சருக்க முற்றிற்று.
[illegible] விருத்தம் 1080

[illegible]

## உதாவசுவுக்குக் கட்பேறருளிய சருக்கம். 2.

[illegible]

### கலி விருத்தம்.

சுதாதர மதிதவழ் சோலை சூழ்திரு
மதுரசல வலநகர் வாத னன்பர்பாற்
சதாவருள் செயும்பிரான் முன்னஞ் சந்ததி
யுதாவசு வுக்கருள் சரித மோதுவாம். (1)

மின்னவிர் கடிமதின் மிதிலை யென்னுமோர்
நன்னகா தனிலர சியற்றி ஞாலமே
லுன்னரும் புகழ்விளங் குறவு தாவசு
வென்னுமோர் மன்னன்வாழ்ந் திருக்கு நாளரோ. (2)

வென்றியி னுயர்ந்தவவ் வேந்தர் வேந்தனுக்
மன்றல்செய் தனன்கலிங் கேசன் மாமகள்
கன்றணி மலர்க்கரக் கனக மாலிகை
யென்றவோர் பெயருடை யெழில்கொண் மங்கையை. (3)

கனகமா லிகைதனை மணந்து காவலன்
றினமுமின் புற்றுவாழ்ந் திருக்கு நாணமுனக்
கினியநன் மாமகப் பேறொன் றின்றியே
மனதிடைக் கவலைமீக் கூர்ந்து வாடினன் (4)

ஏதமி றன்குலக் குரவ னென்னுநற்
கோதமன் றன்னிடைக் குறுகி யாங்கவன்
சீதபங் கயமல ரனைய சேவடி

(5)

ஐயவோர் மகவெனக் கின்றி யானொரு
வெய்யதாந் துயர்க்கடல் வீழ்ந்து ளேனரோ
பொய்யில்சீர் நின்னருட் புணைகொண் டியானவ
னையுமக் கடலினின் றேற நாடினேன். (6)

(21)

(1) மதுரசலவலநகர் - மிதிலைநகர் [illegible] (2) - [illegible]

வயங்குறு கிளைஞரை மந்தி ரிப்புக
[illegible]
வியங்குமைம புலனுமவென் றிலங்கு சிநதையா
னுயங்குமவ் வேநதனை நோககி யோதுவான்.

மன்னகேள் மகப்பெற மனததில் வேண்டினீ
பொன்னவிர் கசேந்திர புரமென் றோர்தலம்
பன்னுசெந் தமிழ்த்திருப் பாண்டி நாட்டுள
தன்கீர் சடைந்துளத் தன்பு கூர்ந்தரோ.

(1) கோதறு மபபதி புரககுங் கொற்றவன்
சீதவெண் மதிக்குடைத் திருட கேதுவென்
றோதுநற றிருப்பெய ருற்ற வேந்தனைக்
காதலிற் கண்டல னுறவு கைக்கொளா.

(2) மனமுவந தாங்குநிட் சேப மாநதி
யெனவுறு நதிபடிக நிலங்கு மகநகாச்
சினகாம புகுந்துயூந திருக்க ளாவுறை
கனமுறு சுவேதலிங் கத்தைக் கண்டரோ.

தேவியொடப பனைதனைத தெரிசித தன்பொடு
மேவியேர் சிரண்டுளம் விரும்பிப் பூசனை
தாவறு விதிமுறை வழாது தான்புரிந்
தாவணி மதியுவா வாய நாளிடை.

அறுசீர் விருததம்.

அலக்க [illegible] பவமான மென்னுங் கொடியு
வருமபிணியை
(1) விலக்கு மருகதான் [illegible] சன் விளங்குந திருவா
லயமதனி
லிலக்க மணித்தீ பங்களினி தேற்றிப் பணித்தா
லெப்துணைவர்
(2) அலக்க மருவு [illegible] தென்றுன் றவநதிக
[illegible].

(1) [illegible] (2) [illegible]

அக்கோ தமன்சொற் கேட்டிதயத் தடங்கா வுவகை
யடைந்துணர்வின்
மிக்கோர் புகழு மிதிலைநகர் விடுத்துத் தானைக்
கடல்சூழ
விக்கோ கனியோ கடலமுதோ வெனுஞ்சொற் பொன்மா
லிகையுடனந்
தக்கோ னெழுந்தான் புறப்பட்டான் றடஞ்சூழ்கருவைத்
தலநோக்கி. (13)

துன்னு பலதே யமுங்கடந்து பன்னாட் சென்று
துலங்குவிசழுங்
கன்னல் செறியும் பணைசூழ்ந்தென் கருவைப்பதியின்
மருங்கணைந்தான்
மன்னன் வரவு தனைத்தூதர் வல்லே யோடி
யுணர்ந்தனரான்
பின்னு மணிப்பொன் முடிவேந்தர் வேந்தனதிருட
கேதுவின்பால். (14)

ஓங்கு பெருமைபோரப் படைசனக னொருமன் னவனம
பதிநோக்கி
யிங்கு வருகின் றனனெனவந் தாதரோடு
யியமாலுயப்
பாங்கு பெறுமன் னவன்பரிப்பதியெய் துதற்கென்
னேதுவென்றவ
ணிங்கு வளைதோட் காவலன்பால விரைந்து வினவி
வமதினென்றான். (15)

ஆங்க முறுமன் னவனுரைக்கத் தூதர் விரைந்தோ டினரேகி
யாங்கு வருவோற் கண்டுபணிந் தரசே நீயா ரேதுவெவ
னிங்குவருதற்கறிந்துவரவெங்கோனெமையுய்த்தனனெனவக்
கொங்கு விரிதார்ப் புயன்றூதர் தமமை நோக்கிக் கூறுவனால்.

(14) பணை-வயல். வல்-விரைவு (16) ஏது-காரணம். எவன்-என்ன

வேறு.

மருவுலவுஞ் சோலைவள மலிமதிலைப் பதியாளு
மன்னன் யானிக்
கருவையெனுந தலநோக்கி வந்தனனோர் மகப்பேறு
கருதி நந்தம்
பொருவறுநற் குணவேந்தன் றனைப்பணிந்தே னென்றுசென்று
புகன்மி னன்னோன்
றிருவுளநன் குணரும்வகை யென்றனன்கேட் டத்தூதர்
திரும்பி னாரால். (17)

மன்னனிடத் தெய்தியுதா வசுவுரைத்த மொழியனைத்தும்
வழுத்த வன்னோன்
றன்னுதளத் தொடுநீவிர் சென்றழைத்து வம்மினெனத்
துகடீர் கேள்வி
யுன்னுமதி யமைச்சர்தமக் குரைத்தனனவ் வமைச்சர்பல
ருவப்புற் றேகி
யன்னவயன்மதிலையர்கோன் றனைக்கொணர்ந்தார் சிறப்பினுட
னழைத்து மாதோ. (18)

ஆவலுடன் வந்தவந்த வரசனுக்கு முகமனுரை
யளித்துத் தன்பான்
மாவரியா தனத்திருத்தி மனதிருத்தி யொடுமதிலை
வாழுஞ் செங்கோற்
காவலவித் திருக்கருவைப் பதியினுக்கித் துணைத்தூரங்
கடந்தன் போடு
நீவருதற் கென்னைகொலோ வேதுவென வினவினனு
னிருபன் மன்னோ. (19)

வினவியவேந் தனைநோக்கி வேந்தேயான் மகவின்றி
மிகவு மாழ்கி
யெனதுகுலக் குரவனெனுங் கோதமன்பா லோதவுன்பா
லெய்தி யுன்றன்

---

[19] முகமன் உபசாரம். உரை-சொல். அரியாதனம்-சிங்காதனம்.
[20] மாழ்கி-வருந்தி.

கனமுறுநே யம்படைத்தோ ராண்டுவரை களவீசன்
கமலத் தாளை
மனமகிழ்பூ சனைபுரிந்து வணங்கின்மகப் பெறுதியென்றான்
வந்தே னென்றான். (20)

அங்கவனோ தியமொழிகேட் டகமகிழ்ந்து மிதிலைநக
ராசக் காங்கே
தங்குமனை முதல்வேண்டு வனயாவு நல்கியுப
சரித்தா னன்னோ
னிங்கிதநட் புற்றோராண் டக்கருணைத் தலத்தினிடை
யிருந்தொப் பில்லாள்
பங்கனிரு பதமலராற் புதமலர்கொண் டருச்சித்துப்
பணிந்து பின்னர். (21)

சீரணியு மக்கருணைக் களவீச னாலயத்திற்
சிங்க மாதப்
பூரணையாந் தினமதனிற் பொற்சுடரோ ரிலக்கமிட்டுப்
போற்றுங் காலைத்
தாரணிமன் னவன்புரிபூ சனைக்குவந்து தோன்றினனாற்
சகத்துக் கெல்லாங்
காரணனா கியமுகலிங கப்பெருமான் மழவிடைவா
கனத்தின் மீது. (22)

கலிவிருத்தம்.

யாதுநீ வேண்டினை யரச கேளுனக்
கீதுநா மென்றன னிறைவன் றாமரைப்
போதுநேர் சேவடி போற்றித் தந்தருள்
கோதுறா மகவெனக் கென்று கூறினான். (23)

கூறலு நந்தியை நோக்கிக் கோதிலா
வீறுசா லன்புடன் விரும்பி நீயிது
காறுமே வளர்த்தவோர் காத லன்றனை
யீறிலா நம்முனர்க் கொணர்க வென்றனன். (24)

---

(22) சுடர்-தீபம். (23) ஈதும்-தருவோம்.

பைந்துணர்க் கொன்றையான் பாலன் பாலுயர்
நந்தியப் பாலனைக் கொணர்ந்து நல்கினான்
சிந்தையிற் பெருங்களி சிறக்க வெம்பிரான்
றந்தனன் மனைவன் றடக்கை மீதரோ. (25)

நிறைந்தசீர் நந்தியிம் மகவை நெஞ்சகத்
துறைந்தபே ரன்பொடு வளர்க்க லூற்றுதா
லறைந்தபோர் நந்திவர்த் தனனென் றண்ணறான்
மறைந்தனன் விபுதர்பூ மாரி தூற்றினார். (26)

அறுசீர்க்கழிநெடிலடியகவல் விருத்தம்.

வெய்யபெரு மிடியதனா லனுதினமுந் துயருழந்து
மெலிகின் றோனிவ்
வையமிசையோர்புதையற்பெரும்பணங்கண்டெடுத்ததுபோன்
மணிச்செஞ் சூட்டுப்
பையரவ மணிந்தபிரான் றிருக்கரத்தாற் றந்தவந்தப்
பாலன் றன்னைக்
கையிடைக்கண் டவ்வரசன் மூழ்கினாற் பேருவகைக்
கடலுண் மாதோ. (27)

பூந்திருவை நிகர்கனக மாலிகைதன் மலர்க்கரத்தன்
பொடுதன் சேயை
யீந்தனன்வாங் கினள்கண் ணுற் றிதயமகிழ்ந் துடல்புளக
மேறிச் செய்ய
காந்திகொள்பொற் கனதனத்திற் சுரந்தவமு தூட்டினடென்
கருவை மூதூர்
வேந்தனிடைச் சென்றுவிடை பெற்றரசன் மீண்டனன்றன்
மிதிலை நோக்கி. (28)

பொன்மதில்சூழ் தன்மிதிலைப் பதியடைந்து கோதமப்பேர்
புனைந்த தூய
நன்மதிமா முனிக்கவண்போய் வந்தவெலா மினிதுணர
நவின்று பின்னர்த்

தன்மதியா னத்தரசன் றன்மனைசார்ந் தரும்பெறற்சந்
ததியி ேைடு
மென்மதிநேர் முகக்கனக மாலையெனு மனைவியொடு
மேவி வாழ்ந்தான். (29)

என்றுரைத்த சூதமுனி யிருகமலத் திருவடிவீழ்ந்
திறைஞ்சி யெந்தாய்
வன்றிறல்கூர் நந்தியொரு மைந்தனைத்தான் வளர்த்ததெவன்
மைந்தன் யாவ
னன்றியுற முந்தவந்த மைந்தனெந்த விதமடைந்தா
னந்தி பாலென்
றொன்றியமா தவர்கேட்பச் சூதமுனி யம்முனிவர்க்
குரைக்கின் றானல். (30)

பண்டொருகா லத்தில்வசசி ராசுரனென் றுரைத்திடுமோர்
பதகன பண்டை
புண்டரிகத் தவிசுறைவோன் றனைநோக்கி யரியதவம்
புரிந்தன் னோன்பால்
கொண்டபெரு வரபலத்தான் மிக்கசெருக் கடைந்துபுரு
கூதன் முன்னா
மண்டரனை வருக்குமிக விடரிழைத்தா னெவன்புரிவா
ரமரர் மன்னோ. (31)

எவ்வுலகும் படைத்தபிதா வெனத்திகழ்நான் முகத்தவன்பா
லெய்தி யன்னோன்
செவ்விபெறு நறுங்கமலப் பதமிறைஞ்சி யெந்தாய்வச்
சிரனென் றோது
மவ்வசுரன் புரிதுயர்தீர்த் தருள்புரியென் றிரந்தனரா
லந்த வேலை
வெவ்வயிரப் படைக்கரத்தான் றனைநோக்கி விளம்புவனவ்
வேதன் மாதோ. (32)

வேறு.

உத்தம மனுவின் பாற்சென் றுயர்வுறு மன்னோ னீன்ற
மெய்த்திரு வனைய வநத விசாலினி யென்னு மாதைச்
சித்தமுற் றுவந்து மன்றல் செய்கநீ செகத்தோர் மெச்சும்
புத்திர னொருவன் றன்னைப் புகழுடன் பெறுதி மன்னோ.

காதலுற் றினிது பெற்ற காதல னவன்றான் பின்னர்
மோதமர்புரிந்துநாளு முதிரிடர் விளைக்குமந்தப்
பாதக வவுணன் றன்னைக் கொல்வன்வெம் பகழி யொன்றா
லோதுறுந் துயரம் யாவு மொழியுமென் றுரைசெய்தானால். (34)

நான்முக னுரைத்த வண்ண நல்விசா லினியா மந்தத்
தேன்முரல் கோதை மாதைத் திருமணம் புரிந்து பெற்றான்
கான்முளை தனையச் சேயைக் கண்டனன் கவர்ந்துசென்றான்
றான்முதிர் மாயை யாற்பா தலத்திலவ் வவுண னம்மா. (35)

தேடரு மகவைக் கொண்டு பாதலஞ் செல்லுங் காலை
யாடகே சுரத்தி னின்று கயிலையை நோக்கி யாங்குப்
பீடுறச் செல்லு நந்தி பிடுங்கினன் கொணர்ந்து சற்றும்
வாடுறா மனத்தன் புற்று வளர்த்தனன் மகவை மன்னோ. (36)

நந்திவர்த் தனன்சென் றோர்நா ணலமுறத் தனைமுன் னீன்ற
விந்திரன் பகைஞ னுமவ் வவுணன்மே லெரியம் புய்த்தான்
வெந்தொரு வயிர மாயிற் றவனுடல் விண்ணோர் கோமா
னந்தவோர் வயிரந் தன்னை யமர்செயா யுதமாக் கொண்டான்.

வஞ்சிவிருத்தம்.

என்று சூத னியம்பினு
னன்று கேள்வியுற் றைம்புலம்
வென்ற மாதவ மேலவர்
மன்ற வுள்ள மகிழ்ந்தனர். (38)

உதாவசுவுக்கு மகப் பேறருளிய சருக்க முற்றிற்று.
ஆகச் சருக்கம் 33-க்கு விருத்தம் 1118

---

(36) ஆடகேசுரம்-பாதலத்திலுள்ள. ஓர்-சிவதலம்.

இருபத்தெட்டாவது

## வைசியன் திரவியம் பெற்ற சருக்கம். தி.

---

கலித்துறை.

மதிப டைத்தவோர் வைசியன் மாண்பொரு ளிழந்து
கதிப டைத்தவெள் விடையினன் கருவையெம் பெருமான்
றுதிப டைத்ததண் ணருளினாற் றுலங்குநிட் சேப
நிதிப டைத்தவோர் காதையை நிகழ்த்துதல் புரிவாம். (1)

கலி விருத்தம்.

அறைகடற் புவிபுக ழங்க நாட்டிடைக்
குறைதவிர் வைசிய குலத்திற் றோன்றினே
னிறையிரு கோடிமா நிதியுள் ளோனறத்
துறைதனை யோரணுத் துணையு மெண்ணிலான். (2)

ஈகைமிக் கிருந்துநல் லீகை சற்றிலா
னோகைகூர் பொருளையே நாடு முள்ளத்தான்
வாகுறு பொருளினை வட்டிக் கீந்ததி
லாகுமூ தியப்பொரு ளனுப வித்துளான். (3)

மேயவித் தகையதம் மில்ல கன்னென்போ
னேயுமத் திருவுடன் வாழு மேல்வையிற்
சேயகங் காநதித் தீரந் தன்னினின்
றாயுநற் குணமனை யாட்டி யோடரோ. (4)

கருதுநூல் பலகரை கண்ட மேலவன்
பொருவில்கா பிலனெனு நாமம் பூண்டுளோ
னொருமறை யவன்கள வீச னுற்றிடுந்
திருநகர் தெரிசிப்பா னெண்ணுஞ் சிந்தையான். (5)

திருந்துபற் பலநக ரெய்திச் செவ்வியிற்
பொருந்துறும் யாசகம் புரிந்து நல்லுண
வருந்தியே வருபவ னந்த வங்கநாட்
டிருந்ததம மில்லக னிடத்தி லெய்தினன். (6)

---

(2) அறத்துறை- தருமநெறி. துணை-அளவு. (3) ஈகை-பொருள்.
(4) திரு-செல்வம்.

இந்துவோ டிரவிதா னெய்து நாளிடை
வந்துண விலுக்குநீ சிறிது மீண்டொரு
டந்தரு ளெனவுரைத் தான்றம் மில்லக
னந்தணன் றனக்குரை செய்வ னுங்கரோ. (7)

நின்மனை யாளுட னீயுண் பாயெனி
னென்மனை யிடையருந் திறவு றுததற்
குன்மன மெனிலெவ னுவ தொல்லையிற்
சென்மதி பொருளளித் திலனென் றோதினான். (8)

கொச்சகக்கலிப்பா.

மேன்மைபெறு நல்லறமே நோக்காத வெய்யோனை
நான்மறையோ னோக்கி வசியனீ நான்மறையோன்
றேன்மொழியோ டுன்மனையி லுற்றமுது செய்கவெனத்
தான்மொழியுமிம்மொழியோர் செம்மொழியோசாற்றென்றான்.

வேதியநீ யென்னகத்தி லுண்பான் விருப்பிலையே
லீதிபொரு ளுன்கை யிடையிருக்கிற் றண்டுலமே
யாதியவெல் லாங்கடையி லீகுவனீ யட்டுணவென்
றோதினனங் தோகருணை சற்றுமிலா வுள்ளத்தான். (10)

செப்புமொழி கேட்டிச் சிறியோ னிடத்திலுறு
மிப்பொருடக் கோர்கைப் படாதா லிடரிழைக்கு
மொப்பரிய கள்வர்முத லுற்றபல தீயவர்தங்
கைப்படுமென் றோதி யகன்றானக் காயிலனே. (11)

அற்றையிரா விற்றிருடர் பல்லோ ரருளிகை
சற்றும்விரும் பாதவந்தத் தம்மில் லகன்மனையி
லுற்றுநுழை ந்தாங்கே யுளநிதியா வுங்கவர்ந்தார்
முற்றுசினத் தோடவனை மூர்ச்சையுறத் தாக்கியரோ. (12)

சென்றாரக் கள்வரெவன் செய்குவான் வைசியன்பின்
குன்று நிதியிழந்தே னந்தோ கொடும்பாவி
யென்றான் புரிவனினி யென்று ளுளமயங்கி
நின்றான்முன் செய்த வினையை நினைத்தானால். (13)

(8) மதி-முன்னிலையசை. (10) ஈதி-முன்னிலையேவல்வினைமுற்று கொடுவென்பதுபொருள். தண்டுலம்- அரிசி. அட்டு-சமைத்து. உண-உண்ண

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கவ்வையுறு நமதுமனை தனிலுளமா நிதியனைத்துங்
கள்வர் கொல்லோ
வல்வினர்பா ணிறப்பெருமான் றனதுதெரி சனங்கருதி
வந்த வந்தச்
செவ்வியுறு மோர்மறையோன் றனைக்கொடிய பசியினுடன்
செலமுன் செய்த
வெவ்வினையான் மேருகவர்ந்த தெனவுணர்ந்து பாசரன்பான்
மேவி மன்னோ. (14)

அடியிணைவீழ்ந் திறைஞ்சியெந்தா யென்னிடைவந் திரந்தமறை
யவனை யந்தோ
கொடியபசித் துயரொடுபோக் கினனுணவுக் கொருபொருளுங்
கொடுத்தி லேனந்
நெடியவினை யாலெனது நிதியிழந்து துயருழந்து
நின்றே னென்ன
மிடிபொறுப்போ பிணியகலு நெறியுணர்வித் தெனைப்புரத்தல்
வேண்டு மென்றான். (15)

மருக்கமழ்பங் கயமலர்த்தா ளிணைபணிந்திங்
ஙனமுரைக்கும் வசியன் றன்னை
யுருக்கமொடு நோக்கிமுனி வானுரைப்பான்
பாண்டியநாட் டுயர்வி சேடத்
திருக்கருவைத் தலமடைந்தக் காபிலனைக்
கண்டுமிகச் சிறியேன் செய்த
தருக்குறுவெம் பிழைபொறுத்தா ளெனத்திருத்தா
ளிறைஞ்சியவன் றயைபெற் றமமா. (16)

மதுமலிபூங் களவுறைபால் வண்ணனையு முலகினுக்கோர்
மாதா வென்னு
மதுலசவுந் தரியையுமோ ராண்டுவரை யாண்டுவசித்
தன்புகூர்ந்து

(17) ஆண்டு-அவ்விடம், ஓராண்டு-ஒரு வருடம்.

புதுமலர்கொண் டருச்சித்துப் பணிவையெனில் வறுமையுநீ
புரிந்த வெய்ய
முதுவினையு மொழிந்திடுஞ்செல் வமுநலமு மெய்துமென
மொழிந்தான் மன்னோ. (17)

திருந்துதவ முனிவர்பிரா னுரைத்தமொழி மிடியெனுமத்
திய நோய்க்கோர்
மருந்தெனக்கொண் டுவகைகூர்ந்து தனதுதிரு நாடகன்று
மாறா வின்பம
பொருந்துசெழுந் தமிழ்ப்பாண்டி வளநாடு சார்ந்துபய
புரிவந் தாங்குப்
பெருந்தகைமைக் கபிலனைக் கண்டுபணிந் தவன்கருணை
பெற்று மாதோ. (18)

சித்தமகிழ்ந் தன்பொடுநீ டசேபநதிப் புனல்படிந்து
செகத்தின் மேலா
மத்தலமாம் சுவைதீர்த்த தட்பணையொப் பனையெனுமெம்
பன்னை தன்னை
நித்தமருச் சனைபுரிந்தோ ராண்டுமுரா தானவ்வேலை
நிகரி லெம்மான்
சுத்தவுருட் குறியினின்று அப்படிவத் துடனெழுந்து
தோன்றி னானால். (19)

தோன்றியசி வனைநோக்கி யாதுவிரும் பினைகேண்மோ
துலங்கு நீசெய்
யென்றவரு சனைக்குவந் தேனுனக்குவர மீகுதுமென்
றியம்ப வெம்மான்
றோன்றிசற் றாமனமலர்த் தாளிறைஞ்சி யொழித்திடல்வேண்டுஞ்
சிறியேன் முன்னை
யான்றயரி பாவமுமென் றாமிரப்பு நிரப்புமென
நவின்றான் மன்னோ. (20

மன்பாகும் கனியுநிகர் மொழியமுத சவுந்தரியை
விரும்பி யென்றும்
தன்பாகந் தனிலமைத்த தனிமுதல்வ னவ்வரியன்
றன்னை நோக்கி

(20) நிரப்பும் நிரம்புவிக்கும். நிரப்பு-வறுமை.

யன்பாவந் தனைபுரியு முன்பாவந் தனையொழிந்தே
மருள்கூர்ந் தின்னே
யுன்பாலுற் றிடுமவறுமை யொழித்திடுதற் கொருநெறியா
முரைசெய் வையால. (21)

வேறு.

முதிய கருணைச் சிவலிங்க வடிவா கியாகும் முன்றோன்று
மதிக புகழ்சே ரிவ்வமுதா சலத்தின் குடபா லமர்கிருபா
நதியி னுறுசூ ரியதீர்த்த தன்னிற் படிந்து நனைநோக்கித்
துதிசெய் தருந்தா மிடிதீரக் கருது முனக்குச் சுவணமென்றான்.

இவ்வா றுரைத்துப் பெருங்கருணைக் கடலாய்விளங்கும்பெருமான்
செவ்வா னிகர்சகுந்திருவுருவங் கரந்தான்பின்னர்ச்சிந்தைபுவந்
தவ்வா யிரஞ்சோ தியன்றீர்த்த தன்னின் மூழ்கி யன்பர்மன
வெவ்வாதனைதீர்த்தருள் கருமலைவாழ்பிரானை நோக்கிமிகப்பணிந்தான்

படமா சுணப்பூ ணணிசடிலப் பரமன் கருவைப்பால்வண்ணன்
திடமார் வசியன் முன்றோன்றிச் சிறந்த பானு தீர்த்தத்தின்
குடபாற் குரோச தூரத்த நதியிற் குலவு மோர்மடுவி
னிடமே வியநிட் சேபநிதி காட்டுக் கைக்கொ ளிதனை
யென்றான். (24)

கடுமே வியகந் தரப்பெருமான் சாற்று நிதியை வசியன் மகிழ்
வொடுநோக் கினனிந் நதியினிடை யுறவே யாழ்ந்த விப்பெரிய
மடுவூ டெங்ஙன் புகுந்ததனில் வதியு நிதியை யாமெடுத்துக்
கொடுமீள் குவலெந் தாயெனவே யடிவீழ்ந் திறைஞ்சிக்
கூறினனால். (25)

சாற்றும் வசியன் மிசைமிகவுந் தயைகூர்ந் தந்த மடுவினிடைத்
தோற்றும் பெரிய நிதியனைத்துங் கரையேற் றினனு
டோறுமிகப்

(22) சுவணம்-பொன். (23) ஆயிரஞ்சோதியன்றீர்த்தம்-சூரிய தீர்த்தம். (25) மடு-ஆற்றினுட்பள்ளம்.

போற்று மடியார் பவக்கடல்வீழ்ந் தழுந்தா வண்ணம்
போந்துகரை
யேற்று முதலவன் றிருக்கருவைப் பதியில் வாழும்
மிறையோனே. (26)

கலிப்பா.

நிதிமுழுதுங் கரையேற்றி நேயவசி யணைநோக்கி
மதியணியும் பெருமானுன் வறுமையும்வெம் பாவமுஞ்செங்
கதிரவன்முன் றிமிரமெனப் புரிந்தனநீ களித்துனது
பதியடைக நிதிமுழுதும் பண்பொடுகைக் கொடுமாதோ.

நகரமடைந் திரவலர்க்கு முறவினர்க்கு நமைநினைக்கு
நிகரிலடி யவர்தமக்கு மினிதளித்து நெடுங்காலஞ்
சுகமொடுநீ பெருஞ்செல்வந் துய்த்துவாழ்ந் திடுகவென
மிகவருளுற றுரைத்திறையோன் விளம்புவன்பின் னருமாதோ.

ஒவ்வொருவற் சரந்தோறு முயர்வுறுபங் குனிமதியிற்
செவ்விகொள்புந் தியின்வாரங் கிருத்திகைகார்த் திகைசேர்ந்த
திவ்வியநா ளனிற்றெரிசித் திடுகநமைச் சுயவடிவோ
டிவ்வமுத கிரித்தீர்த்தத் தலத்திலெழுந் தருளுவமால். (29)

செப்புநிதிப் பிரசிரவ ணம்மெனுமித் தீர்த்தத்தே
யெப்பெருப்பா தகரெனினும் படியின்மிடி யிடர்நீங்கி
யொப்பரும்பே ரின்பசுக முறுவரெனச் சொலிமறைந்தான்
முப்புரந்தீயெழச்சிறிது முறுவல்புரிந்தவன்மாதோ. (30)

கலிவிருத்தம்.

கல்லகம் வளைத்தவன் கரந்த பின்புதம்
மில்லக னெம்பிரான் வியந்து நல்கிய
தொல்லக னிலம்புகழ் சுவணங் கைக்கொடு
நல்லக மகிழ்ந்துதன் னகர நண்ணினன். (31)

தன்னக ரடைந்துபின் கருவைத் தண்களா
நன்னிழ லிடையுவந் துறையு நாயகன்

---

(27) திமிரம்-இருள். (31) கல்லகம்-மலை.

சொன்னவா றறம்பல வியற்றித் தொல்புகழ்
மன்னுமவ் வமுதமால் வரையிற் றனரோ. (32)

துனிதவிர் வற்சரந் தோறும் வந்துநற்
பனிமலர்க் களாகிழற் பரனைப் போற்றியே
கனிவுட னவன்சுயு வடிவக் காட்சிபெற்
றினிதுவாழ்ந் திருந்தனன் சீர்த்தி யெய்தவே. (33)

வைசியன்திரவியம்பெற்றசருக்கம் முற்றிற்று.
ஆகச் சருக்கம் 34-க்கு விருத்தம்-1151.

---

இருபத்தொன்பதாவது

## அக்கினிதேவன் பாவந்தீர்த்த சருக்கம். தி

---

அறுசீர்க்கழி நெடிலடி யகவல் விருத்தம்.

வையமுன் றினுமே லாய தலமென மதிக்குஞ் சீர்சா
றய்யதென் கருவை நாதன் றலங்குநற் கருணை கூர்ந்து
செய்யதீக் கடவுட் கந்நாட் சேர்ந்தவோர் பிணியி னோடு
வெய்யமா பாவந் தன்னை விலக்கிய சரிதஞ் சொல்வாம். (1)

காண்டவ வனத்துட் புக்குக் கதமெழரிக் கடவுண் முன்னு
ளாண்டுறை யியக்கர் நாக ராக்கர்முன் னுய யாருந்
தாண்டுபல் விலங்கும் புள்ளுந் தனக்குண வாகக் கொண்டு
மீண்டன னவனுக் காங்கே விளைந்தது பாவ மன்றே. (2)

அக்கொடும் பாவத் தாலங் கவன்றிருச் சோதி யோடு
மிக்கநல் வலியுங் குன்றி வெய்யதோர் குன்ம நோயாற்
றுக்கமுற் றிருந்த காலைத் தூயநா ரதனென் றோதுந்
தக்கமா தவத்தோ னந்தத் தழற்கட வுளைக்கண் ணுற்றான். (3)

பாவகன் றன்னைக் கண்டுன் பாவம்யா வையுமே தீர்ப்பா
னுவனுற் றனையேற் கேண்மோ வசாதிமா புரத்தி லெய்திப்

---

(33) துனி-துன்பம். (4) பாவகன்-அக்கினி.

பூவிரி களவி னீழற் புனிதனை யினிது போற்றி
மேவுபூ சனைசெய் யென்று விளம்பினா ரதன்சென் றானால். (4)

நாரத னுரைத்த மாற்ற நயந்துகேட் டவ்வா றன்னோன்
சீருடன் பன்னாட் பூசை செய்திருந் தனனவ் வேலை
யாரணத் தோனு மந்த வரியுமுன் றேடிக் காணாக்
காரணன் கருவை நாதன் றோன்றினன் கனலோன் முன்னர்.

துன்னிய கருணை யோடு தோன்றிய விறையோ னந்த
வன்னிவா னவனை நோக்கி மகிழ்ந்தன முனது பூசைக்
கென்னின தெண்ண மீதும் வரமுரை யென்றா னெம்மான்
றன்னிரு பதம்வீழ்ந் தேத்திச் சாற்றுவான் காற்றினேயன்.

மாசிலா மணியே யெந்தாய் காண்டவ வனத்தி னுற்ற
மூசுபல் லுயிர்கள் பாவு மிரையென முன்னா ளுண்டேன்
கூசுமவ் வினையாற் சோதி குன்றிவெங் குன்ம மென்னப்
பேசுமோர் பிணியுற் றந்தோ பெருந்துய ருழக்கின் றேனால்.

பருவரற் கடலுள் வீழ்ந்து வருந்துமிப் பாவி யென்னைத்
திருவுள மிரங்கிக் காத்தி யெனவுரைத் திடலுஞ் சீர்சால்
கருவையம் பதியின் மேவுங் களாவுடை நாதன் செய்ய
வுருவுடைக்கனலோன்றன்னை நோக்கின னுரைப்பான்மன்னோ.

வேறு.

வென்றிபுறு முத்தலைவேற் படைகொடுநா முனந்தோற்று
விதத்த வாற்றா
னன்றிமிகப் பெறுசூல தீர்த்தமெனும் பெயர்படைத்து
நண்ணுந் தீர்த்த
மொன்றுளதுன் மூலைதனி லருட்குறியா கியநம்மு
னுவந்து நீதான்
சென்றதனின் மூழ்கிநம்பால் வருகவென வருள்சுரந்து
செப்பி னானால். (9)

(6) சதிம்-சவோம். ஆம்விகுதியெதிர் காலங் காட்டிநின்றது.

இசையுறுநற் பெருஞ்சூல தீர்த்தமதிற் சென்றுபடிந்
தெழுந்து போந்து
நசையொடுவாய் புதைத்திறைஞ்சி யெம்பெருமான் சன்னிதியி
னலங்கூர் தென்கீழ்த்
திசையிறைவ னின்றனனப் பொழுதுலக முழுதீன்ற
தேவி பாகன்
வசையறுசித் திரபானு வானவனைத தன்னருகில்
வருவித தமமா. (10)

புனிதமலர்த் திருக்கரத்தால் வெண்பூதி யணிந்துனக்குப்
பொங்குஞ் சோதி
யினிதுறவு முனதுகொடும் பிணியறவு நீபடிந்த
வித்தீர்த் தந்தான்
றுனிதவிரக் கினிதீர்த்த மென்றுவிளங் கவுமிதனிற்
றோயு மெந்த
மனிதரும்பல் பிணிபாவ நீங்கியுயர் கதிபெறவும்
வரந்தந் தேமால். (11)

கலிவிருத்தம்.

எனவு ரைத்துக் கரந்தன னெம்பிரான்
மனமு வந்தெழு நாவுடை வானவ
னநக னாகி யரும்பிணி தீர்ந்துதான்
றனது தானந தனையடைந் தானரோ. (12)

அக்கினி தேவன் பாவந்தீர்த்தசருக்க முற்றிற்று.

ஆ சருக்கம் 35-க்கு விருத்தம்-1163.

---

(10) சித்திரபானுவானவன் - அக்கினிதேவன்.

முப்பதாவது

## பார்ப்பனி பாவந்தீர்த்த சருக்கம். தி.

---

கலிவிருத்தம்

நேத்திர மூன்றுடை நிமல னந்தணர்
கோத்திர மடநதையோர் கொடிய பாதகச்
சூத்திரன் றனைப்புணர் தோட நீக்கிய
மாத்திருக் கதையினை வழுத்து வாமரோ. (1)

அறுசீர்க்கழிநெடிலடியகவல் விருத்தம்.

தெண்டிரைப் பரவை யாடைச் செகமகண்
முகம்போற் றோன்றுங்
குண்டின மெனுமோ ரூரின் மறையவர்
குலத்தில் வநதோ
னெண்டகு சவுண்டி கேய னென்பவன்
களாங்கி யென்னு
மொண்டொடி தன்னைக் கொண்டா னுரிமையா
யுவந்து மன்னோ. (2)

காதலி யென்னு மந்தக் களாங்கியி னொடுசேர்ந் தந்த
வேதியன் வாழு நாளில் விளம்புமம் மறையோ னில்லத்
தோதுபேர் கடக னென்னுஞ் சூத்திர னொருவ னெய்தி
யேதமில் பலகுற் றேவ லியற்றியாங் கிருந்தா னம்மா. (3)

தாமரைத் தவிசின் மேவுஞ் சதுமுகப் புத்தே ளன்ன
மாமறை யவன்றன் றேவி மாரசா யகத்தா னொந்தத்
தீமதிக் கடகன் றன்னைச் சேர்ந்தொழு கினள்சின் னாளாக்
காமமுற் றவருக் குண்டோ கருத்திடை யறிவொன் றந்தோ.

கருவிழிச் செவ்வாய் வெண்பற் களாங்கியக் கடக னென்னு
மிருவரு மொழுகுஞ் செய்கை யனைத்தையு மினிய சீர்த்தி
மருவுமச் சவுண்டி கேயன் மனத்திடைக் குறிப்பி னோர்ந்து
பொருவறு மனையி னின்று போக்கினு னவளை மாதோ. (5)

---

(4) மாரசாயகம்-மன்மதபாணம்.

பற்பல தேயஞ் சென்று பயமகன் றிருவர் தாமும்
பொற்புறு மதன வேளு மிரதியும் போலப் பன்னா
ணற்பெருங் காம வின்ப நுகர்ந்தனர் நண்ணி னாரற்
பிற்பொழு துற்ற தாங்கோர் பெரும்பவந் திரளோ டம்மா. (6)

முதியவெம் பிணியா லுற்ற துயரெனுங் கடலுண் மூழ்கித்
திதிபெறும் பலவூர் தோறுந் திரிந்தனர் வருமார்க் கத்திற்
கதிதரு முயர்நிட் சேப நதிதனைக் கண்ணுற் றந்த
நதியிலவ் விருவர் தாமு மிறங்கினா ரயர்ந்து மாதோ. (7)

இறங்கலுங் களாங்கி யென்னு மேந்திழை தன்னை யந்தக்
கறங்குதெண் டிரையா றீர்க்கக் கடிதுயிர் துறந்து பின்னர்ப்
பிறங்குமம் மடந்தை தெய்வத் திருவுருப் பெற்றுச் செம்பொ
னிறங்கிளர் விமானத் தேறி நீள்பெருந் துறக்கஞ் சென்றாள். (8)

கண்டனன் வியந்தா னிந்தக் கடவுண்மா நதித்து நீரிற்
கெண்டையங் கடங்கண் மின்னாள் படிதலாற் கிளர்செஞ் சோதி
கொண்டதே வுருவம் பெற்றுக் குலவுபொன் விமானத் தேறி
யண்டரூர் சென்றா ளென்றுங் கருதினன் கடக னம்மா. (9)

வேறு.

அறிந்துகிரு பாநதிநீ ராடியிசை யளிக்குமது
வளிக்குந் திண்பூச
செறிந்தநறுங் களவுறைபால் வண்ணனையொப் பனையுமையைத்
தெரிசித் தேத்தி
மறிந்ததிரைக் கடற்புவியிற் றென்கயிலை யென்றெவரு
மதிக்குஞ் சீர்த்தி
பெறுந்தலமா கியகருவை பதியிடைச்சின் னாளிருந்தான்
பேணி மாதோ. (10)

பாங்குறவின் னணவிருந்து வெய்யபவந் திரநோயும்
பாவ நோயு
நீங்கியுயர் கதியடைந்தான் பிற்சனனந் தனில்வேத
நெறிக டேர்ந்த

---

(7) திதி-நிலை. (8) ஈர்க்க-இழுக்க. துறக்கம்-தேவலோகம்.

வோங்கியுவந் தணர்குலத்தி லுதித்துபய புரிதனிலன்
பொடுபல் காலம
பூங்களவீ சனைப்பூசித் திருந்துமே லாம்பதத்திற்
பொருந்தி னானல். (11)

பார்ப்பனி பாவந் தீர்த்த சருக்க முற்றிற்று.

ஆகச் சருக்கம் 36-க்கு விருத்தம் 1174.

---

முப்பத்தொன்றாவது

## குலபூடணன் இயமனை வென்ற சருக்கம். -தி-

---

கலி விருத்தம்.

மன்றிடை நடம்புரி வள்ள லெம்பிரான்
றன்றிரு வருளினாற் சாதி பூடணன்
றென்றிசை நகோனொடு சமரஞ் செய்துமுன்
வென்றிபெற் றிடுகதை விளம்பு வாமரோ. (1)

வேண்டியன் பொடுபுவி வேந்தர் போற்றிட
வீண்டிய மனுநெறி யியற்றிச் செம்மணிப்
பூண்டிகழ் புயக்குல பூட ணப்பெயர்ப்
பாண்டியன் கருவையம் பதியில வாழுநாள். (2)

திருநதுசீர்க் கன்னட தேயந் தன்னிலோ
ரருந்தவ மறையவன் கலைக ளாய்ந்துணர்
பெருந்தகை யுறுசிவப் பிரிய னென்பவ
னிருநதனன் செல்வமு நலமு மெய்தியே. (3)

அன்னவ னியற்றினா னரிய மாதவம்
பின்னமில் குணமகப் பேறு வேண்டியே
மன்னுமெவ் வுலகமு மீன்ற மாண்புடைக்
கன்னியை நோக்கியன் பொடுகில் காலமால். (4)

சிற்பரை தோன்றிநீ செய்த வத்தினாற்
பொற்பநீ யுளவரை புவியிற் றங்குமா

---

(1) சாதிபூடணன்-குலபூடணன்.

றற்பவாழ் நாளுமெய் யறிவு முற்ற வோர்
நற்பெரும புதலவனை யுனக்கு நலகினேம' (5)

அருவரைச சிலையினாற் கண்ப னுவனினன்
மருவுவன பூரண வயதெதன ரெகிபெ
திருவுருக காநதனை செய்ய வேதியன்
பருவா லொழிநதாகன் பதியைப நண்ணினான். (6)

கலித்துறை.

எத்தி யாவரும வியநதிட விதழியந தொடையு
மாத்தி யாரமு மணிநதவன் றேவியின ளருளான்
மாத்தி யானமெய்க தவமுறு மறையவன் றனககுக்
காத்தி யாயன னெனுமொரு காதல னுதிததான். (7)

நேரி லாமறை யாகம மனைததை நயு நெடிய
பாரி லேவரும வியநதிட பயின்றுநற பிரம
சாரி யாயா ளடிகளை மீக நசித தசவேள
போரி னைத்துறந தொழுகினு னொழுகுமப பொழ்தில் (8)

சந்த மாமறை தோசிவா பிரியன்மைந தனுக்கு
முநத மாதவந தான்புரிந தருமிக முயன்ற
வநத மாதவத் தினுககளப வியநதுமை யாங்கே
வந்து நலவரந தநதது முரைததனன மன்னே. (9)

தூய தாதைசொற் கேட்ட வனடியிணை தொழுது
நேய மோடுமா தவவனரு ளெனறினி நிறைநத
வாயுள் பெற்றுநான் வருவனீ யருள்விடை யென்று
னேயு நல்விடை யளிததனன றநதையங கிசைநது. (10)

தாதை பால்விடை பெற்றுறநத் தவவனரு சார்நது
காதல் கூர்நதுநற் பரத்துவா சனையவண் கண்டு
பாத மாமலர் மிசைமுடி தோயவுறப பணிநதா
னீதி யையநீ மிக்கவாழ் நாளினைக் கெனவே. (11)

வணங்கி யிங்ஙன மன்பொடு வழுத்துசொற் கேளா
நுணங்கு கேள்விகூ ரம்மறை யவன்றனை நோக்கி
யுணங்கு மைம்புலப் பகைதுறந் தோங்குநற் றவத்தி
லிணங்கு சிந்தைமா முனிவர்சோ னியட்புலன் மாதோ. (12)

மறைவ லோய்நமன் றூதர்தங் கைப்படா வண்ணங்
குறைவு றுதவாழ் நாள்பெற வுளத்தினீ குறிக்கி
னறைவல் கேண்மதி பாண்டிநா டடைந்துதென் கருவைக்
கிறைவ னுங்குல பூடணன் றனைச்சர ணெய்தி. (13)

சுருங்கு நுண்ணிடைச் சசிபதி தொல்பதி தனக்கு
நெருங்கு நன்னிழல் புரிதரு நீண்மலர்ப் பொழில்சூழ்
பருங்க ராசல புரமெனப் பகருமத் தலத்திற்
கருங்க ளாவுறை வெண்ணிறக் கனிதனைக் கண்டு. (14)

பூசை யன்பொடு புரிந்துநீ போற்றுவா யெண்ணி
லாசை யுற்றநல லாயுளுண் மிகப்பெறு குவையிவ்
வோசை மாக்கட லுலகிலென் றுரைத்திடக் கேட்டு
மாசை நீத்தவம் மறையவன் மகிழ்வொடு மீண்டான். (15)

கொச்சகக் கலிப்பா.

மீண்டுபல வளமலியும வியன்கருவைத் தல மடைந்து
தாண்டுதிரைக் கடலாடைச் சகமுழுதும புயததிடைவைத்
தீண்டுதனிச் செங்கோன்மை யியற்றுகுல பூடணனும
பாண்டியனைச்சரணமெனப் பண்பொடுசேர்ந்தனன்மாதோ. (16)

வழுதிபெருந் தயவெய்தி மனத்தினிடைக் களிகூர்ந்து
முழுதுலகும் புகழ்கருவை முகலிங்கப் பெருமானைத்
தொழுதினிதர்ச் சனைபுரிந்து துலங்குறுமன் பொடுசிலநாட்
பழுதறுதாய் தந்தையுட னிருந்தனனப் பதியிலரோ. (17)

அந்நாளிற் சதுமறைநூ லனைத்துமுணர் சிவப்பிரியன்
பொன்னாடு புகுந்தனனப் பொழுதவன்மைந் தனுக்குமலை
மின்னாண்முன் னருளியநாண் முடிந்ததெனை விரைந்தன்றோன்
றன்னுனி கவர்வான்வந் துற்றனரந் தகன்றூதர். (18)

வந்துபய புரியெனுமம மாநகரத் திலுக்கப்பா
லந்துகுரோ சத்தினின்று ரருட்குமியி னின்றெழுந்த
செந்தழலின் சுவாலையினுந் தேவர்பெருங் காவலினும்
புந்திகனி கலங்கிவெருண் டந்நகருட் புகுந்திலரால். (19)

(14) பதி-நாயகன்.

என்புரிவார் மீண்டனரவ் வியமனெனுந் தம்பிறைவன்
முன்பணுகி யுரைத்தனர்போய் வந்தசெயன் முழுவதுங்கேட்
டன்பறுசிந் தையிற்சினமுற் றடற்றண்டங் கரத்தேந்தி
வன்பருமே தியிலேறி வந்தனனந் தகன்மாதோ. (20)

கருவைநக ருட்புகுந்து காத்தியா யனனெனும்பேர்
மருவியவம் மறைவாணன் சரணமென வந்தடைந்த
பொருவில்குல பூடணன்றன் பொற்றிருமா ளிகையதனுள்
வெருவிலன்புக் கனன்பின்னர் விளைவதனை யுணராதான். (21)

புக்கமற லியினுருவம் பூருவநல் வினையதனா
றக்கமறை யவன்விழிக்குத் தெரியமனந் தான்வெருவி
மிக்கதிறன் மன்னவன்பால் விளம்பினன்மன் னவனுங்கேட்டுச்
செக்கர்விழித் தருமன்முனஞ் சென்றவனை வணங்கியரோ. (22)

ஏதுவெவ னீயிவண்வந் தெய்துவதற் கியம்புதியென்
றோதினனப் பொழுதரச வுனைச்சரணென் றடைந்துளவிவ்
வேதியனு யிரைக்கவர்வான் விருப்பொடுவந் தனம்யாமிப்
போதெனச்செப் பினன்கருணை சிறிதுமிலாப் புந்தியினான். (23)

அவனுரைத்த வுரையதுகேட் டரசனெனைச் சரணடைந்த
விவனுயிரைக் கவருநினை வொழித்துவிரைந் தேகுதியென்
றுவகையுட னுரைக்கநம னுனதுயிரு மிவனுயிருங்
கவருவனிக் கணத்திலெனக் கடுஞ்சினமுற் றனன்மாதோ (24)

எனதுயிரைக் கவர்ந்திடினு மெனைச்சரண மென்றடைந்த
கனமருவு மிம்மறையோ னுயிதனைக் கவரவிடேன்
சினமொடுநீயென்னையெவன் செய்யினுமென் றுரைத்துநின்முன்
றனதுயிர்போ லெவ்வுயிரும் புரக்குநெடுந்தனிக்குடையான் (25)

தேசத்தார் புகழ்ந்துரைக்குஞ் சீர்த்தியாற் சிறந்தசிவ
நேசத்தா லிவ்வுலகத் தொருவரையு நிகருரையா
வாசத்தார் மன்னவனிவ் வணமுரைக்க வலியபெரும்
பாசத்தா லந்தணனைப் பற்றியிறு குறப்பிணித்தான் (26)

கலிவிருத்தம்.

கண்டனன் மன்னவன் கண்சி வந்தனன்
கொண்டனன் முனிவிடைக் கொடும்பெ ருஞ்சின

மண்டமர் புரிகுவான் கருதி வன்றிறற்
சண்டனோ டெதிர்ந்தனன் சாபம் வாங்கினான். (27)

அந்தகன் மிசைப்பல வபபு மாமழை
சிந்தினன் றருமனுஞ் சிறி வில்வளைத
துந்துபல் கணைகளால் வழுதி யுந்திய
வெந்திறற் கணைகளை விலக்கினானரோ. (28)

அறுசீர்க்கழிநெடிலடியகவல்விருத்தம்.

விலக்கியொரு பெரும்பார தண்டமதை விடுத்தனனவ்
வேலை வேந்தன்
வலக்குலிசப்படைக்கரத்தான் பகைஞரெனுமவுணரைவெல்
வான்முன் னாளிற்
றலக்கமுறு நாரதன்வெண் டுதற்கிசைந்து களாவுறையுஞ்
சுவேத நாதன்
கலக்கமற வருளியகா மேசாவா ளியைநமன்மேற்
கடிதி னுய்த்தான். (29)

அப்பகழி யோருழிக் கனலெனச்சென் றியமனுய்த்த
வத்தண் டத்தை
யொப்பில்யம தூதர்தமைத் தகித்துநம னையுமூர்ச்சை
யுறச்சாய்த் தண்ணல்
கைப்பதுமத் தடைந்ததுவென றியையடைந்தே மெனமனதிற்
களிகூர்ந் தந்த
முப்புவனத் தினுமதிக விசைவிளங்க விசயசங்க
முழக்கினனால். (30)

அண்டர்புகழ்ந் திடத்தேர்நின் றிழிந்துதரு மன்சிரமீ
தணிந்த வந்த
மண்டுமொளி திகழ்கனக மணிமகுடந் தனைக்கவர்ந்து
வலிமை சான்ற
வெண்டகுமவ் வியமனெடுங் கைப்பாசத் தாற்பிணிப்புண்
டிருந்தோன் றன்னைப்
புண்டரிக மலர்க்காத்தா வினிதெடுத்துச் சினகரத்துட்
புகுந்து மன்னோ. (31)

---

(29) வலம்-வெற்றி. குலிசப்படை-வச்சிராயுதம். சுவேதம்-வெண்மை.
(30) விசயம்-வெற்றி.

கன்னியொரு பங்குடையான் றிருக்களா நிழலமர்ந்த
கருணைப் பெம்மான்
சன்னிதியின் முன்காத்தி யாயனப்பேர் மறைவாணன்
றனையுங் கூற்றின்
சென்னிமிசைப புனைநதமணி முடியையும்வைத் துளமுருகிச்
சிறந்த வன்பு
மன்னியதோத திரஞ்செய்திருந் தனன்குலபூடணனெனும்பேர்
வழுதி மாதோ. (32)

அவ்வமையந் தன்னிடுவன் மூர்ச்சைதெளிந் தெழுந்துசிவ
னடியார்க் கநதோ
வெவ்வமிழைத் தனமதனு லிந்துயருற் றனம்யாமென்
றெண்ணி முன்னுள்
வெவ்விடமுண் டவன்கருவைப் பரமேசன் சன்னிதியின்
மேவி நின்று
செவ்வையுறு தனதிதயங் கசிநதுருக வினியதுதி
செய்தா னமமா. (33)

வேந்தனெனுந் தருமனுமவ் வெய்யதரு மனுமிநத
விதநின் றுங்கே
தாந்துதிசெய் திடும்வேலை தனிறகளா வனப்பெருமான்
றயவு கூர்நது
பூந்தளிர்மென் றிருக்கரத்தா லறம்வளர்த்த மலையரசன்
புதல்வி யென்னு
மேந்திழையி னுடுவிடைமே லெழுந்தருளி நின்றனனவ்
விருவர் தம்முன். (34)

இருவருங்கண் டுளத்தொடுகண் களித்திடத்தோன் றியபெருமா
னினிது போற்றுந்
தருமன்முக நோக்கியெமைப் பூசனையன் போடுபுரிந்
தமையா லிந்த

(33) இழைத்தனம்-செய்தோம்.

வருமறையோன் றனக்களித்தேம் பூரணவாழ் நாளிவன்பா
லடைந்த வாற்றால்.
வெருவுறுமித் துயருழந்தா யின்னுமுனக் கோருறுதி
விளம்பக் கேண்மோ. (35)

இக்கருவைப் பதிப்புறத்தைங் குரோசத்தி னிடையணுகே
லினியோர் நாளுந்
தக்கபெருந் தேவர்கடுங் காவல்புரிந் துளர்பதனந்
தரும வுன்றன்
மிக்கதிறற் றாதரையுய் வித்தனம்பாம் வழுதியைநீ
விரும்பி நட்டுத
தொக்கசெழு மணிமுடிபெற் றந்தணன்றன் பெரும்பாசத்
துவக்கு நீத்து. (36)

எய்துதிநின் னுலகமென வினிதுரைத்துப் பின்னருவந்
தேத்தி நின்ற
கைதவனை நோக்கிநம்பா லன்புமிக வைத்தனையா
கையினால் வெம்போர்
செய்துநடு வனைவென்றாய் மகிழ்ந்தனம்யா மெனவின் சொற்
செப்பி யந்த
மைதிகழ்கந் தரப்பெருமான் மறைந்துதிரு வருட்குறியாய்
வதிந்தா னம்மா. (37)

வேறு.

மன்றலந் தெரியற் றிண்டோண் மன்னவன்
கேண்மை யோடு
தன்றிரு முடியுங் காத்தி யாயனன்
றனைப் பிணித்த
வென்றிகூர் நெடிய தன்கைப் பாசமும்
பெற்று மீண்டு
சென்றுதன் னுலகம் புக்கான் றென்றிசைக்
கோமான் மன்னோ. (38)

(36) நட்டு-சினேகித்து. (37) கைதவன்-பாண்டியன். (38) மன்றல்-வாசம். தெரியல்-மாலை. கேண்மை-சினேகம்.

பார்த்தண்மர் முடியின் மேவும் பாரெலாம்
புயத்திற் றாங்கு
மேந்தலு மறையோன் றனு மினிதுவாழ்ந்
திருந்தார் வாசப்
பூந்திருக் களவி னீமுற புராதன
னருள்பெற் றந்தக்
காந்திகொள் கனக மாடக் கரிவல
நகரின் மாதோ. (39)

குலபூடணன் இயமனை வென்ற சருக்க முற்றிற்று.

ஆ சருக்கம் 37-க்கு விருத்தம்-1213.

---

முப்பத்திரண்டாவது.

## குபேரவாரியன் பீடப்பிரதிட்டை செய்த சருக்கம்.

---

கொச்சகக்கலிப்பா. தி.

மாடக் கொடியாடை யாடுதலால் வாளிரவி
யாடற் பரிகள்விடா யாறிவான் வீதிசெலு
நீடற் புதக்கருவை நின்மலனுக் காரியன்முன்
பீடப் பிரதிட்டை செய்தகதை பேசுதுமால. (1)

துன்னும்புக நான்குட் டுவாபரயு கத்திலொரு
தென்னவனுமை வீர சிகாமணியென் போன்மேக
கன்னியெனுந் தேவியொடு மேவிக் கரிவலமா
நன்னகரிற் செங்கோ னடத்திவாழ் வுற்றிருந்தான். (2)

காருவரி யாடை யுடுத்தநெடுங் காசினியிற்
பூருவநாட் செய்தபெரும் புண்ணியத்தா லாங்கவற்குப்
பெருவகை யோங்கப் பிறந்தா னொருமகவாய்
மேருவரை வில்லான் விரும்புந் திருத்தோழன். (3)

வாரிட்ட கொங்கை மடவார் மனங்கவருந்
தாரிட்ட செம்பொற் கிரிநேர் தடந்தோளான்

---

(39) ஏந்தல்-அரசன். (1) வாள்-ஒளி. (3) கார்-கருமை. உவரி-கடல்.

சீரிட்ட நந்தந் திருப்புதல்வ னுக்கினியெப்
பேரிட் டழைத்துமெனப் பேரிதயத் தெண்ணினனால். (4)

கண்ணகன்ஞா லம்புரக்குங் காவலனங் கெண்ணியதோ
ரெண்ணமுணர்ந் தவ்வரசன் முன்னர்விரைந் தெய்தினனால்
விண்ணவர்முன் வேண்டவுயர் விந்தமெனும் வெற்பினைத்தன்
வண்ணமலர்க் கையா லடக்கியவோர் மாதவத்தோன். (5)

அம்மா தவத்தோனை நோக்கி யடியேனு
னெம்மா தவம்புரிந்தே னீயிங் கெழுந்தருள்வான்
கைம்மா வுரிபாடை போர்த்த கயிலைவரைப்
பெம்மா னலதிணைவே றில்லாப் பெருந்தகையே. (6)

என்றுதுதி செய்திறைஞ்சி யென்சுதனுக் கன்பொடுநீ
யொன்றுதிருப் பேரிட் டருளென் றுரைத்திடலும்
வன்றிறல்கூ ராரியனென் றெவ்வுலகும் வந்தனைசெய்
தென்றல்வரை மாமுனிவ னிட்டான் றிருநாமம். (7)

அன்பொடுநற் பேரிட் டருந்தவஞ்சே ரம்முனிவன்
றென்பொதிய வெற்படைந்தான் மைந்தனுக்குத் தெவ்வடுகூர்
மின்பொலியும் வேற்படையான் மிக்கபல நூல்பயிற்றித்
தன்பொறையம் மைந்தன் றடம்புயத்தில் வைத்தனனால். (8)

நற்புதல்வ னுக்கரசு நல்கியுவப் பெய்தியந்த
வெற்புறழ்தோண் மன்னவன்பின் விண்ணுலகம் புக்கனனாற்
பொற்புமிகு மாரியன்றான் பூவுலகம் யாவையுமோ
ரற்புதஞ்சேர்வெண்குடைக்குளன்பொடுவைத்தாண்டிருந்தான்

எவ்வுலகும் போற்ற வெழிலா ரியனெனுமோ
ரவ்வரச னிவ்வா றரசியற்று மந்நாளிற்
கவ்வைவிரி தெண்டிரைநீர்க் காவிரிநாட் டிற்சிறந்த
செவ்வியுறு தில்லைத் திருநகரந் தன்னிலரோ. (10)

துன்னலருக் கேறனையான் றுங்கவக ளங்கனெனுஞ்
சென்னிமனு நீதி செலுத்தியர சாண்டிருந்தா
னன்னவனுக் காங்கே யழகியகத் தூரிவல்லி
யென்னுமொரு மின்னா ளிருந்தனள்வாழ்க் கைத்துணையாய்.

---

(8) பொறை-பூமி. (5) கன்-இடம்.

அந்தமட மங்கை தனக்கோ ரருஞ்சுதையாய்
வந்துபிறந் தாளளகை மாநகர்க்கோ மான்மகிழுஞ்
சுந்தரஞ்சேர் மாமணியாள் சுப்பிரசூ யைப்பெயர்கொள்
சந்தமுலை மாதுபிர சன்னையெனத் தாரணியில். (12)

உற்றபிர சன்னையெனு மொண்டொடிமங் கைப்பருவம்
பெற்றபொழு தாங்கவளைப் பெற்றோ னஃதுணர்ந்து
கொற்றவரு ளெவ்வரசன் கொல்லோ பதியாவா
னற்றவத்தா லீன்றெடுத்த நமபுதல்விக் கென்றினைந்தான். (13)

அந்த வேலையி லரசர்கோ னிருந்தபே ரவைக்கண்
வந்து தோன்றினன் மாமுனி யெனுந்துரு வாச
னெந்தை நீவரற் கெத்தவம் புரிந்துளே னெனத்தன்
சிந்தை யான்மகிழ்ந தன்பொடு மிகத்துதி செய்தான்.

ஆத ரத்தொடு துதிபுரிந தவன்றனை நோக்கி
மாத வத்தினு லென்வயி னுதித்தமா மகட்குப்
பூத லத்துள புரவலர் தம்முளெவ் வேந்தன்
கோதி னற்றவ னுவனீ கூறுதி யென்றான். (15)

மன்ன னிங்ஙன முரைத்தலு மாமுனி கேளா
மின்னு நீண்முடி வேந்தகே ணின்வயி னுதித்த
பொன்ன னுளிவள் புகழ்பெறு மிருநிதிக் கிழவோன்
பன்னி யாகிய சுப்பிர சூயையென் பவள்காண். (16)

எரிம ழுப்படை யேந்தினோ னிட்டசா பத்தால்
விரியு மிப்புவி மீதுசத் தூரியாச் செனித்துப்
புரியு நல்வினைப் பயத்தினு லிம்மையிற் பூர்வ
சரித மோர்ந்துநின் புதல்வியாப் வந்தவ தரித்தாள். (17)

இன்ன வட்குமுன் பதியென விருந்ததென் னளகை
நன்ன கர்ப்பிரான் செழுந்தமிழ்ப் பாண்டிய நாட்டின்
மன்னு சீர்க்கரி வலநகர் தனிற்றிரு மனத்தான்
முன்னை யுற்பவ முணர்தரு முதிரறி வினனாய். (18)

---

(13) இனைந்தான்-வருந்தினன். (15) தவன்-நாயகன்.

இல்கு மாரிய பாண்டிய னெனக்கடல் புடைசூ
ழுலகம் யாவையுந் துதித்திட வுதித்துளா னவனே
நிலமி குந்தநின் மகட்குயிர் நாயகனாவான்
குலவு மிம்மையி லின்னமுங் கூறுதுங் கேண்மோ. (19)

கோல மேவுநின் றிருமகள் சுயம்வரங் குறித்து
ஞால மீதுள மன்னவர் நணுகுமந் நாட்டாருஞ்
சால வேந்தனுங் காசிவேந் தனுமவிசு வேசன்
சீல மாதவ னெனுமவர் தமையுபா சித்து. (20)

திருத்த கும்பெரு வரத்தினாற் செகமெலாம் பரிக்கும்
பருத்த திண்புய வாரிய பாண்டிய னெனவே
யுருத்த ரித்திவண் முற்பவ சரிதமோர்ந் தவராய்க்
கருத்து வந்திவண் வருவா ரியனுடன் கலந்து. (21)

சீரி யன்றபாஞ் சாலநாட் டண்ணல்கா சிக்கோன்
வாரி யம்புவி புகழ்கரி வலநகர் புரக்கும்
வீரி யம்பெறு வேந்தென விளம்புமூ வரிலவ்
வாரி யன்றனை யறிதல்யா வருக்குமின் கரிதால். (22)

எறியு நீடிரைத் தடமலி யெழிற்கரு வையில்வாழ்
நறிய பூங்களா நாதனை நின்மக ணயந்து
செறியு மந்திரத் தாலுபா சிக்கினா ரியனை
யறிய லாமென வுரைத்துமா முனிவர னகன்றான். (23)

முனியு ரைத்தசொற் படிமதி முகப்பிர சன்னை
புனித நற்களா வீசனை யுபாசனை புரிந்து
பணிம திச்சடைப் பரமன்வந் தாரியன் றன்னை
யினிது ணர்ந்திடும் விஞ்சையொன் றீந்திடப் பெற்று.

இன்னு யிர்க்கிணை யாகிய விருளையர் சூழக்
கன்னி மாடமீ துறைந்தன ளினிதுளங் களித்துத்
துன்னும் வானகந் தனிற்பல வுடுக்கணஞ் சூழ
மன்னி யாங்கவற் றிடையுறை தருநிறை மதிபோல். (25)

---

(21) பரிக்கும்-தாங்கும். (25) இருளையர்-தோழியர்.

சாற்று மப்பிர சன்னையை முற்பவ சரிதந்
தேற்றி னேற்குமா மணஞ்செய வுன்னிநற் சென்னி
நாற்றி சைக்கணு முய்த்தனன் றூதரை நவைதீ
ராற்றல் சால்பல தேயமன் னவரும்வந் தடைந்தார். (26)

காசி வேந்தனுங் காசினி பாவுபாஞ் சால
தேச வேந்தனுந் திருந்திழை பூருவ சென்ம
மாச ரித்திர முணர்ந்துமந் திரவலி மையினு
லாசி லாரியன் போலுருத் தரித்துவந் தடைந்தார். (27)

கருவை மாநகர்க் காவல னெனும்பொலங் கழற்காற்
பொருவி லாரியன் றனும்வந் தனன்கடல் புடைசூ
ழிருநி லத்துள மன்னவ ரெவரும்வந் தனரொன்
றருவ ரைத்தடம் புயவக ளங்கனங் கறிந்து. (28)

அறுசீர் விருத்தம்.

உயர்வுறுமிந் திரன்வசந்த மண்டபமா மெனச்சிறப்புற்
றொளிருஞ் செம்பொற்
சுயம்வரமண் டபத்தினிடை யினிதுவர வழைக்கநெடுஞ்
சுடர்வேற் செங்கை
வயமிகுமெவ் வேந்தரும்வந் திருந்தனரவ் வேலையிறைவன்
கயனெடுங்கட் கன்னியையிவ் விடைக்கொணர்மி
னெனவுரைத்தான் கழற்கால் வேந்தன். (29)

நீடியவாட் படைக்கரத்து நிருபனுரை தனையுணர்ந்து
நீங்கா நேயச்
சேடியர்சிந் தையின்மகிழ்ந்து சிறந்தவழ கினுக்கழகு
செய்வார் போன்று
பீடியலும் பலமணிப்பொற் பணியாலொப் பனைபுரிந்து
பெரும்பொற் கொங்கை
வாடியநுண் ணிடைக்கனிவாய் மங்கையையா
யிடைக்கொணர்ந்து வந்தார் மன்னே. (30)

(30) பீடு-பெருமை.

ஏந்திழையச் சேடியரோ டெய்தியா சவையிடைவந்
திருந்த பின்னர்
வேந்தர்தமை நோக்கிமகிழ்ந் தென்மகண்முற் பவசரிதம்
விரும்பி யீங்குப்
போந்தவா சரிதுரைப்போ னெவன்கொலவ னேயெனது
புதல்வி வேட்குங்
காந்தனென வுரைத்தனன்கேட் டரசரெவன் புரிதுமெனக்
கருதி நைந்தார். (31)

எழுசீரகவல் விருத்தம்.

மாவளம் பெறுபாஞ் சாலமன் காசி
மன்னவ னரிய னெனுமம்
மூவரு மொழிந்த மன்னவ ரெவரு
முற்றிழை மீதுதாங் கொண்ட
வாவனீத் திருந்தா ரந்தமு வரச
ரையுறு துரைத்தனர் கமலப்
பூவணங் கிணைநே ரெழிற்பிர சன்னை
பொருந்துமுற் பவசரித் திரமே (32)

திருக்களா வுடையான் றனக்கரு ளியமந்
திரத்தினு லப்பிர சன்னை
மருக்கமழ் மலர்த்தார் புனைவரைத் தடந்தோண்
மன்னரோர் மூவரு ளீங்கே
யுருக்கரந் துளரா லிவ்விரு வருமிவ்
வொருவனே மலர்க்கணை மதனும்
வெருக்கொளத் திகழு மெழில்வடி வுடைப்பூ
வேந்தனு ரியனென வுணர்ந்தாள். (33)

துணிந்தன னுணர்ந்து தன்கரத் திருந்த
தூயபூ மாலையை யயன்மால்
பணிந்திடு கருவைப் பதிக்களா நாதன்
பதத்துணை மலரையல் லதுசீர்

(32) முற்பவம்-பூர்வஜென்மம்.

தணிந்திடா வுலகத் தெவரையும் வணங்காத்
தருமவா ரியன்றிருப் புயமே
லணிந்தனள் கண்டா ரெழுந்துதந் தேய
மடைந்தன ராசர்யா வருமே. (34)

கரிசிலாச் சீர்த்திச் சென்னிதான் பயந்த
கன்னியை யாரிய னெனும்பேர்க்
குரிசிலுக் கினிய மணம்புரி வித்துக்
கொடுத்தன னரியன் சோதி
விரிசிலம் படிக்கொம் பினைக்கொடு மீண்டு
வியன்கரி வலநக ரடைந்து
வரிசிலை மதனு மிரதியு மெனவம
மாதொடு மருவிவாழ்ந் திருந்தான். (35)

மருவிவாழ்ந திடுநாள் வலம்புரி தாள
மானப
பொருவின்மார்த் தாண்ட பாண்டிய னெனுமோர
புதல்வனை யினிதுபெற் றனனு
னுருவமன் மதனோ சுதனையீன் றுள்ளத்
துவகையுற் றிருக்குமந் நாளிற்
றிருவளர் கருவைக் களாநிழற் பெருமான்
சினகரம் புதுக்கியன் பொடுபின். (36)

தனியருட் குறியின் பீடமா னதுதான்
றரையிடை நணியமிழ்ந் தினதா
லினியொரு திருப்பீ டப்பிர திட்டை
யியற்றுது மெனநினைத் துள்ளக்
கனிவொடு பலதே யங்கடந் தேகிக்
கண்டகி நதிதனை யடைந்து
புனிதநற் சிலையொன் றெடுத்துவந் தெவரும்
புகழ்தரப் பீடம தியற்றி. (37)

---

(36) மான-யோல.

கனமுறு பொதியக் குறுமுனி முதலாக்
கருதுமா முனிவரொடுபொற்
சினகரம் புகுந்தோர் சுபதினந் தன்னிற்
றிருப்பிர திட்டைசெய் தாங்கே
மனமுவந் திபபீ டங்கலி யுகத்தே
வருமெடுத் திடவொரு திருப்பா
னனவர தமுநீ யருள்புரி யெனவே
யகளங்கனைத் துதித்தான். (38)

துதிபுரிந் திடுமவ் வேலையெம் பெருமான்
சுயதிரு வடிவுடன் றோன்றிப்
பதிவுறு மிந்த வருட்குறி யின்கீழ்ப
பாகமா னதுசிறுத் தினிய
கதிதரு மிபபீ டத்தின்மேற் றோன்றுங்
கவின்கொண்மேற் பாகமே பெருத்து
வதிதரப் புரிந்தே மிதுநிலை பெற்று
வயங்குமென் றுரைத்தனன் மறைந்தான். (39)

பரிவுட னெம்மா னுரைத்தவா றேகீழ்ப்
பாதிதான் சிறுத்துமேற் பாதி
தெரிவுறப் பெருத்து மிலங்குமவ் விலிங்க
திருவுருத் தெரிசனம் புரிந்து
விரிதிரைக் கடல்சூழ் புவியெலா மொருதன்
வெண்குடை நீழல்வைத் தொளிகூ
ரரியணை மிசைவீற் றிருந்தர சியற்றி
யதிபனு ரியன்மகிழ்ந் திருந்தான். (40)

குபேரவாரியன் பீடப்பிரதிட்டை செய்த சருக்க முற்றிற்று.

ஆ. சருக்கம் 38-க்கு விருத்தம்-1253.

---

(39) கவின்-அழகு.

முப்பத்து மூன்றாவது

## தக்கன் முதலோர் சாபநிவிர்த்திச் சருக்கம்-தி

---

கழிநெடிலடி விருத்தம்.

நீபமலர்த் தொடையணிதிண் புயக்குமரன் றனைப்பயந்த
நிமல னென்னுந்
தீபநிகர் திருமேனிப் பரம்பொருளை மதியாமற்
செருக்கித் தக்க
மாபாதகன்புரியாகந் தனைக்காணச் சென்றடைந்தோர்
வலிய வெய்ய
சாபவிமோ சனமடைந்த சரிதமது சிறிதெடுத்துச்
சாற்று வாமால். (1)

தண்டமிழ்ச்சேர் தென்மதுரைத் தலத்திலம ரியவேந்தன்
றன்பே ராணை
மண்டலமெங் குஞ்செலமா மனுநீதி பரிபாற்றி
வாழு நாளிற்
கண்டகனாந் தக்கன்மகம் புகவிளைந்த சாபத்தாற்
காமதேனுப்
பண்டகனென் றொருபெயரான் மனைதனிலோர் பசுவாயுற்
பவித்த தன்றே. (2)

துன்றுபொழிற் கரிவலமா நகரிடைவந் துதித்தவந்தச்
சுரபி சாலக்
கன்றுபல வீன்றுமுதிர் பருவமதா மருவியதாற்
கருதா தாங்கே
நன்றுணராப் பண்டகன்றான் விடுத்தனனால் விடுத்தலும்பன்
னாளு மெங்குஞ்
சென்றுபுலங் களின்மேவுஞ் செழும்பயிர் களைமேய்ந்து
திரிந்து தந்நாள். (3)

அருந்தவத்தோர் பணியுமது லாம்பிகைசன் னிதியின்மய
லாகிக் கட்டுண்
டிருந்ததுசிறு விதியடைந்த சாபமகன் றிடுநாள்வந்
தெய்த லாற்சீர்

பொருந்தியவப்பதியினிடைநிசுளனெனப்பெயர்பெறுமோர்
புலையன் றன்பாற்
பெருந்திறல்சேர் மகவெனவந் துதித்தனன்பீ லகனவன்றன்
பெயர்தான் மன்றே. (4)

ஏய்ந்தபெரும் பீலகன்வா லிபவயதுற் றுழுதொழில்செய்
திருந்தா னன்றோன்
வாய்ந்தபுலத் திடையுளபைம் பயிரினைப்பண் டகன்சுரபி
வந்து சால
மேய்ந்ததுகண் டாங்கதனை யடித்துவதைத் துணக்கருதி
வேங்கை யேபோற்
பாய்ந்தனனே டினன்காத்திற் பற்றியதண் டொடுசிறிதும்
பரிவி லாதான். (5)

எழுசீர்விருத்தம்.

பீலக னோடி வருதலகண டந்தப
பெற்றமா னதுமனம் வெருண்டு
சாலவோ டினதெந கோடினு மிதனைத்
தான்விடுத் தேகுவ திலையென்
றேலவே நினைத்தோ டினன்றொடர்ந் தன்னே
னெழின்மிகு மச்சுர பியுமே
யோலமிட் டைந்து குரோசமட் டோடி
யோடியங் கிளைத்ததென் செயுமால். (6)

பின்னரும் விடாமற் பின்றொடர்ந் தநதப
பீலக னோடிவந் தனனு
லின்னலுற் றவ்வான் முன்விரைந் தோடி
யேகின திந்தவா றந்தோ
பன்னருங் கொடிய பாவிபீ லகனும்
பசுவுமத் திருநக ரடைந்து
சொன்னமா மதில்சூழ் சினகரஞ் சுற்றிச்
சுற்றியே வந்திடும் பொழுது. (7)

மற்றிணை யில்லா திலங்குமச் செம்பொன்
மணிச்சினை காத்திணை முக்காற்

சுற்றிவந் திடுபுண் ணியத்தினு லப்ப
சுவையுநீ சனையுநோக் கினனுல்
வெற்றியந் திகிரித் திருநெடு மாலும்
வேதனு மறியொணு விமல
நற்றிருக் களவீ சனைத்தெரி சிப்பா
னயந்தவ னுற்றவா ரியனே. (8)

நோக்கிய வேநதன் றன்னையச் சுரபி
நோக்கியுன் னடைக்கல மெனாநீ
காக்கவென் றடைந்த தநனையப் புலையன்
கண்டுகா வலவனை யிறைஞ்சி
மாக்கடற் புவியாண் மன்னவ பலநாள்
வருந்தியென் புலத்திடை யடியே
னுக்கிய பயிரை நுகர்ந்ததால் யானு
மருந்துவ விதைவதை புரிந்து. (9)

என்னிடைத் தருக வென்றுவேண் டினனவ்
வேல்வையப் புலையனை நோக்கி
முன்னைவெவ் வினையா லிப்புலைப் பிறவி
யுற்றநீ யடைந்தனை யந்தோ
வின்னுமிம் மையினுந் தீமையே புரியி
னென்றுநீ கதியடை குவையாம்
பன்னுதுங் கேண்மோ விற்றைநாண் முதலிப்
பதிப்பா மனைத்தெரி சித்து. (10)

அகவல் விருத்தம்.

துதிபுரிந் தொழுது வாயேற் றொல்லைவெவ் வினையி னீங்கிக்
கதியடை குவையென் றோதிக் காவல னகன்ற பின்ன
ரதிகமெய்ஞ் ஞான மெய்தி யற்புத மிகுநிட் சேப
நதிதனின் மூழ்கிச் சிந்தை நயந்துருத் திராக்கம் பூண்டு. (11)

வெண்பொடி யணிந்து சீர்த்தி மிக்கதென் களவை மேவுந்
தண்பெருங் களவீ சன்றன் சன்னிதி யடைந்து சாலக்
கண்பனி ததும்ப வுள்ளங் கனியகாக் குழற நின்று
பண்புறு பீல கன்றன் பழிச்சியாங் கிருந்தான் மன்னோ. (12)

---

(12) பழிச்சி-துதித்து.

ஆரிய வேந்தன் றன்னைச் சரணடைந் தாங்கு நின்ற
சீரிய தேனு வுள்ளந் தெளிந்துபா னிறப்பே ரின்ப
வாரியுத் துதித்துச் சாப மாறிமுன் வடிவ மெய்தித்
தாரியன் மவுலித் தேவர் தம்முல கடைந்த தம்மா. (13)

சன்னிதி யடைந்து வெம்பஞ் சப்புல னடக்கித் தன்னை
யுன்னியன் பொடுசின் னுளங் குற்றபீ லகன்றன் பத்தி
யென்னுமோர்வலையிற்சிக்கி யெழிலுடைக்கருவையெம்மான்
கன்னியோர் பாகந் தோன்றத் தோன்றினன் கருணை கூர்ந்து.

கலிவிருத்தம்

தோன்றிய தனிப்பரஞ் சுடரைப் பீலந
னென்றகண் களிப்புற வினிது நோக்கியே
யான்றதொல் லுருவடைந் தழலின் வெண்ணெயே
போன்றுள முருகியன் பொடுது தித்தனன். (15)

கொச்சகக்கலிப்பா.

பொன்னே மணியே புகழ்சேர் திருக்கயிலை
மன்னே தனிமா முதலே மதியணியு
மின்னேர் சடையாய் விமலா வனைகாண்பா
னென்னே புரிந்தேன் றவந்தா னெளியேனே. (16)

பொன்னை மருவும் புயல்வண் ணனுமயனு
முன்னையொரு நாட்டேடிக் காணு முதற்பொருளா
முன்னைமதி யாதுமகஞ் செய்த வுணர்விலியா •
மென்னையுமீ டேற்ற மனந்தா னிரங்கினையோ. (17)

செய்யமகா ரெப்பிழைதான் செய்யினுமெண் ணுதிரங்குந
துய்யமனத் தாய்போலெஞ் ஞான்றுந் தொலைவரிய
வெய்யதுய ராழியிடை வீழ்ந்தழுந்தும் பாவியெனை
மையிலருள் கூர்ந்து கரையேற்ற வந்தனையோ. (18)

என்றுதுதி செய்ய விதயமிகத் தான்மகிழா
நன்றுநின தன்பு நயந்தேமிப் போதுனைத்தா
னொன்றியவெஞ் சாப மொழித்தே மெனவுரைத்து
மன்றுணடஞ் செய்த பெருமான் மறைந்தனனால். (19)

(18) மகார்-மக்கள்.

தக்கனுவப் பெய்தி யயனுலகஞ் சார்ந்தனனே
லக்கருவை மாநகர்வா ழாரியனு மன்னவன்சேர்
மிக்கபிர சன்னையுங்கம் மெய்ப்பதஞ்சேர் வான்விரும்பிப்
புக்கனர்பால்வண்ணப் பெருமான்செம்பொற்கோயில்.(20)

செஞ்சுடர்ப்பொற் கோயிற் றிருச்சன் னிதிபுகுந்து
மிஞ்சிபவா னந்தமுற்று மெய்கம் பலையடையக்
கஞ்சமலர்க் கண்ணீர் ததும்பக் கனன்மெழுகி
னெஞ்சுருக வன்பினொடு நின்றுதுதி செய்தனரால். (21)

அவ்வேலை யெம்பெருமா னவ்விருவர் முன்றோன்றி
யிவ்வேலை நம்பதஞ்சென் றெய்துமினும் பாவமெனும்
வெவ்வேலை நீர்கடந்தி ரென்றுரைத்து மீண்டொளித்தான்
செவ்வேலை யேந்துகரச் செவ்வே டிருத்தாதை. (22)

அல்லலுறுஞ் சாப மகன்றுபெருஞ் சோதிபொளிர்
தொல்லையுரு வெய்திச் சுயவுலகம் புக்கனரான்
மல்லல்வயல் சூழ்கருவை மன்னனெனு மாரியனு
நல்லபிர சன்னையெனு நாமமுறு மாதுமரோ. (23)

விந்தைபெறு மவ்வுலகை வேந்தனெனு மாரியன்றான்
சிந்தைமகிழ்ந் தெய்தியபின் றென்கருவை மாநகரி
னந்தமிலாச் செங்கோ னடாத்திவாழ்ந் தானவன்றன்
மைந்தனெனத் தோன்றியவோர் மார்த்தாண்ட சேகரனே.(24)

தக்கன் முதலோர் சாபநிவிர்த்திச் சருக்க முற்றிற்று.

ஆ. சருக்கம் 39-க்கு விருத்தம்-1277.

---

(21) கம்பலை-நடுக்கம். (23) மல்லல்-வளமை.

முப்பத்து நான்காவது

# வைசியனைவஞ்சித்தமறையவன் பாவநிவிர்த்திச் சருக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம். வீ-

கஞ்சன்மான் மகவா னாதிக் கடவுளர் யாரு முய்வா
னஞ்சினை யமுதாக் கொண்டோன் களாவுடை நாதன் முன்னாள்
வஞ்சனை யியற்றி யாங்கோர் மடந்தையை மணந்த வந்தச்
செஞ்சொன்மாமறையோன்பாவந்தீர்த்தவோர்சரிதஞ்சொல்வாம்

முன்னொரு காலந் தன்னின் முகில்படிந் துலவுகின்ற
மின்னுபூம் பொழில்சூழ் காசி மீரகண் டத்தே யத்தி
லெங்நிலத் தினுஞ்சி றந்த மணிமந்த்ர மெனுமோ ரூரின்
மன்னுழ்வா குலக னென்னும் வைசிய னொருவ னுள்ளான். (2)

மலர்தலை யுலகம் போற்ற வைசியன் வாழு நாளி
லிலகுறு வேத சர்மா வெனுமொரு மறையோ னாங்குப்
பலதுயர் சுற்ற வெய்ய பசியினால் வருந்தி யவ்வூர்க்
குலவிய வீதி தன்னிற் குறுகியே விரைவி னெய்தி. (3)

வருமள வதனி லாதி வருணத்தான் முதிய னானே
னொருவனங் கெதிரே செல்ல லோடுமன் னோனை நோக்கி
யிருமறை யவன்றா னைய வெனதரும் பசியை நீக்குந்
தருமவா னுளனோ வீங்குச் சாற்றென வவன்சொல் வானால்.

இந்நகர் தன்னி லேயோர் வசியனெவ் வுயிர்கள் யாவுந்
தன்னுயி ரென்னப் பேணுந் தகைமைசேர் தரும நெஞ்ச
னன்னவன் மனையிற் சென்றா லரியநின் பசிநோய் நீங்கு
மென்னவம் முதியோன் கூற மறையவன் விரைவி னேகி. (5)

அறப்பெருந் துணையா நின்ற வசியன தகத்திற் சென்று
மறைக்குலத் தவனு மந்த வசியனை நோக்கி யைய
சிறப்புடை யுலக மெல்லாஞ் சென்றுசென் றுழன்று துன்ப
முறப்பசி யதனால் வாடி யுன்னிடை யடைய லுற்றேன். (6)

என்னுடைப் பசியை மாற்றிப் புரத்தியென் றெய்ப்பி னாலே
யன்னவன் கூற லோடும் வசியனு மருளா னோக்கிப்

(3) மலர்தலை-விரிந்தவிடம். (6) அகத்தில்-மனையில்.

புன்னகை புரிந்து வேண்டும் பொருளளித் தன்பா லெய்து
மின்னன்மாற் றுவனென் றேனு மிருவரு மிருக்கும் போழ்தில்.

தாமரைத்திருவோபொன்னுட்டரம்பையோசசியோவெற்றிக்
காமவேட் குயிர்போல் வாய்ந்த விரதியோ வென்று கண்டோர்
பூமிசை வியந்து பேசும் வடிவினள் புகழ்சே ரந்தச்
சேமவா குலக னீன்ற செல்வியோர் மாது மன்னோ. (8)

மேவுபொற் றனபா ரத்தான் மெல்லிடை துவண்டு சோரத்
தூவியம் பெடையன் னம்போ னடந்துநற் றாரீர் கைக்கொண்
டாவலுற் றங்கு வந்து தந்தையை யடிசி லுண்பான்
கூவினள் கண்டா னப்பூங் கொடிதனை மறையோ னம்மா. (9)

திருந்திழை தன்னைக் கண்ட செவ்வியிற் பசிதீர்ந் தாங்கே
பொருந்துறு கொடிய காமப் பசியதி கரித்துப் புந்தி
வருந்தினன்மறையோனந்தோவென்செய்வான்வனப்பின்மிக்க
வருந்திரு வனையார்க் காணில் யாவர்தா மயங்கா ரம்மா. (10)

பெருமய லுழந்து வாடும் பெட்புறு மறையோ னந்தத்
தருமவை சியனை நோக்கி யென்னிடர் தவிர்ப்பே னென்றாய்
பொருமதன்கணையாலுள்ளம்புழுங்குகின்றனன்யானின்னே
தருதிநின் மகளை யென்றான் சாற்றுவான் வசியன் மன்னோ. (11)

ஒப்பரு வஞ்ச நீங்கா வுளத்தொடு நீதா னென்பா
லிப்பொழு துரைத்த மாற்ற மிசைவுறு மாற்ற மன்றாற்
செப்பருங் கொடியோ யென்றன் றிருமனை விடுத்தே கென்று
வெப்புறு சிந்தை யோடு விழிசிவந் துரைத்தான் மாதோ. (12)

அக்கணம் வசியன் றன்னை யருமறை யவன்றா னோக்கி
யிக்கொடி தன்னை யாங்கேட் டதற்குநீ யிசைவி லாது
மிக்கவோர் கொடிய் மாற்றம் விளம்பினை யின்ன மொன்று
நிற்குறை செய்வேன் கேண்மோ வென்னவே நிகழ்த்து வானால்.

மாதவர்க் காவ தந்த மறையவர்க் காவ தேற்கு
மாதுலர்க் காவ தன்னோர் வேண்டிய தளிப்பே னென்றே

(10) செவ்வி-காலம். (11) பெட்பு-பெருமை. (13) நிற்கு-உனக்கு.

யோதிய பின்னர் வஞ்ச வுலோபத்தா லுதவி டாதோன்
பாதக பிரம கத்தி பண்[illegible]ளெ ளைவ னன்றே. (14)

எனக்குநீ யுரைத்த வண்ண மீகிலை மறுத்தி யென்னி
னுனக்குறு மதிக பாவ நரகிடை யுறுவா யென்று
சினத்தொட னுரைத்தான் பின்ன ரினியெவன் செய்து மென்று
நினைத்தன னிருந்தான் மிக்க நிதியுடை வசியன் மாதோ. (15)

சீலமார் வசிய னிவ்வா றிருக்குமச் செவ்வி தன்னிற்
காலமூன் றுணர்ந்த சிந்தைக் கண்ணுவ முனிவ னென்பா
னாலமுண் டருளு முக்க ணண்ணறன் னருளி னாலே
வாலறி வுடைய வந்த வசியன்மா மனையுற் றானால். (16)

மாதவன் வரவு நோக்கி வசியனு மெழுந்து சென்றே
யாதர வுடனே போற்றி யருக்கிய முதவிப் பின்ன
ரோதுநன் முகமன் யாவு முரைத்துள மகிழ்வுற் றென்பாற்
போதரச் சிறியே னென்ன புண்ணியம் புரியப் பெற்றேன். (17)

என்னவே யுரைத்திங் குற்ற வெழின்மறை யவனுக் கேதான்
சொன்னநன் மொழிகள் யாவுஞ் சொல்லருங் கபட மாக
மன்னுமா மறையோன் சொன்ன மாற்றமும் வழுத்தி யையய
நன்னெறியுணரும்வண்ணநவிலெனமுனிவன்சொல்வான். (18)

பண்டரு மறையோர் சிந்தைப் படிமணம வேந்தர் செய்த
துண்டள விலையீ வேண்வேண் டுவதென வுறுதி யாய்நீ
விண்டுரைத் ததனு லிந்த வேதியன் றனக்கு நீதான்
வண்டுறை குழலி னாளை வதுவைசெய் திடுதி யென்றான். (19)

அறநெறி வசியன் றன்னொ டிவ்வண மறைந்து நின்ற
மறையவன் றன்னை நோக்கி மாமுனி புகலு வானின்
றுறுப்சிக் கடிசில் வேண்டி யுரைத்தநீ வேறு மாற்றஞ்
சிறியர்போற் பகர்ந்தா யீது தீமைய தாகு மாதோ. (20)

வஞ்சனை யாகு மாற்றம் வழுத்துதன் மறையோய் வெய்ய
பஞ்சபா தகத்துக் கொப்பாப் பகர்ந்திடும் வேத மிந்த
விஞ்சிய பாவந் தன்னை விலக்கிட வேண்டி யுள்ளத்
தெஞ்சலி லன்பாற் கன்னிகை யாத்திரை செய்வா யென்றான். (21)

கண்ணுவ முனிவிவ் வாறு கழறியே யீந்த [illegible]
புண்ணிய தலமாங் காசி புரத்தினை யடைய வேண்டி
யெண்ணிய துணர்ந்தே யந்த வசியனுந் தன்மகளொ டுடைய்தாங்
தண்ணுறும் புனலாற் பாதம் விளக்கியே சாற்ற லுற்றான். (22)

ஞானமா முனிவ விந்த னன்மனை யவன்றன் னோடு
போனக மருந்திப் பின்னர்ப் போவென வினிது கூறித்
தானுக மகிழ்ந்து போற்றிச் சந்தமட் சதைநல் வாசத்
தூநறு மலர்கள் கொண்டு சோடச வுபசா ரத்தால். (23)

அரியநற் பூசை செய்தே யறுசுவை யுடனே யன்னம்
பரிவுட னளித்துப் பின்னர்ப் பன்முறை பணிந்தே யன்பு
புரிதலு முனிவன் றானப் புண்ணிய வசியன் றன்னை
யிருமையா மாசி கூறியேகின னினிது மன்னோ. (24)

இருமைசேர் வசியன் றானு மினத்தவர் தமைய ழைத்தே
யருமுறைக் குலதகோன் வஞ்சித் தறைந்தவாற் றினையு மிக்க
பரிவொடு முலக நீதி கண்ணுவன் பகர்ந்த வாறுந்
தெரிதர வவர்க்குச் சிந்தை விருப்புடன் செப்பி னானால். (25)

அன்னவர் கேட்டு நன்றென் றகத்திடை யுவகை பொங்கி
நன்னெறி யாகுமென்றே நவின்றனர் வசியன் றானு
மின்னனை யாளை யந்த வேதியன் றனக்கு வேத
மன்னிய விதியி னாலே வதுவைசெய் தளித்தா னன்றே. (26)

அருமறை யவனுங் கிட்டா வருநிதி கிடைத்த தென்னத்
தெரிவையை வதுவை செய்து சிந்தையிற் களிப் புற்றின்ப
மருவியே மூன்று நாட்டன் மனைவியோ டிருந்து வாய்மை
யுரைதவ் றினவ்த தோட மொழித்திட வுளத்தி லுன்னி. (27)

கண்ணுவ முனிவன் கூறும் விதியினைக் கருதி மிக்க
புண்ணிய தலமாங் காசி புகுந்துநற் கங்கை யாடி
வெண்ணிலாத் திகழும் வேணி விசுவநா யகனைப் போற்றும்
வண்ணமும் இயம்ப வேண்டி மாதுல னிடத்திற் புக்கான். (28)

மாதுலன் றன்னை நோக்கி மறைபுகல் வாய்மை தப்பித்
தீதுறு பாவ மாயச் சென்றுநற் கங்கை யாடிப

---

(23) போனகம்-அன்னம்.

பூதலத் துயர்ந்த காசி தன்னிலே மூன்று போது
நாதனைப் பூசித் தேத்தி நாவிலன் றீர்வ னென்றான்.  (29)

புகலுமவ் வுரையைக் கேட்டு வசியனும் புதல்வி தானு
மகிழ்வொடு வருத்த முற்று விடையது வழங்கப் பெற்று
நிகமனவ் விருப்பங் கூர்ந்து வேதியன் வேலை சூழ்ந்த
செகமிசை நிகரில் காசி தன்னையே நோக்கிச் சென்றான்.  (30)

விரைவுடன் சென்று கானில் வெயிலினால் வாடி யாங்கோர்
தருநிழல் வைகுங் காலை நாரத னென்னச் சாற்று
மொருதவ முனிவ னங்கே யுற்றன னவனைப் போற்றி
யருமறை யவன்றான் சொன்ன துற்றவா றனைத்து மன்னே.

நாரத முனிவன் கேட்டு நவிலுவா னுனது பாவந்
தீரவெண் டிடின்முன் னாளிந் திரன்முத லிமையோர் வந்து
போரவு ணரைத்தாம் வெல்வான் பூசனை யினிது செய்த
வோரருட் பதிதா னுண்டா லுபர்களா வனமென் றம்மா.  (32)

அந்நகர் தன்னி னியு மடைந்துநிட் சேப மென்னு
நன்னதி தோய்ந்து மூன்று காலமு நறுமபூங் கொன்றைப
பொன்னவிர் சடையி னானைப் பூசனை புரிதி யென்று
மன்னிய கருணை கூர்ந்து மனமுவந் துரைத்தான் மன்னோ.  (33)

நாரத முனிவன் கூறி நான்முக னுலகிற் புக்கான்
சீர்திகழ் மறைநூல் வல்லோன் சிந்தையின் மகிழ்ந்து போந்தே
யாரணி சடையோன் மேவு மாதிமா புரத்திற் சார்ந்து
நேரிலா வுயர்நிட் சேப நதிபெரு நீரின் மூழ்கி.  (34)

நான்மறை யவன்றான் மூன்று காலமு நயந்து செய்ப
தேனெய்பா றயிர்மற் றுள்ள திரவிய வகைக ளாலுங்
கான்மல ராலுந் தண்பூங் களாநறுங் கனியை முக்கண்
ஞானநா யகனை யண்டர் நாதனைப் பூசை செய்தான்.  (35)

இன்னணம் பூசை யாண்டொன் றியற்றிடு முனமே லோர்நா
ளன்னதி தன்னின் மூழ்கி நாதனைப் பூசித் தேத்தப்

(30) மகிழ்வொடு [illegible] யும்
பிரிதுபென்க. (34) [illegible].(35) [illegible]

பொன்னினை யெடுத்துப் போந்த போதிலா காய வாணி
யன்னவன் செவியிற் கேட்ப வவ்வயி னெழுந்த தன்றே. (36)

உனதுபா தகங்கள் யாவு மொழிந்தன வெடிய காலம்
புனையிழை யவடன் னோடும வாழுதி பதியிற் போந்தே
யெனவுரைத் திடலு மந்த வினியமா மறையோன் கேட்டு
மனமகிழ்ந் திறைவன் கோயின் மணித்திரு வாயில் புக்கான். (37)

சினகரந் தன்னிற் போந்தே சிவபெரு மானை முக்கட்
புனிதனைத் திகழும் வெள்ளிப் பொருப்புடை யனைமாற் கெட்டாத்
தனிமுழு முதலை வானோர் தலைவனை யன்பர்க் கென்று
மினியதெள் ளமுதைப் பூசித் திணையடி யிறைஞ்சி யேத்தி. (38)

கொடியவன் பாவம யாவு மொழித்தன மென்று கோயில்
படிபுகழ் கருவை முக்கட் பசுபதி கருணை கூர்ந்து
கடிநகர் தன்னி லேகு வாயெனக் கழறி [illegible]
லடியனேன் றனக்கு நீரும விடைகொடுத் தருளல் வேண்டும்.

என்றவ னுரைக்கத் தொண்ட ரிருமறை யவனை நோக்கி
நன்றுநின் பதியிற் செல்கு வாயென நவில வன்னோ
னொன்றிய மகிழ்வி னோடு முபயமா புரத்தி னீங்கித்
தன்றுணை யவடான் வைகும வளநகர் தன்னிற் சார்ந்தான். (40)

மனையவ டன்னைக் கூடி மருவியே யறிவின் மிக்க
தனையர்க டம்மைப் பெற்றுக் கிளைகளுந் தழைத்து நாளு
நனிபெருஞ் செல்வந் துய்த்து ஞாலமீ தெவரும போற்ற
வினிமைபெற் றிருந்தா னந்த வெழின்மறை யவன்ற னன்றே.

மெய்ப்புறு மகா மாதம் விளம்புசுக் கிரவா ரத்தி
லொப்பிலா தவனைப் பூசை புரிந்தவ ருலகந் தன்னிற்
செப்பரு நலமு மிக்க செல்வமும் பெற்றுப் பின்ன
ரப்புவே ணியன்ற னீழ லமர்ந்தினி திருப்பார் மாதோ. (42)

கலிவிருத்தம்.

ஏதமின் மருத்தி னிசைந்த சத்தமி
மேதகுஞ் சுக்கில பக்க முற்றனன்.

(36) இனி-மலர். (43) [illegible]-மாசி.

வேதமா முனிவர்கான் விளங்கு மற்புதம
தீதில்புண்ணியதீர்த்த மாகியே. (43)

தர்ப்பணஞ் செய்துபின் றான மன்புட
னற்புத மறையவர்க் களித்து மோரவை
நற்பெருங் குலத்தினர் நரகத் தெய்திலா
ருற்பவ மறச்சிவ னுலகின் மேவுவார். (44)

வைசியனை வஞ்சித்த மறையவன் பாவந்தீர்த்திச் சருக்கம் முற்றிற்று.

ஆக சருக்கம் 41-க்கு விருத்தம்-1321

---

முப்பத்தைந்தாவது

## சேரதுங்கர் தெரிசனம் பெறுசருக்கம்-

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிசடை மீது செம்பொன் மிளிர்தருங் கொன்றை வேய்ந்த
கரிசறு கருவை நாதன் கமலமா மலர்த்தாள் போற்றி
வரிசிலைக் கொடியு யர்த்தோன் வரதுங்க னென்னு மன்னர்
தெரிசனம் பெறுநற் காதை சிறப்பொடுஞ் செப்பு வேமால். (1)

வேறு.

நன்றிபெறு திருக்கருவைத் தலசரிதங் கருணையொடு
நவின்ற சூதன்
தன்றனைத்தா ளிறைஞ்சியருந் தவமுனிவர் முனிவிற்றந்த
சரிதங் கேட்டே
மொன்றுகலி யுகத்தினிடை யினிநிகழுஞ் சரிதமுநா
வா னெஞ்சின்
ன்றனிரும் பின்முறையே [illegible] ற்றைத்திட்டவி
(21) வழுத்து வாறுல. (2)

வேறு.

சாற்றரும் புகழ்படைத்த [illegible] தன்னி
வேற்றவோர் [illegible] பாற்

[illegible]
னாற்றிரு பத்தெனுந் தாண்டி லுவனுமோர் [illegible] (3)

அன்னவன் பெயரி ராச பூடண னவன்கா லத்தின்
பின்னனிர் பொன்று டொக்கும் வியன்மலை யாள் நாட்டின்
மன்னவ ரெவரும் போற்ற வந்தவ தரித்து வாழ்வா
னின்னறீ ரிராச வன்மா வெனுமொரு வேந்தன் மன்னோ. (4)

எகதுமா திரத்து மாணை செலவர சியற்றி யாங்கே
யாகதமன் னவன்றன் வாழு மேலவையி லன்னோன் றூய
சிந்தையி னிடையே தோன்றாத திருக்களா வுறையும் வெள்ளைச்
சுந்தரக் கனியைக் கண்டு துதிசெயுங் காதலம்மா. (5)

காதலங் கடலுண் மூழ்கிக் கங்குலும் பகலு மெங்கு
போதுமென் னுவனி ராச பூடண னெனப்போ வாய்ந்த
வேதின்மன் னனுக்குத் தோன்று தெவனைக்கருணை [illegible] நம்
மாதனிப் பொருளைக் கண்டு வணங்கியாம வருது மென்று. (6)

கலிப்பா.

புரைசெநெடுங் களிற்றரச னிளைவுணர்ந்து பூவிமுழுதும்
பரசமலர்க் களவுறைப்பும் பரம்பொருளி னவன்கனவி
லரசமணம் வெருவலில் னடைகவுணர் கெம்துதிருத்
தெரிசனநல் குதுமெனவே செப்பி[illegible] [illegible]. (7)

கடையேனுன் கடைத்தேறத் திருவுளத்திற் கருதிமழ
விடையேறு மெம்பெருமான் கருவைநகர் மேவுகளா
வுடையானே யிங்ஙனம்வந் துரைத்தனனென் கனவிலெனு
படைமாமன் னவன்வருவா னக்கருவைப பதிநோக்கி. (8)

வருவதுதன் திருவுளத்தி னிடை[illegible]
கருவைநகர் [illegible]
வெருவும்வகை திருக்களவி னிறற்பெருமான் வெஞ்சினங்க
ளொருவிறற்கண் [illegible] (9)

[illegible]
[illegible]

(7) புரை[illegible] (9) [illegible]-சிங்கம்.

யபபதிவாழ் புலிசெவர்க்குமலைக்கனுறுத் திடவமக்குச்
செப்புறுமப் பதிபுரக்குந் திறல்வேந்த னஃதுணர்ந்து

செவ்வியுங்கப் படையோடுஞ் செறிந்துபெரும்படையோடும
வெவ்வரியைப் பின்றொடர்ந்து வனநோக்கி விரைந்தேக
வல்வமயங் களவிச் னங்நகர்வேந் தெனவுருக்கொண்
டெவ்வமில்சே ரனையெதிருற் றினிதழைத்து வருகுவனால்.

கழைத்தனுவோன் றனுவெரித்த கண்ணுதல்வா னவனவனை
யழைத்தினிதுகொணர்ந்துமகிழ்ந்தவிரொளிப்பொற்பணிகாத்துட்
டழைத்தசுயம் பிலிங்கதெரி சனமபுரிவித் திடவாச
னுழைத்திருக்கைப்பாஞ்சுடரை யுளமுருகித்துதிபுரிவான். (12)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அணியார்பூங் களவினறுங் கனியே தேனே
யமுதேசு வேதநிறத் தப்ப னேமா
மணியேமா ணிக்கமே குணக்குன் றேயென்
வாழ்வேயம் பலத்தரசே யமரா யாரும்
பணியானந் தக்கடலே கண்ணே யென்கற்
பகமேயிப் பாவிகடைத் தேறும் வண்ணந்
தணியாவென் கனவிடைவந் தெனையாட் கொண்ட
தனிமுதலே யெனத்துதித்துச் செல்வான் பின்னா

[illegible]

கரபமெனக் கேசரியைத் தொடர்ந்து சென்று
தடங்கானம் புகுந்தக்கே சரியைக் கொன்று
நரபதியா யிபரச பூட னன்றன்
னகரமடைட குவன்பின்ரக் நகரத் துள்ளோர்
விரவுமனக் களிப்பொடுநம் வேந்தன் வஞ்சி
வேந்தன்வரவுணர்ந்தெதிர்சென் றழைத்துப்போந்து
பரவுமொளி திகழ்மணிப்பொற் கோயி லெய்திப்
பால்வண்ண லிங்கதெரி சனஞ்செய் வித்து. (14)

அன்பொடு[illegible]
காங்குரைக்க வுணர்ந்[illegible]ன் னதிச யங்கொல்
[illegible]
[illegible]

---

[illegible]

வின்புறவந் தவன்யாவ னினியெனை யுணர்கா.
விவ்விடையி னணிகழ்ந்த வெல்லைசேர்ந்தக்
தெனபயிலவண் டிமிருமலர்க் களவி சன்றன்
திருவிளையாட் டேயெனைசின் திப்பான் மன்றோ.

வந்துபுக விடுத்தனனிப் பெருமா னந்தோ
மறுபுலவேவர் தனைநமது வளமை தாரி
வினதநகர் தனிவினிநா மிருத்த னன்றன்
றெவ்வமயத் தாவதுநீங் கெய்து மென்று
கந்தமிகக் கமழுமலர்ச் சோலை சூழ்தென்
கருவைநகர் விடுத்திரத கசது ரங்கம்
வெநதிறல்கூர் பதாதிபுடை சூழச் சென்று
வியனமூதா சலத்தின்றென் பாங்க ரெய்தி. (16)

நன்னகர மியற்றியவ ணிருப்பா னந்நா
ணங்கருவைச் சுவேதவன நாதன் றானம்
மன்னவன்றன் கனவினிடை யெய்தி யஞ்சேல்
வாய்நதபொருந துணையாதும யாமோர் நாளு
மின்னலுறு துனக்கினிதுதென் கருவை மூதூ
ரிருநதரசு புரிநதிடுக வேந்தா வென்று
பன்னியதோர்ந் தவநதரசு புரிந்து வாழ்வான்
பாண்டியனத திருக்கருவைப் பதியில் வந்து. (17)

கரிவலயா நகரதனிற் செங்கோ லோச்சுங்
காவலனு மிராசபூ டணனுக காங்கே
பரியவரைப் புயவிம சேன னென்னும்
பாண்டியன்றோன் றவனவன்றன் மரபு தன்னி
லரியகலி யுகநால யிரத்து மூநநூற்
றைந்தாண்டில வீரபாண் டியனென் றோதுங்
குரிசிலொரு வனுக்குவா துங்க னென்னுங்
கொற்றவன்வந் துதித்தரசு புரிகு வானால். (18)

வாதுங்க பாண்டியமன் னவன்பன் னூறு
மாசறக்கற் றுணர்நதுலகம் புரக்கு நாளி

(15) தென்-இசை. (17) ஏந்தலென்னும்பெயர்-விரியுருபேற்ற
எந்தாலெனநின்றது-அரசனேயென்பது பொருள்.

லாவிநதப் பாசமைட்டியிற் கலந்த சீர்போ
லம்புவியின் மாற்பிடைப்பத் தனன்றோர் ஞானக்
குரவனதன னருள்பெடைத் துப் பாசம் ஞானந்
கூர்ந்ததருத் தினைகிக் கருவை மேவுஞ்
சரதங்கொள் களவீசன் றேன்றி யாங்குத்
தனையாட் கொண்டிடப்பெறுதற் றகைமைபூண்டு.

ஞானமரு வியகுரவன் றனக்கு மேன்மை
நண்ணுசிவா லயத்திற்கு நயந்துபொன்பூ
தானமியற் றிடவேசா சனம்வ ளாந்து
தன்னருமைப பத்தினிக்குத் தாவு செய்து
மோனமுறு மரியபெரு நிட்டை யெய்தி
முதற்பொருளாய்ச் சராசரங்கண் முழுது நலருந்
தேனமர்பூங் களாநிழற்பால வண்ண நாதன்
றிருவுருவத தோடுகலந திடுவான் மாதோ. (20)

அறுசீர் விருத்தம்.

அவ்வா றங்கண் சாயுச் சியபத மடைந்தபின்னர்
நவ்வியஞ் செங்கை யெம்மான் றிருக்களா வுடையநாத
னிவ்வுல கறியத் தான்போந் தியம்புமக் குரிசிற் கன்பாற்
செவ்விதிற் புரிந்த வானந் திபககடன் யாவு மன்றே. (21)

வேறு.

வியன்பெறுதற் றவமுடைய ரினியவருட் குரவனெனும்

எியம்பியவா றுமக்குரைத்தே னிக்கருவைத் தலசரித
முதனை யுன்பாற்
பயன்படத்தீட் டுரர்படிப்போர் கேட்போர்வையம்
பிறவி யெனுமப் பவவாரீந்தி
யயன்றிருமாற் கரியபிரா னிருக்குமெழிற் றிருக்கயிலை
[illegible]புகுவரால். (22)

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஏனமுனி வரர்க்கே [illegible]
[illegible] கேட்டுமா முனிவோர் [illegible]
[illegible] (21) [illegible] (21)
(22) [illegible]

கனமுறு கருவைத் தலமினி தடைந்து
கதிரொளி பரப்புநீள் செம்பொற்
கினகாம் புகுந்து களவின்வெண் கனியைத்
தேவியொப் பனையயர்ச் சித்து
மனமிகக் களித்து நைமிசா ரணியம்
புக்கனர் வாழ்ந்திருந் தனரால். (23)

அறுசீர்க்கழி நெடிலடியகவல் விருத்தம்.

பையரவ வேந்துமுடி யேந்துநெடும் புவிவாழி
பழுதில் லாமெய்ச்
செய்பசது மறைவாழி திகழ்தருமந் தணர்வாழி
செகத்தை யீன்ற
தையலெனு மதுலசவுந் தரிமருவுங் களவீசன்
சரிதந் தன்னை
வையமிசை விருப்பமொடு படிப்பவர்கேட் பவரெவரும்
வாழி மாதோ. (24)

சோவராதுங்கர் தெரிசனம் பெறு சருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் 40-க்கு விருத்தம்-1345.

திருக்கருவைத் தலபுராணம் முற்றிற்று.

திருக்களா வுடையான் றிருவடியே துணை.

## வரதுங்க பாண்டிய மகாராஜன சரித்திரம்.

# முகவுரை.

கடல் யுடை சூழ்ந்த காசினியின்கண் ணிருந்தவ மோருருவெடுத்தெனவிளங்கும் நைமிசாரணிய முனிவர்க்குச் சூதமுனிவன் கலியுகத் திங்ஙனிகழுமெனப் பௌடிக புராணத் தநாதிபுர மான்மியச் சங்கிதையிற் கூறியவாறு வரதுங்க பாண்டிய மகாராஜன் காலத்தில் நடந்த அவ்வரசன் சரித்திர மனைத்தையும் காட்சிப் பிரமாணத்தாலுணர்ந்த கெற்க கோத்திர விசுவநாத தீட்சிதர் வட மொழியிற் கூறினர். வடமொழியிற் கூறிய அச்சரித்திரம் வடமொழி யுணர்ந்தார்க்கன்றி யேனையோர்க்குப் பயன் படா திருத்தலால் ஏனையோர்க்கும் பயன்படுமாறு தமிழ்மொழியிற் கூறப் பட்டுளது.

### வரதுங்க பாண்டியன் றிருவவதாரம்.

சீருஞ் சிறப்பும் வாய்ந்த எந் நாட்டினு நன்னா டெனப் பொலிந் திலங்குஞ் செந்தமிழ்ப் பாண்டி நாட்டின் கண் இருபாநதி சேமநதி சிட்சேபநதி யெனத் தெய்வத் திரு நாமம் பெற்ற புண்ணிய நதிகளையுடையதும், அரிபிர மேந்திராதி தேவரும் காகபுசுண்டன் நாரதன் அகத்தியன் வசிட்டன் முதலிய முனிபுங்கவரும் பூசிக்கப் பட்டதும், பணிவரை பயந்த பசுங் கொடியைப் பாகத்தமைத்த சிவபெருமான் நித்திய ஆனந்த தாண்டவம்புரிய அம்பலமாகக் கொள்ளப்பட்டதும், பாண்டி நாட்டுப் பஞ்ச லிங்கக்ஷேத்திரங்களுள் தேயுலிங்க க்ஷேத்திரமும், அநாதிபுர மென்னுநாமமுதலிய பலதிருநாமங்களைப் பெற்றதும் ஆகிய மகாமகத்துவம் பொருந்திய நகரம் கருவைமா நகர மென்ப.

அக்கருவைமா நகரத்தை இராஜதானியாகக்கொண்டு செங்கோ ணடாத்தி இராச்சிய பரிபாலனஞ் செய்த ஆரியச் சக்கரவர்த்தியின் வம்மிச பாரம்பரையிலுதித்த அரசருள் வீரபராக்கிரமன் புத்திரன் வீர பாண்டிய னென்போன் மேற்கூறிய கருவைமா நகரத்தில் அரசாட்சி செய்து கொண்டிருந்த காலத்தில் அவ்வரசனுக்கு [illegible] புரிந்த அரும் பெருந் தவத்தால் இற்றை நாட்கு எழுநூற்றுப் பதினறுவருடங்களின் முன் கலியுக வருடம் நாலாயிரத்து முந்நூற்றைந்தில் அக

விருளகற்றும் ஞான சூரியராகிய இருபுதல்வ ரவதரித்தனர். அவதரித்த வஞ்ஞான்று பல நல் விழாக் கண்டு வேதியர்க்கு வேண்டுவன நல்கிச் சிவ கடாட்சத்தா லுதித்த அப்புத்திரர்களுக்கு வரதுங்கனென்றும் அதிவீரனென்றும் திருநாமஞ் சூட்டி அருமை பாராட்டி வளர்த்தனன். நாள்களேறவேற அவ்வப் பருவத்தே செய்ய வேண்டுஞ் சடங்குகளைக் குறைவின்றிச் செய்து அணிவிக்கவேண்டும பற்பல மணிப் பணிகளை யணி வித்தனன்.

பின் அவ்விரு குமாரரையும் நூல்கற்பிக்குந் திறத்தி லுயர்ந்த சகலகலைவல்லுநய ஓராசிரியனைக் கொண்டு கல்விகற்பித்துச் சகலகலை வல்லுன ராக்கி வைத்தனன்.

### அதிவீரனைச் சுவிகாரஞ் செய்தல்.

இங்ஙனம் நிகழு நாளில் தென்காசி நகரில் அரசாட்சிபுரிந்துகொண்டிருந்த காசிகண்ட பராக்கிரம பாண்டிய னென்னும் ஓரரசன் அவ் வீரபாண்டியனிடத்து வந்து தனக்குப் புத்திரப் பேறின்மையால் தனக்கு ஒருபுத்திரனைச் சுவிகாரஞ் செய்து கொடுக்கும்படி வேண்டிக் கொண்டமையால் தன்னிரு குமாரரில் இளையோனாகிய அதிவீர பாண்டியனைச் சுவிகாரஞ் செய்து கொடுத்தனன்.

பின்னர் வரதுங்கனென்பான் அடக்கம் அன்பு அறிவு அவாவறுத்தல் இரக்கம் இன்சொல் ஈகை ஒழுக்கம் சாந்தம் தவம நடுநிலைமை பத்தி வாய்மை முதலிய நற்குணங்கள் யாவும் தன்னுள்ளத்து வளரத் தான் வளர்தல் கண்ட தந்தையாகிய வீரபாண்டியன் தன்செல்வனான அவ்வரதுங்கனிடத்து இராச்சிய பாரத்தை யொப்புவித்துத் தவ வழி நின்றனன்.

### வரதுங்கன் அரசாட்சி.

பின்னர் வரதுங்க பாண்டியன் நீதிவழுவாது செங்கோல் நடத்தி வரு நாளில் அன்னோன் தந்தையாகிய வீரபாண்டியன் தூய சிந்தையனாய் இவ்வுலக வாழ்வைத் துறந்து சிவானந்த வாழ் வெய்தினான். தந்தை தேகவியோக மடைந்தபின் வரதுங்கன் தந்தைக்குச் செய்த ற்குரிய பிதிர்க் கிரியைகளைக் குறைவின்றி நடத்தி அரசு புரிந்திருந்தனன்.

## வரதுங்கன் திருமணம்.

அந்நாளில் காசிராஜ புத்திரியும அச்சுவினி நாளிற் செனித்தவளும்கற்பில் அருந்ததியையும் கல்வியில் நாமகளையும் பொறையில்பூமியையும் வனப்பில இந்திரையையும் நிகர்த்தவளும் ஆகிய சிவகாம சவுந்தரி யென்னும் ஓரங்கனையை மணப்பான் கருதி அக்காசிப் பதிக்கிறைவனிடத்துத் தன்னமைச்சரை விடுத்து மணம் பேசுவித்து அம் மங்கையைத் திருமண மியற்றி யவ்வங்கனை யுடன் கலநது சுகித்து வாழ்ந்திருந்தனன்.

அங்ஙனம் வாழு நாளில் பட்டமகிஷியாகிய சிவகாம சவுந்தரியிடத்துப் புத்திரப் பேறின்மையால் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" என ஆன் றோர்கூறிய வாறு மனை வாழ்க்கைக்குச சிறந்த மகப்பேறு பெறுவான் கருதிப் பரணிநாள் முதல் இரேவதி நாளீறாகிய நாள்களிற் செனித்த மாதரை மணநது வாச்சாயன தந்திரம் ரதிரகசியம் முதலிய காம நூலின்விதிப்படி கலவி செய்து சுகித்திருந்தனன்.

அந்நாளில் அவ்வரசன் கொக்கோக முனிவன் வடமொழியிற கூறிய காம நூலை யுணர்ந்து தமிழ் மொழியில் கொக்கோக மென்னு மொரு நூலியற்றினன்.

பின்னர் சிவகாம சவுந்தரி முதலிய இராஜ பத்தினிகளுள் ஒருவரிடத்திலும் புத்திரப் பேறின்மை கருதி அவ் வரதுங்கன் பலதான தருமம் ஸ்ரீ பால் வண்ணப் பெருமானுக்கு அபிடேக வலங்காரவுற்சவ முதலியனவும் நடத்தி அப் பெருமானை இரவும் பகலும் தொழுது துதித்திருநதனன். அங்ஙன மிருக்கு நாளில் அநாதிபுரேசனான சிவ பெருமான் அரசன் கனவிற் றோன்றித் திருவாய் மலர்ந்தருளும்.

அன்ப! நீ மகவின்மை கருதி மனதிற் கவலை கொள்ளேல். நின் அந்திய காலத்தில் யாமே நிற்குச் செய்ய வேண்டியதகன கிரியை முதலியன செய்து முத்தியுங் கொடுப்போ மெனத் திருவாய் மலர்ந்தருள அரசன் விழித்தெழுந்து நாயினுங் கடையனாகிய வென்னை வீட்டுறும் வண்ணம் எம்பெருமான் இங்ஙனம் எழுந்தருளினனென்று வென ஆடிப் பாடித் தொழுது துதித்திருந்தனன். அரசனுக்குப் பூர்வவாசனை யால் சிவஞான முதிர்ந்து உலகப் பற்றறுதியும் சிவபூசை விருப்பமும்

உண்டாகிச் சிவபூசை முதலியன ஆசாரியனாற் பெற்றாலன்றிப் பயனி ல்லையெனத் துணிந்து நாம் ஆசாரியனை யென்று காண்போமென இரவும் பகலும் சிந்தித்து ஏக்கமுற்றிருந்தனன்.

அரசன் சிவபூசை பெற்றது

சிறிது காலஞ் சென்ற பின்னர் காஞ்சி புரத்திற்குச் சமீபமான மாவண்டூரென்னு நகரில் கௌசிக கோத்திரத்திற் சனித்தோனும் வேதாந்த ஞானத்தை யடைந்த தூய சிந்தையானும் ஸ்ரீநிவாசா சாரிய னென்னுந் திருநாமம் பெற்றோனும் ஆகிய ஓர் மேலோன் பத் தினி சமேதனாய்க் கருவையம் பதிக்கெய்திச் சிவாலயத்துட் புகுந்து பால் வண்ணப் பெருமானைத் தெரிசிக்கும் போது சிவதெரிசனத்தி ற்கு அவண் வந்த அரசன் அப் பெரியோனைக் கண்டு சிவபெருமான ருளால்நமக்குக் கிடைத்த ஆசிரியன் இவனே யெனக் கருதிக் காந்தத் தைக்கண்ட இரும்பு போல் அவன்பால் மனஞ் சென்று அழுலிடைப் பட்ட மெழுகென மனமுருகி அவன அடிபணிந்து சுவாமி! அடியேன் கடைத்தேறும் வண்ணம் அடியேனை யாட்கொண்டு அனுக்கிரகிக்க வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்தனன். சற்குருவாய் வநத அவ் வேதியன் அரசனது மனநிலை யுணர்நது மகிழ்நது அவனை யழைத் துச் சென்று கிட்சேப நதியை யடைநது சைவ தீட்சா சங்கற்பஞ் சொல்லி ஸ்நானஞ் செய்வித்துத் திருநீறு உருத்திராக்கம் முதலியன அணிநது கொள்ளச் செய்வித்துச் சிவசந்நிதியில் அழைத்துப்போய் ஸ்ரீபஞ்சாக்கர வுபதேசஞ் செய்து ஆன்மார்தத சிவபூசையும் விதிப் படிசெய்து வைத்தனன். அரசன் அததேசிகோத்தமனுக்கு வசிக்கக் கிரகமும் அன்ன வஸ்திராதிகளும் மற்றும் வேண்டுவனவும் நல்கியுப சரித்துச் சிவபூசா துரந்தரனாக விளங்கினன்.

இங்ஙன மிருக்கு நாளில் சிந்து தேசத்துக் கதிபனும் விட்டூர னென்னும் பெயருடையோனும் பலாட்டியனும் தீரசாரனும் ஆகிய ஓர் மிலேச்ச அரசன் சதுரங்க சேனையுடன் அவ்வரதுங்கன் ஆட்சி புரியும் இராஜதானி யாகிய கருவைமா நகரத்தை முற்றுகை போ ட்டனன். அதனைத் தூதர் அரசனுக்குத் தெரிவித்தனர். அப்போது அயலிருந்த அமைச்சர் முதலோர் உணர்நது விட்டூரன் மகா பராக்கி ரம சாலியும் பண்டே பெருத்த குடையவனு மானவன். அன்னோன் இவ்வளவும் விரிந்த படையுடன் நமது நகரத்தை முற்றுகைபோட்டிரு

க்கும்போது அசாக்கிரதையா யிருப்பதுசரியன்றே. அவனுடன்போர் புரிந்து வெல்லவதும் அசாத்தியமே. அந்தோ! இனி யென்செய்தும் என்றுரைத்துத் திகைத் திருந்தனர். அரசன்விட்டூரனுடன்போர்செய்யச் செல்லுதற்கு மனமிலனாகி அமைச்சர் முதலிய சபையோரை நோக்கி "அஞ்சலென்ற காதலமுங் கணபணகங் கணமுமரைக்கிசைந்த புலியுடையு மமபுலிசசெஞ் சடையுங், கஞ்சமலர்ச் சேவடியுங் கனைகழலுஞ் சிலம்புங் கருணைபொழி திருமுகமுங் கண்களொரு மூன்று, நஞசமுண்ட மணிமிடறு முந்நாலு மார்பு நல்ந்திகழ்வெண் ணீற்றொளியு மறிமானு மழுவும்,பஞசடிச்சிற்றிடையுமையா ளொப்பனைபா கமுமாய்ப பால்வண்ண னுளத்திருக்கப் பயமுண்டோ வெமக்கே" என்ற செய்யுளைக் கூறி யெம்மை யாட்கொண் டருளிய திருக்களா வுடையான் எழுந்தருளி யிருக்கப் பெற்ற ஆலயத்துட் புகுந்து ஆலமுண்ட வருட் கடலே! திரிபுர மெரித்த தேவே! காமனைக் காய்ந்த கண்ணுதலே! மலைமகள பாகா! சந்திர சடாதரா! அரவாபரணா! புலியத ளுடுத்தபுண்ணியா! ஆனந்த வெள்ளமே! அடியவ ரிடர் தீர்க்கு மையனே! தீயசிந்தையுந் தீச்செயலு முடைய விட்டூரனால் அடியேன் இடருறாமல் திருவருள் புரிந்து இரட்சிக்க வேண்டு மென வணங்கினன்.

அங்ஙனம் வணங்கும அமையத்து அடியர்க் கெளிய னாகிய திருக்களா வுடையான் திருவருளால் ஓர் அசரீரி வாக்கு விண்ணி லெழுந்தது.

வாதுங்க! ஒன்றற்கும் அஞ்சேல், நின்பகைஞனாகிய விட்டூரனைத் தானே யோடுமபடி செய்வோ மென வுதித்த மொழியை யுணர்ந்து பேரானந்தப் பரவையுண் மூழ்கி ஆனந்தக் கண்ணீர் ததும்ப உரோமஞ் சிலிர்க்க அடியற்ற மாமபோற் கீழே விழுந்து வணங்கி ஆடிப் பாடித் துதித்துத் தன்னரண்மனை யடைந்தனன். அதன் பின் மூவா முதற் பொருளாகிய முகலிங்கப் பெருமான் அன்றொருநாள் சைவ சமையாசாரியரான திருஞான சம்பந்தப் பிள்ளை யாருக்கும் அடியார்க்கும் தீங்கிழைத்த சமணரினுடன்பாட்டுக்கிசைந்து நின்ற பாண்டியனுக்கு வெப்பு நோய் பற்றித் தகிக்கும்படி செய்தல் போல், தன்னையுமவனுடைய மந்திரிகளுக்கும் தீங்கிழைக்க நினைத்த விட்டூரனுக்கும் அவன் சேனைகட்கும் மெய்யில் அக்கினி பற்றித்தகி

க்கும்படி செய்தனர். அப்பொழுது விட்டுரனும் அவன்படைவீரரும் அவ்வனல் வெப்பைப் பொறுக்க மாட்டாமல் தந்தேயத்தைநோக்கி யோடிப் போயினர்.

அங்ஙனம் நிகழ்ந்தமை யுணர்ந்து வரதுங்கன் அன்பரிதயமே யிடமாகக்கொண்ட சுவேத வண்ணக்கடவுளின் சன்னிதியிற்சென்று அப்பெருமான் திருவுளப் பான்மையைக் கருதி வியந்து பூசாதிர வியங்களாற் பூசித்துத் தன்னரண்மனை சென்றனன். அவ் வரதுங்கன் உலகீன்ற மரகதக் கொடியாய அதுலாம்பிகையை யிடப்பாகத் தமைத்த திருக்களாவுடையானை நாடோறும் தெரிசித்துப் பத்திமேலீட்டால்திருக்கருவைக் கலித்துறையந்தாதி பதிற்றுப்பத்தந்தாதிவெண்பாவந்தாதி யென்னுந் தமிழ்ப்பா மாலைகளைச் சூட்டித் துதித்துக்கொண்டிருந்தனன்.

## வரதுங்கன் ஞானோபதேசம் பெற்றமை.

பின்னர் அவ் வரதுங்கன் அநித்தியமான இவ்வுலக வாழ்வைக் கான்றசோறென வெறுத்து ஞானமடைய வேண்டு மென்னும்அவா மீக்கூர்ந்து ஞானாசிரியன் தெரிசனம் என்று பெறுதுங்கொலென்று சிந்தித்திருக்கு நாளில் முனிவர் குலப் பெருமானென்னும் அகத்தியனோர்நாள் அநாதிபுரத் தெம்மானாகிய பால்வண்ணப் பெருமானைத் தெரிசிப்பா னெய்தினன்.

அம்முனிவன் வரவுகண்டு அரசன் எதிர்கொண்டு கைகட்டி வாய்புதைத்து வணக்கத்துடன் விண்ணப்பஞ் செய்வான். சுவாமி! அடியேன் உலகவாழ்வை மெய்யெனக்கருதி யிதுகாறும்உழன்றேன். இப்பொழுது அவ்வுலக வாழ்வை வெறுத்து நித்தியமாகிய மோக்கத்தையடையும் வழியைப்பெறுவான் விருப்ப முற்றவனாக இருக்கின்றேன். அடியேனுய்யும் வகைவிளக்கி யருளல் வேண்டுமென்று விண்ணப் பித்துக்கொண்டனன். அதுகேட்ட முனிவன் அரசன் மன்னிலை யறிந்து அரச! சின்னாள் கழிந்தபின் ஓர் ஞானாசிரியன் இப்பதியின்கண் வருவான். அன்னோனால் நினக்கு வேதாந்த ஞானம் உபதேசிக்கப்படுமென வுரைத்துச் சென்றனன்.

சிலகாலஞ் சென்ற பின்னர் மகாராட்டிர தேயத்திருந்து அடயோகம் கர்ம யோகம் ஞானயோகம் சாதித்த இந்திரிய நிக்கிரக தவசிரேட்டனும் பாலசன்னியாசியொருவன் அரசன் அவைக்களத்தெய்தினன். அம்முனிவன் வரவு கண்ணுற்ற அரசன் ஆதனம் விட்டெழுந்தெதிர் சென்றழைத்து வந்து ஓர் பொற் பீடத்திருத்திச் சோடசோபசாரங்கள் புரிந்து அப்பெரியோனை நோக்கி "தேவரீர் வசிக்குமிடம் யாது? நமது திருநாமம் யாது? இவண் வந்தகாரியம் யாது? உரைத்தருளல் வேண்டு" மென்றனன்.

அப்போது சன்னியாசி அரசனை நோக்கி வேந்தே! நமக்கு வசிக்குமிடம் இன்னவிடந்தா னென்பதில்லை. உலகோர் சௌமியானந்தனென நம்மையுரைப்பர். ஐயமெடுத்துப் புசிக்கும் நமக்கு நின்னிடத்து வேண்டுவ தொன்றும் இன்றெனப் புகன்றனன். அங்ஙனம் உரைத்தவைகேட்டு அரசன் தனக்குமுன்னம் முனிவர் பெருமானுரைத்த ஞானாசிரியன் இவனே யெனத்துணிந்து அத்தவசிரேட்டனை வணங்கி தான் அகத்தியமுனிவ னிடத்துத் தனக்கு ஞானோபதேசஞ் செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்ததும் அவனுரைத்ததும்மொழிந்து பிறவிப்பெருங்கடலுட்கிடந்து கரைகாணாது தியங்கும் அடியேனுக்குத் திண்பெரும் புணையொன்று கிடைத்தமை போல் தேவரீர் பொற்பாத தெரிசனங்கிடைத்தது. அடியேனுய்யும் படி ஞானோபதேசஞ் செய்யவேண்டு மென்று பிரார்த்தித்தான்.

அப்போது முனிவன் மனமகிழ்ந்து அவனது பரிபக்குவமுணர்ந்து அரசே! நீவிரும்பியவண்ணம் செய்குது மென அம்மன்னனுக்கு விஞ்ஞானதீட்சைசெய்து பாசத்தை யொழித்து ஸ்ரீமுத்தி பஞ்சாக்கரத்தையும் ஞானயோகத்தையும் உபதேசித்துத் திருவடிசூட்டி யருளினன். அவ்வுபதேசப் பொருளைக் கேட்டுச் சிந்தித்து நிட்டையிலமர்ந்து சிவானந்த மடைந்து இல்லற ஞானியாய் விளங்கினன்.

### வரதுங்க பாண்டியன் சோலை நகரடைந்தது

அங்ஙனம் விளங்கிய ராஜ ஞானி யான அவ் வரசனுக்கு இருவினை யொப்பு மல பரிபாக முற்றமையால் பரமபதி யாகிய சிவபெருமான் திரு வருளால் அக் கருவை யம்பதியின் ஐந்து கூப்பிடு தூரம் வரை யுள்ள இட மெங்கும் சிவ லிங்கங்க ளாகத் தோன்றக் கண்டு

அரசன் காலால் நடப்பதும் மல சலாதி கழிப்பதும் அபசார மாமெ
னக் கருதி அந் நகரில் வசித்தற்கு வெருவி அந் நகரத்திற்கு அரை
யோசனைத் *தூரத்தின் வட பா லிருக்குந் தேவி நதி யென்னும் பரா
சர நதியின் கரை யருகில் ஓர் நகர நிருமாணஞ் செய்து அந் நகரத்தி
ற்குச் சோலை நகரெனத் திருநாமமிட்டுத் தன் மனைவிய ரோடும் மந்திரி
பிரதானி முதலிய ராஜ காரியஸ்த ரோடும் இரத கச துரக பதாதிக
ளோடும் சுப முகூர்த்தத்தில் நகரப் பிரவேசஞ் செய்து அரண்மனை
புகுந்து சதா சிவ சிந்தனை யுடன் அரசாட்சி செய்திருந்தனன்.

### அதிவீர பாண்டியன் வரதுங்க பாண்டியனுக்கு நைடதம் அனுப்புதல்.

அந் நாளில் அவ் விறைவன் றம்பி யாகிய அதிவீர பாண்டியன்
வட மொழியி லிருந்த நளன் சரிதையைத் தமிழ் மொழியிற் காவிய
மாகச் செய்து அக் காவிய முறையைத் தன் தமைய னாகிய வரது
ங்க னுக்கு ஓர் தூதன் வசங் கொடுத் தனுப்பினான். அத் தூத னாற்
கொண்டு வந்து கொடுக்கப் பட்ட அக்காவியத்தைச் சிவ ஞான முதி
ர்ந்த வரதுங்கன் கண்ணுற்று அந்தோ! நம் அருமைத் தம்பி அதிவீ
ரன் கல்வியிற் சிறந்தோ னாக இருந்தும் "பொய்மை யாளரைப்
பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என நம்சைவ சம
யாசிரியரும் தம்பிரான் தோழரும் ஆகிய சுந்தரமூர்த்தி நாயனார் திரு
வாய் மலர்ந் தருளிய தையு மறந்து மின் போற் றோன்றி யழிந்த ஒ
ராசனைக் குறித்துப் புகழ்ந்து பாடி வாழ் நாளை வீணாளாக்கினனே
யென்று வருத்த முற்றுத் தான் கூறிய திருக் கருவைக் கலித்துறை
யந்தாதியி லுள்ள,

சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தானுவைவான், கங்
கைச் சடையனைப் பாடல்செய் யாத கவிப்புலவீ, ரங்கச் சுவை
கொண் டெழுநான்கு கோடி யருநரகப்,பங்கத்தில் வீழுவன் றேயொ
ன்று வார்தமைப் பாடுவதே" என்னும் ஓர் செய்யுளை வரைந்து தன்
அன்பிற் சிறந்த இளவ லாகிய அதிவீர னுக்குத் தூதன் வசங் கொடுத்
தனுப்பினான். தன் தமைய னான வரதுங்க பாண்டியன் கொடுத்
தனுப்பிய அக் கவியை அதிவீர பாண்டியன் பார்த்துக் கோபங்
கொண்டு இவ்வாறு சிந்திக்க லுற்றான்,

### அதிவீரன் வரதுங்கனைப் போர்க் கழைத்தல்.

நாம் வெகு நாளாய்ச் சிரமப் பட்டு அருமையாய்ப் பாடிய இவ் வரிய காவியத்தையும் நமது கல்வித் திறமையையும் மதியாது நமது தமையன் நம்மையும் நம்மா லியற்றிய காவியத்தை யும் இகழ்ந்தனன். இக் காவியத்தில் நாஸ்துதி யிருப்பினும் நாம் பாடிய கவிகளி னருமையும் பெருமையும் நோக்கி மிக வும் புகழல் வேண்டு மன்றோ? இதுவு மன்றி இக் காப்பியத் தலைவ னாகிய நளன் சாமானியனோ? சத்திய விரதம் பூண்டு நீதி வழுவாது மூ வுலகும் புகழு மாறு செங்கோ லோச்சிய சக்கராதிப னல்லனோ? இவ ற்றை யெல்லாம் யோசியாது பொறாமை மேலீட்டா லன்றோ? நம்மை இங்ஙனம் நிந்தித்தான். இத் துன்மார்க்கனை மூத்தோ னென்று முறைமை பாராட்டாது நமது சதுர்வித சேனையைக் கொண்டு போர் செய்து புய வலியைக் காட்டி அவனது செருக்கை யடக்கி அவனை அவமானப் படுத்த வேண்டு மெனக் கருதிப் போர்க் கோலம் பூண்டு யுத்த சன்னத்தனாய் நால்வகைப் படையுடன் புறப்பட்டுத் தமையன் அரசாட்சி செய்யும் இராஜ தானி யாகிய சோலை நகருக்கு ஐந்து கூப்பிடு தூரத்தின் தென் மேற்கில பாளைய மிறக்கி ஓர் தூதனை யழைத்து நம்மையும் நாம் பாடிய காவியத்தையும் இகழ்ந்த நம்முன் னோன் வரதுங்க னிடத்துச் சென்று நம்முடன் போர் புரிய வர வேண்டு மெனத் தெரிவித்து வா வென அனுப்பினான்.

அத் தூதன் சோலை மாநக ரெய்திச் சபா மண்டபத்தில் வீற்றி ருக்கும் வரதுங்கனை வணங்கி அரசே! நின் இளவ லாகிய அதிவீர பாண்டிய மகாராஜன் தன்னையும தான் செய்த காவியத்தையும் இக ழ்ந்த நின்னுடன் போர் புரியக் கருதி இந் நகர்ப் புறத்து வந்திருக் கின்றனன். அதி சீக்கிரம் யுத்தத்திற்கு அழைத்தன னென விண் ணப் பித்தனன். அது கேட்ட வரதுங்கன் புன்னகை புரிந்து நம் அநுசன் அதிவீரன் வருந்திச் செய்த காவியம நா ஸ்துதியா யிருக் கின்றதே. ஆத்ம லாபத்தைப்பாடிலனே. அந்தோ! வென்று அநுதா பப் பட்டு அவனது நன்மையைக் கருதி யுரைத்ததைத் தின்மை யாக நினைத்து நம்மோடு யுத்தஞ் செய்ய வந்தனன் போலும். "தாரம் வாய்த்தது வள்ளுவர்க்குத் தம்பி வாய்த்தது இராமனுக்கு" என்றது

போல எல்லாருக்கும உத்தம சகோதரர் வாய்ப்ப தரிது என்று நினைந்து தன் தமபி யதிவீரனுக்கு, வந்த தூதனிடம,

"செஞ்சுடரோன் மைந்தனையுந் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—மிஞ்சு
விரதந் தனைக்கொண்டு மெய்யன்பு பூண்ட
பரதனையும் ராமனையும் பார்"

என்றவெண்பா வொன்றை யோர் சீட்டில் வரைந்து கொடுத்தனுப்பினுன். அதனை அத்தூதன் பெற்றுக் கொண்டு போய் அதிவீரனிடங் கொடுத்தனன். அதிவீரன் சாந்த குணக் கடலாகிய தன் தமையன் வரைந்தனுப்பிய கவியைக் கண்ணுற்று உள்ள நெக்குருகி அந்தோ! என்னருமைப் பிதாவுக் கொப்பாகிய எனது தமையன் எனக்குப் போதித்த நற்புத்தியைத் துர்ப்புத்தியாக நினைந்து ஒருவன் தன் கையைக்கொண்டு தன் கண்ணைக் குத்தியது போல் என் தமையனோடு போர் புரிதற் கெழுந்து வந்தேனே ஆ! ஆ! சகோதர துரோகியானேனே. கொடும் பாவி யாகிய யான் எனதுதமையன் சன்னிதானத்தில் எங்ஙனஞ் செல்வே னென்று துய ருற்றுச் சகல சாஸ்திரமுங் கற்றுணர்ந்த வேதியர்களை யழைத்து அன்னாரிடத்துத் தனக்குற்ற பாவத்தைப் புகன்று இத்தோட நீங்குதற் கியைந்த பரிகாரம் உணர்த்தல் வேண்டு மென வேண்டினன்.

**அதிவீரன் யுத்தம் புரிதற்கு வந்த பாவந் தீரப் புண்ணியம் புரிதல்.**

அம் மறையோர் சாஸ்திர ஆராய்ச்சி செய்து வேந்தே! நின் தமையனுடன் போர் புரியப் புறப்பட்டு வந்த பாவந் தீர வேண்டின் சிவலிங்கப் பிரதிட்டையும் அந்தணர்க்குக் கிரகப் பிரதிட்டையும் பூதானமும் புரிந்து அநாதி புரேசனை பால் வண்ணக் கடவுளைத் தெரிசித்து நின் முன்னோனையும் வணங்க வேண்டு மென உரைத்தனர். அன்னோ ருரைத்தவாறே அவ் வேந்தன் தனா மிறங்கிய அவ்விடத்து ஓர் நகர நிருமாணஞ் செய்து சிவலாயமும் வேதியர்க்குச் சாலையும் பூ தானமுஞ் செய்து சிவ லிங்கப் பிரதிட்டையுஞ் செய்து பனை விருக்கங்க ளாற் சூழப் பட்ட அந் நகர்க்குத் தாலநக ரெனவும் பனையூரெனவும் திருநாம மிட்டு அந் நகரத்தில் அநேக வேதியரை யிருத்தி அன்னோர்க்கு வேண்டுவன வளித்து,

பின் அத் தால நகர்க்குக் கீழ் பாலுள்ள கருவை யம்பதி யடை
ந்து மூவுல கீன்ற முதல்வி யாகிய அதுல சௌந்தரி யோடு திருக்
களா நிழ லமர்ந்த சுவேத நாதனைத் தெரிசித்து ஆனந்த மே லீட்
டால் துதித்து அத் திருப் பதியி னின்று மீண்டு அப் பதியின் வட
க்கின் கண் உள்ள தன் தமையன் அரசாட்சி புரியும் இராஜ தானி
யாகிய சோலை நக ரடைந்து அரண்மனை புகுந்து அருளே திரு வுரு
வாய் வந்த தவ ராஜ சிங்க மாகிய வரதுங்களைக் கண் குளிரக் கண்டு
சிர மேற் கரங் குவித்து அடி யற்ற மரம் போற் பார்மேல் வீழ்ந்து
பணிந்தெழுந்து புகல்வான்;

என தன்பிற் சிறந்த பெரியோய்! பேதையேன் அறியாமையால்
பிரபஞ்ச மாயையிற் கட்டுண்டு நர ஸ்துதி செய்து பாவத்துக் காளா
வதைக் கண்ணுற்று சிவ காருண்ணியத்தால் எளியேன் கெடா வண்
ணம் போதித்த புத்தியைச் சிறிது முணராது நினக்குத் தீங் கிழை
க்க நேர்ந்த சிறியேன் பிழை பொறுத்தருளி யடியே னுய்யும் வண்
ணம் திரு வருள் புரிய வேண்டு மென்று வேண்டினன்.

அதிவீர னுரைத்த அனைத்துங் கேட்ட வரதுங்கன் அருமைத்
தம்பியை மார்புறத் தழுவி எனது ஆருயிர்த் தம்பியே! நீ செய்த குற்
றத்தைப் பொறுத்தனன். நீ செய்த நர ஸ்துதியாலுண் டாகிய பாவ
நீங்கு மாறு வட மொழியி லிருக்கும் காசித் தல மான்மியத்தைத்
தென் மொழியிற் புராண மாகப் பாடுகவெனத் திரு வாய் மலர்ந்தரு
ளினன்.

அதிவீரன் காசிக்குப் போதல்.

அதிவீரன் தன் னமைச்ச ரிடத்து இராச்சியத்தை யொப்புவி
த்து தன் அரும் பெறற் றமையனைப் பணிந்து விடை பெற்று இராஜ
வேடத்தை மாற்றித் தவ வேடம் பூண்டு புறப்பட்டுச் சென்று
காசித் தலம் புகுந்து தன்னை யடைந்தோர் பவத்தை யகற்றுங் கங்
கையிற் படிந்து தூய சிந்தைய னாகிப் பரம தயாநிதி யாகிய விசுவ
நாதனைத் தெரிசித்து வணங்கித் துதித்து அவ னருளாற் காசித் தல
மான்மியத்தைத் தமிழ் மொழியிற் பாடி அக் காசிப் பதியில் அதிவீ
ரன் வசித் திருந்தனன்.

## வரதுங்கன் மோக்க மடைந்தது.

அதிவீரன் அங்ஙன மிருக்கு நாளில் சோலை நகரத்தில் அரசாட்சி செய்து கொண்டிருந்த வரதுங்கன் சிவ ஞான முதிர்ச்சி யடைந்த அதி தீவிர பக்குவ முணர்ந்து அன்னோற் கருள் செயக் கருதி மூவா முதற் பொரு ளாகிய முகலிங்கப் பெருமான் ஓர் நா ளிரவில் அவ் வரசன் கனவிற் றோன்றி வேதங்கமழுந் திருவா யான் இதனையுரைப் பான்.

எம தன்ப! வரதுங்க! நீ விரும்பிய வண்ணம் நமது சோதியுடன் கலந்து கொள்ளுங் காலங் கிட்டியது. இப் பாவக் கலியுகத்தில் இனி யுன் போன்ற உத்தமர் பாரில் வசிப்பது குற்ற மாம். பேய்த்தேர்க் கொப்பான நினது இராசியத்தையுஞ் செல்வங்க ளனைத்தையும் தயாள சிந்தையுடன் தேவாலயங்கட்கும் வேதியர்க்கும் கொடுத்து இவ் விருத்தியை விடுத்து அகக் கண்ணால் எம்மைப் பார்த்து நம் பாத நீழலை யடைந்து நந் திரு வஞ் செழுத்தைத் தியானித்து நிட் டையி லிருந்து முத்தியை யடைதி யென வறைந்து மறைந்தனன். அரசன் நித்திரை தெளிந் தெழுந்து சிவ பெருமான் கனவி லெழுந் தருளினதை நினைந்து நினைந்து நாயினுங் கடையனாகிய என்னையு மோர் பொரு ளாகக் கொண்டு திரு வருள் புரிவா னெழுந் தருளினனே! எம் பெருமானுக்குக் கைம்மாறு யாது செய்ய வல்லே னென அப் பெருமான் திரு வருளை வியந்து ஆனந்த சாகரத்துண் மூழ்கி யிருந்தனன்.

பின்னர் வைகறை யெழுந்து காலைக்கடன்முடித்துச் சபா மண் டப மெய்தி யிறைவன் அஞ் செழுத்தை யிதயத் திருத்திச் சபைக் கண் ணுள்ள அமைச்சர் வேத வேதியர் முத லானோரை நோக்கி யிதனை விளம்புவான்.

ஓ சபையோர்களே! யான் றமக் கிப்போது சொல்லத் தொடங்கு மிற்றைப் பொழுது நுமது மனத்தை மிகவும் வருத்த முறச் செய்யுமாயி னும் என்னுடைய ஆத்ம லாபத்தைக் குறித்ததாயிருத்தலால் மகிழ்ந்து கேட் பீராக. இப் போது இவ் வுலக வாழ்வைத் துறந்து தூய சிந்தை

யுடன் உண்மைஞானத்தைக் கடைப் பிடித்து முத்தியை யடைதி யென எனக்குச் சிவ கட்டளை பிறந்திருக்கிறது. யான் இனி ஐயன் கட்டளைக்குப் பின் வாங்குதல் கூடாது. எனது மனதுக் கினிய அன்பிற் சிறந்த நும்மை விட்டுப் பிரிந்து செல்லுங் காலம் சமீபித்து விட்டது. ஆதலால் எனது இராச்சியங்களையுந் திரவியங்களையும் பிராமணர்க்கும் தேவாலயங்கட்கும் தானஞ் செய்ய நிச்சயித் திருக்கின்றேன் என்று மொழிந்தனன். அதுகேட்ட சபையோர் மனக் கலக்க முற்று அரசனை நோக்கி வேந்தே! நின் வார்த்தை யானது எமக்கு மிக்க துக்கத்தைக் கொடுக்கிறது. எல்லாப் பிரஜைகளையும் அன்புடன் தாய் போலப் பரிபாலித்துக் கொண்டிருந்த நின்னைப் பிரிந்து வாழ்ந்திருக்க எமது மனம் பரிதபிக்கின்றது. இவ் விராச்சியத்தையும் தானஞ் செய்து விட்டால் மாலுமி யில்லா நாவாய் போன்று நாடு துயருறும். ஆதலால் அறிவிற் சிறந்த அரசே! நினது பட்ட மகிஷி யான சிவ காம சவுந்தரி யென்னும் அரசி யிடத்து இவ் விராச்சியத்தை யொப்புவித்து அரசு புரிந்தருளும படி ஆக்கியாபித்து நின் கருத்தின் படி அவ்வரசி சரீ ராந்தியத்தில் இவ் விராசசியத்தைத் தேவாலயங்கட்கும் அந்தணர்கட்கும் தானஞ் செய்யும படி சாசன மெழுதிக் கொடுத்தருள்வது நன்மையா யிருக்கு மென்று வேண்டிக் கொண்டனர்.

அப் போது அரசன் அவையோர்களின் கருத்திற் கிசைந்து ஆண்டு மன்னன் பணிக் கெதிர் பார்தது நிற்கும் காரியஸ்தர்களால் தான சாசனத்திற் குரிய தாமபிர பட்டயந் தருவித்து அப்பட்டயத்தில் தன் னிராசசியததி லுள்ள நதிப பாசன முள்ள வயல்களும் மழையினால் விளைகின்ற பூமிகளும் சோலைகளும் மலைகளும் காடுகளும் அரண்மனைகளும பொக்கிஷங்களி லுள்ள திரவியக்குவையும் ஆபரணாதிகளும் வாகனங்களும் மற்றுமுள்ள யாவும் ஆலயங்கட்கும் மறையோர்க்கும்தர்ம சாசனமாக எழுதி வைத்துத் தன் அன்பிற் சிறந்த பட்ட மகிஷியான சிவ காம சௌந்தரியை யழைதது இதனை யுரைப்பான்:

என் னுயிரினுஞ் சிறந்த அருமைக் காதலியே! இப பொழுது எனக்கு அநித்திய மான இவ் வுலக வாழ்வைத் துறந்து தவ நெறி மேற்கொண்டு முத்தி யடைதி யென என்னை யாட் கொண்ட அருட் பெருங் கட லாகிய திருக் களா வுடையான் கட்டளை பிறந்திருக்கின்றது. ஒருவன் இல்லறத்தை நடத்துதற்கும் மோக்ஷத்தை யடைத

ற்கும் அவனுக்குத் துணை அவனது மனைக் கிழத்தியே ஆதலால் சிவ
பிரான் கட்டளை யிட் டருளிய படி யான் தவ நெறி யடைதற்கு மன
தியைந்து இவ் விராசசிய பாரத்தை யேற்றுக் கொண்டு என்னால்தயா
ரித் திருக்கிற இந்தத் தான சாசனப் பட்டயத்திற் கூறி யுள்ளசொத்
துகளை உன் சீ ராந்திய காலத்தில் தே வாலயங்கட்கும் வேதியர்க்
கும் தானஞ் செய்தற்கு உனக்கு அதிகாரங் கொடுத் திருக்கிறேன்.
இவ் விராச்சியத்தை நீயே கைக் கொண்டு அரசு செலுத்தி வருவா
யாக வென ஆக்கியாபித்தான்

அது கேட்ட பட்ட மகிஷி அனலிற் பட்ட புழுப் போன்று
மனம் பதைக்கக் கண்ணீர் ததும்ப வாய் குழற மதி மயங்கிச் சிறிது
நேரஞ் சென்று மனந் தேறித் தன் பதியை வணங்கி என்
னுருயிர்த் துணைவ நின்னை மணஞ் செய்த நாள் முதல்
இற்றை நாள் வரையும் "குல மகட்குத் தெய்வங் கொழுநனே
"யென ஆன்றோர் கூறியபடி நின்னையே தெய்வ மாகக் கொ
ண்டு நின் சுக துக்கங்களை யென் சுக துக்கங்க ளாகக்கருதி
உட லுயிர் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் அடியேனை உட்லி
னின் றுயிரைப் பிரிப்பது போல் நின்னின் வேறுகப் பிரித்துப் பேசு
வது தருமங் கொல்லோ? இப் பொழுது கூறிய வார்த்தை யேழை
யைப் பரிசோதனை செய்தல் போன்றுளது. அடியேன் தவநெறி நிற்க
விரும்பு நின்னை யகலாது நிழல் போற் றொடர்ந்து நினக்கு வேண்டும்
பணிவிடை செய்து கொண் டிருக்கும் படி திரு வருள் புரிய வேண்டு
மென வுரைத்தனள்.

அங்ஙன முரைத்த மாதர்க் கரசியை நோக்கி அரசன் பாவாய்! ஓ
ரூர்க்கு நேர் வழிச் செல்வானை யிடையில் வந்து கள்வர் வழி மறித்
தல் போல் சிவபிரான் திரு வரு ளாணையின் வழியே நிற்கு மென்
னிடத்து உலக மார்க்கத்தை யெடுத்துப் பேசுகின்றனை. இஃது
பொருந்திய தன்று. கற்புடை மகளி ரியற்கை தங் கொழுநர் சொற்
கடவாது நடத்த லன்றோ? ஆதலால் யான் கூறிய வாறு இராச்சியத்
தைக் கைக் கொண்டு நின் அந்திய காலத்தில் தான சாசனப் பட்ட
யத்திற் கூறிய படி தானஞ் செய்க வெனப் பணித்துத் தன் செங்
கோல் முத்திரையையும் தான சாசனப் பட்டயத்தையும் அப்பெண்
மணியிடங் கொடுத்தனன். தன் கணவ னுரையை மறுத்தற் கஞ்சி
யொப்புக் கொண்டு சிவ காம சவுந்தரி யரசு புரிந்திருந்தனள். ஓர்

நாளில் சிவானந்த நிட்டை புரிந்து கொண்டிருக்கும் முற்றத் துறந்த முனிவனான வரதுங்கன் தன் நண்பர்களையும் தனது அருமைத்தேவி யாகிய சிவ காம சௌந்தரியையும் கடைக்கணித்து அழைத்து அன் பர்காள் யான் சிவ பிரான் திரு வருணோக்கத்திற்கு உணவாக முழு தும் விழுங்கப் பட்டேன். இத் தினம், பிரணவ தேகி யாய் முத்தி நிலையிற் பரிபூரண மடையப் போகின்றேன் என்று திருவாய் மலர்ந் தருளினன்.

அரசன்சோதியிற் கலந்தது.

"ஆக்கையெனும் புழுக்குரம்பை யணைந்தணையாப் பொருளை
யருளொளியைப் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமற மயிர்முனைக்கு மிடமறவெங் கெங்கு
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்த தவக்குறைகண் முடிக்கும்
பழவடியார் தமக்குதவு பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்குமன விகற்பததா லளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம்"

என்னு மோர் கவியும் பகர்ந்து தத்துவ முழுதும் இச்சை வழி யே பணி கேட்கப் பிரணவமே திருவுரு வாகச் சகச வருள் பிறக்கத் தனது ஆத்மார்த்த சற்குருவைச் சிந்தித்துச் சமாதியில் அசைவற நின்றனன். அவ் வமையம் பிரம ரந்திரத்தி னின்று கபாலத்தைப் பேதித்துக் கொண்டு கோடி சூரியப் பிரகாசம்போல் ஓர் மகா சோதி கிளம்பி ஆகாயத்தில் மறைந்தது.

அவ் வற்புதத்தைக் கண்ட தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். தேவ துந்துமி முழங்கின. அரசன் பக்கல் நின்ற ஆசாரியர் அமை ச்சர் இராஜ பத்தினிகள் முத லாகிய அனைவரும் அச் சோதியைத் தெரிசித்துக் கண்கள் தெளிந் தெழுந்து அரசன் சுயம் பிரகாச தேஜோமயத் துடன் கலந்து பரிபூரண மடைந்ததை நினைந்து நினை ந்து வியந்து ஆனந்த பரவசராய் ஆடிப் பாடித் துதித்து வணங்கி யிரு ந்தனர். அவ் வரதுங்கன் தேக வியோக மடைந்த காலம் இன்ன காலமென்பதைப் பின் வருஞ் செய்யுளிற் காண்க.

### விருத்தம்.

இறுதியிலாப் புகழ் பரவுக் கலியுகவாண் டொருநாலாயிரத்துநானூற்
றறுபதுவி காரியாம் வருடமார் கழிமாத மபர பக்க
மறுவில்சதுர்த் தசியெனுநா ளிற்கருணை யமபதிப்பால் வண்ண நாத
னறுமலர்த்தாட் கன்புடையோன் வரதுங்கன் பரமபத நண்ணினனே.

### சிவ பிரான் அரசன் வடிவெய்தல்.

இஃது இங்ஙனம் நிகழ எல்லாம் வல்ல இறைவனும் பால்வண்ணப் பெருமான் தனது பரம பக்தனான வரதுங்கன் பக்தியையுலகோரறியும் வண்ணம திருவுளங் கொண்டு தன் கணத்தலைவனான நந்தியை யழைத்து நந்தியே நம் மடியனும வரதுங்கன் உலக வாழ்வைத் துறந்து சரீரத் தியாகஞ் செய்து தேஜோமயனாய் நமது சோதியிற் கலந்து விட்டமையால் அவனது பெருமையை யுலகோர்க் கறிவிப்பான் கருதினேம் ஆதலால் நமது கணங்களை யவ்வரசனது பரிவாரங்களாகவும் நமது இடபத்தை அவனது பரி யாகவும் கொண்டுநீ அசசேனை கட்குத் தலைவனாக வருக வெனத் திரு வாய் மலர்ந்தருளினன்.

எம் பெருமான் திரு வாக்கிற் பிறந்த கட்டளையைச் சிர மேற்கொண்டு நந்தி யெம பெருமான் சிவ கணங்களை வரதுங்கன் பரிவாரங்க ளாகவும் இடபத்தை யச்சுவ மாகவுங் கொண்டுதான் அப் பரிவாரங்கட்குத் தலைவனாக வந்தனன். அங்ஙனம் வந்த பின்னர் அடியர்க கெளிய னாகிய திருக் களா வுடையான் தன் பக்தனான வரதுங்கனது திரு வுருவங் கொள்ளத் திரு வுளங் கொண்டு கங்கையு மிளம் பிறையுந் தங்கிய சடா மகுடத்தை மறைத்து ரத்தின கிரீடந் தரித்து சர்ப் பாபரணத்தைத் தவிர்த்து மகர குண்டல ஆர கேயூர கடக கங்கண முதலிய ராஜ பூடணங்க ளணிந்து யானைப் போர்வை கரந்து பீதாம்பரந் தரித்து அவ் வரதுங்கனது வடிவம் போலத் திரு வுருக் கொண்டு விடை யென்னும் பரிமேல் ஆரோகணஞ் செய்து தன் கணங்க ளென்னும ராஜ பரிவாரங்க ளுடன் சேரலை நகரி லிருந்து வரதுங்க பாண்டியன் சுவாமி தெரிசனஞ் செய்ய வருவது போல் கருவை மா நகரத்தினு ளெய்தித் திருக் கோயிலின் முன் சென்று பரிவிட்டிறங்கித் தன் பரிவாரங்களும் நகர்ச் சனங்களும் புடை சூழத் திருக் கோயிலுட் பிரவேசித்து மகா லிங்க மிருக்கிற கர்ப்பக் கிரகத்தினுட்

புகுந்து அநேக கோடி சூரி யோர்தயம் போன்ற் ஓர் பெருஞ் சோதி தோற்றுவித்து அச் சுயம் பிரகாச லிங்கத்தினுள் திரு வுருக் கரந் தனன.

அப்பொழுது இராஜ பரிவாரங்களாய் வந்த சிவகணங்களும் மறை ந்தன. அது கண்ட நகர்ச் சனங்கள் கோயில் அர்ச்சகர் முதலான யாவரும் அச் சோதியைக் கண்டு கண் மழுங்கி மதிமயங்கித் திகை த்து நின்று பார்க்கும போது அரசனையும் அரச னுடன் வந்த பரிவா ரங்களையும் காணுமல் ஆச்சரிய மடைந்து திரு வுளப்பான்மையை வியந்து அரசன் சிவ லிங்கத்துடன் ஐக்கிய மாகினு னென்று புகழ்ந்து தந்தம் மனைக் கேகினர்.

அர்த்த யாம பூசை முடித்துத் திருக் கதவந் தாளிட்டு அர்ச்ச கர் முதலியோர் தங்கள் கிரகஞ் சென்றனர்.

அன் றிரவு போய் அதிகாலையி லெழுந்து நதியில் ஸ்நானஞ் செய்து அர்ச்சகர் முதலிய பூசா கயிங்கரியக்காரர் சிவாலய மடைந்து திருக்கதவந் திறக்க முயன்ற போது திறக்கக் கூடாமலிருந்தமையால் அனைவருந் திகைத்து நின்றனர். அவ வமையத்து திருக்கோயிலுள் ளிருந்து ஓர் அசரீரி வாக் கெழுந்தது.

பத்தர்காள்! நமது அன்பன் வரகுணன் நிட்டையி லிருந்து தேஜோமய மான நம்முடன் கலநது விட்டமையால் அவ் வன்பனுக் காக இது முதல் மூன்று நாள் வரை நாம் பிரேதாசௌச மடைந்திரு க்கின்றோம் ஆதலால் மூன்று நாள் வரையும் நம்மை யாராதிக்கக் கூடா தென வெழுந்தது. அத்தேவவாக்கைக் கேட்டு அர்ச்சகர் முத லோரான சகலரும் திரு வருளை வியந்து புகழ்ந்து பாடித் துதித்துக் கொண்டு சோலை நகரில் அரசனுக்கு நிகழ்ந்த காரி யம் அறியும் பொருட்டுக் கருவை மா நக ருள்ள சகல பிரஜைக ளோடும் புறப்பட்டுச் சென்று அரண்மனை யெய்தி அவண் நிகழ்ந்த யாவும் இராஜ காரிய ஸ்தரா லறிந்து கொண்டு கருவை மா நகரின் கண் களா நிழ லமர்ந்த கருணை யங் கட லாகிய முகலிங்கப் பெருமா னுடன் திரு வுருக் கரந்ததும் மூன்று நாள் வரையும் அபிஷேக நிவே

தனம் அடாதென அருண் மொழி யாம் அசரீரி வாக்குப் பிறந்ததும் அவ் விராஜ காரியஸ்தர் முதலோர்க் குரைத்துத் திரு வுளை வியந்து கொண்டாடினர்.

அதன் பின் ஆசிரியன் அமைச்சர் முதலிய பெரியோர் ஒருங்கு கூடி அரசனுக்குச் செய்ய வேண்டிய கிரியை செய்தற் குரியோர் இராஜபத்தினிக ளொழிய வேறு யாரிருக்கின்றன ரென்று ஆலோசனை செய்து பட்ட மகிஷி யான சிவ காம சௌந்தரி யிடஞ் சென்று சொல்ல அம் மாதரசி மனங் கொதித்து என தாருயிர்த் துணைவனை யிழந்து இவ் வுடலைச் சுமந்து சஞ்சார பிரேதம் போலத் திரியேன். என் மனதிற் கினிய அரச னுடன் யானும் அனுமரண மடைய ஈசுர சாட்சியாகச சித்தமா யிருக்கிறேன் என்று புகன்றனள். ஏனைய ராஜ பத்தினிகளும் அவ்வாறேகூறினர்.

அது கேட்ட ஆசிரியன் முதலிய சகலருங் கவலை யுற்று இராஜ வம்மிசத்தில் ஒருவரு மில்லை. நம் மரசனுக் கிளையோன் காசி நகரஞ் சென்றுளான். சத்திரியர்க்குப் பிராமண ராவது வைசியர் முதலோ ராவது ஈமக் கட னியற்றுதல் முறை யன்று. அரசனுக்கு வைதிக கிரமப் படி யக்கியக் கிரியை யெவ்வாறு செய்கிற தென்று திகைத்துக் கொண்டிருந்தனர்.

சிவ பெருமான் சத்திரியப் பிரம சாரியாய் வந்தது.

அவ் வமையத் தன்னோர் மனக் கிலேசத்தை மாற்றவும் அவ் வரதுங்கனது பத்தி மேலீட்டை யுலகினர்க்கு வெளிப்படுத்தவுங் கருதி அடியார்க் கெளிய னான திருக்களா நாயகன் நரை திரை முதிர்ந்த ஓர் கிழப் பிரமசாரியாய்க் கங்கா தீர்த்தக் காவடியைத் தன் திருத்தோளி லேந்தி அவண் வந்து காவடியைக் கீழேயிறக்கி வைத்து விட்டுக் கன் றிழந்த தாய்போல் அரசன் சரீரத்தின் மேல் வீழ்ந்து மங்கள கரமான திருவாயால் கோவென் றலறி யழுதான்.

அது கண்ட இராஜ பத்தினிகளும் ஏனை யோரும் இவ்வயோதிகர் அரசன் சரீரத்தின் மேல் வீழ்ந்து புலம்பு தற்குக் காரணம் யாது. இவர் அரசகுலத்தினர் கொல்லோவென ஆலோசித்து அப்பெரியோரைச் சமாதானப் படுத்தி ஐயரே நீவிர் யார்? எதற்காக அழுகிறீர்? நுமக்கும் இவ்வரசனுக்கும் எவ் வகைத் தொடர்புளது? என்று வினவினர். அம் முதியோன் அங்குள்ள அனைவரையும் நோக்கி ஓ சனங்காள்! இவ் வரசன் பிதாவைப் பெற்றோரும் என்னைப் பெற்றோரும் சகோதரர் ஆதலால் இவ் வரதுங்கன் என் தமையன் பிள்ளை. என் பிதா என் னிளம் பருவத்தில் பரம பதமடைந்தனன். பின் யான் மனை வாழ்க்கையைத் துறந்து தேசாந்தரியாய்த் திரிந்து காசி நக ரடைந்து இது காறும் அவண் வசித்திருந்தேன். இப்போது யான் விருத்தாப்பிய பருவமடைந் திருப்பதனாலும் காசித் தலத்தினுஞ் சிறந்த இக் கருவைத் தலம் யான் சென்மித்த தலமா யிருப்பதனாலும் இவ் வரதுங்கன் புத்திர னாக இருப்பதனாலும் என்னை யிக் கிழப் பருவத்தில் போஷித்து என் அந்திய காலத்தில் எனக்குச் செய்ய வேண்டிய கிரியை யியற்றி என்னை நற்கதி சேர்ப்பா னென்ற எண்ணத்தினாலும் இப்பொழுது இவண் வந்து சேர்ந்தேன். இவ் வரும்பெறற் புதல்வன் என்னைக் கைவிட்டுப் பிரிந்தனன். இனி யா னென் செய்வேன். அந்தோ! வென்று பூமியில்வீழ்ந்து புரண் டழுது கொண்டு பின்னுஞ் சொல்வான். ஜனங்காள்! நாமொன்று நினைக்கத் தெய்வ! மொன்று நினைத்த தென்றபடி இவனெனக்கு அந்திய காலத்திற் பிதிர்க் கிரியை செய்வா னென்று நினைத்திருந்தேன். இப்போது இவனுக்கு யானே செய்ய வேண்டிய காலஞ் சம்பவித்தது. யான் பிரமசரிய விரதம் அநுட்டித்து நடக்கிறவன் ஆதலால் இவ் வரசனுக்குச் செய்ய வேண்டிய அந்தியக் கிரியைகளை மூன்று நாளில் முடித்து விட்டு அநாதி புரேச னை திருக்களாவுடையானுக்கு இக் கங்கா சலத்தை யபிஷேகித்து விட்டு மீண்டும் காசித் தலம் போகிறேன் ஆதலால் அபரக் கிரியைகட்கு வேண்டும் பிரயத்தனஞ் செய்க வெனப் புகன்றனன்.

அதுகேட்ட ஆசாரியனும் இராஜ பத்தினிகளும் மற்று முள்ள யாவரும் நம் மிராசனுக்கு அந்தியக் கிரியை செய்தற் குரியோர் ஏற்பட்டு விட்டனரென்று கவலை நீங்கி அக் கிரியைக்கு வேண்டுவன தயார் செய்தனர்.

பின்னர் சிவ காம சௌந்தரி யம்மாள் ஆசாரியனையும் மந்திரி பிரதானி முதலான ஏனையோரையும் நோக்கி அரசனு லெழுதி வைத்த தானசாசனத்திற் காட்டிய சொத்துக்களைத் தானஞ் செய்ய வேண்டுமென்று நினைக்கிறேன். ஆதலால் நீங்களெல்லீரும் கூட இருந்து அத் தானக் கிரியையை முற்றுவித்து என்னைக் கிருதார்த்தை யாகும் படி செய்ய வேண்டுமென வுரைத்தனள். அவ்வாறே யாகட்டுமென்று யாவருஞ் சம்மதித்தனர். பின்னர் சிவகாம சௌந்தரியும் ஏனைய இராஜ பத்தினிகளும ஸ்நானஞ் செய்து கொண்டு சந்தோஷ சித்தராய் அரசனு லெழுதி வைக்கப் பட்ட தான சாசனந் தாரா பாத்திரங்க ளுடன் சபையின்கண் ணெய்தி அதுலாம்பிகை சமேத ஸ்ரீ பால்வண்ண நாதனை மறவாத சிந்தை யுடன் இந்திரன் முதலான திசா பாலரையும் சந்திர சூரியரையும் சபையி லுள்ள ஆசாரியன் முதலிய சகலரையும் சாட்சி யாக வைத்து பட்டமகிஷி யான சிவ காம சௌந்தரி சொல்ல லுற்றாள்.

ஓ ஆசாரிய னவர்களே! எனது பத்தா வான அரச னுடைய கட்டளையின் படி ஸ்ரீ பால்வண்ணப் பெருமான் ஆலயத்திற்குச் சில பூமிகளும் கிராமங்களும் மற்றுள்ள சிவாலயங்கட்கும் விட்டுணு வாலயங்கட்கும் சில பூமிகளும் கிராமங்களும் உமக்கும் சில பிராமணர்க்கும் சில பூமிகளும் கிராமங்களும் தானஞ் செய்கிறேன். இதுவன்றி யுமக்கு இன்னும் அரசனு லனுபவித்த சகல போக வஸ்துக்களும் பொக்கிஷங்களும் சகல சனங்களும் நிறைந்த இவ்விராஜ தானி யாகிய நகரமும் இராஜாதிகார ஸிம்மாதனமும் தானஞ் செய்கிறே னென வுரைத்துத் தான சாசனத் தாம்பிர பட்டயங்களில் சிவ காம சௌந்தரி யென்று தன் கையொப்ப மிட்டு அவரவர்க்குக் கொடுத்தப் பின்

ஆசாரியனைப் பார்த்துச் சொல்கின்றான். ஓ ஆசாரிய சுவாமிகளே! அரசன் பரிபூரணமடைந்த மார்கழி மாதம் அபர பக்கம் சதுர்த்தசியாகிய தினத்தில் அரசனையும் என்னையும் விஜய இவ்விராஜ பத்தினிகளையும் உத்தேசித்துச் சிராந்தம் பிராமண போஜன முதலியவை செய்வித்து அத் தினத்தில் மகேசனை பால்வண்ண நாதனுக்கு அபிஷேகஞ் செய்து சோடசோபசார முதலிய ஆராதனைகளுஞ் செய்து அன்றிரவில் அதிக விமரிசையுடன் இடபோற்சவ முதலியவை நடத்த வேண்டும். உமது காலமுஞ் சென்ற பின்னர் உமது வம்சத்தில் உதித்த சந்ததி யாரும் அவ்வாறே வருடாந்தோறு நடத்த வேண்டுமென்று சொல்லிப் பின்னுஞ் சொல்கின்றனள்:

சுவாமிகாள்! இவ் விராசசியத்திற்கு நும்மை யெசமானாக நியமித்திருப்பதால் என்னா லுமக்குத் தானஞ் செய்யப்பட்ட சகல பூமிகளையும் கிராமங்களையும நான்கு பாகஞ் செய்து ஒரு பாகத்தை நீர் அனுபவித்துக் கொண்டு மற்றை மூன்று பாகங்களை இந் நகர வாசிகளான பிராமணர்க்கு வெவ்வேறாக பிரித்துக் கொடுத்து அனுபவிக்கும் படி செய்து இவ்விராஜ தானியி லுள்ள சகல போகமும் நீரே யனுபவித்துக் கொண்டு அரசாட்சி புரிந்தருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டனள். ஆசாரியன் அவ்வாறே யாகுக வெனச் சம்மதித்தனன். அதன் பின் சிவ காம சௌந்தரி தனது மந்திரி பிரதானிகளையும், மற்றுள்ள பிரஜைகளையும் பார்த்து அன்பர்காள்! யான் அரசன் உத்தரவின் படி இவ்விராசசியத்தையும் சகல பாக்கியத்தையும் இவ் வாசாரியர்க்கும மற்றை யந்தணர்க்கும் ஆலயங் கட்கும் தானஞ் செய்து விட்டமையால் இதன் முன் எமக்கு அதிக விசுவாசத்துடன் கீழ்ப் படிந்து நடந்தது போல் இராஜ விசுவாசிகளாகிய இவ் வாசாரியரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டுமென்று ஆக்கியாபித்து அவ் விராஜ தானியின் இச்சை பெட்டியாம் தன் பெயரடையூரான மிட்ட முத்திரையுடன் கூடிய எல்லைக் கற்களை நாட்டி அந் நாட்டிற்கு சிவ காம சௌந்தரி சதுர்வேத மங்கலம் என்று திருப்பெயரிட்டு ஸ்ரீ பால்வண்ண நாதனைத் தேவாலயத்து அவனையே சாட்சியாக வைத்துத் தாரை வார்த்தனள்.

அதன் பின் ஓர் கிழப் பிரம சாரியா யாங்கு வந்திருக்கின்ற சிவ பெருமான் அரசன் சரீரத்திற்குத் திரு மஞ்சனஞ் செய்வித்து ஆடை யாபரணந் தரித்துப் பட்டுகளாலும் முத்துகளாலும் அலங்கரிக்கப் பட்ட விமானத்தில் அவ் வரசன் சரீரத்தை யேற்றுவித்து அநேக விருதுக ளோடும் பற்பல வாத்திய முழக்கத் தோடும் விமானத்தை யெடுப்பித்து ஆசாரியன் மந்திரி பிரதானி முதலோரும் நகரச் சனங்களும் தன்னைச் சூழ்ந்து கொண்டு வரத் தன் கையில் அக்கினி யெடுத்துக் கொண்டு தகனப் பிரதேச மடைந்து அவண் அடுக்கி வைத்திருந்த திவ்ய வாசனை கமழ்கின்ற சந்தனக் கட்டைச் சிதையின் மேல் அரச சரீரத்தை யேற்றி வைத்தனன்.

வைத்த பின் பட்ட மகிஷி சிவ காம சௌந்தரி யானவள் சகல சனங்களும் கேட்கும் படி சொல்கின்றனள்: அரசன் கட்டளையின் படி என்னால் தானஞ் செய்யப் பட்ட பூமி முதலானவைகளை வஞ்சகமா யாவது பலோத்காரமாயாவது எவன் அபகரித்தாலும் அபகரிக்க நினைத்தாலும் அவன் குரூர மான பிணிகளால் வருத்தப் பட்டு வம்மிச நாச மடைந்து இரௌரவாதி நரக மடைவன் என்று சத்திய மொழி புகன்று பின்னர் ஆசாரியனை நோக்கி ஓ சுவாமிகாள்! யான் சொல்லிய படி சகல தர்ம காரியங்களையும் நீரும் உமது வம்மிசத்தாரும் நடத்தி வருவீ ராகில் உமது குடும்ப மானது சந்திர சூரியருள்ள வரை யபிவிர்த்தி யடைந்திருக்கு மென்று சொல்லிச் சிதையின் மேலேறி இராஜ சரீரத்துட னொன்றிப் படுத்துக் கொண்டனள். அவ்வாறே ஏனைய இருபத்தாறு இராஜபத்தினிகளும் சிதையின் மேலேறிப் படுத்தனர்.

பின்னர் வயோதிகப் பிரமசாரி ஆசாரியனை முன்னிட்டுச் சத்திரிய விதிப்படி அக்கினிப் பிரதிஷ்டை முதலிய சமஸ்காராதி மந்திர ஓமங்களையும் செய்து அக்கினியை யெடுத்துப் பத்தினி மார்களுடன் கூடிய அரச னுடைய மார்பில் வைத்தனன். அன்பர்க் கெளிய னுன சிவ பெருமானது அருமைத் திருக் கரத்தால் அக்கினிப் பிரதானஞ் செய்த விசேஷத்தால் இராஜ பத்தினிக ளனைவரும் தேவ சரீரத்துடன்

உருத்திர கன்னிகைக ளாகிக் கயிலாய மடைந்தனர். பின் அப் பிரமசாரி யாகிய சிவ பிரான் மூன்று நாளும் பிதிர்க் கிரியைகளை விதிப்படி குறைவற நடததி நாலா நாள் அதிகாலைக் கடன் முடித்துத் தீர்ததக் காவடியைத் தோளி லேற்றிக் கொண்டு கருவை மா நகரத்தை நோக்கிச் சென்றனன். அது கண்ட ஆசாரியன் அமைச்சர் நகரச் சனங்கள் யாவரும் அவன் பின் சென்றனர். இங்கு இப்படி நிகழக் கருவை மா நகரில் அசரீரி வாக்கின் படி நாலா நாட் காலையில் அர்ச்சகர் முதலியோர் ஆலயஞ்சென்று திருககதவந் திறந்து பால்வண்ணப் பெருமானுக்குத் திருப பள்ளி யெழுச்சி கால சந்திப் பூசை முடித்துக் கொண்டிருநதனர்.

அப்போது சோலை நகரத்தி லிருநது வநத பிரமசாரி ஆலயத்துட் பிரவேசித்து அதிகார நநதி முன் தீர்த்தக் காவடியை யிறக்கி வைத்துச சகல சனங்களையுங கடைக்கணிததுப புன்னகையுடன் காபபக் கிரகத்துள் பிரவேசிததுச சிவ லிங்கத்துடன் கலந்து அநதர்ததான மடைநதனன்.

சகல சனங்களும் உட் பிரவேசித்த பெரியோனைக் காணுமல் திகைத்து மயங்கிக் கங்கா தீர்த்தக் காவடி யுடன் இங்கு வநதோன் எமமை யாளும் சிவ பிரானே யென நினைநது தனது அன்பனுக்காக எமமையன் செய்த திரு விளையாட்டை நினைந்து நினைந் துருகித்திருவருளின் பெருமையைத் துதித்தும் தவ ராஜ சிங்கமாம் வரதுங்க பாண்டியன் பத்தி வலிமையைப் பெரிது புகழ்ந்தும் பரமானந்த வாரியில் மூழ்கினர்.

சிவ பெருமானே அரசனுக்குத் தகன கிரியை பிதிர்க் கிரியை முதலிய யாவும் தன் னருமைத் திருக் கரத்தாற் புரிநதும் அரசனது திரு வுருவங் கொண்டு வந்து சிவ லிங்கத்துட் கலந்தும் செய்த திருவிளையாட்டையும் அவ் வரச னடைநத பெரும் பேற்றையும் நினைந்து புகழ்ந்து கொண்டாடினர்.

பின்னர் ஆசாரியன் அக் காவடியி லிருந்த தீர்த்தத்தை ஸ்ரீபால் வண்ணப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்து விதி வழுவாது பூசை யியற்றி இடபோற்சவம் நடத்தித் தன் பரிவாரங்களுடன் சோலை நக ரடைந்தனன்.

காசி நகரஞ்சென்ற அதிவீரபாண்டியன் வருதல்.

அந் நாளில் காசி நகரஞ் சென்ற அதிவீர பாண்டியனுக்குத் துர்க்குறியும் துர்க்கனவும் தோன்றக் கண்டு மனக் கலக்க முற்று நம் மருமைத் தமையனுக் காவது நம்முடைய நாட்டுக் காவது ஓர் தீங்கு சம்பவித் திருக்க வேண்டு மென நினைத்து அதி சீக்கிர மாகப் புறப்பட்டுச் சில நாளில் தீர்த்தக் காவடியுடன் சோலை நக ரடைந்து தன் முன்னோன் முத்தி யடைந்ததும் அவன் தேவிமா ரனைவரும் அவனது சரீரத்துடன் சிதையி லேறிச் சிவ லோக மடைந்ததும் ஆசாரிய னுரைக்கக் கேட்டுத் துக்கித்துத் தன் தமையனுக்குத் தான் செய்ய வேண்டிய தர்ப்பண முதலிய பிதிர்க் கடன் செய்து முடித்து ஆசாரியன் முதலிய சகல சனங்களுடன் வீற்றிருந்தான். அப்போது அவ் வதிவீர பாண்டியனை நோக்கி ஆசாரியன் சொல்கின்றனன்.

அரசே! நின் தமையன் வரதுங்க பாண்டியன் அரசு புரிந்து கொண்டிருக்கும் நாளில் சிவ பிரான் கட்டளையின் படி தனது இராச் சியத்தி லுள்ள சகல சொத்துகளையும் சிவாலயங்கட்கும் வேதியர் க்கும் தான சாசன மெழுதி வைத்து இராச்சியத்தைத் தேவி யான சிவ காம சௌந்தரி வசம் ஒப்புவித்து அந்திய காலத்தில் தான சாச னத்திற் கூறிய சொத்துகளைத் தானஞ் செய்து விடும்படி அம் மாதா சிக்கு உத்தரவு செய்து சிவ யோகத் திருந்து பரிபூரணமடைந்தான். அவ் வமையம் சிவ பெருமான் அவ் வரசனது திரு வுருக் கொண்டு அவ் வரதுங்க பாண்டியன் சுவாமி தெரிசனஞ் செய்ய வருவது போல் கருவை மா நகரத்திற்கு வந்து ஆலயத்தி னுட் புகுந்து சிவ லிங்கத்துட் கரந்தான். மூன்று நாள் வரையும் திருக் கோயிற் கதவந் திறக்கக் கூடா தென அசரீரி வாக்குப் பிறந்தது. அச் சிவ பெரு மானே சத்திரியப் பிரம சாரியாய் வந்து தகன கிரியை முடித்துக்

கருவை நகரடைந்து சிவாலயத்துட் சென்று கர்ப்பக் கிரகத்தினுட் பிரவேசித்து அந்தர்த்தான மடைந்தான் என்று நிகழ்ந்தன யாவும் விரித்துரைத்தனன். ஆசாரிய னுரைத்த அனைத்துங்கேட்டு அதிவீர பாண்டியன் எம்மையன் செய்த திருவிளையாட்டையும் தன் முன்னோன் வரதுங்கன் அடைந்த பெரும் பேற்றையும் உன்னிக் கரையற்ற பேருவகைக் கடலு ளாழ்ந்து அக்கருவை நகரடைந்து பால்வண்ண நாதனைத் தெரிசித்து வணங்கித்தான் கொண்டு வந்த கங்கா சலத்தை அப்பெருமானுக்கு அபிடேகஞ் செய்து பூசித்து அன்பு மேலீட்டால்

"புரிசூழ்ந்த வலம்புரியுஞ் சலஞ்சலமுங் கிடந்தகடல் புடைசூழ் சக்ர
கிரிசூழ்ந்தபெரும்புவனத்தலமனைத்துந்தேடியுங்காண்கிலன்யானிந்நா
ளரிசூழ்ந்துமலரயன்சூழ்ந்தமரரொடுமுனிவர்சூழ்ந்தன்பினேத்தக்
கரிசூழ்ந்தநகரமர்ந்தகருங்களவின்வெண்கனியைக்கண்கண்டேனே"

என்னுங் கவியொன்று கூறித் தன் இராஜதானியாகிய தென்காசி நகரடைந்தனன். வரதுங்கபாண்டிய மகாராஜன் பரிபூரண மடைந்த மார்கழி மர்சம் அபர பட்சம் சதுர்த்தசியாகிய தினத்தில் ஒவ்வொரு வருடந் தோறும் அன்றமுத லிற்றை நாட்காறும் ஸ்ரீ பால்வண்ணப் பெருமானுக்கும் ஒப்பனை யம்மாளுக்கும் அபிஷேக அலங்காரமும் இடபோற்சவமும் சோலை நகரிற் சிரார்த்தம் பிராமண போசன முதலியவும் சிவகிரிச் சமஸ்தானத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இருகுறளேரிசை வெண்பா.

திண்புவியோர் போற்றுபுகழ் சேர்வரதுங் கன்சரிதம்
பண்பொடுகேட் டோரும் படித்தோருந்—தண்பரவைப்
பூதலத்தில் வாராதெப் போதுமிருப் பாருமையாள்
காதலன்பொற் பாதநிழற் கண்.

வரதுங்கபாண்டிய மகாராஜன் சரித்திர முற்றிற்று.

திருக்களாவுடையான் றிருவடியே துணை.

உ

சிவமயம்.

திருக்கருவைக்

# கலித்துறை யந்தாதி

திருக்கருவைப்

# பதிற்றுப் பத்தந்தாதி

திருக்கருவை

# வெண்பா வந்தாதி

இவை மூன்றும்

வரதுங்க பாண்டிய மகாராஜன்

இயற்றியன.

---

இம்மூன் றந்தாதிகளையும்

அதிவீர பாண்டிய மகாராஜன்

இயற்றியதாகக் கூறுவாரும் அச்சிடுவாருமுளராயினும்

உற்றுநோக்கு மிடத்தில் அவர் தமயனாகிய

வரதுங்கபாண்டிய மகாராஜன்

இயற்றியதாகவே தோன்றுகிறது.

உ

கணபதி துணை.

# திருக்கருவைக்

## கலித்துறையந்தாதி.

—()—

### காப்பு.

கட்டளைக் கலித்துறை.

நீட்டும் பனுவற் கருவையந் தாதித் தெரியலெங்கை
சூட்டும் படிக்குத் துணைசெய்யு மாற்சுடர் சூழ்பிறங்க
லேட்டின் புறத்து முனிமொழி பாரத மென்றுநிற்கக்
கோட்டுந் தவளப் பிறைக்கோட்டு மும்மத குஞ்சரமே.

### நூல்.

சீரணி கொன்றைச் சடைக்காடு முக்கண்ணுஞ் செம்முகமுங்
காரணி கண்டமு நான்குதிண் டோளுங் கருவைப்பிரான்
வாரணி மென்முலை யொப்பனை பாகமும் வண்கமலத்
தேரணிசெம்பொற் றுணைத்தாளுமென்னெஞ்சிடங்கொண்டவே

இடங்கொண்ட சென்னி நிலனுறத் தேவ ரிறைஞ்சமன்றி
னடங்கொண் டிடப்பண்டு நான்செய்த தெத்தவகாண்மலர்சேர்
தடங்கொண்ட வாவி புடைசூழ் கருவைத் தனிமுதலே
வடங்கொண்ட பூண்முலை யொப்பனைகேள்வவிவ் வையகத்தே.

வையந் தொறுங்கலிக் கோடையில் வாடி வருந்துமுயி
ருய்யும் படிக்கோ ருறுதிகண் டேனுமை பாகம்வைத்த
மெய்யன் கருவைப் பிரான்செழு மாணிக்க வெற்பனைய
செய்யன் கனைகழற் றாமரைப் போதின் றிருநிழலே. (3)

திருவுங் குலனு மனையுஞ் சிறாருஞ் சிறந்தசெவ்வி
யுருவுந் தவமுங் கடிதெய்த லாமுமை மாதுகொங்கை
மருவும் புயத்தர் களாநிழ லார்செக்கர் வானநிறம்
பொருவுஞ் சடிலர் திருத்தொண்டின் மேலன்புபூண்டவர்க்கே

பூண்டவ ராவும் புலித்தோ லுடையும் புவனமுட்ட
நீண்டவ ராலு மறியாச் சரணமு நீண்முடியுங்

தாண்டவ ராயர் முகலிங்க நாதர் தமியனுக்கோ
ராண்டவ ராகிவந் தேதிருக் காட்சி யளித்தனரே. (5)

அளியு மளிதரு மானந்த மாகி யளவிறந்த
களியு மிரண்டற்ற காட்சியுங் காட்டிக் கருணைசெய்தார்
வெளியும் பவனமுந் தீயுந்தண் ணீரும் வியனிலமு
மொளியொன் றியவுரு வக்கள வீச ருளத்திருந்தே. (6)

உள்ளக் கமலத்தி னிற்கள வீசரென் னொப்பனையோ
டெள்ளத் தனையு மகலாக் குடிகொண் டிருளறுத்துக்
கள்ளக் கலரொடுங் கூடா தெளியனைக் காத்தளித்த
வள்ளற் குணத்தின் றகுதியை யேதென்று வாழ்த்துவனே (7)

வாழ்த்திட நாவுண்டு பாவிக்க நீயுண்டு மண்ணிலுறத்
தாழ்த்திடச் சென்னியு முண்டுகண் டாய்தண் களவின்மல
ரூழ்த்திடு கீழ லுறைபவ ரடியுண் டுனையிரயம்
வீழ்த்திடு வாருமுண் டோநெஞ்ச மேயென் மெலிவதுவே. (8)

மெலிவிக்கு நோய்க்கு மடவா ரிழைத்த வினைக்குமுயிர்
நலிவிக்குங் கால படர்க்குமஞ் சேன்றமிழ் நாவலரான்
மலிவிக்குங் கீர்த்திக் களவீசர் கூன்பிறை வானதிலவாற்
பொலிவிக்குஞ் செஞ்சடை யார்தடத் தாளைப் புகுந்தபின்னே (9)

புகுவதி ரேம்பு வனப்போ டிளமையும் போயதினி
மிகுவிந்து நோய்ந் துயருமென் றுலடன் மேவலரூர்
நகுவதன் முன்னெரித் தோர்கள வீசரை நாம்பணியத்
தகுவது காணெஞ்ச மேயிது போதுஞ் சதுரில்லையே. (10)

தாரா னனனுந் திருமகடு மாலுஞ் சதமகனுங்
கதிரா யிரம்விரிக் குஞ்சுட ரோனுங் கலாதரனு
மதிரார் கலிக்கின்ற யுந்தொழு தேத்த வருள்புரிந்தோன்
முதிரா முலைமங்கை யொப்பனை கேள்வன் முகலிங்கனே. (11)

முகலிங்கன் றேன்தரு வைக்கள வீசன் முதல்வனன்பர்
புகலின் குளிக்கச் சடிலப் பிரான்புழைக் கையுரிநல்
லகவிங்க மாக்குடுத் தேர்ந்தடியார்க் கடிமைசெய்யா
திகலின் கெவனெஞ்ச மேமறந் தி சார்த லெளிதல்லவே. (12)

அல்லும் பகலு மொழியாது தம்புக ழாதரித்துச்
சொல்லும் படிக்குக் கவிநா வளித்தெனைத்தொண்டுகொண்டார்
வல்லுங் குழைமுலை யொப்பனை பாகர் வரிசிலையாக்
கல்லுங் குழைத்த புயத்தர் களாநிழற் கண்ணுதலே. (13)

கண்கொண்டுபார்த்தவிடந்தோறுந்தோன்றுங்கருவைப்பிரான்
விண்கொண்டதிங்கள்குடிகொண்டவேணியும்வெண்ணகையும்
பண்கொண்ட வேதப் பவளச்செவ் வாயும் பணைப்புயமுந்
தண்கொண்ட கொன்றைத் திருமார்புந் தாமரைத் தாள்களுமே.

தாளா லுதைத்தது கூற்றுவன் மார்பந் தடக்கையுகிர்
வாளா லறுத்தது நான்முகன் சென்னி மணிவலயத்
தோளால் வளைத்தது மாமேரு நெற்றிச் சுடர்விழியால்
வேளாடல் செற்ற கருவா புரியுறை விண்ணவனே. (15)

விண்ணிடு வில்லும் புனன்மேற் குமிழியு மின்னுமெனன
மண்ணிடைத் தோன்றி யழியுமிக் காயத்தை மாய்விலதென்
றெண்ணிடு மெண்ணந் தவிர்த்தழி யாமுத்தி யேறுதற்குப்
பண்ணிடு மேணிகண் டீர்கள வீசர்பொற் பாதங்களே. (16)

பாதார விந்தமுஞ் செஞ்சடைக் காடும்பஞ் சாயுதனும்
வேதாவு மின்னமுங் காண்பரி யானையென் மெய்த்தவத்தா
ஞதாவென் றேத்திக் கருவைக் களாவி னறுநிழற்கீழ்க்
காதார் வரிவிழி யொப்பனை யாளொடுங் கண்டனனே. (17)

கண்டேன் கருவைப் பெருமான் றிருவடி கண்டுபற்றிக்
கொண்டேன் பாசம யங்குறு கேண்புல்லர் கூட்டநண்ணிப்
பண்டே புரிந்த பழவினை யாவையும் பற்றறுத்துத்
தொண்டே புரிவதல் லாற்பின்னை வேறு தொழிலில்லையே.(18)

இல்லாமை துன்ப மிரவுகல் லாமை யிழிவுமிடி
பொல்லாத நோய்முத லானவெல் லாமன்று போர்விசயன்
வில்லா லடியுண்ட பால்வண்ண நாதர் வியன்புகழைச்
சொல்லா தவரையன் றேபிறப் பேழுந் துயர்செய்யுமே. (19)

செய்யன் கரிய மிடற்றன்வெண் ணீற்றன்செம் பாதிபச்சை
மெய்யன் செழும்பொற் சடாடவி யான்வெவ் வனலெடுத்த
கையன் கருவைப் பெருமா னிருவினை கட்டறுக்கு
மையன் சரணஞ் சரணமென் றோது மருமறையே. (20)

அருமறை யோதியென் பல்வேள்வி முற்றியென் னாதரவா
னருமதை கங்கை முதற்புனன் மூழ்கியென் னண்மலர்சேர்
மருமலி சோலைக் கருவைப் பிரான்றிரு மந்திரத்தை
யொருமுறை யோதித் துறக்கம் புகாதவுணர்விலரே. (21)

உணங்குந தவத்தர் கருத்தினும் வேதத்தி னுச்சியினு
மணங்கொண்ட சோலைக் கயிலாய வெற்பினு மாமறையோர்
கணங்கொண்டுபோற்றிசெய்பொன்னம்பலத்துங்கருவையினு
மிணங்கும் பொருளென் னிதயார விந்தத் திருக்கின்றதே. (22)

இருக்கும் புராணமு மாகம கோடியு மென்றுலகிற்
பெருக்குங் கொழுகொம்பு மீதேறி முத்திப் பிரசமலர்
குருக்குமெய்ஞ்ஞானமணம்வீசுநதேனுண்டுகொள்ளைவண்டு
செருக்குங் களவி னிழற்கீழ் முளைத்த சிவக்கொழுந்தே. (23

கொழுந்தும்பை வேணி முடிக்கள வீசற் குறித்துநெஞ்சிற்
றொழுகதொண் டருக்கரு ளுங்கருவேச தொனிவிளக்குஞ்
செழுந்தொண்டை வாய்ச்சியர்காமாலுராகத்திற்சிந்தையமிழ்ந்
தழுந்தும் பொழுதிலும் யான்மற வேனுன் னடியிணையே. (24

அடியே னினைவுக் கடங்கா வறிவை யளித்துநெஞ்சிற்
குடியே புகுந்தென்னை யாளநின் றன்கொண்டன் மேனியனும்
படியேழுந் தேடியுங் காணு முழுமுதற் பானிறவெண்
பொடியேறு மேனியன் றென்கரு வாபுரிப் புண்ணியனே. (25)

புண்ணிய னிறைப்பனை யாகன் புராதனன் பூங்கடுக்கைக்
கண்ணிய னெங்கள் கருவைப் பிரான்கண வீசனன்பர்க்
கண்ணியன் றன்னடி யாருடன் கூட வுதிகொன்றிலாத்
தண்ணுறிய வெண்ணிலத்தடுத்தாட் கொளநின்ற தற்பரனே. (26)

பாகதிக் கேவைப்பை யோவறி யேன்பெரும் பாதகர்போ
னாகதிக் கேவைப்பை யோவறியே னெங்கு நாளுமிலுஞ்
சாகதிக் கேசெல் விடையாய் களாவுறை சங்கரனே
வாகதிக் கேற்றநின் பாதார விந்தம் வழுத்துவனே. (27)

வழுத்துதல் போற்றல் வணங்கல் குழைதன் மகிழ்தனெஞ்சிற்
பழுத்தவன் புற்றுப் பலகா லுருகுதல் பாவனைபோய்
முழுத்தவின் பக்கடன் மூழ்கிக் களித்தன் முகலிங்கன்று
ளழுத்தவென் சென்னி கொடுத்தபின் பெறற ததிசயமே. (28)

பெற்றே னொருவர் பெறும்பெரும் பேறு பிறவித்துன்ப
மற்றே னினிமற் றடைவதுண் டோவரண் மூன்றெரியச
சற்றே முறுவல்செய் தோர்கள வீசர்பொற் றாளிணைக்குக்
குற்றேவல் செய்யத் தமியே னிதயங் கொடுத்தவன்றே. (29)

கொடுங்கால பாசத்தை வீசிவெங் கூற்றுக் கொதித்துமுனிந
தடுங்கா லமுநின் னடிமற வேனலை யாழிவெம்பப்
படுங்கால கூட விடமுண்டு தேவர் பயங்கெடுத்து
விடுங்கால கால கருவா புரியுறை வேதியனே. (30)

வேதிய னேயென் றுஞ்சீதா னேயென்று மேனியுமை
பாதியனேயென் றும்பால்வண்ண னேயென் றுமபானிறவெண்
பூதிய னேயென்று நாத்தழும் பேறப் புகழ்ந்து புகழ்ந்
தோதிய நேரமெல் லாந்தமி யேனெஞ் சுருகியதே. (31)

உருவா யுருவி னொளியா யொளியி னொளிகடந்த
வருவா யனைத்துயி ராகிநின் றாய்குண் டகழுடுத்த
கருவா புரேச விறுதியிற் கூற்றுவன் கைப்படுநாள்
வெருவா தழைத்திடு வேன்வால் வேண்டும் விடுவிக்கவே. (32)

விடத்தக்க திந்த விடக்குட னெனனல் வேர்களைந்து
சுடத்தக்க தென்று மொழியா வெகுளி துவிசகற்றி
யடத்தக் கதுமனச் சங்கற்ப நெஞ்சத் தகவயனி
னடத்தக் கதுகள வீசர்பொற் றாளென்று நாற்றினையே. (33)

நாற்றடங் தோடிசை யெட்டினுந் தட்ட நாகனிக்குங்
கூற்றடுந் தாளொழு பாதலம் போய்ப்புகக் கொன்றைநறு
வாற்றெழும் பொன்முடி யண்ட கடாக மொளிக்கநின்று
பாற்றிரு மேனிக் களவீச னுடும் பவுரிகொண்டே. (34)

கொண்டாளப் பெற்றவர் தம்மடி யார்கள் குறைசெயினுந்
தண்டாமுனிவுற் றிகழ்தல்செய் யார்தமி யேன்பிழைநூ
றுண்டா யினும்பொறுத் தாளுந் தகைமை யுனதுகடன்
கண்டார் நகைப்பர் களவீச நீயென்னைக் கைவிடினே. (35)

கைவிட்டுக்கால்விட்டுக்கண்கள்பஞ்சிட்டுக்கலங்கியுயிர்
மெய்விட்டுப்போம்பொழுதஞ்சேலஞ்சேலென் றுவேலைவென்று
மைவிட் டெறிக்குங்கண் ணுைப்பனை யோடு மழவிடைமே
னெய்விட்ட சூலப் படையண்ண லேவந்து நின்றுகொள்ளே.

நின்றுள் வழுத்த நினைவுதந் துள்ள நிலைதிறம்பிக்
குன்று வகையென்னை யாட்கொண்ட தாற்கொடி யேன்புரித
னன்றுகக் கொள்வதல் லாற்பிழை நாடலை நாடினருக்
கொன்றுய்ப் பலவுரு வாங்கரு வாபுரி யுத்தமனே. (37)

உத்திப் புயங்க முடிக்கள வீச வுனதுப்த
பத்திக் குரிய பழவடி யார்தம்மைப் பாமகளுஞ்
சுத்தக் கமலையு நல்லிந் திராணியுந் தோய்வதற்குச்
சித்தத்து மால் கொண்டு சேர்விடந் தேடியுஞ் செல்குவரே.

செல்வச் செருக்கர் தலைவாயி லூறுந் திரிந்துதிரிந்
தல்லற் றுயர்கொண் டிளைத்துவிட் டேனடி யேனினியப்
புல்லர்க் கெளிமை புகலாமற் காத்தருள் பூந்தடமு
மல்லற் பழனமுஞ் சூழ்கரு வாபுரி வானவனே. (39)

வானவ ரிந்திர னிந்திரை கேள்வன் மறைவிரிஞ்சன்
றானவ ரென்று புகல்வதுண் டோசம ரிற்சிலையாற்
கானவ னெற்றுங் களவீச ரன்று கடல்விடத்தைப்
போனக மாக வுழுதசெய் யாவிடிற் பூதலத்தே. (40

பூத கணதம்தாடு வேதாவுங் தாளம் புடைக்க வொரு
பாத மெடுத்துப் பவுரிகொள் வோய்பண்டை யாகமத்தும்
வேத சிரத்தும் பொலிகள வீச மெலியவரு
மேத மகற்றுவ துன்கட னென்கட னேத்துவதே. (41)

எத்திய மூவர் தமிழ்மாலை சாத்து மிணையடிக்கென்
ஞத்தரும்புன்சொற்றொடைபுனைவாய்செம்பொனுட்டிலைந்து
காத்தரு நாண்மலர் சூடும் புரிசடைக் காட்டெருக்கம்
பூத்தரு மாலை புனைகள வீச புராந்தகனே. (42)

புரந்தரன் பண்டைப் பழிதீரப் பொன்னிதழ்ப் பூங்கமல
நிரந்தரஞ் சாத்த வருள்புரிந் தோனில வோடணிந்த
கரந்தையஞ்செஞ்சடைப்பால்வண்ணநாதன்கருணைபொங்கி
வரந்தரு மோவறி யேனளி யேனிட்ட மாமலர்க்கே. (43)

மாமல ரன்றிக் குருதிக்கண் சாத்திய மாயனுக்குன்
றீமல ராழிப் படையளித் தாய்செழுந் தேறல்வளட்
பூமலர் கொண்டுன் றிருமேனி முற்றும் பொதிந்தவந்தக்
காமனை யேனெரித் தாய்கரு வாபுரிக் காரணனே. (44)

காரண னேதென் கருவா புரியிற் களாநிழற்கீழ்ப்
பூரண னேயென்பு பூண்டவ னேபொற் பொருப்புவில்லா
நாரண னேகணை யாப்புர மூன்றெய்த நாயகனே
யாரண னேயப்ப னேயடி யேனுன் னடைக்கலமே. (45)

அடைக்கில ரைந்து புலனையு நெஞ்சத் தழுக்ககலத்
துடைக்கிலர் தொண்டு புரியத் துணிகிலர் தூயபத்தி
படைக்கிலர் நின்புகழ் பாடிலர் கால படர்பிடித்துப்
புடைக்கினென் செய்திடு வார்கள வீச பொறியிலரே. (46)

பொறியும் புலனுங் கலங்கியைம் மேலிட்டுப் புத்திகெட்டு
மறியும் பொழுதிலும் யான்மற வேன்மறி யோடுமழுச்
செறியுங் கராம்புய முஞ்செய்ய வாயுந் திலகநுதற்
குறியுங் கருவைப் பெருமான் றிருமணக் கோலமுமே. (47)

கோல மெடுத்து நடிப்பவர் போலப்பொய்க் கூடுபல
கால மெடுத்துக் கழித்துவிட் டேன்கருப் புச்சிலைமே
னீல மெடுத்துப் பொரவந்த காமனை நீறுசெய்யப்
பால மெடுத்த விழியழ லேவிய பால்வண்ணனே. (48)

பால்வண்ணஞ் சொல்லென்றும் பங்கே ருகவண்ணம் பாத
மென்றுஞ், சேல்வண்ணங் கண்ணென்று மிவ்வண்ணமாதர்
திறம்புகழ்ந்து, நூல்வண்ண நுண்ணிடை யொப்பனை பாக
நொந் தேனினியுன், கால்வண்ண நாண்மலர்க் கோரளி யாகக்
கருத்தளியே. (49)

கருத்துறு மாயை யிருளுக்குத் தீபங் கழிபிறவிப்
பெருத்தெழு நோவுக் கமிர்தசஞ் சீவினி பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவா ரிதிக்கு வடவையன்றுத்
தருத்திபி னுடுங் கருவைப் பிரான்றிரு வஞ்செழுத்தே. (50)

அஞ்செழுத் தோதித் திருநீ றணிந்துன் னடிக்கமல
நெஞ்சழுத் தித்தொண்டு செய்வதல் லாற்றண் ணிலாமதியின்
பிஞ்சழுத் துஞ்சடை யாரிய நாத பிறிதுசெய்யேன்
பஞ்சழுத் தும்பதத் தாரின்ப வாரி படியினுமே. (51)

படியிற் பிறந்து விழுந்திட்ட யாக்கை புலகுவிந்தால்
வடிவிற் பெரிய வடவரை போலுமற் றிப்பிறப்பி
லடியர்க் கெளிய கனவீச நின்னரு ளாக்கம்பெற்றேன்
முடிவிற் பழவடி யேன்பிற வாவண்ண முத்திநல்கே. (52)

நல்கா தொழியினு நல்கினு நின்னடி நாயடியேன்
பல்காலு மேத்திப் பணிதல்செய் வேனென் பருவரல்கண்
டொல்கா தளித்துப்புரந்திடல் வேண்டு முயர்விசும்பிற்
செல்கா றிளைக்கும் பொழிற்கரு வாபுரித் தேசிகனே. (53)

தேசிக னுக்க கனவில்வர் தாண்டருள் செய்தவட
காசிய னெங்கள் கருவைப் பிரான்கலைக் கோட்டுவிடை
வாசிய னுப்பனை பாகனென் றேத்திலென் வாய்திறந்து
பேசிய பேறுள்ள மானந்த வாரி பெருகியதே. (54)

பெருங்கா லெறிய நடுங்குங் கொடியினிற் பீழையுற்றுக்
கருங்கால னூறிற் றீயோர்கவியக் கருத்தழிந்தேன்
வருங்கால நஞ்சுண் டமரரைக் காத்த வாதமுத்தி
தருங்கால தண்டமிழ்த் தென்கரு வாபுரிச் சங்கரனே. (55)

சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாத கவிப்புலவி
ரங்கச் சுமைகொண் டெழுநான்கு கோடி யழிநரகப்
பங்கத்தில் வீழுவன் றேபொன்று வார்தமைப் பாடுவதே. (56)

பாடுவ துன்றிரு நாமங்க ளொடோறும் பத்திசெய்து
சூடுவ துனபொற் றிருவடித் தாமரை தொண்டுசெய்து
கூடுவ துன்னடி யார்திருக் கூட்டமக் கூட்டத்துட
னாடுவ துன்னிலே காண்கரு வாபுரி நாயகனே. (57)

காயினுந் தீய பிறவியெல் லாஞ்சென்று நாண்பிறந்து
மாயினுந் தேவர் பதவியில் வாழினும் வஞ்சமில்லாத்
தாயினு மன்புடை யொப்பனை பாகநின் றூணிணைக்கீழ்
மேயினு மன்பொன்று மேயடி யேன்பெற வேண்டுவதே. (58)

வேண்டிய வேண்டிய வெல்லா மெதிரும் வினையகனு
மீண்டிய முத்திப் பெருவாழ்வு சேரு மிடரொழியும்
பாண்டிய சேத்தக் கருவா புரிநின்ற பால்வண்ணனைப்
பூண்டிகழ் மென்முலை யொப்பனை பாகனைப் போற்றினர்க்கே.

போற்றிப் பணியு மடியார் பழவினை போகவெறி
காற்றிற் சருகென மாற்றும பிரான்கள வீசறக்கன்பா
யாற்றுப் புனல்கொண்டு மஞ்சன மாட்டி யலர்சொரியார்
கூற்றுக் கொதித்து வருநாளென் செய்வர் கொடியவரே. (60)

கொடியாடும் வெள்விடை கொன்றையி லாடுங் குலச்சுரும்பர்
முடியாடுங் கங்கை முகமாடு முச்சுடர் முற்றும்வெள்ளைப்
பொடியாடு மேனி யரவாடுஞ் சோரிப் புலவுகமழ்
வடியாடுஞ் சூலக் கருவேச மாடிய மன்றிடத்தே. 6I)

மன்றிடத் தேநின்று தாண்டவ மாடுவன் வான்கயிலைக்
குன்றிடத் தேயண்டர் போற்றிட நிற்பன் குறித்துமனை
மொன்றிடத் தேதன்னைத் தாளுகப் பாவிப்ப வுள்ளடியார்
ஈன்றிடத் தேயுத வுங்கரு வேசன் கனல்வண்ணனே. (62)

வண்ணங் கரிய திருமால் கழியென்பு மாலிகையுந்
தண்ணங் கமலத் தயன்றலை மாலையுஞ் சாத்திமண்ணும்
விண்ணும் பொதிந்த வுகாந்த பிரளய மேவிநின்று
பண்ணென்று வீணை பயிலுங் களாவிற் பரஞ்சுடரே. (63)

பரஞ்சுடர் முக்கட் பரமன் சதானந்தன் பற்றலர்முப்
புரஞ்சுட வாங்கு பொருப்புவில் லான்பொருந் தாதக்கன்
சிரஞ்சுடக்கொய்துமுத்தீயிட்டபால்வண்ணன்றென்றிசைக்கோ
னுரஞ்சுடத் தாளுதைத் தோன்றிரு நாமங்க ளோதுமினே.(64)

மின்கொண்ட பொன்முடி யாயிர மாயிர மெய்த்தொழில்கள்
பொன்கொண்ட சேவடி யாயிரமாயிரம் பூந்தடங்கண்
முன்கொண்ட நாமங்க ளாயிர மாயிர மூரித்திண்டோள்
கொன்கொண்டசூலப்படைக்கருவாபுரிக்கொற்றவற்கே. (65)

கொற்றக் கவிகை நிழற்றப் பொதுவறக் கோனடத்தி
முற்றப் புவனம் புரப்பவ ரேனு முகலிங்கர்தாஞ்
சற்றுத் திருவருள் கோடின ரேலத் தருகிகெட்டுப்
பற்றற்ற கூழுங் கிடையா திரப்பரிப் பாரிடத்தே. (66)

பாரிடஞ் சூழ்வரத் தான்பலி கொண்டுந்தன் பாதமலர்
சேரடி யார்க்குப் பெருவாழ் வளிப்பன் றிரைக்கடலிற்
கார்விடந் தானுண்டும் போற்றும்புத் தேளிர் கடும்பசிநோய்க்
காரமு தூட்டுவன் றென்கரு வாபுரி யாரியனே. (67)

ஆரியன் வேண்டத் திருமேனி பூரித் தறமெலிந்த
சீரியன் செல்வக் கருவைப்பி ரான்றிருத் தொண்டுசெய்யாப்
பூரியர் கூட்டம் புகாதன்பர் கூட்டம் புகுத்தியது
காரியங் காணெஞ்ச மேபிறப் பேழுங் கடப்பதற்கே. (68)

கடல்விட முண்டி புறங்கா டாங்கு கனலுருவ
மடல்விடை யூர்தி புலியத ளாடை யழலுமிழ்வாய்ப்
படவர வாரங் கழிதலை தாரெனிற் பால்வண்ணனை
மடவா லொப்பனை யெவ்வாறு சேரு மனமகிழ்ந்தே. (69)

மனப்பகை யாகிய வைவரை மாய்த்துன் வழியடியா
ரினத்துட னென்னையு மாட்கொள்வை யோபண் டிகல்புரிந்த
புனத்துள வோனுங் கமலத்து வேதனும் போற்றிசெய்யுங்
கனற்றிரு மேனிக் கருவா புரியிற் கறைக் கண்டனே. (70)

கறைகொண்ட சூலத் நலையிலுங் கையிற் கபாலத்திலு
நறைகொண்ட பங்கயப் பொற்றா ளிணையிலு நாங்கள்கண்டோ
மறைகொண்ட தென்கரு வைப்பெரு மானுக்கு மாபவனூர்
நிறைகொண்ட பேருட லும்பசுஞ் சோரியு நீள்கண்ணுமே. ( )

நீள மடுத்த தடந்தோ டிசையை நெருங்கச் சக்ர
வாள மடுத்துச் சடைக்காடு சூழ்வர மாதுமையா
டாள மடுப்பச் சதுமறை போற்றச் சரணமண்ட
கோள மடுப்ப நடிக்குங் கருவைக் கொழுஞ்சுடரே. (72)

சுடர்கின்ற மண்டல மென்னுமுக் கோணமுந் தொல்விசும்பும்
படர்கின்ற சோதிக் கருவைப பிரான்பொற் பதம்பணிந்தார்
குடருந் தசையுங் குருதியு மென்புங் குவிந்தவிந்த
வுடலென்ற பாரஞ் சுமவார்கண் மீண்டிவ் வுலகில்வந்தே. (73)

உலகத்தி லுள்ள மனைவாழ்வு சுற்ற முறுபுதல்வ
ரலகற்ற செல்வந் தொலையாத நீணிதி யாயவெல்லா
மிலகுற்ற மின்னென நில்லாது போய்விடு மென்பதெண்ணித்
திலகத் திருநுத லொப்பனை பாகனைச் சிந்தியுமே. (74)

சிந்தித் துருகி யுருகியெப் போதுநின் சேவடியை
வந்தித் திருப்பதோர் வாழ்வளித் தாய்மறை வேதனுக்குஞ்
சந்தித் திடற்கெளி தோவிந்த வாழ்வு தழைக்குஞ்செவ்வா
னந்திப் பிறைமுடி யோய்கரு வாபுரி யாள்பவனே. (75)

[illegible] மாறி வேறொரு பற்றுமின்றி
[illegible]கின்ற நீயனுக் கம்பியெனத்

தவத்துன்ற வோர்தொழுந் தாள்காட்டி முத்தித்தடங்கரைமேற்
றுவக்கற வேற்றுவை யோகரு வாபுரித் தூயவனே. (76)

தூயபங் கேருகன் செவ்வா யுனது தூரகபந்தி
பீரயொலிப் பாற்கட லம்புபெய் தூணிவன் பாதலங்கள்
சேயொளி மாமணிப் பொற்பணிப் பெட்டகந் தென்கருவை
நாயக நின்புக ழாரே யறிந்து நவிலுவரே. (77)

உவராழி வையத் திழிகுலத் தேவந் துதித்தவருஞ்
சிவசா தனம்பெறிற் றேவர்கண் டீர்தென் கருவைப்பிரான்
றுவர்வாய் மணிநகை பங்கன்பொற் றுளைத் தொழாதிருப்போ
ரெவரா யினுமற் றவரே குலத்தி னிழிந்தவரே. (78)

இழியும் பிறவிப் படுகுழிக் கேவிழுந் தெய்த்தவென்மேற்
பொழியுங் கருணை விழித்திருப் பார்வை புரிந்தனையேன்
மொழியுங் கவலை மனமா சறுத்தின்ப மூழ்கிமுத்தி
வழியும் புகப்பெறு வேன்கரு வாபுரி வாழ்பவனே. (79)

வாழ்விப்பர் தம்மை மறவா தவரை மறந்தவரை
வீழ்விப்பர் தீய நரகத்து ளேயெனு மெய்மையெண்ணிச்
சூழ்வித்த கொன்றை முடிக்கள வீசர் துணையடிக்கீழ்த்
தாழ்விக்குஞ் செஞ்சடை யாரல்ல ரோமுத்தி சார்பவரே. (80)

முத்திக் கொருவித்து மோகா டவிக்கு முழங்குசெந்தீ
சித்தக் கவலைப் பிணிக்கோர் மருந்து சிவதவஞ்சேர்
புத்திக் கொடிக்குப் படருங் கொழுகொம்பு போலுங்கண்டீர்
தத்திப் பணியணி யுங்கள வீசர் துணையடியே. (81)

துணைக்கோல வாசிகை வேணியிற் சாத்தித் துலங்குதிரு
மணக்கோலத் தோடிம வான்மக ளோடு மழவிடைமே
லிணர்க்கோலச் சோலைக் கருவேச வென்மு னெழுந்தருள்க்
கணக்கோ கணக்கல்ல வோவறி யேனுன் கருத்தினையே. (82)

உன்கருத் தேதென் றறியேன் கருவையி லுத்தமனே
மின்கருக் குஞ்சடை யும்பிறைக் கீற்றும் விழிமலரும்
பொன்கருக் குங்கொன்றை மாலிகை மார்பினிற் பொற்கழலு
மென்கருத் தடுவைத் தெய்யோதும் வந்தித் திறைஞ்சுவனே.

இறையவ னேயெனக் குன்னடி போற்ற வியல்பளித்த
மறையவ னேயென் மனத்தவ னேவரி வார்ந்தகண்டக்
கறையவ னேதென் கருவேச னேசடைக் காடணிந்த
பிறையவ னேயடி யேன்பிற வாவண்ணம் பேறருளே. (84)

அருவிப் புனலிற் குமிழியிற் றோன்றி யழிந்தனன்யான்
கருவைப் பரமன் கவினுறுக் காக்கம லாலயத்திற்
பரவைக் கிரவிற் றிருத்தூது சென்ற பதம்படவத்
தெருவிற் சிறுதுக ளாய்க்கிடந் தேனில்லை தீவினையே. (85)

தீவினை செய்து சிவதவங் கைவிட்டுச் சில்பகலிற்
சாவினை மேற்கொள் சழக்கின ரேதண் டமிழ்க்கருவைக்
கோவினை நாவினிற் கொண்டேத்திச் செம்பொற் குழைகழலிற்
பூவினை யிட்டிறைஞ் சீரென்கொ லாமுங்கள் புல்லறிவே. (86)

புல்லியர் தீய புணர்ப்பின ராவுரி போர்த்துவரும்
வல்லிய மென்னத் தவறிழைப் போர்புரி வஞ்சகத்தா
லெல்லையி றுன்பக் கடலழுந் தாமலெடுத் தருள்வாய்
மெல்லியல் பாக தமிழ்க்கரு வாபுரி வித்தகனே. (87)

தகனம் படுத்திப் பகிர்ண்ட கூடமுஞ் சாம்பர்செய்து
ககனம் பதத்தினின் றாடும் பிரானைக் கமலமன்ன
முகமைந் துடைய கருவா புரியின் முதல்வனையா
னகநைந் திராப்பக லேத்திடு வேனெஞ் சழுக்கறவே. (88)

அழுக்கற்ற நெஞ்சிலும் பொன்னம் பலத்து மமர்ந்துநின்ற
முழுக்கற்றை யஞ்சடி லக்கள வீசனை முன்னியன்பு
பழுக்கத் திருத்தொண்டு செய்யார்கள் காலபடர்நாகுக்
கிழுக்கக் கழுத்திற் கயிறிடும் போதுமற் றென்செய்வரே. (89)

என்செய லாவதி யாதொன்று மில்லைமற் றியான்புரித
னின்செய லாக நினைவளித் தாயுன்னி னீக்கமற்றேன்
புன்செய லீதென்று நன்செய லீதென்றும் புந்திசெய்யே
னுன்செயல் யாவுமென் றேகரு வேச வுளத்தெளிந்தே. (90)

உளத்தெளி யும்படி யெப்படி வேதமு முண்மைநிலை
யளந்தறி யாத கருவைப் பிரானம் பவள்மென்ன

வளந்தரு வேணியுஞ் சங்கக் குழையு மதிமுகமுங்
களந்தரு நீலமும் பாவித் திடாத கயவருக்கே. 91

கயங்கொண்ட நீரின் மதிநிழல் போலக் கலங்கிநின்று
மயங்குங் கவலை மடநெஞ்ச மேமலை மங்கைகொங்கை
முயங்குங் கருவைப் பெருமானென் னுட்பகை மூன்றும்வென்று
சயங்கொண் டிருக்கி னுனக்கொரு காலுந் தளர்வில்லையே. 92

தளர்வுவந் தெய்தின் விதியினை நோவர் தழைக்குஞ்செல்வக
கிளர்வுவந் தெய்திற் றமைத்தாம் புகழ்வர் கிளைத்தபசுந்
துளவுவந் தோனு முளரிவந் தோனுந் துதித்துநிற்பக்
களவுவந் தோன்செய்த கற்பனை யீதென்று காண்கிலரே. (93)

காணப்பெற் றேன்கரு வைப்பெரு மானைக் களாநிழற்கீழ்ப்
பூணப்பெற் றேன்செய்ய பொன்னடித் தாமரை பூணுமன்பு
பேணப்பெற் றேனவன் பேரா யிரங்களும் பேசப்பெற்றே
னாணப்பெற் றேன்கொடும் பாவமென் பால்வந்து நண்ணுதற்கே

நண்ணலர் முப்புரம் விற்காமன் றன்புர நன்னகைத்தீக்
கண்ணன லேவிச சுடுகள வீசர் கடலினஞ்சம்
விண்ணவர் வாழ வருந்திய காலையு மெய்யில்வைக்கும்
பெண்ணவ ளங்கு விலகா தொழிந்ததென் பேதைமையே.(95)

பேதாதி பேதப் பிறவிக டோறும் பிறந்திளைத்தேன்
மாதாவும் பெற்று வளர்த்திளைத் தாள்கொடு மாமறலி
தூதாளுங் கொன்றிளைத் தான்கள வீசவித் துன்பத்துக்கோ
ராதார நின்னிரு பாதார விந்தத் தடைவதுவே. (96)

அடையும் படிக்கோ ருறுதிகிட் டாம லகலிடத்தே
மிடையுஞ் சமயப் படுகுழி வீழ்ந்து மெலிந்துமன
மிடையும் பருவத்து மெய்ஞ்ஞானக் கண்டந் தெனைப்புரந்தாய்
கடையும் படைவிழி யொப்பனை யாண்மனக் காதலனே. (97

காதல் வினைத்துத் துணைசெய்த வேளுடல் கட்டழித்த
கோத மனத்திற் குறித்துக்கொ லோகுல வெற்புதவு
மாதுமை யொப்பனை பால்வண்ண னேநின் வடிவிலொட..
பாதி தனக்கு வடிவிருப் பாகப் பரித்ததுவே. (9

பறியா வினையைப் பறித்திலன் மாற்றிநின் பாதமன்றி
யறியா வறிவளித் தாண்டவ னேயடி யேனுக்குன்னைப்
பிறியா வரமன்றி வேண்டுவ தில்லை பிரசமலர்
வெறியார் களாவி னிழற்கீழ் நிலைபெற்ற மெய்ப்பொருளே.

பொருள்காட்டி மாசற்ற போதமுங் காட்டியப் போதநல்கு
பருள்காட்டிச் சநதத மானநதங் காட்டி யடர்ந்தகங்கு
லிருள்காட்டும் பூங்குழ லொப்பனை பாக விருளறுத்துத்
தெருள்காட்டிப் பாத மலர்சூட்ட வென்றலை சீர்பெற்றதே.

கலித்துறையந்தாதி முற்றிற்று.

திருக்களாவுடையான் றிருவடியே துணை

உ

கணபதி துணை

## திருக்கருவைக்

# பதிற்றுப்பத்தந்தாதி.

---

### காப்பு.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஆனகருவைப்பதிற்றுப்பத்தந்தாதிச்சொல்லலங்கன்முற்று
ஞானவுருவாங்களவீசனளினசரணமிசைச்சாத்தத்
தானவருவிபொழிதடக்கைத்தறுகட்சிறுகட்புகர்முகத்துக்
கூனலிளவெண்பிறைக்கோட்டுக்குணக்குஞ்சரத்தினடிதொழுவாம்.

### நூல்.

சீரார்கமலச்சேவடியென்சிந்தையிருத்தியுனதுதிருப்
பேராயிரமுமெடுத்தோதிப்பெம்மான்கருவையெம்மானென்
றாராவமுதமுண்டவர்போலனந்தானந்தத்தநெகிழ
வாராவின்பமறிவித்தாயறியேனிதற்கோர்வரலாறே. (1)

ஆறாக்காமக்கொடியகனல்வாய்மூட்டவல்லமன
நீறாய்வெந்துகிடப்பேனைநின்றாள்வழுத்தநினைவுதந்து
மாறாநேயத்திரவுபகன்மறவாதிருக்கவரமளித்தாய்
சீறாடரவமுடித்தசடைக்கருவைவாழுஞ்செழுஞ்சுடரே. (2)

சுடரேவலியத்தடுத்தாண்டதுணையேபிறவித்தொடுகுழிவீ
ழிடரேயகலக்களாநீழலிருந்தகோவேயெம்பெருமா
னுடலேயோம்பித்திரியுமெனையுன்னைநினைக்கப்பணித்தவருட்
கடலேயுனையன்றொருதெய்வங்காணவழுத்தக் கடவேனோ. (3)

வேணிற்சிலைவேடொடுகணைக்கும்விளங்குமகளிருளங்கவற்றும்
பானற்கொடியவிழிவலைக்கும்பற்றாய்வருந்தியனுதினமு
மீனத்துயரக்கடலழுந்துமெனையும்பொருளாவடிமைகொண்ட
ஞானத்துருவேதமிழ்க்கருவைநம்பாபொதுவினடித்தோனே. ()

நடித்தேன்பொய்க்கூடெடுத்தவமேநன்னாள்கழியவிந்நாளிற்
படித்தேனுனதுதிருநாமம்பண்டைவினையைப்பற்றறுத்தேன்
பிடித்தேன்பிறவிக்கடனீந்தப்பெரியபுணையாவுனதடியை
முடித்தேனுள்ளத்தெண்ணமெல்லாங்கருவைவாழுமுன்னோனே

முன்னைப்பிறவித்தவப்பயனோமுழுதுமறியாமூடனிவ
னென்னக்கருத்திலிரங்கியோயாதோவறியேனிரவுபகல்
கன்னற்பாகிற்கோற்றேனிற்கனியிற்கனிந்தகவிபாட
வன்னத்தொகுதிவயற்கருவையாண்டானென்னையாண்டதுவே.

ஆண்டகுரவனுவானையல்லற்பிறவியறுப்பானை
வேண்டும்பதவிதருவானைவெளிவீட்டின்பமளிப்பானைத்
தூண்டல்செய்யாமணிவிளக்கைத்தொழின்மூன்றியற்றுந்தொல்
லோனைக், காண்டற்கரியபேரொளியைக்களாவினிழற்கீழ்க்கண்
டேனே. (7)

கண்டகண்கள்புனல்பாயக்களிப்பாயுள்ளங்குழையழிய
விண்டமொழியுநாக்குழறவிம்மிமேனிமயிர்பொடிப்பப்
பண்டைவசம்போய்ப்பரவசமாய்ப்பரமானந்தத்தெளிநறவ
முண்டுதெவிட்டாவருள்புரிந்தான்கருவைவாழுமுரவோனே. (8)

உரகாபரணதிருமார்புமுமையொப்பனையாளிடப்புறமுஞ்
சிரமாலிகையும்புரிசடையுஞ்செய்யவாயுங்கறைமிடறும்
வரதாபயமுமழுமானுமவயங்குகரமுமலரடியுங்
கருவாபுரியான்வெளிப்படுத்திக்காட்சிகொடுத்துநின்றானே (9)

நின்றநிலையுஞ்செய்தொழிலுநினைத்தகுறியுமவழிபாடு
மொன்றுபதமும்பதங்கடந்தவுண்மைப்பொருளுமறியேனை
யின்றுன்னடியாருடன்கூடவெண்ணம்புரிந்தவினியவரு
ணன்றுநன்றுதமிழ்க்கருவைநம்பாவும்பர்நாயகனே. (10

வேறு.

நாயகன்முகுந்தன்சததளப்பொகுட்டினான்முகனென்னவிற்றிரு
க்குந், தூயவன்கருவைக்களாநிழலமர்ந்தோன்றுணையடிப்புகழினைவழு
த்தி, மாயிருஞாலமெடுத்தெடுத்தேத்தவரம்பெறுமதுரகாவலர்கள், சே
யிருவிசும்பிற்கற்பகநீழற்செல்வமும்வேண்டுவதிலையே. (11)

வேண்டுவ தொன்றுதமியனெப்பிறப்பும் வெந்தழுனரகிடைவிழி
னுங், காண்டகுசிறப்பினரம்பையர்சூழக்கற்பகநீழல்வைகி
டினுந், தூண்டகுசுடரேசுளாநிழலமர்ந்தசோதியேகருணைநாய
கனே, யாண்டகாய்நினதுதிருவடிக்கமலத்தன்பெனுமழிவிலாப்
பொருளே. (12)

அழிவிலாப்பொருளேபழமறைக்கொழுந்தேயலையெறியமு
தவாரிதியே, யொழிவிலாதருளுங்கற்பகக்கனியேயொப்பனை
மைப்பாந்தெறிக்கும், விழியினுலுருகியொருபுறமளித்தவிமல
னேகருணையம்பரனே, யிழிவிலாப்புணையாப்பிறவியங்கடனின்
றேறநான்பெற்றதுன்பதமே. (13)

உன்பதமேத்தித்துன்பவேறுக்கவுலகினிற்றிருவுடன்வாழு
மன்பதைக்கெல்லாமெய்திடுந்தரமோவலியவந்தெனைத்தடுத்
தாண்டுள்,ளன்புவந்தொருவரறிந்திடாவறிவுமறிவுறத்தருளினை
யதற்கு, முன்பெதுபுரிந்தேன்கருணையம்பதிவாழ்முதல்வனே
முக்கண்வானவனே. (14)

வானெரியறல்கான்மண்ணெனப்பகுக்கவரும்பெரும்பூதமோரை
ந்து, மானமுக்குணமுங்கரணமோர்நான்குமனைத்துமாயாதியி றி
ன்றி, யூனுறையுடலுக்குயிருமாயுயிருக்குணர்வுமாயொன்றினுந்
தோயா, ஞானநாயகனேகருணையம்பரனேநானறிந்துரைக்குமா
றெவனோ. (15)

எவனுயிர்க்குயிராயெள்ளுமெண்ணெயும்போலெங்கணுமிடை
யறநின்று, னெவனனைத்துலகுமீன்றுகாத்தழிக்கவிறைமைசா
ன்மூவுருவெடுத்தா, னெவன்முதலிடையீறின்றியெஞ்ஞான்று
மீறிலாமறைமுடியிருப்பா, னவனெனைப்புரக்கத்திருக்களாநீழ
லமர்ந்தருள்புரிந்தகாரணனே. (16)

காரணமேதென்றறிகிலேன்றமியேன்கற்றலமனத்தினைக்கரை
த்து, வாரணிமுலையாளொப்பனையோடுமழவிடைமேலெழுந்தரு
ளி, நாரணனறியாத்திருவுருக்காட்டிநல்லருள்சுரந்துவாழ்வித்தா
ன், பூரணன்கருணைக்களாநிழலமர்ந்தபுண்ணியன்விண்ணவர்க்கி
றையே. (17)

விண்ணவர்மகுடகோடிவீழ்ந்திறைஞ்சும்விரைமலர்ச்சேவ
டிமிசையே, புண்ணிறைகாதலன்புநீன் றுருகவுலையிடுமெழுகெ
னவுருகிக், கண்ணினீர்வாரக்கருவையம்பரனேக்கடவுளேயென்
றெடுத்தேத்தப், புண்ணியம்புரிகதேனிப்பெரும்பேற்றுலகத்
தெவர்பெறுவாரே. (18)

பெறுவதுநின்னதிருவடிக்கமலம்பேசுவதுன்றிருநாம
முறுவதுநின்னதிருவருள்வெளியாமுணர்வதுன்னருளலாதுண்டோ
மறுவறுசிறப்பின்மாசிலாமணியேவாதனேசிவபெருமானே
குறுமுனிபரவக்களாநிழலமர்ந்தகொடிமதிற்கருவையாதிபனே. (19)

ஆதவன்மதிபாரனல்வெளிபுனல்காலருமறையெச்சனென்றெட்டுப்
பேதமாமுருவாயருவமாய்நிறைந்தபெற்றியானுற்றுநானுன்னை
போதிநெஞ்சுணர்வேனுணருமாறருளாயிளநிலாப்பசுங்கொழுந்தணிந்த
சோதியேகருவைப்பொப்பனைகளபதுணைமுலைதழுவுகாதலனே. (20)

வேறு.

காதலுற்றிடாமனநிலைபெற்றிடக்கனிந்திடக்களிகூரப்
போதமுற்றிடயானெனதென்றிடும்புலைச்செருக்கறமாற
நாதன்முத்தமிழ்க்கருவையம்பரனைநாத்தழும்புறவோதி
யோதிமற்றுநான்பெற்றதையிற்றெனவுரைத்திடமுடியாதே.

முடிகடந்ததுககனகோளகைநெடுமுகட்டினுக்கப்பாலு
மடிகடந்ததுபாதலமெழினுக்கப்புறத்தனலோடுந்
துடிகடந்தகைகடந்தனதிகந்தமாமெலபுகழ்க்களாவீசன்
பொடிகடந்தபொன்மேனியான்றிருநடம்புகலுதற்கெளிதாமோ.

எளியன்புன்மொழிற்பாதகன்மாதாரிளமுலைவளமவேட்ட
களியன்றீக்குணவஞ்சகனெஞ்செனுங்கருங்கலக்கரைவித்து
வெளியில்வந்துநின்பொன்னடிசென்னியின்மிலைந்தெனையாட்கொண்
வளிகனிந்தநின்னருட்குணமுரைப்பாராருங்களாவமர்ந்தோனே.

அமரர்மாதவர்முனிவரர்திரண்டுநின்றனுதினந்தொழுதேத்துந்
தமரநூபுரப்பொற்சரணைத்திடச்தமியனுக்கருள்செய்தான்
குமரனுலடுஞ்சூர்ப்பகைதடிந்தவன்கொள்ளைவண்டினமார்க்குங்
கமலவாவியும்பொங்கருஞ்சூழ்திருக்கருவையம்பெருமானே. 24

கருவையம்பானம்பரமேணியன்கடவுளர்காணாத
வுருவையம்பிகைபெறப்பகுந்தளித்தவனென்னலர்புரநீற்று
பெருவையம்பெனக்கண்ணணையுடையனென்பிழைபொறுத்தழியாத
திருவையம்புவிச்சிறப்பொடுமளித்தவன்றிருக்களாவுடையோனே.

உடையமென்றுதம்மக்களைமனைவியையொக்கலைப்பெருவாழ்வை
யடையநல்குசீர்ச்செழும்பொருண்முதலியவனைத்தையுநினைப்பாரோ
விடையின்மேல்வருதிருக்களாநாயகன்விரைமலர்ச்செழுங்கொன்றைத்
தொடையல்வேணியானடியவர்க்கன்பொடுதொண்டுசெய்மனத்தாரே

மனத்தையான்றினம்வணங்குவன்மின்னெனவைகலுநிலையற்ற
தனத்தைவாழ்வினைநிலையெனமதித்துழலாசையிற்றளராமே
புனத்துழாய்முகில்போற்றிடுங்கருவைவாழ்புண்ணியன்பாலற்காச்
சினத்தகாலனையுதைத்தவன்பங்கயச்சேவடிவணங்கென்றே. (27)

வணங்கெனத்தலையளித்தனையென்புகழ்வாழ்த்தெனநாத்தந்தா
யிணங்கெனத்திருக்கூட்டமுங்காட்டினையினிப்பெறும்பேறுண்டோ
துணங்கையிட்டுவெம்பேய்க்கணங்குதித்திடச்சுடலையாடரங்காகக்
கணங்கள்போற்றநின்றாடியகுழகனேகருவையம்பெருமானே. (28)

பெருமைசான்றநின்றிருவெழுத்தைந்துமேபெரும்புணையெனப்பற்றி
யருமைசான்றவிப்பவக்கடல்கடக்குமாறாசையிற்றுணிகின்றே
னிருமையின்பமுமடியவர்க்கூட்டிடுமிறைவனேயெம்மானே
தருமமூர்த்தியேயொப்பனைவனமுலை தழுவுதிண்புயத்தானே. (29)

தானையெண்டிசைமுக்கணுமுச்சுடர்தழைசடைகதிராககறை
மேனிவெங்கனலாடிடமுலகெலாம்வெந்தொழிபுறங்காடு
சேனைவெங்கொலைப்பேய்க்கணமென்னினத்திருக்களாவமர்ந்தோனை
வானநாடரும்பூதலத்தடியரும்வணங்குவதெவ்வாறே. (30)

வேறு

எவ்வமுற்றதிரிமலமிற்றறு
செவ்விஞானத்திருக்கணடிறந்தது
கொவ்வைவாயுமைகொண்கன்கருவையான்
பௌவநஞ்சமுண்டான்கழல்பாடவே. (31)

பாடினேன்புகழ்பங்கயச்சேவடி
சூடினேன்கருவாபுரிச்சோதியை
நாடினேனவனன்றினும்வேறறக்
கூடினேனடியார்திருக்கூட்டமே. (32)

கூட்டமிட்ட கருவிகுலைந்துடற்
சேட்டை யற்றுள்ளறிவுசிதையமு
ஞூட்டமொன்றுடைநாதன்முகலிங்கன்
ருட்டுணைக்கமலந்தலைக்கொண்மினே. (33)

தலைக்கொள்வெண்டலைமாலையன்றண்ணிலா
மிலைக்குந்தென்கருவாபுரிவேதியன்
புலைக்குரமனையுடம்பிற்குடிபுகுந்
தலைககுநெஞ்சீமொழிதந்தெனையாள்வனே. (34)

என்னையாள்பவனென்னுள்ளிருப்பவன
றன்னையான்றொழத்தண்ணளிதந்தவன்
பொன்னையாளும்பயன்றொழ நின்றவன்
கன்னிபாகன்கருவைக்கிறைவனே. (35)

இறைவனெங்கணும்யாவையுமானவன்
பிறையணிந்தசடிலன்பெருந்தகை
கறையிலங்குமிடற்றன்கருவையான்
மறையநின்றெனையாண்டதெம்மாயமே. (36)

மாயவல்லிருணீங்கமனத்திடைத்
தூயஞானச்சுடர்விளக்கேற்றிய

நாயகன்களவீசனைரமயிர்
பாயமால்விடையான்பரமேட்டியே. (37)

பரமெனக்குனையன்றியோர்பற்றிலேன்
சரமமுற்றியபோதிற்றருவையோ
கருவைநிற்குங்களாமுதலேமறைச்
சிரமிருக்குந்திருவடிச்செல்வமே. (38)

செல்வமீயுஞ்சிறப்புமளித்துளத்
தல்லறீர்க்குமறிவையுதவிடுங்
கல்விநல்குங்கதிதரும்பொற்கிரி
வல்விலான்களவீசனைவாழ்த்தவே. (39)

வாழ்வைநம்பிமதிகெட்டுக்கும்பியில்
வீழ்புன்மாந்தர்க்குறுதிவிளம்புவேன்
றாழ்சடைக்களவீசன்றனையஞ்
சூழ்தல்சூழிற்றுறக்கங்கிடைக்குமே. (40)

வேறு.

கிடைத்தபொருள்காத்திருக்கக் கிடைத்திலவென்றயர்வார்போற்
படைத்தநினதருள்பெற்றும்பெற்றிலர்போற்பரிவுற்றேன்
முடைத்தலையிற்பலிகொள்ளுமுகலிங்காமுகிழ்த்தநிலாச்
சடைத்தலையாய்நின்புமையும்யாவுணருந்தரத்ததோ. (41)

உணராதநின்னிலையைநீயுணர்த்தவுணர்ந்ததற்பின்
புணராததாடலையிற்புணர்ந்தவெனப்புகழோங்கத்
தணவாமலெனையுனக்குத்தந்துருகியிரண்டற்றேன்
பணராசச்சிலம்பணிந்தபழமறையும்புகழ்வானே. (42)

பழமையாம்வாதனையிற்படிந்தமனப்புலத்தின்
விழைவினொற்றலைமயங்கிவேறுவேறுருவெடுத்துச்
சுழல்குயவன்றிகிரியைப்போற்புவக்கடலிற்சுழல்வேனை
மழவிடையாய்பால்வண்ணாவானவர்தங்கோமானே. (43)

கோமானேகருவைவருகுணக்குன்றேமலரிதழித்
தேமாலைபுனைந்தசடைச்செழுஞ்சுடரேயென்றென்று
பாமாலைவாய்பாடிக்கைகொட்டிப்பதம்பெயர்த்து
நாமாடவுமினிக்காணெண்டாய்நமராங்காள். (44)

தொண்டுசெய்துவழிபட்டுச்சுருதிபுகழ்களாவீசன்
புண்டரிகமலர்த்தாளைப்போற்றிமுதற்பேறுபெறரு
ரண்டர்பிரானென்முகத்தோனுழியாணிவரென்றான்
மண்டலனின்ஞானத்தெளியமாணிடரோவழுத்துவார். (45)

வழுத்திடுவேனுவாரமலரிடுவேன்கரங்கொண்டு
தொழத்தகுவேன்முடிதாழ்த்திசூழ்வருவேன்றுணைத்தாளா
லழுத்திடுவேன்மனத்துன்னையகம்புறமொன்றாயுருகிப்
பழுத்திடுவேனருள்கனியப்பாலவண்ணநம்பரனே. (46)

நம்பியுனதருள்வேட்டுநடுக்கடலுட்கலங்கவிழ்ந்து
வெம்புதுயர்மனத்தார்போன்மெலிகின்றேனெடுநாளாக்
கும்பமுனிக்கருளபுரியுங்கொற்றவனேமுகலிங்கா
தும்பைமுடித்தோய்புரக்கவிரக்கமின்னுநதோன்றாதோ. (47)

தோன்றியபோதுடன்றோன்றித்தோன்றாதுமறைத்தென்னை
யான்றசெழுஞ்செம்பிலுறைகளிம்புபோலகலாம
லூன்றுமலந்துகளகற்றியுன்னருளும்பெறுவேனோ
மூன்றுலகுந்தொழுதேத்துமுகலிங்காமுதற்பொருளே. (48)

பொருள்வேட்டுநிலம்வேட்டுமபூவையர்தம்புணர்கலவி
மருள்வேட்டுநாடோறுமனவலிகெட்டயர்கின்றே
னருள்வேட்டுன்சந்நிதிப்பட்டருந்துயர்போயுய்வேனோ
தெருள்வேட்டார்க்கருள்புரியுந்திருக்களவிலுறைவோனே. (49)

உறைவாய்நன்ஞானத்தன்பருடோருமுயிராகி
நிறைவாயிவ்வுலகனைத்துநீத்துமிலாதுணர்ந்தோர்க்கு

மறைறவாயுய்த்துணரார்க்குமறைறபயிலுங்கருவையில்வா
ழிறைறவாநின்றிருவிளையாட்டியான்வழுத்தவடங்காதே. (50)

வேறு.

கீர்தற்பெருக்குமொருகோடிகோடிகவலைப்பெருக்குமிகலாய்
வாதைப்படுத்தவலைமாறுபோலமனமாலுழன்றுவிடவோ
வேதப்பெருக்குமுழவோசைவிம்முவிழவிற்பெருக்குமியல்கூர்
நாதப்பெருக்குமொழியாதுமல்குகருவேசஞானவுருவே. (51)

உருவாகிநிற்றியருவாகிநிற்றியுயிரோடெவர்க்குமுறவாய்
மருவாகிநிற்றிமலராகிநிற்றிமறைபாகிநிற்றிமறையின்
பொருளாகிநிற்றியுனையானறிந்துபுகழ்கின்றவாறுமறியேன்
கருவாபுரிக்குளுறைதேவதேவகதியேதெனக்குமொழியே. (52)

மொழிகின்றவாறுசமயங்கடோறுமுழுதுஞ்சுழன்றுநிலையற்
றழிகின்றசிந்தையவலங்கெடுத்துன்னடிகண்டுநாடியறியும்
விழியுங்கொடுத்தமுகலிங்கநாதமிகுமன்பர்தேடுபொருளே
பொழியுங்கடைக்கணருளாலளித்திபுரையற்றமுத்திநிலையே.

முத்திக்குவித்துன்னடியார்கள்சிந்தைமுளரிக்கருக்கண்மொழி
யெண், சித்திக்குமூலந்தவயோகிகட்குத்தெளிகன்னலூறமிர
தம், பத்திக்குநித்தமருள்வீசுகொண்டல்களவீசனெங்கள்பரம
னத்திக்குமுன்னம்வரமேயளித்தகருவேசனம்பொனடியே. (54)

அடியாரிழைத்தபிழைகோடிநெஞ்சினறியாதவாதிமுதல்வன்
கொடியார்புரத்தையழன்மூடவன்றுகுறுமூரல்கொண்டகுழக
னெடியோன்வழுத்துகளவீசனென்றுநினைதோறுமுள்ளநெகிழ
முடியேறுமங்கைபுளகிக்குமேனிமுகுளிக்குமென்கணிணையே.

என்கண்ணிடத்தினகலாதசெல்வனெழிலார்களாவின்முதல்வன்
வன்கண்ணர்நெஞ்சுபுகுதாதநம்பன்மனமாசறுத்தபெருமான்
புன்கண்ணகற்றியடியாரைவீடுபுகுவித்துநின்றபுனிதன்
றன்கண்ணெனக்குமுடியாதவன்புதவென்கொல்செய்ததவமே

தவமுந்தவத்தினுறுபேறுமானதலைவாகளாவின்முதலே
புவனங்களானவையுயிர்வர்க்கமானவைநுகர்போகமானவைபுகலுந்
திவசங்களாதிவருகாலமானவைதெளிவாதெளிந்தவிமையத்
திவையன்றிநிற்பையெனினையநெஞ்சினெவரேமதிப்பருனையே

உன்னுமமோதியுனையேவணங்கியுறுபூசைபேணுமுரவோர்
பொன்னுடளிக்கவரநல்குமாதிபுனிதாகளாவிலுறைவோய்
முன்னையுனக்கியானடியானுமல்லேன்முழுஞானியல்லனெளி
யே, னென்னைபிழைத்தபிழைகோடியுள்ளவெனினும்புரத்தல்
கடனே. (58)

கடவாரணத்தினுரிபோர்வைகொண்டகருவேசவாதிமுதல்வா
சடவாதனைக்குளவமேகிடந்துதடுமாறுநெஞ்சமுடையே
னடைவாய்வழுத்திவழிபாடுசெய்துனடிபேணவொன்றுமறியே
ன்,மடமாலகற்றியிடுமாறளிக்கும்வரநீகொடுக்குமவரமே. (59)

வரையாதியற்றியிடுபாவகாரிமறமன்றிவேறுபுரியேன்
விரைமாலைசுற்றுகுழலாரிடத்துமிகவாசைவைத்துமெலிவேன்
கரையாதிருக்குமனநீகரைத்துனடிபாடவைத்தகதைநா
னுரையானிறைக்கமுடியாதுமுக்கணுடையாய்களாவினொளியே

வேறு.

ஒளிமதிமுடித்தவேணியொருவனேகருணையானே
தெளிவுறுநெஞ்சந்தன்னைத்தெருட்டிநின்னிலையைக்காட்டி
யளியினாலென்னையாண்டவருட்குன்றேயுன்னையின்னு
மெளியனேன்பிறவிவேட்டோவேத்திடாதிருக்கின்றேனே (61)

இருக்கினுநிற்கும்போதுமிரவுகண்டுயிலும்போதும்
பொருக்கெனநடக்கும்போதும்பொருந்தியூண்டுய்க்கும்போது
முருக்கிதழ்க்கனிவாயாரைமுயங்கிநெஞ்சழியும்போது
திருக்களாவுடையநம்பாசிந்தையுன்பாலதாமே. [62)

சிந்தனையுனக்குத்தந்தேன் றிருவருளெனக்குத்தந்தாய்
வந்தனையுனக்குத்தந்தேன் மலரடியெனக்குத்தந்தாய்
பைந்துணருனக்குத்தந்தேன் பரகதியெனக்குத்தந்தாய்
கந்தனைப்பயந்தநாதா கருணையிலிருக்குந்தேவே. (63)

தேவனேநின்னையல்லாற்பிறிதொருதேவையெண்ணேன்
பாவனைநின்னினல்லாற்பிறிதொருபற்றுமில்லேன்
யாவையுங்காட்டக்கண்டேனென்னுளேநின்னைக்கண்டேன்
காவலாகருணையானேயினிமற்றோர்காட்சியுண்டோ. (64)

உண்டெனமறைகளோதுமொருதனிமுதலேநாளு
மண்டருமுனிவர்தாமுங்காண்கிலரடியேனுன்னைத்
தெண்டிரைவளாகமுற்றுந்தேடினேன்றேடித்தேடிக்
கண்டனன்களாவினீழல்கருணைமாநகரத்தானே. (65)

தானெனவுருவமாகிச்சங்கற்பவிகற்பங்கொண்டு
வானகமாகிமண்ணாய்க்கடல்களாய்மலைகளாகி
யீனமாமனப்பேய்செய்தவிந்திரசாலந்தன்னா
லுனையுணரமாட்டேன்களாநிழனண்ணுவானே. (66)

நண்ணருந்தவங்கள்செய்துநாளுடல்வருந்தமாட்டே
னெண்ணுமைம்புலனுஞ்செற்றங்கிருவினையறக்கமாட்டேன்
கண்ணகன்ஞாலம்போற்றுங்களாநிழலமாநதுவாழு
மண்ணலேயினியெவ்வாறேவடியனேனுய்யுமாறே. (67)

உய்யவோருறுதிநாடாவுலகினிற்சமயமென்னும்
வெய்யவார்கலியில்வீழ்ந்துவெந்துயருழக்கின்றேற்குத்
தையலோர்பாகம்வைத்துத்தண்டமிழ்க்கருணைவாழு
மையன்வந்தாண்டுகொண்டததிசயம்விளைக்குமாறே. (68)

அதிசயமுளத்திற்காட்டியகம்புறந்தானுங்காட்டித்
துதிசெய்க்கவிநீர்க்காட்டித்தொடக்கறுநேயங்காட்டி
மதியினிற்களிப்புங்காட்டிவந்தெனையாண்டுகொண்டான்
கதியெனவுலகம்போற்றுங்களாநிழலமர்ந்தநாதன். (69)

நாதனேகவிஞனேவநள்ளிருட்போதிற்சென்ற
தூதனேயிமயவல்லிதுணைவனேகருவையானே
போத பத்திஞானுன்பொலன்கழற்றெண்டுபூண்டு
மேதநீயகற்றிடாமலிருப்பதுமிசையதாமோ. (70)

வேறு.

இசையுந்செல்வமுந்திருவுமின்பமு
மசைவிலாதபோதமுமுந்தியும்
விசையமுந்தருங்கருவைமேவினோன்
றிசையுடுத்தவன்சீர்படிக்கவே. (71)

படியளந்தவன்பதுமவேதிய
னடிமுடித்தலமறியொணாதவன்
கடிகொண்மாமலர்க்களவினீழலமர்
குடியிருக்கவென்னெஞ்சகோயிலே. (72)

கோயில்சூழவுங்குடங்கைகொட்டவும்
வாயிற்பாடவும்வணங்கியாடவு
மாயிரமடியார்க்கருவையாதியா
னையமுற்றுவக்குந்தொண்டர்சேர்வரே (73)

சேர்ந்தநெஞ்சமேநெடிதுவாடிநீ
சோர்ந்ததுன்பமுந்துயரும்போக்குவான்
வார்ந்தசெஞ்சடைக்கருவைவானவ
னார்ந்தபேரருளருவியாடவே. (74)

ஆடுமட்கலத்திகிரியொத்தலைந்
தோடுநெஞ்சமுங்கவலைபோர்ந்துணை
நாடுமோதமிழ்க்கருவைநம்பனே
பேடுசேர்மலர்க்களவிலீசனே. (75)

ஈசனேயிடத்திமயவல்லியி
னேசனேயியற்கருவைசித்தனே

பூசியேனுனைப்புனிதவாகமம்
வாசியேன்பிறப்பென்றுமாயுமே. (76)

பிறவிமாயவுமருள்பெருக்கவுந்
துறவியாய்வனந்துன்னல்வேண்டுமோ
விறைவனெம்பிரான்களவிலீசனென்
றறையுமுன்னமேயனைத்துமெய்துமே. (77)

எய்தியென்செயுங்கருவையெம்பிரான்
கொய்யுநாண்மலர்க்கொன்றைவேணியான்
செய்யபாதமென்சென்னிவைக்கவே
வெய்யகூற்றுவன்வீசுபாசமே. (78)

பாசநீக்கிமூவகைப்பசுக்களை
மாசின்முத்தியாம்வனத்தின்மேய்த்திடு
மீசன்மின்னனேரிடைச்சிகாதல
னூசில்பால்வணத்தண்டர்நாதனே. (79)

அண்டகோளமுமகிலலோகமு
மண்டுசெந்தழல்வடிவமானவன்
முண்டகக்கழற்கருவைமூர்த்தியைக்
கண்டகண்ணிணைகளிதுளங்குமே. (80)

வேறு.

துளங்குநெஞ்சமேதுயருறுவகையொன்றுசொல்வேன்
வளங்கொள்செந்தமிழ்க்கருவையம்பெரும்பதிமருவி
விளங்குபானிறமேனியன்றிருவடிதொழுதா
லளந்துகாண்பருந்துறக்கவாழ்வம்மையினளிப்பான். (81)

இம்மையின்பமுமிறுதியின்முத்தியுமளிக்கு
நம்மையாளுடைநாயகன்கருவைநன்னகரிற்
கொம்மைவெம்முலைக்கொடியொடுமினிதுவீற்றிருக்க
விம்மிமானிடர்வெந்துயருழப்பதென்விரகே. (82)

விரகினாற்சிலர்செய்திடும்வினைகளுமுண்டோ
மருவியம்பரமறைந்துநின்றாட்டுவான்போல
வுரககங்கணக்கருவையானொருவனின்றாட்டப்
பரவைசூழ்நிலமன்பதைப்பாப்பெலாநடிக்கும். (83)

நடித்ததாள்களுநகைமணிமுறுவலுமுகமும்
பொடித்தவேர்வெழும்புருவமுமருள்விலோசனமு
முடித்ததண்பிறைவேணியுமுகலிங்கன்மழுமான்
பிடித்தசெங்கையுங்காண்பவர்புவியிடைப்பிறவார். (84)

பிறந்தயாக்கைகளளப்பில பெருங்கடற்புவிக்கு
ளிறந்துபோயவல்லாலவற்றெய்தியதுண்டோ
கறந்தபானிறவண்ணனைக்கருத்துறவிருத்திச்
சிறந்தயாக்கையீதிதற்குநான்செய்வதுமுளதோ. (85)

உள்ளதில்லதென்றுரைத்திடும்பொருளையுய்த்துணரக்
கள்ளர்நாவினிலிருந்திடாக்களாநறுங்கனியைத்
தெள்ளுசெந்தமிழ்க்கருவையிற்சினகரம்புகுந்து
மெள்ளநான்சென்றுகாண்டலுந்தீர்ந்ததுவிடாயே. (86)

விடக்கைமும்மலக்குழிசியைவிளிந்தபின்றீண்டாத்
துடக்கைநோய்க்கணந்துணங்கையிட்டாடுறுமாங்கை
நடக்குஞ்சூத்திரப்பாவையைநான்சுமந்துழலல்
கடக்கநீக்கியென்றாளுவைகருவையுத்தமனே. (87)

உத்திவாளராமுடித்தபால்வண்ணனேயுனது
பத்திவேண்டுவதன்றியோநரகிடைப்படினு
முத்திவேண்டிலேன்றுறக்கமும்வேண்டிலேன்முனிவர்
சித்திவேண்டிலேன்வேண்டிலேன்றிசாதிபர்சிறப்பே. (88)

சிறக்கத்தக்கதுகருவையான்றிருவடிநேய
மறக்கத்தக்கதுமற்றுளசமயத்தின்மயக்கந்
துறக்கத்தக்கதிவ்வுடம்பையானென்றுறுதொடர்பு
பிறக்கத்தக்கதுசிவானந்தவாரியின்பெருக்கே. (89)

பெருகுகாதல்கொண்டனுதினம்பேதைநெஞ்சடியே
னுருகிநாடவும்வெளிப்படாவனையுளத்துணர்ந்தே
னிருகணாரவுங்காண்பதற்கென்றெதிர்ந்திடுவாய்
மருகுகண்டனேகருவையிற்களாநறுங்கனியே. (90)

வேறு.

கனிவுறுமனங்கனியநின்பெருங்கருணைதந்தவாபோற்றிநாயி
னே, னினியபாடலாற்களவிலீசனென்றேத்தநாத்தருமிறைவ
போற்றிவான், பனிநிலாவுடன்கங்கைதுன்றுசெம்பவளவார்ச
டைப்பரமபோற்றிவிற், குனிவுறுமுனம்புரமெரித்திடக்குருத்த
வாணகைக்குழகபோற்றியே. (91)

குழவிவெண்ணிலாவனையவெண்ணகைக்கொடியிடத்துவாழ்குரி
சில்போற்றியென், பழையதீவினைப்பகைதொலைத்திடும்பாவநா
சனேபோற்றிகாய்சினத், தழுவையின்வரித்தோலசைத்தபட்
டுடைமருங்கினோய்போற்றிசெந்தமிழ்க், கழுமலப்பதிக்கவுணி
யன்புகழ்களவினீழலிற்கடவுள்போற்றியே. (92)

கடையுகத்தினிற்பொழில்களேழையுங்கனல்கொளுத்தியசுடலை
யம்பலத், தடலைபூசியென்னம்மைகாணநின்றாடுமையனேபோ
ற்றிபோற்றிநெஞ், சிடைவிடாமலுன்சரணபங்கயந்திருக்கநல்
கிடவிறைவபோற்றிமால், விடையின்மேவியேகருவைமாநகர்வீ
திவாய்வரும்விமலபோற்றியே. (93)

விமலபோற்றிநின் பெருமைநாரணன் விரிஞ்சனாதியோ ரறியகி
ற்கிலா, வமலபோற்றிநானறியும்வண்ணமுன்னறிவுதந்தருளறி
வபோற்றிதண்,கமலவாவிசூழ்கருவைமாநகர்க்களவினீழல்வாழ்
காலகாலனே, யிமயமால்வரைக்குமரியொப்பனைக்கினியகாதலா
போற்றியெந்தையே. (94)

எந்தையாயினாய்குரவனாயினாயிறைவனாயினாய்போற்றியென்ம
னப், பந்தமாயினாய்வீடுமாயினாய்பாழுமாயினாய்போற்றிதென்
புலச், சந்தமால்வரைத்தமிழ்முனிக்குமைதனைமணந்தமெய்க்
கோலங்காட்டினாய், சுந்தரப்புயத்தழகுபோற்றிநற்சோதிபால்
வணத்தாதிபோற்றியே. (95)

ஆதிநின்றிருத்தொண்டுகாதலித்தறிவுசென்றமட்டாகநின்புக
ழோதுசெய்யுளிற்குறையுரைத்ததிங்கொன்றுநின்செவிக்குற்ற
தில்லையோ, காதனண்புடைக்கவிஞனேவலுங்கங்குலிற்கழற்
கால்சிவப்புறத், தூதுசென்றவாபோற்றிநாடொறுந்தொழுமவ
ர்க்கருள்கருவையையனே. (96)

ஐயனேசரண்போற்றியென்னையாளப்பனேசரண்போற்றிபொ
ய்யிலா, மெய்யனேசரண்போற்றிவானவர்வேந்தனேசரண்போ
ற்றிமான்மழுக், கையனேசரண்போற்றிகாலனைக்காய்ந்தவாசர
ண்போற்றிதீநிறச, செய்யனேசரண்போற்றிகாமனைச்செற்றவா
சரண்போற்றிதேவனே. (97)

தேவனேபிறர்க்கடிமையுற்றிலேன்சிந்தைநின்வசந்தந்ததன்றியு
நாவினாற்றினம்பாவிவாழ்த்துவேனுனுமென்குறைதீர்ப்பதார்
கொலோ,காவன்மூவர்கணல்கொளுத்திடக்கருணைசெய்திடுங்
கடவுள்போற்றியான், பாவகாரியேயெனினுமென்னைநீபாதுகா
ப்பதுன்பண்பதாகுமே. (98)

பண்பயிற்றிவண்டாடுகொன்றையம்படலைமார்பனேபோற்றிய
ம்பிகை, கண்களித்திடத்தில்லைமன்றினிற்கடிநடம்புரிகடவுள்
போற்றிபூஞ், சண்பகச்செழுங்காவின்வேரிசூழ்தண்களாவனத்
தடிகள்போற்றிமீ, விண்பரிப்பவன்றொழுதநம்பனேவெள்ளை
மேனியாய்போற்றிபோற்றியே. (99)

வெள்ளைமேனியாய்போற்றியொப்பனைமேவுமார்பனேபோற்றி
போற்றிபூங், கள்ளலம்புதண்களவினீழலிற்கருணையங்கடற்கட
வுள்போற்றிநா, னுள்ளமொன்றிநின்றடிவழுத்திடவுதவிசெய்த
வாபோற்றியின்புறத், தெள்ளுசெந்தமிழ்க்கருவைமாநகர்ச்செ
ல்வபோற்றிநின்சீர்கள்போற்றியே. (100)

பதிற்றுப்பத்தந்தாதி முற்றிற்று.

திருக்களாவுடையான் றிருவடியே துணை.

உ

கணபதி துணை.

## திருக்கருவை

# வெண்பாவந்தாதி.

---

### காப்பு.

நண்பானதென்கருவைநாதனார்தம்மீது
வெண்பாவந்தாதிவிளம்பவே - பண்பாக
மைம்மலையுமெய்ம்மலையுமாற்றுபுகழ்படைத்த
கைம்மலையுமாமுகத்தோன்காப்பு.

### நூல்.

சீரணிந்ததென்கருவைச்செல்வனேயொப்பனையாள்
வாரணிந்தகொங்கைமணங்தோனே - காரணிந்த
கண்டனேநின்பொற்கழலல்லாற்காதலித்த
தொண்டனேற்குண்டோதுணை. (1)

துணைவியொடுமால்விடைமேற்றோன்றிவினைநீக்கி

வேண்டாதவென்னைவலியவிலைகொண்டுதடுத்
தாண்டான்கருவையான். (2)

அரவணிந்ததென்கருவையாளுடையான்வேதம்
பரவுங்களவிற்பரமன்—றிருவடியை
நேர்ந்தார்க்கணித்தாகுநோதுளமயக்கஞ்
சேர்ந்தார்க்குமுத்தியதுசேண். (3)

சேணிற்கொடிநுடங்குந்தென்கருவையம்மானே
கோணைப்பிறையணியுங்கோமானே—பேணித்
தொடுக்குங்கவிதைத்தொழும்பனுக்குவந்த
விடுக்கண்களையாததென். (4)

என்னெஞ்சில்வைத்தற்கினியதவம்யாதுசெய்தேன்
பொன்னஞ்சிலையாற்புரமெரித்த—முன்னவனே
யன்னம்பயில்கருவையானேயாவுதொழப்
பொன்னம்பலத்தாடும்பூ. (5)

பூமருவுவேதன்புயல்வண்ணன்கண்டறியாத்
தாமமணிமுடியுந்தாளிணையும்—யாமறிய
வாழுங்கருவைவளநகரில்வந்துநின்றன்
றாழுஞ்சடைக்களவீசன். (6)

ஈசனேயென்றுமிமயமயிலொப்பனையா
ணேசனேயென்றுநினைந்துருகிப்—பேசினே
னல்வினையைக்கண்டேனவையற்றேன்வாழ்வுற்றேன்
வல்வினையைக்கண்டிலேன்மற்று. (7)

மற்றுமொருதெய்வத்தைவாழ்த்தேன்முழுக்காதல்
பற்றியுளத்துவைத்துப்பாவியேன்—சிற்றடியே
னும்பருமாலும்போற்றொருவன்கருவைநகர்
நம்பெருமானல்லாதுநான். (8)

நானிலத்தோர்முன்னேநலனழிந்துநானிருந்தாற்
கானநறும்பூங்களவீச—வீனமுரைத்
தென்னைச்சிரிப்பாரென்றெண்ணுதேயெம்பெருமா
னுன்னைச்சிரிப்பாருமுண்டு. (9)

உண்டுபலகுற்றமுனையடைந்தேனுதலினுற்
கண்டுபொறுத்தல்கடன்கண்டாய்—பண்டுதிரஞ்
சிந்தவடித்தவனைச்சீறுதுபாசுபதந்
தந்தமுகலிங்கநாதா. (10)

நாதாதமிழ்க்கருவைநம்பாவெனக்கினிய
தாதாவெனவுன்சரணடைந்தும்—காதுசின

வெவ்விடையின்வீதிவிடங்கனேநாடோறு
மிவ்விடரின்வாடுவதென்யான். (11)

யாவனமரர்டார்தரநஞ்சுண்டான
யாவன்கருவையினிதுறைந்தான்—யாவன்
றவநேர்மைகண்டுதனக்கடிமைகொள்வா
னவனேயெனையாண்டவன். (12)

ஆண்டவனெந்தனகருவையாதியாடரவம
பூண்டவனேயென்றுதினம்போற்றிடவு—நீண்டதுயர்
போகாதிருக்குமோபொங்கிருளுநிற்குமோ
மாகாதவன்றேர்வரின். (13)

வரந்தருமிப்பார்புரக்கும்வாழ்வுதரும்விண்ணோர்
தரந்தருமயேரின்பந்தருமால்—பரந்து
துளவீசன்றேடுந்துணைத்தாட்கருவைக்
களவீசனென்றுரைத்தக்கால். (14)

காலத்தாற்காலபடாராற்கருமறலி
சூலத்தாலாவிதொலைவனோ—ஞாலத்துட்
டேன்பற்றும்பூங்களவிற்செல்வன்றிருவடியைத்
தான்பற்றும்பற்றுடையான்றான். (15)

தானேவந்தென்னைத்தடுத்தடிமைகொண்டானை
யானேபிறக்குமெழுபிறப்பும்—வானிற்
சிறந்திருக்குந்தென்கருவைச்செல்வனையெண்ணுமன்
மறந்திருக்குமோவென்மனம். (16)

மனமொழிந்துகாமமயக்கொழிந்துமாறாச்
சினமொழிந்துவாதனையுந்தேய்ந்தா—லினிய
குருக்களாய்வந்தடிமைகொண்டுவீடுய்க்குந்
திருக்களாவாழுஞ்சிவம். (17)

சிவகருமஞ்செய்யார்திருநீறுசாத்தார்
தவநிலையாளுஞ்சைவநெறிசாரா - ரவனிதனிற்
கான்பரந்தபச்சைக்களாநிழலைக்கைதொழா
ரேன்பிறந்தார்மானிடராயின்று. (18)

இன்றுவருந்துயரந்தீர்ந்தோமினிச்சிலநாள்
சென்றுவருந்துயரந்தீர்ப்பாரா - ரென்று
வருந்தாதேநெஞ்சேமலர்க்களவினீழ
லிருந்தானொழிப்பானிடர். (19)

இடர்க்கடலுக்கோடமிதயவிருட்கென்று
முடற்பகையைவேறுக்குமொள்வா - ளிடப்புறத்தைச்
சூல்வண்ணமேகச்சுரிகுழலுக்கீந்தருளும்
பால்வண்ணநாதன்பதம். (20)

பதமறிந்துவாய்பார்த்துப்பற்றுதபுல்ல
ரிதமறிந்தாங்கின்சொலியம்பி - மதிகலங்கி
நன்னாள்கழித்துவிட்டேனுதமுகலிங்கவுனை
யெந்நாணினைப்பேனினி. (21)

இனியவமுதையிருங்களாவின்கட்
கனியைவளர்முக்கட்கரும்பைப் - பனியிமயக்
கொம்பினொடுங்கண்டேன்கொடும்பாவமோகவிடாய்
வெம்புதுயர்கண்டிலேன்மேல். (22)

மேலாம்பதத்தில்விடுவையோவன்றியெனை
யேலாநரகத்திடுவையோ - சீலமிலா
வன்சித்தருள்ளமருவாக்களவீச
வுன்சித்தமேதோவுரை. (23)

உரைகடந்தவேதத்துயர்வெற்பையுள்ளங்
கரைகடந்தஞானக்கடலை - விரிபூ

மருக்கோலவக நுகர்வண்களாநீழற்
றிருக்கோயிலிற்கண்டேன்சென்று. (24)

சென்றதுகாலஞ்சுதைந்ததிளமைநல
நின்றதுசாவென்றுநினைந்துருகி - மன்றி
னடிக்கின்றபால்வண்ணர்நாமமெண்ணுமாந்தர்
ரடிககின்றநூலெல்லாம்பாழ். (25)

பாழிற்சமயப்படுகுழியில்வீழாம
லூழிலெனைக்காத்துதவினாய்—காழி
வருமதலைசொற்காமலர்ந்தமுகலிங்கா
பெருமதலையாயபேறு. (26)

பேறுபெற்றேன்வாழ்ந்தேன்பிறருக்கினியஞ்சே
னாறுபெற்றவேணியனுக்காட்பட்டே—னாறுவட்டஞ்

வந்தித்தேன்றீர்ந்தேன்மயல். (27)

மயக்கமொழிநெஞ்சேமதிமுகமுமூன்று
கயக்கமலமன்னதிருக்கண்ணும்—வியக்குநடை
யன்னவயற்கருவையாரியன்றொழுதாற்
பின்னைநமக்குண்டோபிறப்பு. (28)

பிறந்தபிறப்பிற்பெரும்பயனையோரா
திறந்தவுடலெண்ணிறந்தவென்ப—தறிந்திருந்துங்
கானடரும்பச்சைக்களவீசவென்னுமன்
மானிடராயேன்பிறந்தார்வந்து. (29)

வந்துமனமறுக்கமாறருமலவல்வினையேன்
வெந்துயரம்பார்த்திருக்கவேண்டினைகொல்—கொந்துமல
ரம்பினான்மேனியழித்தமுகலிங்கவுனை
நம்பினோர்க்கிதோநலன். (30)

நலனழிந்துழப்படைந்துநாணழிந்துநோயாற்
புலனழிந்துகண்புதையும்போதி—லுலக
விறைவியொடும்பால்வண்ணவென்றென் றுணேயே
மறுகியழைப்பேனோடிவா. (31)

ஓடுஞ்சகட்டினுருளேபோல்வட்டமிட்டுக்
கூடும்பதத்திலெனேக்கூட்டாம—னுடியருள்
பூமலர்க்காச்சூழ்கருவைப்புண்ணியனே பூந்துளவன்
றுமரைக்கண்வைத்தசரண். (32)

சரணகமலந்தலேமேல்வைத்தாண்டு
மரணபவமிரண்டுமாற்றிக்—கருணேசெய்து
பேருனதென்கருவைப்பெம்மானளித்தானே
மாருவிதயமனமால். (33)

மாலுண்டுநெஞ்சேவருந்துவதென்பால்வண்ணன்
காலுண்டலர்சொரியக்கையுண்டு—நாலுண்டு
வாழ்த்திடவுநாவுண்டுவாதன்களாவுண்டு
தாழ்த்திடவுமுண்டேதலே. (34)

தலேயாயதென்கருவைத்தாணுவேமேருச்
சிலேயாற்புரமெரித்ததேவே—யுலகி
லடியவராந்தேவரமுதுண்ணநீதான்
கொடியவிடமுண்டதென்னகூறு. (35)

கூறுபடுமதியக்கோடீரம்விண்ணுடைக்க
நாறுமலர்த்தாளுரகநாடுடைக்கப்—பேறுபெற்ற
மாயவனுர்போற்றவளருந்தமிழ்க்கருவை
நாயகன்றுனுடுநடம். (36)

நடம்புரிதாள்போற்றிநின்றநன்முனியதென்றே
விடங்கொடமிழ்க்கருவையீசா—வடுங்கூற்றை

வேலினாற்போர்மழுவால்வெல்லாமற்செங்கமலக்
காலினால்வென்றகருத்து. (37)

கருத்தழிந்துகண்மக்கலைமறந்துகண்டார்
விருத்தனிவனென்றுவெறுத்துச்—சிரிக்கமுது
காடுகுடியேற்றுமற்காத்துமுகலிங்காவுன்
னூடுகுடியேற்றுவதேநன்று. (38)

நன்கவிஞனாகவியனாவளித்துநாடோறுந்
தன்கழலேபாடுந்தரமளித்தா—னன்கவைத்த
சூலத்தான்றென்பொதியத்தொல்லோன்றொழுதமணக்
கோலத்தான்றென்கருவைக்கோ. (39)

கோவாயமார்குழாம்போற்றவாழ்ந்தாலுந்
தீவாய்நரகிடைப்போய்ச்சேர்ந்தாலும்—பாவையிடத்
தாண்டகையேதென்கருவையையாவடியேற்கு
வேண்டுவதுன்பேரேமிக. (40)

மிகத்தேடுஞ்செம்பொன்னும்வேட்டமனையாளு
மகப்பேறுமங்குதவவாரா—பகைத்துறுக்கிக்
கையாற்கதையேந்திக்காலன்வரிற்கருவை
யையாவென்றோதாதவர்க்கு. (41)

அவலவிடக்கையழியுமலக்கூட்டைக்
கவலைநிறைத்தகடத்தைப்—புவனிதொறும்
வாளாச்சுமக்கும்வருத்தமொழிபால்வண்ணா
தாழாவயித்தியநாதா. (42)

நாதனெனவந்துன்னைநானடைந்தேனீயுமெனை
யாதரித்தெனுள்ளுருக்கியாட்கொண்டாய்—போதித்
திடைபோகத்தள்ளாதியற்கருவைநாதா
கடைபோகக்காத்தல்கடன். (43)

கடலுலகமண்டாண்டங்காயமுமினீற்றி
யடலையுடன்முற்றுமணிந்து—சுடலைதனிற்
றூழ்சேடிலத்தென்கருவைத்தாணுதமியனு
யேழிசையாழ்வாசித்திடும். (44)

வாசித்தேனில்லைவாதன்சிவாகமத்தைப்
பூசித்தேனில்லையவன்பொன்னடியை—நேசித்தே
யொப்பனையாள்கேள்வனெனவோதித்துதிக்கினே
னெப்படியானீடேறுவேன். (45)

ஏறுவதுகொல்லேறெரிசுடலையாடரங்கு
கூறைபுலித்தோன்மணிப்பூண்கோளரா—நாறு
கரந்தையணிகருவைக்காபாலிக்கென்யால்
வரநதரவேறுண்டோவகை. (46)

வகிர்மதியக்கண்ணணியானவானுதல்பாகத்தாண்
புகர்முகக்கைம்மாவுரியைப்போர்த்தான்—முகரித்துத்
தென்னுதெனுவென்றுவண்டிரைக்குந்தென்கருவை
யென்னுதன்வானோர்க்கிறை. (47)

இறைப்பொழுதுநீங்காதிருகண்ணுநெஞ்சுங்
கறைக்களமுஞ்செஞ்சடிலக்காடும்—பிறைக்கொழுந்தும்
புண்டரிகவாண்முகமும்பூங்களவினீழலோ
னெண்டரளப்புன்மூரலும். (48)

மூரலாற்றூளான்முளரித்திருக்கண்ணாற்
காருலாஞ்சோலைக்கருவேசர்—கோலஞர்
சுட்டார்வெங்கூற்றையுதைத்தார்தொல்வேளையெய்ய
வொட்டாதெரித்தாருடல். (49)

உடலினுயிராயுயிர்க்குயிராவானைக்
கடலுலகெல்லாந்தேடிக்காணேன்—கொடியதொரு

புன்கருவைமாற்றிப்புரந்தவனைப்புண்ணியனை
நன்கருவையிற்கண்டேனன். (50)

நானேய றிந்தவனை நாடற் கெளிதாமோ
கானேர் பசிய களாவனத்தான்—றானேயென்
னுள்ளச் சிலையை யுலைவாய் மெழுகெனவே
மெள்ளக் கரைக்கா விடின். (51)

விட்டேன் பரசமய மேவாது வேர்களைந்து
சுட்டேன்பொய்க்காமத் தொடர்பெல்லாம்—பட்டநுதற்
கைம்மா வுரித்த களவீச னைக்கருவைப்
பெம்மானை யான்பணிந்த பின். (52)

பின்னை தழுவுங் கணையேன் பெரும்பாந்தண்
மன்னு நெடுநாண் மலைவில்லேன்—முன்னே
பகைத்தவர்த முப்புரத்தைப் பால்வண்ணநாதா
நகைத்தெரித்தாய்நீ தானவில். (53)

நமரங்கா டென்கருவை நாதனடு வெஞ்சூர்க் '
குமாரனுக்கா ளாய்ப்பணிந்த கோமான்—றமரக்
கருங்கடனஞ் சுண்ட களவீச னென்றான்
மருங்கடரு மோதுயரும் வந்து. (54)

வந்தடா மாட்டாய் பிரிவை மனங்கொண்டு
நைந்து துயருழக்கு நல்குரவே—யைந்துதலை
நாக்கவைத்த பாம்பணியு நாதன்பால் வண்ணனமை
நீக்கவைத்தா லென்செய்வாய் நீ. (55)

நீயேவந் துற்ற நெடுந்துயரந் தீர்த்திலையே
லாயேனை யார்புரந்து காட்டுவார்—போயிருவ
ராங்களவா வண்ண மழலுருவாய் நீண்டுவளர்
பூங்களவி னுதா புகல். (56)

புகழ்ந்திடுவேன் யானோ புவியேழு மாய
னகழ்ந்திடவுங் காணா வடிக—ளுகந்தோறுந்
தோற்றுமுக நான்காற் சுருதிக் கவிவிரிஞ்சன்
சாற்றுமுக லிங்கநா தா. (57)

முகலிங்க நாதா முழுதுங்காத் தோம்பும்
புகலிங் கடியனுக்குன் போலச்—சகதலத்திற்
காருண்ட சோலைக் கருவேச நீயன்றி
யாருண்டு சொல்வா யறிந்து. (58)

அறியேன்மற் றொன்று மரும்பொருளே யென்றுங்
குறியே னெழுத்தைந்துங் கூறேன்—வறிதே
பிறந்தலுத்தேன் றென்கருவைப் பெம்மானே மீள
விறந்தலுத்தே னென்செய்தே னியான். (59)

என்செயலுன் றுளி லினியமலர் சாத்துவதே
யுன்செயலென் றுன்ப மொழிப்பதே—மின்புரையும்
வேணியாய் தென்கருவை வேந்தே யனலேந்தும்
பாணியாய் வேதாதி பா. (60)

பாகம் பழுத்த பவளக் குணக்குன்றே
மோகங் கடந்த முதல்வனே - யாகமநூ
லாய்கருவை யானே யமலா வடியேனைத்
தாய்கருவை யானே சரண். (61)

சரணம் விதியின் றலையழிவாக் கந்தீர்
பரம கதியருட்கண் பார்க்கிற் - றிருவடியார்
வன்பிறவித் துன்பமெல்லா மாற்றுமுக லிங்காவென்
புன்பிறவித் துன்பமெல்லாம் போம். (62)

போத மறியேன் புகன்றகவி விண்ணப்ப
மேதுந் திருச்செவியி லேறுமோ - சீதநிலாத்

திங்க ளணியுந் திருச்சடைமேற் புன்பூளை
தங்கவணி யுங்கருவை சா. (63)

சாதன் முடுங்கற் றனைமறந்து நாவ
மாதுயரிற் சற்றும் வழுத்தறியே - னாதலினா
லப்பொழுதைக் கிப்பொழுதே யன்பால் வழுத்துகின்றே
னொப்பனையாள் பாகா வுனை. (64)

உனைத்துதித்த நாவா லுறுதியென்றோர் தெய்வந்
தனைத்துதியேன் சென்னியுறத் தாழேன் - றினைத்துணையுஞ்
சிந்தியேன் வாழ்த்தேன் றிருக்களவி னாயகனே
வந்தியேன் பற்றேன் மனம். (65)

பற்று தழற்சடலை மன்றிற் பதமெடுத்துச்
சுற்று பவுரிகொளுந் தூயோனே - கொந்றவனே
மட்டொழுகும் பூங்களா வள்ளலே யென்றுரைக்கின்
விட்டொழிந்து போமே வினை. (66)

வினைவிலங்கை வெட்டுமருள் வீட்டின்பங் காட்டு
நினையுநினை வெல்லா நிரப்புங் - கனவிதழிப்
பூமாலை யெண்டோட் புனிதன் களாவனத்துக்
காமாரி யொன்னங் கழல். (67)

கழலாப்பிறவிக்கடற்சுழியிற்பட்டுச்
சுழலாவறிவுதொலைந்தே — னிழல்சுளித்துக்
குன்றதிர்க்குமாவுரிவைக்கோமானேபால்வண்ணா
வென்றழைப்பேன்வேறறியேனே. (68)

ஏதமகற்றியிருமைபெருமையெனும்
வாதமகற்றியெனைவாழ்வித்தான் — காதுபுலித்
தோலுடையான்பைங்களவின்றாலுடையான்கூற்றுதைத்த
காலுடையான்பஞ்சாக்கரன். (69)

கரங்கொண்டலர்தூவார்கண்கொண்டுபாரார்
சிரங்கொண்டடியிறைஞ்சல்செய்யா - ருரங்கொண்ட
வேற்றில்வருந்தென்கருவையீசனுக்காட்செய்யாமற்
கூற்றுவற்காட்செய்வார்குணம். (70)

குணகுன்றேதென்கருவைக்கோவேநறும்பூ
மணக்குங்களாவனத்துவாழ்வே - கணப்பொழுது
மன்னைமறந்த வருங்குழவியுய்ந்தாலு
முன்னைமறந்துய்யாதுயிர். (71)

உயிரிறந்தபொய்க்கூட்டையுற்றாரெடுத்து
வயிரவிறகிற்றீமடுத்துப் - பெயராழியச்
சுட்டுநீறாக்குமுன்னஞ்சொல்லீர்கருவைமன்றி
னட்டமிடுங்காலினலம். (72)

நலனழிந்துநல்வினைபோய்நாணழிந்துநல்ல
குலனழிந்துநல்குரவுகூர்ந்து - பலரிகழ
நிற்பானைத்துயிராய்நின்றானைத்தென்கருவைத்
தற்பரனைத்தான்றுதியாதார். (73)

தாரமனைமட்டுந்தனையறிந்தோரூர்மட்டுஞ்
சேருமுறவவ்வூர்த்தெருமட்டுஞ்—சார்வதன்றி
நங்கருவையானென்றநல்வினைபோற்செல்கதியி
னெங்குமுதவாரேயிவர். (74)

இவருறவரென்பாரிவர்பகைஞரென்பா
ரவரவராற்செய்வதொன்றங்காமோ—வெவரேனுந்
தேனொழுகும்பூங்களவார்செய்விப்பதன்றியிந்த
மானிடராலுண்டோவசம். (75)

வசமறுகித்துன்பம்வருத்தமெலிந்தாலு
மசையுறுநோய்கொண்டாலுமையா—விசையளிசேர்
தாமமருவேணித்தமிழ்க்கருவைநாதாவுன்
னாமமறவாதடியேனு. (76)

நாவுக்கழகுனதுநாமநயந்துரைக்கும்
பாவுக்கழகுனையேபாடுவது—நாவில்
கலைக்கழகுஞானங்கருவையானேயென்
றலைக்கழகுநின்கமலத்தாள். (77)

தாளாலெனதுதலையெழுத்தையுஞ்சிதைத்து
மீளாவடிமையிலையெழுதி—யாளா
யுளவருத்தந்தீரவுவந்தெனைவந்தாண்டான்
களவனத்திலொப்பனைபாகன். (78)

கன்னற்சிலைவளையக்கால்வளையநேர்புருவ
வன்னமனையார்கலவிக்காளாகி—முன்னித்
திரிந்ததெல்லாம்போதுமப்பாதென்கருவைவேந்தே
பரிந்தடிமைகொள்வாயிப்பால். (79)

பாலன்பசிக்கிரங்கிப்பாற்கடலையீந்தருளு
நீலமணிமிடற்றனீயன்றோ—சோலைதொறுந்
தேனிரங்குந்தென்கருவைச்செல்வாகொடுந்துயரால்
யானிரங்கநீயிரங்காயென். (80)

இரங்காயெனினுமிரங்கினும்யான்வேண்டும்
பரங்காண்கருவைப்பரனே—நிரந்தரமு
மிற்கணவனீத்தாலுநீங்காதிருக்குமொரு
பொற்புடையகற்புடையாள்போல். (81)

கற்பங்கடந்துகடவுளராய்வாழ்வரோ
பொற்பங்கயன்முதலாம்புத்தேளி—ரற்புதமே
தெவ்வடக்குஞ்சூலத்தார்தென்கருவைநாதனார்
வெவ்விடத்தையுண்ணாவிடின். (82)

விடக்குடலிற்புக்குவிரித்தவிருண்மாயைத்
தொடக்கறுத்தஞானச்சுடரை—நடத்திற்
றலைமைபெற்றதென்கருவைத்தாணுவைக்கண்டுள்ள
நிலைமைபெற்றேனீடேறினேன் (83)

ஏறுபட்டுக்கல்லாவிருஞ்சிலையாலெற்றுண்டு
மாறுகட்டமாற்ருலடியுண்டு—மூறுபட்ட
வாதையாலோகருவைவாணனேபொன்மேனி
பாதியாய்த்தேய்ந்தாய்பகர். (84)

பகரவருமெழுத்திற்பால்வண்ணுநின்னை
யகரமுதலைம்பத்தொன்றுக்கிப்—புகலாதே
யஞ்செழுத்தானென்பதென்னுதிமறைமுதனு
னைஞ்செழுத்திவாழுநிலம். (85)

நிலத்திற்பிறந்துடனேநீர்தோய்பசுமட்
கலத்திற்சிதையுமிந்தக்காய—நலத்திற்
கடியேறுபூங்களவிற்கண்ணுதலேமீள
வடியேன்சுமவாதருள். (86)

அருளுதவுந்துன்பமகற்றியறிவாக்குந்
தெருளுதவும்வீட்டின்பஞ்சேர்க்கு—மருவார்
புனக்களவைக்கோயில்கொண்டபுண்ணியனென்றேத
மனக்களவைத்தீர்க்குமருந்து. (87)

மருந்தாலொழியாமனத்துன்பநோயா
யிருந்தாலுமென்னையெவ்வாறேத்தித்—திருந்துபுகழ்ச்
சொன்மாலைசாத்துவேன்சொற்கருவைபாய்கடுக்கைப்
பொன்மாலைமார்பாபுகல். (88)

புகையுந்தழல்கண்ணிற்பொங்குசினத்தாலே
பகைகொண்டுகாலபடர்பற்றி—மிகவுந்
தணவாத்துயர்தருமுன்றண்களவீசன்
கணநாதனைமனமேகாண். (89)

காவென்றுசங்கென்றுகார்முகிலென்றங்கவர்மேற்
பாவென்றும்பாடப்படதந்தெரிந்த—நாவென்றுந்

தன்னைப்பாவிக்கத்தமிழ்க்கருவைநாதன்றா
னென்னைப்பாவித்தானிப்பால். (90)

பருவமழைத்துளியைப்பார்ப்பதுபோனாயே
னுருகியுணங்கியுடைந்தே—னரிவையுமை
வல்லவனேதென்கருவைவள்ளலேநீயுதவு
நல்லருளைப்பார்த்திருந்துநான். (91)

இருக்குந்திருக்கோயிலேழையேனெஞ்சோ
மருக்கொள்கயிலைவரையோ—திருக்களவோ
சோதிமணிமன்றோசுடர்விசும்போபால்வண்ணா
வோதுமறையோவுனக்கு. (92)

உனக்கடிமைநானல்லாதுண்டுபலரேனு
மெனக்குநீயல்லாமல்யாரே—நினைக்கனிவா
னழைத்தேனென்றாலுநற்கருவையானேநீ
தானழைத்தாலன்றோதாம். (93)

தாம்பிரித்துக்கொள்ளுந்தமிழ்ப்பாடல்கொண்டு
வாம்பிரித்துவாழ்வுவழங்கின்—விரிந்தநிலா
வேணிவைத்ததென்கருவைவெள்ளைவள்ளலேயுனக்கு
நீணிலத்திலுண்டோநிகர். (94)

நிகரற்றதென்கருவைநித்தனெனையாளுந்
தகரக்குழலிதலைவன்—சகமடுத்த
வெள்வடிவனெங்கைதவிளங்கியுறையுங்கோயில்
கள்வடியுந்தண்பூங்களா. (95)

களவிட்டநெஞ்சாற்கருவையாய்நின்சீ
ரளவிட்டுரைத்துதிப்பேனல்லே—னுளவிட்டம்
பெற்றதன்றிநாயேனும்பித்தாய்ப்பிதற்றுபுன்சொற்
குற்றமின்றிநன்றிதெனக்கொள். (96)

கொள்பவனுனீயேகொடுக்குமவன்கொள்பொருட்டால்
விள்வதென்கைம்மாறுவேண்டுமோ—வுள்வதென்கொ
றேணிறைகொன்றைச்சடிலச்செல்வக்களவீச
பாணிறமெய்கொண்டாயிப்பார். (97)

பார்முதலாய்வானப்பரப்பாயனைத்தினுக்குங்
கார்முதலாயுண்டியருள்காப்பாகிச்—சீர்முதலா
யார்க்குந்துணையாங்களவீசநின்னையன்றிப்
பார்க்கினுண்டோவின்பம்பகர். (98)

சங்கந்தொடருங்கழுமுட்படைக்காமு
மங்கையுமையொப்பனையாள்வாரணிந்த—கொங்கை
தழுவுந்திருமார்புந்தானுணராநாயேன்
முழுவெந்துயரமும்போமோ. (99)

மோனவிரதமுனிவர்விழித்துறங்கு
ஞானதுரியமுதனண்ணுவோர்—மானதத்தி
னுள்ளுவதுந்தன்னைமறந்தொன்றுவதும்பால்வண்ண
தெள்ளுவதுநின்மலர்த்தாட்சீர். (100)

திருக்கருவை வெண்பாவந்தாதி முற்றிற்று.

திருக்களாவுடையான் றிருவடியே துணை.

உ

சிவமயம்.

# திருக்கருவைத் தலபுராணம் இயற்றிய
# ச. திருமலைவேற் கவிராயரவர்களால்

இயற்றப்பெற்ற

## திருக்கருவைச் சந்தப்பாவும்
## வெண்செந்துறைப்பாமாலையும்.

---

## சாற்றுக் கவிகள்.

---

மதுரை மீனலோசனி அச்சியந்திரசாலை மானேஜராகிய மகா-ள-ள-ஸ்ரீ

அ. முத்துசாமி பிள்ளை யவர்கள் இயற்றியவை.

செந்தமிழுஞ் சைவமுமே செழித்தோங்க வரசியற்றித்
 திருக்க ளாவிற்
பந்தமறுத் துறைபரமன் பதம்பூசித் தருள்பெற்றுப்
 பாண்டி மன்னர்
உய்ந்ததுவுஞ் சுரர்முனிவர் வழிபட்டின் புற்றதுவு
 மோர்ந்தன் பார்ந்து
பைந்தொடையாப் புராணமொன்றுபகர்ந்தனனற்றிருமலைவேற்
 பாவல் லோனே. (1)

அன்னவனன் பீர்த்தலினைத் திருக்கருவைப் பால்வண்ண
 னறைவண் டார்பூம்
பொன்னடித்தா மரைக்குரஞ் சந்தப்பா மாலையொன்று
 புனைந்து சாத்திப்
பன்னரிய புகழுடனே புருடார்த்த நான்கினையும்
 பண்பிற் பெற்றான்
இன்னவைகற் றோர்கேட்டோ ரேவருமே யிகபரம்வீ
 டெய்தி வாழி. (2)

ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலுகா வத்திராயிருப்பு,
கஜூபாசனக் கோமணியாக்ய மகா-ள-ள-ஸ்ரீ
தி. ம. செண்பகம் பிள்ளை யவர்களியற்றியது.

---

உலகமிசைப் பலதருமங் களினுமிகச் சிவதரும
முயர்ந்த தென்று
பலகலையு முணர்ந்துநின்ற பண்பறிந்தே யுளமுருகிப்
பத்தி கூர்ந்து
தலமுழுதும் பரவுபுகழ்க் கருணையான் சரிதமுடன்
சந்தப் பாவு
நலமருவுந் திருமலைவேற் கவிஞனுரை செய்துபுகழ்
நனிபெற் றனே.

---

சிவகிரிச் சமஸ்தான வித்துவான் எட்டிசேரியில் வசிக்கும்மகா-ள-ள-ஸ்ரீ
அருணாசலக்கவிராயரவர்கள் இயற்றியது.

---

எந்தப்பா ரும்புகழுந் தென்கருவை யம்பதிவா
ழிறைவன் மீதின்
பந்தப்பா வமுதமெனத் திருமலைவேற் கவிஞன்மனப்
பத்தி கூர்ந்து
சந்தப்பா வுரைத்தன்னிச் சகத்தினிலெட் டிகத்தமிழ்தேர்ந்
தவர்கள் யாரு
முந்தப்பா ரதமுரைத்த வில்லியிவ னெனப்புகழ்ந்து
மொழியத் தானே.

தென்மலை மகா-ள-ள-ஸ்ரீ

## இராமசாமி செட்டியாரவர்கள் இயற்றியது.

ஆடரவம் புனைசடிலன் றென்கருவை யம்பதிவா ழமலன் மீது
தேடரிய சந்தப்பா வெனுமாலை புனைந்துபெருஞ் சீர்த்தி பெற்றான்
பீடுறுசீர் மேவுசிவ கிரிச்சமத்தா னப்புலவர் பெருமா னின்ப
நீடுதமிழ்க்கடலெனுநந்திருமலைவேற்பெயர்படைத்தநிபுணன்மாதோ

---

ச. திருமலைவேற் கவிராயரவர்கள் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

## சங்குக்கவிராயரவர்க ளியற்றிய

வெண்பா.

சந்தப்பா வோதியிசை தான்படைத்தோன் மாமலர்வா
சந்தப்பா வோதியிசை தையல்பங்கன்—சிந்தையருள்
பெற்றோன் றிருமலைவேற் பேர்புனையு மெந்தைதிரு
நற்றாண் மலர்மறவே னான்.

# திருக்கருவைச் சந்தப்பா.

காப்பு.

வந்தப் பாவை யருளெனவே வருமே துதித்து வணங்கவர
விந்தப் பாவையகலாத்தென் கருவைப்பதிவாழ் விமலன்மிசைச்
சந்தப் பாவை யன்பினுட னுரைக்க வெமக்குத் தயைசெயுமா
லந்தப் பாவை யபிற்பெருமான் முன்றோன் றொருகோட் டருங்
களிறே.

சந்தப்பா.

---

தங்க மலைநிக ராமென வேயொளிர் தண்க ளபமுலை யார்மய லாலுல
கெங்குமிகழ்தருநாயெனவேதிரியிந்தவசடனைநீயினியாள்வைகொல்
கங்கை யொடுமதி மேவுச டாதர கஞ்ச மலர்விழி மாலறி யாவிரு
செங்க ணகசர ணாகரு ணாகர தென்க ருவைநகர் வாழ்பர மேசனே.

உளத்திடை நின்ற மானமதை யொழித்துழி ரைந்து சாண்வயிறு
வளர்க்கவி ரும்பி யேகவிதை மனத்திலு ழைந்து பாடியொரு
வெளத்தனை யன்பி லாமடைய ரிடத்தி லலைந்தி டாதருள்செ
யளப்பறு மின்ப மார்கருவை யருட்பதி வந்த நாயகனே. ()

சீத ளம்பொ ருந்துகடன் ஞால முண்டு மிழ்ந்தவரி
தேட நின்ற வுன்ற னருள்கூர்
பாத பங்க யங்களையெ நாளு நம்பி யுஞ்சிறிய
பாவி துன்ப டைந்து ழல்வனே
கோத கன்ற நெஞ்சுருகி நேய மிஞ்சு தொண்டர்துதி
கூறி வந்த னம்பு ரியவே
கீத மொன்று தென்கருவை மேவு தண்ப சுங்களபி
னீபூ லிங்கண் வந்த பொருளே (3)

அளவி லாத மாபாவ வசடரோடு கூடாமல்
வளமு லாவு பாமூட மனிதர் மீது பாடாம
லுளமெ நாளும் வாடாம லுனது பாத மீவாய்கொல்
களவி னீழல் வாழ்தூய கருணை மேவு மேலோனே (4)

செறிவுற்ற திரைபுவரி புடைசுற்று புவியிலொரு
திவசத்து நமைநினைவுரு
வறிவற்ற பதகனென வெனையப்ப மனதிலெணி
யயரக்கை விடுவை யெனிலோ
நெறிபெற்ற வுனதுதிரு வருளுக்கு மகிமையெவ
னினையற்க வெனது பிழைநீ
மறிவைத்த கமலகர தலசுத்த சபுலநா
வளமிக்க கருவை யானே (5)

வினைத ரும்பவப் பிணிகெடும் வகைபுரி
வியன்ம ருந்தெனப் பெரியவர் பகர்தரு
முனைம றந்துடற் சுமைமொ காடு கரமென
வுழலு மென்றனக் கினியருள் புரிவைகொ
னனைய விழ்ந்துநற் பொழிலிடை யுருமது
நதிகள் வந்துறப் பெருகிடும் வளமலி
கனைநெ டுந்திரைத் தடமிக மருவிய
கருவை யம்பதிக் களவுறை யமலனே (6)

உயரி லக்கண மொடுபல கலைதெளி
வொடுப டித்தெவ னிமிழ்கட லமிழ்தென
நயமி குத்துள கவிதைகள் பலபல
நவில லுற்றெவ னுனைநினை கிலனெனி
லயர்வி னற்கதி யடைகுவ துளதுகொ
லருள்செ யெற்குனை நினைதர விதுதவி
கயமு கத்தனை முருகனை யருளிய
கருவை வித்தக மறைபணி யிறைவனே. (7)

ஏதம்று நின்கமல, பாதமலர் நமபியுள
னீதயைசெய் தென்கருவை, நாதகிரி யம்பகனே. (8)

என்கவலை தீரவினி, யுன்கமல பாதமருண
மின்கனக மாடமலி, தென்கருவை நாயகனே. (9)

அளவிலேயை யோகவலே, யுளமெவகை தேறுமன
திளகியருள் வேளையிது, களவுறைத யாதிதியே. (10)

வெருவுறும னக்கவலே, யொருவிமங்கி முக்கருணை
தருவதினி யெப்பொழுது, கருவைநகர் வித்தகனே. (11)

உனைத்துணை யெனப்புவி மிசையி னாட்டுணை
யுளத்திடை நினைத்தனு தினமு மேத்தியு
மினித்திடு பலப்பல கவிதை சாற்றியு
மிரக்கம துனக்கிலே பிணியி னூற்றின
மனத்ததி கரித்தெழு கவலே தீர்த்திலே
வழுத்துக வுனக்கெவ னடிமை மேற்சின
மனைத்துயி ரிடத்தினு நிறையு மாட்சிகொ
ளருட்கட லெனத்திகழ் கருவை மூர்த்தியே. (12)

சால வுண்பது மாமகிழ் வேகொடு
தானு றங்குவ தாகிய வோரிரு
வேலே யன்றியை யோவிது நாள்வரை
வீண ஞென்றுண ரேனெனை யாளினி
நீல கந்தா தூயபு ராதன
நேரி லம்பிகை பாகதி ராமய
மால யன்பணி பாதச ரோருக
மாசிறென்கருவாபுரிநாதனே. (13)

அனவரதமட.வியர்சுகவனுபவமதனைமனதிடையெணியுருகுவதல
துனதுமலரடியொருகனவினுமெணியுருகியறிலனிதுவரையறிவிலி
மனதுதெளிவுறும்வகையினியருள்புரிவதுநினதுகடனிதுநலதியுயர்-
கனக நகரென மிகவெழில் குலவிய கருவை நகரிடைவருதனி முதல்
வனே. (14)

உனதுசெம்பதந்தொழுபத்தருக்கரு
ளுதவுகின்றாஞ்சிதநற்குணக்கட
லெனவி ருந்துமென் பிணியைத்த விர்த்திலை
யெவர்க ளுண்டுநன் கினியெற்பு ரப்பவர்
கனசு கம்பெறும் படிசித்தம் வைத்தருள்
கவலை கொஞ்சமன் றடிமைக்கு நித்தமு
மனம யங்குகின் றதுமெத்த வற்புத
வளமி குந்ததென் கருவைக்க ருத்தனே. (15)

நரியொடு நாய்பே யனைத்து நாடொறு
நமதென வேதா னினைக்கு மூனுட
லொருபொரு ளேயா மெனசச தாவெணி
யுனைநினை யாமே செருக்கி யேயிது
வரையுமை யோநாள் கழித்த பாவியென்
மதிதனை நீயே திருத்தி யாளினி
யருமறை மேலோய் மலர்க்க ளாநிழ
லருளொடு மேனு ளுதித்த நாதனே.

ஊன்மரு வுடற்பிணியி னுன்மனதி லெப்பொழுதும்
யோசனைப லப்ப ல்செய்தே .
நான்மிகவி டர்ப்படுகி றேனெனையி ரட்சியென
நாளுமுறை யிட்டு மினமு
மேன்மனதி ரக்கமிலை நீயலது மற்றுலகி
லேவர்துணை யெற்க ருள்செய்வாய்
தேன்மலிம லர்க்களணி னீழலின்மு ளைத்திலகு
தேவபரி சுத்த முதலே. (17)

எஞ்சலி னற்குண ரஞ்சித வுத்தம னென்றொரு வற்பனையு
மிஞ்சுத மிழ்க்கவி கொண்டுது தித்துமெ லிந்துழ லத்தகுமோ
சஞ்சல மற்றிட நன்கரு ளைப்புரி தஞ்சமெ னக்கினிநீ
வஞ்சகம் வைத்திட றென்கரு வைப்பதி வந்தவ ருட்கடலே. (18)

பொருவரியபஞ்சபாதகருமொருபொழுதினைவணங்குவார்களெனிலுய
ரிரவியெதி ரந்த கார மெனவல ரிடசகலு மொகத வேலை யினுநின,
சரணிணைப ணிந்து மேயென் மனதுறு சலனமதொ ழிநதி டாத
தெனவினை
மருவுலவு தண்க ளாவி னிழலுறை வரதபுரி யிந்த வேலை கருணையே

குற்றமிக வெத்தனையி யற்றிடினு மற்றவைகு
றித்துளம்வெ றுப்ப துகொளார்
பெற்றவர்கள் வைத்திடுவர் மக்கண்மிசை மிக்கநசை
பெட்புறுபு விக்க ணதுபோ
னற்றயவு வைத்திடுதி சற்றெனது குற்றமத
னைத்திருவு ளத்தி னினையே
லற்றமிது வுற்றனனு னைத்துணையெ னக்கருதி
யப்பகரு வைப்பு ரமனே. (20)

இன்ப மோவனு வாவது தானிலை யிந்த மாநில வாழ்வினி லேவெகு
துன்ப மேயுள வானக மேவிய துங்க வார்சிலை யாமிழி வாகிய
புன்பு லாலுடை யாகமெ னுவபர் புந்தி யாணினை யாதவி ரூடனை
யன்பி னேடினி யான்வைகொ லோதிரி யம்ப காகரு வாபுரி நாதனே
காவி யைக்கயலை வெஞ்சமர்செ யுங்கரிய
கால னைக்கணையை வண்டையின் மெண்பிணையை
மானி டந்தைநிக ருங்கண்மட மங்கையர்கள்
மால்ப டைத்துணைம றந்துழலு மிந்தவொரு
பாவி யெற்குனது தண்கருணை தந்திடுதி
பாரின் மெத்தவுனை நம்பினனெனி ரும்பியுமை
தேவி யொப்பனையு டன்றழுவு மன்பபுகழ்
சேரு நற்கருவை யம்பதியில் வந்தவனே. (22)

தவனங்கொடியவனுறைதெறவிரு தயமொருங்கினாடியெனசெய்குவ
பிணி
னெவரிந்த வேலை யுதவி புரிகுவ ரெனவெங்கு மோடி யுலையுவிடவினி,

யவமொன்று பாவ வினைய் கலவுன தடியெங்க ளாளு மினிய வருள்புரி
புவனங்கள்யாவுமனவசதனனி புகழ்தண்களாவி லுறையுமிறைவனே.

தெருவில்வந் தொண்கனக குடமுலைத் துணைசிறிது
தெரியநின் றுஞ்சிறிய நகையியற் றியுமருகு
சருவிநின் றுஞ்சாச மொழிகள்செப் பியும்விரக
தவனமிஞ் சும்படிசெய் தனையில்லைத் துளமுருக
மருவியின் பஞ்சிறிது பெறவளித் திடர்புரிக
வடமிகும் பெண்கள்பெரு மயலொழித் தனதுகழல்
பரவுறுந் தொண்டரொடு பயில்வகெதப் பொழுதடிமை
பகர்பசுந் தண்களவி லுறையுமெய்த் தனிமுதலே. (24)

நிலையாதவிவம்புவிவாழ்வினையே நிலையீதெனநம்பியெனேசமுமே
யலைமேவுதுரும்பதுபோலடியே னகமேயுழல்கின்றதையோதயைதா
னிலையாவெனுளந்தெளிவேபெறுவா னினியாவதுதந்திடுவாய்நுணி
கலைமாமதியந்தவழ்நீள்பொழில்சூழ்கருவாபுரிவந்தபுராதனனே. (25)

அமுதமத னைக்கமரி னிடைநனியு குப்பதென
வதிமதுர முற்ற துகடீர்
தமிழருமை சற்றுமுணர் வரியமட மைக்குணவ
சடர்மிசையி னிக்க விசொலா
திமிழ்கடலு டுத்தபுவி மிசையுனைநி னைத்துநித
மினியகவி செப்ப வருள்வாய்
கமகமென மிக்கமண முலவுபொழி லுற்றிலகு
கருவைவளர் மெய்ப் பரமனே. (26)

குணமுடனிங்கொரு வேளையுன் கழல்பணி
குவமென நெஞ்சிடை யேநினைந் திடுபொழு
துணர்வறு சஞ்சல மாயையென் பதுபுக
வுளமருள் கின்றது பாவியென் புரிகுவல்
கணபண கங்கண காளகந் தரகுப
காமலை மங்கைம ணாளசங் கரநறு
மணமலி யும்பொழின் மேவுதென் கருவையின்
மகிமைது லங்கிட வீற்றுவுறும் பரமனே. (27)

மலர்செருகு கற்றை யோதி மடவியர்
மயல்வனம்விடுத்து ஞாது பதமெனு
நலகமல புட்ப நாடி யனுதின
நவிலெனது சித்த மான மதுகர
மலகில்பரி சுத்த மேவு முனதுத
ணருணநவு துய்க்கு நாளு முளதுகொ
லில்குகரு வைக்க ளாவி னறுநிழ
லிதயமகிழ் வுற்று வாழு மிறைவனே. (28)

வான மேவுமின லொத்தழியு மிப்புவன
வாழ்வை யேநிலையெ னக்கருதி யெட்டுணையு
ஞான மாவதுப டைத்திடுத லற்றுழலு
நானெ வாறுகதி யுற்றிடுவ னப்பமுன
மேன நாடுமுன தற்புதப தக்கமல
மீகு வாய்பிறிதி லைப்புகலெ னக்கினிய
தேன வாவுமளி மொய்த்திசைமு ழக்குபொழில்
சேர்வி ளைதவள மைக்கருவை வித்தகனே. (29)

முனிவ ரிமையோர்கள் யாவரு மேபணி
முதல்வ கலைவாணி யோடுச ரோருக
வனிதை புகழ்மேன்மை சேரிம யாசல
மயிலி னொடுகூடி வாழ்கரு ணாகர
புனித சுகவாரி யாயபு ராதன
புரத கணதேவ னேயென நாடொறு
மினிய துதிகூறி நானுனை யேதொழ
வினியு னருளீகு வாய்கரு வேசனே. (30)

திருக்கருவைச் சந்தப்பா முற்றிற்று.

## திருக்கருவை

# வெண்செந்துறைப் பாமாலை

---

பார்மே லெனக்குனது பாதமல்லா லுண்டுகொலோ
சீர்மேவு நற்றுணைதான் றென்கருவை நாயகனே. (1)

உன்னடியே தஞ்சமென வுற்றே னெனைப்புரப்பாய்
செந்நெல்வயல் சூழ்வளஞ்சேர் தென்கருவை நாயகனே. (2)

ஐயவுனை நம்பு மடியேற்கு நீநன்மை
செய்யவிது தான்சமயந் தென்கருவை நாயகனே. (3)

நான்பாவி யானாலு நம்பினேன் காத்தருள்செந்
தேன்பாயும் பூஞ்சோலைத் தென்கருவை நாயகனே. (4)

வந்திருவென் னெஞ்சின் மயக்கறவெந் நாளுமலர்ச்
செந்திருமின் னுளகலாத் தென்கருவை நாயகனே. (5)

தொண்டருடன் சேர்த்துத் துயர்தீர்த்துக் காத்தருள்வாய்
தெண்டிரைசூழ் பாரபுகழுந் தென்கருவை நாயகனே. (6)

அந்தோ தியங்கவிட லாமோ வடிமையைநீ
சிந்தாகு லந்தவிர்த்தீ டென்கருவை நாயகனே. (7)

கொந்தே னுளமிகவு நோயகல நீயருள்செய்
செந்தே னுலவுபொழிற் றென்கருவை நாயகனே. (8)

இப்புவியிற் சற்றோ வெளியேன் படுந்துயரஞ்
செப்பமுடி யாதெனையா டென்கருவை நாயகனே. (9)

ஐயாபொய் யாநா னடிமையுனக் கென்பதருள்
செய்யாத தென்னவின்னாந் தென்கருவை நாயகனே. (10)

நேரும் பலபிணியு நெஞ்சி லுறுஞ் சஞ்சலமுந்
தீரும் படியருள்செய் தென்கருவை நாயகனே. (11)

சஞ்சலமென் னூலே சகிக்கமுடி யாதினியுன்
செஞ்சரணந் தந்தெனையா டென்கருவை நாயகனே. (12)

எத்தனைதா னந்தோ வெளியே னுனக்குரைத்துஞ்
சித்தமிரங் காதமென்னே தென்கருவை நாயகனே. (13)

காணாயோ வேழைபடுங் கஷ்டமெலா மின்னமுநீ
சேணாரும் சோலைதிகழ் தென்கருவை நாயகனே. (14)

எவருனை யல்லா லெனைக்காப் பவருரையாய்
தேவர்முனி வோர்பரவுந் தென்கருவை நாயகனே. (15)

வைவயல் காட்டமிடி வைமக்கிப் படிக்கொடுமை
செய்வதோ வுனக்கபயந் தென்கருவை நாயகனே. (16)

வாராயோ வென்முனநீ வந்தெனைக்கண் பாராயோ
தீராயோ வென்பிணியைத் தென்கருவை நாயகனே. (17)

பாவியையு நீகாப் பதுநினக்கு மேன்மையன்றே
தேவியுமை யொருபானைசேர் தென்கருவை நாயகனே. (18)

எந்தையுனக் கந்தோ விலையா தயவுனது
சிந்தைசிலை யாசொலையா தென்கருவை நாயகனே. (19)

இவ்வேளை நீவந் தெனதுகுறை தீர்வடிவேற்
செவ்வேளை யின்றபுகழ்த் தென்கருவை நாயகனே. (20)

புல்லனையு நல்லனெனப் போற்றிக் கிரிதனுக்கேன்
செல்லலகற் றிப்புரப்பாய் தென்கருவை நாயகனே. (21)

மாவடிவேற் கண்ணார் மயற்கடல்வீ ழாதுனது
சேவடிபோற் றத்தயைசெய் தென்கருவை நாயகனே. (22)

கூறுபிணி யாற்கவலை கொண்டுழல்கின் றேன்மனந்தான்
றேறுவதெவ் வாறுரையாய் தென்கருவை நாயகனே. (23)

மெய்திருந்தா வேழையிந்த மேதினியி லென்னபிழை
செய்திருந்தா லும்பொறுத்தா டென்கருவை நாயகனே. (24)

கொஞ்சமுமே றாதோநான் கூறுமொழி யுன்செவியிற்
செஞ்சடைமேற் றிங்களணி தென்கருவை நாயகனே. (25)

(21) செல்லல் - துன்பம்.

கண்பா ரிதுசமயங் கைவிடே லேழையைநீ
[illegible] பரவுபுகழ்த் தென்கருவை நாயகனே. (26)

அப்பா வடிமையைநீ யாதரியா யென்னிலென்ன
செப்பார்கண் டோருனைத்தான் றென்கருவை நாயகனே. (27)

உன்செயலெல் லாமென் றுணர்ந்தேன்கண் பார்பொதியத்
தென்சொன் முனிவந்துதொழுந் தென்கருவை நாயகனே. 28

பேதுமினி நீயெனைத்தான் புண்படவே செய்ததங்கோ
தீதுதவிர்த் துப்புரப்பாய் தென்கருவை நாயகனே. (29)

பீடுறுநற் றாயும் பிதாவுநீ நானினிவி
சேடமதாய்ச் சொல்வதென்னே தென்கருவை நாயகனே. (30)

முற்றிற்று.

திருக்களாவுடையான் றிருவடியே துணை.

சிவமயம்.

# திருக்கருவைத் தலபுராணக் கதைச் சருக்க அட்டவணை.


| தொடர்ச்சி நம்பர் | சருக்கம். | பக்க நம்பர் |
|---|---|---|
| 1. | காகபுசண்டர்கதி யடைந்த சருக்கம் | 45 |
| 2. | உமையவள் தவசு புரிந்த சருக்கம் | 57 |
| 3. | கங்கைகடன தெரிசனம் பெற்ற சருக்கம் | 65 |
| 4. | நிட்சேப நதிச் சருக்கம் | 71 |
| 5. | ஒப்பனைதிரு நாமம் பெற்ற சருக்கம். | 78 |
| 6. | சிவராத்திரி யுண்டான சருக்கம். | 85 |
| 7. | கணபதி குமரன் பூசித்த சருக்கம். | 99 |
| 8. | சிவராத்திரி விரதவியல் புரைத்த சருக்கம். | 108 |
| 9. | பஞ்சலிங்க தெரிசனம் பெற்ற சருக்கம். | 112 |
| 10. | பால்வண்ணர் திருநாம முண்டான சருக்கம். | 119 |
| 11. | நாரதகாளாயர் பாவந் தீர்த்த சருக்கம. | 126 |
| 12. | யமவாதை யொழித்த சருக்கம். | 132 |
| 13. | தக்கன் வேள்விச் சருக்கம. | 135 |
| 14. | கற்பக தருக் களாவான சருக்கம். | 157 |
| 15. | அரிபிர மாதியர் சாபந் தீர்த்த சருக்கம். | 160 |
| 16. | இந்திராதியர் சாபந் தீர்த்த சருக்கம. | 165 |
| 17. | சூரியன் பாவந் தீரத்த சருக்கம. | 176 |
| 18. | அகத்தியன் பூசித்த சருக்கம. | 181 |
| 19. | இந்திரன் வேள்விச சருக்கம. | 191 |
| 20. | காமதேனு மக்கட் பேறு பெற்ற சருக்கம். | 194 |
| 21. | ஆரியனாலயஞ் செய்த சருக்கம். | 199 |
| 22. | பசாசுவாதை தீர்த்த சருக்கம. | 208 |
| 23. | பராசத்தி பீடமுண்டான சருக்கம். | 210 |
| 24. | இலக்குவன் பிரமகத்தி தீர்த்த சருக்கம். | 213 |
| 25. | வேதியன் பாவந் தீர்த்த சருக்கம். | 219 |
| 26. | சுகுணபாண்டியனுக்குக்கல மகிமையுரைத்த சருக்கம். | 226 |
| 27. | உதாவசுவுக்கு மகப் பேறருளிய சருக்கம். | 231 |
| 28. | வைசியன் திரவியம் பெற்ற சருக்கம். | 239 |
| 29. | அக்கினி தேவன் பாவந் தீர்த்த சருக்கம். | 245 |
| 30. | பார்ப்பனி பாவந் தீர்த்த சருக்கம். | 248 |
| 31. | குலபூடணனியமனை வென்ற சருக்கம். | 250 |
| 32. | குபேரவாரியன் பீடப்பிரதிட்டை செய்த சருக்கம். | 257 |
| 33. | தக்கன் முதலோர் சாபநிவிர்த்திச் சருக்கம். | 265 |
| 34. | வைசியனைவஞ்சித்தமறையவன்பாவந்தீர்த்திச் சருக் | 270 |
| 35. | சேரவாதங்கர் தெரிசனம் பெற்ற சருக்கம். (கம். | 276 |